# சைவநெறி நிர்ணயம் - 1

அச்சுவேலி

சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்களின் ஆக்கங்கள்



கொழும்புக் கம்பன் கழகச் செயலாளர்

கொட்டாஞ்சேனை ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலய அறங்காவலர்

அமரர் பொன். பாலசுந்தரம் அவர்கள்

நினைவு வெளியீடு

# சைவநெறி நிர்ணயம் - I

அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்களின்
ஆக்கங்கள்

[விநாயக பரத்துவம், மகோற்சவ விளக்கம்]

தொகுப்பும், பதிப்பும்:
அகில இலங்கைக் கம்பன் கழகம்

அமரர்
பொன். பாலசுந்தரம் அவர்களின்
நினைவு வெளியீடு
2008

| | | |
|---|---|---|
| நூல் | : | சைவநெறி நிர்ணயம் – 1<br>[விநாயக பரத்துவம், மகோற்சவ விளக்கம்] |
| ஆசிரியர் | : | அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள் |
| தொகுப்பும், பதிப்பும் | : | கம்பன் கழக ஆசிரியர் குழு |
| முதற் பதிப்பு | : | அக்டோபர், 2008 |
| பக்கங்கள் | : | XVI + 188 |
| வெளியீடு | : | அகில இலங்கைக் கம்பன் கழகம்<br>இல. 11, இராமகிருஷ்ண தோட்டம்,<br>கொழும்பு 06.<br>தொலைபேசி : 2360525 |
| அச்சுப் பதிப்பு | : | யுனி ஆர்ட்ஸ் [பிறைவேட்] லிமிட்டட்,<br>48B, புளூமெண்டால் வீதி,<br>கொழும்பு 13.<br>தொலைபேசி: 2330195 |

---

அமரர் பொன். பாலசுந்தரம் அவர்களின் நினைவாக
கொட்டாஞ்சேனை ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலய
ஐங்கரன் மண்டபத்தில் 25.10.2008 அன்று
ஆலய அறங்காவலர் தெ. ஈஸ்வரன் அவர்களால் வெளியிடப்பட்டது.

---

அகில இலங்கைக் கம்பன் கழக வெளியீடு – 18

உ

# பதிப்புரை

உலகை உய்வித்து நிற்பது நம் இந்துமதம்.
மானுட மன வேற்றுமைகளுக்கு ஏற்ப,
இறை வழிபாட்டு முறைமையைப் பலவாய்ப் பிரித்து,
அனைவரும் இறைவனைத் தொழ அது வழி செய்தது.
சரியை, கிரியை, யோகம், ஞானம் என
சைவ நாற்பாதங்களை வகுத்ததோடு அல்லாமல்,
மேலும், அவற்றுள் பல பிரிவுகள் கண்டு,
எவரும் இறை இன்பத்தில் ஈடுபட,
இந்துமதம் காட்டிய வழி போல்,
வேறு எம்மதமும் இயற்றியது இல்லையாம்.

❋ ❋ ❋

அகத் தொடர்பு இன்றி,
புறத்தில் மாத்திரம் செய்யப்படுவது சரியை வழிபாடு.
அகத் தொடர்போடு புறத்திலும் செய்யப்படுவது கிரியை வழிபாடு.
தனித்து அகத்தில் இயற்றுவது யோக வழிபாடு.
தன்னை இழந்து இறையின்பம் காண்பது ஞான வழிபாடு.
இந்த நான்கு வழிபாட்டினையும்,
இறைவனை அடையும் நான்கு பாதைகள் என,
சிலர் உரைத்து மயங்குவர்.
உண்மையில் இறை அனுபவம் நோக்கிய பாதையில்,
இந்நாற்பாதங்களும் நான்கு படிகளேயாம்.
இவற்றுள்,
ஒன்றில் கால் பதித்தோர்க்கே,
மற்றையதில் கால் பதித்தல் கைகூடும்.
ஒரு சிலர் குறித்தவொரு பிறவியில்,
குறித்தவொரு படியில் தனித்து நின்றனர் என்றால்,
அவர் முன்னைப் பிறவிகளில்,
மற்றைய படிகளைக் கடந்தனர் என்பதே பொருளாம்.

❋ ❋ ❋

சரியை வழிபாடு இயல்பாய் நிகழ்வது.
சங்கமச் சேர்க்கையே அவ் வழிபாட்டை நேர்விக்கும்.
கிரியை, யோகம், ஞானம் முதலியவை,
குருவின் வழிப்படுத்தல் இன்றிக் கைவரா.
மேற்சொன்னவற்றுள் கிரியைக்காம் எஜமானர்கள்,
அந்தண சிவாச்சாரியர்களே.
அவர்களே கிரியைக்கான குரு ஆவர்.
புற வழிபாட்டில் இயல்புற்ற சாதாரணர்களுக்கு,
கிரியைக் குறிப்புக்களால்,
அக வழிபாட்டு நெறி செய்யும் அற்புதர்கள் இவர்கள்.
தத்துவ ஞானக் குறிப்புக்களோடு கூடிய,
நம் சமயக் கிரியைகளை நிகழ்த்துவித்து,
சாதாரணர்களைப் புற வழிபாட்டில் ஈடுபடுத்துவதோடு,
அவர்களுக்கு அக வழிபாட்டுத் தெளிவையும்,
இவர்களே ஆக்கித் தருகின்றார்கள்.
கந்தரனுபூதியில் அருணகிரிநாதர் சொன்னாற்போல்,
“குறியைக் குறியாது குறித்து அறியும் நெறியை”,
நமக்குக் கற்றுத் தருபவர்கள் அந்தண சிவாச்சாரியர்களேயாம்.

❁ ❁ ❁

புற வழிபாட்டோடு அக வழிபாட்டையும் உருவாக்க வேண்டுமெனில்,
குருவாய் இருந்து அவ் வழிபாட்டினை நெறிப்படுத்தும் அந்தணர்கள்,
தத்துவஞானம் உடையராதல் அவசியத்திலும் அவசியமாம்.
அந்த ஞானம் கைவரப் பெற்றால் மட்டுமே,
தாம் இயற்றும் கிரியைகளின் தனித்துவ இரகசியங்கள்,
அவர்க்கு வெளிப்படும்.
அங்ஙனம், அக்கிரியைக் குறிப்புக்களைத் தாம் அறிந்தால் மட்டுமே,
அவர்கள் மற்றவர்க்கு,
கிரியை வழிபாட்டை நெறி செய்தல் கூடும்.
குறிப்பறியாது கிரியை செய்வோர்தம் செயல்கள்,
அகப்புற வழிபாடான கிரியை நிலையுறா.
அவை வெறும் புற வழிபாடாகவே ஆகிவிடும்.
அவரின் செயல்கள்,
பொருள் அறியாது மொழி பேசும்,
குழந்தைகள் தம் செயலோடு ஒக்குமாம்.

ஆச்சாரிய நிலையுற,
ஓர் அந்தணர்க்கு பல தகுதிகள் தேவை.
அவற்றுள் முதலானது ஒழுக்கம்.
அந்தணர் வேதத்தை மறப்பினும்,
ஒழுக்கம் தவறுதல் ஆகாது என்கிறார் வள்ளுவப் பெருந்தகை.

**மறப்பினும் ஓத்துக்கொளல் ஆகும் பார்ப்பான்**
**பிறப்பொழுக்கம் குன்றக் கெடும்.**

என்பது தெய்வப் புலவர்தம் திருவாக்கு.
அந்தணர்க்கான அடுத்த தகுதி தெய்வ பக்தியாம்.
இறைமேல் தான் அன்புறாத ஒருவர்,
மற்றோரை அன்புறச் செய்வது எங்ஙனம்?
மூன்றாவது தகுதி,
வேதாகமங்களில் பெறும் ஆழ்ந்த பயிற்சியும்,
புராண, இதிகாச அறிவுமாம்.
இந்நூல்களால் பெறும் அறிவு,
அந்தணர்தம் அறிவை,
தெய்வீக மயப்படுத்தி மற்றோரை ஈர்த்து நிற்கும்.
பதி சார்ந்த அறிவாதலின் மதியில் அடக்கத்தை உண்டாக்கும்.
இம்மூன்றும் கைவரப்பெற்றவர்,
தகுந்த ஓர் ஆச்சாரியனிடம்,
வரன்முறையாய்க் கிரியை நெறிகளைக் கற்றுத்தேர்தல்,
அவர்தம் நான்காம் தகுதியாம்.
இத்தகுதியில் பூரணப்பட,
தக்கவொரு தத்துவ ஆசிரியனிடம்,
மெய்நூல் பயில்தலும் அவசியம்.
மேற் தகுதிகளில் தாடனப்பட்டு,
ஆத்மார்த்த பரார்த்த பூஜைகளை
ஓர் அந்தண ஆச்சாரியர் இயற்றும்போது,
புறமும், அகமும் அவர்க்குத் தாமே இயையும்.
அந்த இயைபை அவர் மற்றோர்க்கும் ஆக்குவர்.
இதுவே உயர் அந்தண ஆச்சாரிய நிலையாம்.

❁ ❁ ❁

உலகம் இன்று மிக வேகமாய்ப் பொருள் வயப்படுகிறது.
உலகோர், தினம் தினம் உலக வயப்படுதலில் வேகமுற்று,
மாயையுள் ஆழ்ந்து மகிழ்கின்றார்.

இப் பொய் இன்பம்,
என்றோ ஒருநாள் அவரை இடையில் கைவிடும் என்பது திண்ணம்.
பொய்மையில் மூழ்கும் இந்த உலக வேகம்,
இன்றைய அந்தணர் குலத்தையும் பற்றியது நமது தவக்குறைவே.
அந்தண ஆச்சாரிய நிலையை,
தொண்டாய் அன்றி,
தொழிலாய் கருதுவோர் இன்று பலராயினர்.
மேற்கூறிய அந்தணத் தகுதிகள் ஏதுமின்றி,
குலப்பிறப்பே தகுதியாக,
பேதைமை புரிவார் தொகை வரவர அதிகரிக்கிறது.
ஒழுக்கம், பக்தி, வேத அப்பியாசம், அடக்கம், தத்துவஞானம்,
இவற்றோடு கிரியை செய்வார் இன்று எவரோ ஒரு சிலராம்.
ஒழுக்கநெறி நிற்கும் அந்த ஓரிருவரும்,
குறைவாளர்தம் படாடோபத்தில் மறைந்து,
இனம் காணப்படாது போயினர்.
இதனால், நாற்பாதங்களுள் பெரும்பாலோர் பொருந்தி நிற்கும்,
சரியை, கிரியை வழிபாடுகளை நெறி செய்வார் எவருமின்றி,
சைவ உலகம் தவித்து நிற்கிறது.

❁ ❁ ❁

உண்மைகளை நிலைநிறுத்த,
உயர்ந்தோர் சொன்ன வழிகள் மூன்றாம்.
அவற்றுள் ஒன்று கண்டறிவது,
இதனைக் காட்சிப் பிரமாணம் என்பர்.
மற்றையது ஊகித்து அறிவது,
இதனை அனுமானப் பிரமாணம் என்பர்.
அடுத்தது உயர்ந்தோர் சொல்லக் கேட்டு அறிவது,
இதனை ஆகமப் பிரமாணம் என்பர்.
உயர்நெறி நில்லா சமயங்கள்,
காட்சி, அனுமானப் பிரமாணங்களையே,
பெரும்பாலும் தமக்குப் பிரமாணமாகக் கொள்ளும்.
காலாகாலமாய் ஞானியரைப் பெற்று உய்வுற்று வருவது,
நம் இந்துமதம்.
அந்த ஞானியர், தம்யோகக்காட்சியால்,
இந்துமதத்தின் அனைத்துச் செயல்களையும் வரையறுத்தனர்.
அவர் வகுத்த வரையறைகள்,

தெளிவுபட்ட ஆகமப் பிரமாணங்களாய்,
சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும்
நாற்பாத வழிபாட்டினையும்
நெறிசெய்து நிற்கின்றன.
அதனால் மேற்கோள்களின்றி வரையறை செய்யும் வறுமை,
நம் இந்துமதத்திற்கு இல்லையாம்.

❊ ❊ ❊

அந்த ஆகமப் பிரமாணங்களைக் கற்று அறியாப் பலரும்,
தம் சிறுமதி கொண்டு, உண்மை காணும் தகுதி இழந்து,
கிரியை நெறிகளை அனுமானித்து,
தம் இஷ்டப்படி,
ஊகமாய் வரையறை செய்து ஓதி வருகின்றனர்.
அவர்தம் மேற்கோள்கள் இல்லா அனுமானங்கள்,
வேதாகம நெறிப்பட்டவை அல்லவாம்.
அந்த அவலத்தால் இன்று,
சரியானவை பிழையாகவும்,
பிழையானவை சரியாகவும் போதிக்கப்படும்
ஆபத்துத் தோன்றியுள்ளது.
இந்த ஆபத்து சரியை, கிரியை நெறிகளில்,
நாளாந்தம் பெருகி வருகிறது.
யோக, ஞான நெறிகளையும் இவ்வழு பற்றாமல் இல்லை.
கற்று வரையறை செய்வார் இல்லாது போனதால்,
கல்லாது வரையறை செய்வார்,
பிழைகளை உபதேசித்துப் பெருமை கொள்கின்றனர்.
சாமானியர் வழிபாட்டின் உண்மைநெறி அறியாது,
பிழையைச் சரியெனப் பின்பற்றிப் பேதைமை கொள்கின்றனர்.

❊ ❊ ❊

இந்நிலையில் உண்மை உணர்த்தி,
சைவ உலகை நெறி செய்வது,
இன்றைய காலத்தின் தலையாய தேவையாம்.
இந்நெறி செய்யத்தக்க சான்றோர்,
நம் மண்ணில் வாழ்ந்தது,
நாம் செய்த முன்னைத் தவப்பயன்.

அங்ஙனம், நம் மண்ணின் தவப்பயனாய் வாழ்ந்தோரில்,
சென்ற நூற்றாண்டில்,
யாழ். அச்சுவேலியைப் பிறப்பிடமாகக் கொண்டு வாழ்ந்த,
அந்தணப் பெருமகனார்,
சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள் அவர்கள் குறிப்பிடத்தக்கவர்.
முற்சொன்ன அந்தணத் தகுதிகள் அனைத்தும்
நிரம்பப் பெற்று வாழ்ந்தவர்.
அந்தணர் குலம் ஓங்கி உய்யவும்,
சைவர்கள் உயர்வடையவும்,
அவர் அருளிச்செய்த நூல்கள் பலவாம்.
அவர்தம் நூல்களைக் காண்கையில்,
அவர் பெற்றிருந்த கல்வியின் வியாபகம் தெரிந்து வியக்கிறோம் நாம்.
வேதாகம புராண இதிகாசங்களில் மட்டுமன்றி,
திருமுறைகளிலும் தோய்ந்து துலங்கிய அவர்தம் ஆற்றலை,
அவரின் நூல்கள் பறைசாற்றி நிற்கின்றன.
தத்துவ நூல்களில் அவர் பெற்ற ஆழ்ந்த தரிசனம்,
அவர் நூல்களிலே தெளிவுபட பதிவாகியுள்ளது.
அந்நூல்கள் இன்று போற்றுவார் இன்றிப்போவது,
நம் இனத்தின் அறிவேழ்மைக்காம் சான்று.
வழக்கொழியும் நிலையில் இன்று அந்நூல்கள்.
அந்நூல்களைப் புதுப்பித்தல்,
அப் பெரியார்க்குச் செய்யும் கௌரவம் மட்டுமன்றி,
சைவ உலகைக் காத்தற்கும் பெருந்துணையாகும் என்பது திண்ணம்.

❋ ❋ ❋

அந்த எண்ணம் தந்த உந்துதலால்,
அச்சான்றோர்தம்,
**விநாயக பரத்துவம், மகோற்சவ விளக்கம்** எனும்,
இருநூல்களை,
சைவநெறி நிர்ணயம் - 1 எனும் தலைப்பின் கீழ்,
தொகுத்து வெளியிடுகிறோம்.

❋ ❋ ❋

நம் இந்துமத பாரம்பரியத்தில்,
விநாயக வணக்கம் இன்றி,

எக்காரியத்தையும் இயற்றுதல் வழக்கன்றாம்.
அது நோக்கியும்,
இந்நூல் வெளிவரக் காரணர் ஆன
கொட்டாஞ்சேனை ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலய
தர்மகர்த்தாவாகப் பணியாற்றிய
அமரர் பொன். பாலசுந்தரம் அவர்களின்
விநாயக ஈடுபாடு நோக்கியும்
இந்நூலின் முதற் பகுதியாய்க் குருக்கள் இயற்றிய
**விநாயக பரத்துவம்** எனும் நூல் இணைக்கப்பட்டுள்ளது.

❊ ❊ ❊

குருக்கள் அவர்கள்,
வடமொழியிலும், தென்மொழியிலும் பெற்ற பெருஞானத்தால்,
தேர்ந்த மொழியில் தீட்டிய நூல்கள்,
சிதைவுற்ற மொழியறிவைப் பெற்ற,
இன்றைய தலைமுறையினருக்கு,
இரும்புக் கடலையாய், கற்க இன்னல் தரும்.
சொல்லை விட பொருள் அவசியம் என்பது நம் ஆன்றோர் கருத்து.
அது நோக்கி, குருக்கள் அவர்களின் உயர்ந்த மொழியை,
இன்றைய தலைமுறையினருக்காக,
இயன்று இப்பதிப்பில் எளிமைப்படுத்தி இருக்கிறோம்.
குருக்கள் அவர்களின் உயர்ந்த மொழிநிலையை
நாம் பேண நினைப்பின்
அவர் சொன்ன, உயர்ந்த பொருள்களை
புதிய தலைமுறை இழந்துவிடக்கூடும்.
அது கருதி,
நாம் செய்த இம் மாற்றத்தை,
கற்றோர் உலகம் கருத்தில் கொள்ளும் எனக் கருதுகிறோம்.

❊ ❊ ❊

நமது இந்த மொழி இறக்க முயற்சியில்,
அறியாது தவறுகள் ஏதும் ஏற்பட்டிருப்பின்,
கற்றோர் அறிவுறுத்துக.
அடுத்த பதிப்பில் அப்பிழைகளைத் திருத்த ஆவன செய்வோம்.
இதேபோல், இன்றைய நடைமுறைச் சமயத் தேவைகளை,
நெறி செய்யத்தக்க உயர் நூல்களை,

“சைவ நெறி நிர்ணயம்” எனும் தலைப்பில்,
தொடர்ந்து வெளியிட உள்ளோம்.
சான்றோர் தரும் ஆலோசனைகளை,
நாம் தலை வணங்கி ஏற்போம்.

❋ ❋ ❋

இந்நூல் எமது கொழும்புக் கம்பன்கழகச் செயலாளரும்,
கொட்டாஞ்சேனை ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலய அறங்காவலருமான,
அமரர் பொன். பாலசுந்தரம் அவர்களின் நினைவாய் வெளிவருகிறது.
அமரர் பொன். பாலசுந்தரம் அவர்கள்,
யாழ்ப்பாணம் மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.
கொழும்பு “ஜ.்பார்ஜி பிரதர்ஸ்” எனும் நிறுவனத்தில்,
பலகாலம் பெரும்பணியாற்றிப் புகழ்கொண்டவர்.
தான் பெற்ற பெரும் செல்வத்தை,
அறப்பணிகளுக்கு அள்ளிக் கொடுத்து,
ஒப்புரவாளராய் உயர்ந்தவர்.
பயன்மரம் பழுத்தாற்போலும்,
ஊருணி நீர் நிறைந்தாற்போலும்
அவர் கொண்ட செல்வம் உலகிற்குப் பயன் செய்தது.
எவரும் அறியாது தம்மை மறைத்து
அவர் செய்த தர்மகாரியங்கள் பலப்பல.
சைவத்தையும், தமிழையும் தன் இரு கண்களாகப் போற்றிய
பெரு மனிதர் அவர்.
தன் தாய் மண்ணை உயிராய் நேசித்தவர்.
தாய் மண்ணின் விழுமியங்கள்,
உலகில் நிலைக்கவேண்டும் எனும் எண்ணத்தால்
பலவாய் முயன்றவர்.
அந்நல்லார்தம் நினைவாய் “சைவநெறி நிர்ணயம் -1” எனும்
இந்நூல் வெளிவருவது பெரிதும் பொருத்தமாம்.
அப்பெரியாரை தக்கார் என நிரூபித்து நிற்கும்,
அவர்தம் எச்சங்களான அன்புக் குழந்தைகள்,
முரளி, முகுந்தன், ரமணன், ரகுலன், நங்கை ஆகியோரும்,
கணவனார்தம் கருத்தே தம் கருத்தாய் வாழ்ந்த,
அவர்தம் துணைவியார் பத்மாவதி அவர்களும்,
இந்நூல் வெளிவரும் பணியைத் தம் பணியாய் ஏற்று,

உவந்து இக்காரியம் இயற்றினர்.
அவர் தம்மைக் கற்றோர் உலகம் உவந்து போற்றும்.

❋ ❋ ❋


இந்நூலாக்கத்தில் எமது கழக உறுப்பினர்களான,
செல்விகள் பிரதீபா சபாநடேசன்,
ஜெயவதனி தேவராஜா ஆகியோர்
பெருந்துணை புரிந்தனர்.
கழக அமைப்பாளரான,
ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழக விரிவுரையாளர்,
ஸ்ரீ. பிரசாந்தன் இந்நூல் சிறப்புற அறிவுத்துணை செய்தார்.
கிரியைநெறி பற்றிய பல விடயங்களை,
அன்னை வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதன் அவர்களும்,
சர்வபோதகராய்த் திகழும் சிவஸ்ரீ விஸ்வநாராயணக் குருக்கள் அவர்களும்,
தெளியச் செய்து துணை புரிந்தனர்.
நூலாக்கத்தில் கொழும்புக் கம்பன்கழகப் பொருளாளர்,
ச.ஆ. பாலேந்திரம் அவர்களும் துணை நின்றார்.
நூலை அழகுற அச்சிட்டோர் யுனி ஆர்ட்ஸ் நிறுவனத்தினர்.
நல்லாற்றில் துணை நின்ற இவ்வனைவர்க்கும் அறம் பயன் விளைப்பதாக!
சைவ உலகம் இந்நூலின் தேவை அறிந்து பயன் கொள்ளட்டும்.

"இன்பமே எந்நாளும் துன்பமில்லை"

ஆசிரியர் குழு சார்பாக,
**இ.ஜெயராஜ்**
கம்பன்கழகம்.

இல, 11 இராமகிருஷ்ண தோட்டம்,
கொழும்பு - 06.
தொலைபேசி: 2360525.

# "விநாயக பரத்துவம்"



## "காதலால் கூப்புவர் தம்கை"

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமுகத்தானைக்
காதலால் கூப்புவர் தம்கை.

# விநாயக பரத்துவம்

# விநாயக பரத்துவம்

உள்ளடக்கம் பக்கம்


| | | |
|---|---|---|
| 1. | விநாயகர் திரு அவதாரம் | 01 |
| 2. | கயமுகாசுர சங்கார மூர்த்தி | 08 |
| 3. | அநந்த சாப நிவாரண மூர்த்தி | 14 |
| 4. | பிரணவ மூர்த்தி | 15 |
| 5. | புரான பரிபாலன மூர்த்தி | 17 |
| 6. | பரம ஆசாரிய மூர்த்தி | 21 |
| 7. | திருமுறை கண்ட மூர்த்தி | 22 |
| 8. | வரம்பெறு மூர்த்தி | 24 |
| 9. | விக்கினேசுவர மூர்த்தி | 25 |
| 10. | அச்சு அறுத்து அருள் மூர்த்தி | 27 |
| 11. | மூலாதார அதிப மூர்த்தி | 29 |
| 12. | சர்வலோக நாயகப் பிரதட்சிண மூர்த்தி | 32 |
| 13. | ஆபத்சகாய மூர்த்தி | 34 |
| 14. | வலம்புரி விநாயக மூர்த்தி | 36 |
| 15. | விகடசக்கர விநாயக மூர்த்தி | 38 |
| 16. | கூர்மசங்கார மூர்த்தி | 40 |
| 17. | சந்திர சிட்ஷா ரட்ஷக மூர்த்தி | 42 |
| 18. | இந்திர அனுக்கிரக மூர்த்தி | 44 |
| 19. | அகத்திய அனுக்கிரக மூர்த்தி | 47 |
| 20. | இராவண கர்வபங்க மூர்த்தி | 49 |
| 21. | மகாபாரத லிகித மூர்த்தி | 51 |
| 22. | விண்டு விநாயக மூர்த்தி | 53 |
| 23. | சமி மந்தார அனுக்கிரக மூர்த்தி | 55 |
| 24. | பாலசந்திர மூர்த்தி | 58 |
| 25. | மயூரேச மூர்த்தி | 60 |
| 26. | புஜங்க ஆபரண மூர்த்தி | 62 |
| 27. | வல்லாள மூர்த்தி | 64 |
| 28. | வக்கிரதுண்ட விநாயக மூர்த்தி | 68 |
| 29. | சித்திபுத்தி திருமண மூர்த்தி | 70 |
| 30. | சித்திவிநாயக மூர்த்தி | 72 |
| 31. | வல்லபா கணேச மூர்த்தி | 75 |

# 1. விநாயகர் திரு அவதாரம்

**விநாயகனே வெவ்வினையை வேர் அறுக்க வல்லான்**
**விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே**
**விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் தன்மையினாற்**
**கண்ணிற் பணிமின் கனிந்து.**

**- பதினொராம் திருமுறை.**

**மு**ன்னொரு காலத்திலே இந்திரன் அசுரேந்திரனைப் போரில் வென்றான். அசுரேந்திரன் வருந்திச் சுக்கிராசாரியருக்கு விண்ணப்பித்தான். ஆசாரியர், "வசிட்ட முனிவர் மரபில் வந்த மாகதரிடம் ஓர் அசுர கன்னிகையை அனுப்பு, அவள் அவருடன் சேரும்பொழுது ஒருவன் தோன்றித் தேவர்களை வெல்வான்" என்று கூறினார். அசுரேந்திரன் விபுதை என்பவளை மாகத முனிவரிடம் அனுப்பினான். அவள் சமயம் பார்த்துத் தவம் செய்துகொண்டிருந்தாள். அப்பொழுது ஒரு களிற்றியானை பிடியுடன் புணர, அதனை முனிவர் நோக்கிப் புணர்ச்சிமேல் மனம் வைத்தார். விபுதை அவரை அணுகி, அன்புண்டாகும்படி வணங்கிநின்றாள். முனிவர் மகிழ்ச்சியுற்று "யாமிருவரும் யானை உருவெடுத்துக் கூடி இன்புறவேண்டும்" என்றார். விபுதை பெண் யானையாகத் தோன்ற, முனிவர் களிறாகத் தழுவி இன்பம்நுகர்ந்து ஆசை நீங்கினர். அப்பொழுது கயமுகாசுரன் என்பவன் தோன்றினான். பிடியானையின் அளவற்ற உரோமங்களினின்றும் அநேக அவுணவீரர் தோன்றினார்கள். மாகத முனிவர் பழைய உணர்வுதோன்ற, "பெண்ணே! இனிப்போகுதி" என்றார். விபுதை போயினாள். கயமுகன் உயிர்களை உண்டு இரத்தத்தைப் பருகித் திரிந்தான்.

அசுரகுருவாகிய சுக்கிரர் கயமுகனை அணுகித் தவம் செய்யும்படி உபதேசித்து, அனுமதி கொடுத்து அனுப்பினார். கயமுகன் மேருவின் ஒருசாரிற்போய் மூவாயிரம் வருடம் தவம் செய்தான். சிவபெருமான் தோன்றிப் பல வரங்களைக் கொடுத்து மறைந்தருளினார்.

கயமுகாசுரன் ஆயுதங்களையும் பிறவரங்களையும் பெற்று, இந்திராதி தேவர்களைவென்று, மதங்கமாபுரம் என்னும் நகரத்தை அமைத்து,

**களிறு** - ஆண் யானை **பிடி** - பெண் யானை
**அவுணவீரர்** - அசுரர்கள்

ஏழுலகிலும் தன்கொடுங்கோலும் ஆணைச் சக்கரமும் செல்ல, அரசு செய்திருந்தான். அரசு செய்யும் காலத்து இந்திரன் முதலிய தேவர்களை நோக்கி, "நீங்கள் தினந்தோறும் எம்முன் வரும்பொழுது, உங்கள் கைகளாற் சிரசில் மும்முறை குட்டி, கைகளை மாறிக் காதுகளைப் பற்றித் தாழ்ந்தெழுந்து, அதன்பின் எம்பணிகளைச் செய்யுங்கள்" என்றான். தேவர்கள் அதனை மறுத்தற்கு அஞ்சி, முன்பு நின்று, அவன் பணித்த அவ் இழி தொழிலையும் பிறபணிகளையும் நாள்தோறும் செய்து பழியில் மூழ்கினார்கள்.

கயமுகாசுரனுடைய ஏவலினால் வருந்திய தேவர்கள் திருக்கைலாச மலைக்குப்போய்ச் சிவபெருமானை வணங்கினார்கள். அவர்களுள் விட்டுணு சிவபெருமானை நமஸ்கரித்து, "எம்பெருமானே! கயமுகன் தவம்செய்து பெற்ற வலியினால் தேவர்களை வருத்துகின்றான். தேவரீர் அவனுடைய உயிரைத் தொலைத்தருள வேண்டும்" என்று பிரார்த்தித்தார். அதனைக் கேட்டருளிய கடவுள் "இனியொரு புத்திரன் எம்மிலிருந்து தோன்றுவான்; கயமுகாசுரனை வெற்றி கொள்ளும்படி அவனை அனுப்புவோம்" என்று திருவாய்மலர்ந்து விடை கொடுத்து அருளினார்.

சிவபெருமான் தேவர்களது இடரை நீக்குவதற்குத் திருவுள்ளங்கொண்டு, திருக்கைலாச மலையிலே உள்ள நந்தனவனத்தில் உமாதேவியாருடன் போய், அதன் இயல்புகளை அவரோடு பார்த்து, ஓவியங்களையுடைய ஒரு மண்டபத்திற்குச் சென்றார். உமாதேவியார், அதிலுள்ள ஓவியங்கள் எல்லாவற்றையும் பார்த்தார். சிவபெருமானது ஆணையினால் அம்மண்டபத்தின் நடுவே, ஒரு பிரணவ எழுத்தே இரண்டு திருவுருக் கொண்டு யானைகளின் வடிவாய்த் தோன்றிச் சேர்ந்தது. அதனைத் தேவியார் பார்த்துச் சிவபெருமானை வணங்கிப் "பிரணவ எழுத்து யானை வடிவாய்ச் சேர்வது ஏன்?" என்று வினாவினார். சிவபெருமான் அவரை நோக்கி, "எவற்றுக்கும் மூலமாகிய பிரணவ எழுத்தானது நீ முன்பு விரும்பிப் பார்த்தமையினாலே இரண்டாகிய யானை உருக்கொண்டு சேர்கின்றது; காட்சி மாத்திரத்தால் இதனைச் செய்வதற்குக் காரணமாயுள்ள உன்னுடைய மாட்சியை யாமன்றி வேறுயார் அறியவல்லார்; உன்னுடைய திருவருட் செய்கை வேதங்களுக்கும் எட்டாததாகும்" என்று சொல்லியருளினார். யானைகள் இரண்டும் மலத் தொடர்பற்ற புணர்ச்சியை விட்டன. அப்பொழுது ஐந்து திருக்கரங்களையும், மூன்று திருக்கண்களையும் சந்திரனைத் தரித்த செவ்வானம் போலும் திருச்சடையினையும், யானை முகத்தையும், மும்மதங்களையும் உடைய ஒரு பாலகர் தோன்றியருளினார். அவர் மெய்யன்போடு தியானிக்கின்ற அடியார்களுடைய அறிவுக்கு அறிவாயுள்ளவர்; எங்கும் வியாபித்திருப்பவர்; யாவராலும் அறியப்படாதவர்; எவராலும் வணங்கப்படும் இயல்பினர்; சிவபெருமான் இருவர் என்று சொல்லும்படி நினறு அருள் செய்பவர்;

நான்கு வேதப் பொருளாய் உள்ளவர்; உலகில் உள்ளோருடைய அஞ்ஞானத்தையும் மனத் துன்பங்களையும் நீக்குதற்காக அருள் உருக்கொண்டு அவதரித்தவர்.

இவ்வியல்பினையுடைய புத்திரராகிய விநாயகக் கடவுள் சிவபெருமானையும் உமாதேவியாரையும் நமஸ்காரம் செய்ய, அவர்கள் கருணை செய்தனர். சிவபெருமான், "எக்கருமங்களிலும் முதலில் வணங்கப்படும் முதன்மையை அப்புத்திரருக்குக் கொடுத்து, கயமுகனைச் சங்காரம் செய்து விட்டுணுவினுடைய சாபத்தை நீக்கு" என்று கிருபை செய்து, பூதங்களைச் சேனைகளாக உண்டாக்கிக் கொடுத்து, உமாதேவியாரோடும் விநாயகரோடும் சோலையை நீங்கித் திருக்கைலாச மலைக்குப்போய், விநாயகக்கடவுளை நோக்கி, "நீ நம்முடைய கோபுரவாயிலிலே நாயகனாய் இரு" என்று இருத்தித் தாம் உமாதேவியாரோடும் கோயிலினுள் போய் வீற்றிருந்து அருளினார். திருநந்திதேவர் வந்தனை செய்யவும், பிரமா முதலிய தேவர்கள் வந்து வந்து வணங்கவும் விநாயகக்கடவுள் எழுந்தருளியிருந்தார்.

கந்தபுராணம் - கயமுகன் உற்பத்திப்படலம்

"பாங்கரில் வருவதோர் பரமன் ஆணையால்"

என்றமையாலும்,

"ஆங்(கு) அதன் நடுவணில் ஆதி ஆகியே
ஓங்கிய தனியெழுத்(து) ஒன்றில் இரண்டதாய்த்
தூங்கு கை மலைகளில் தோன்றிற்(று) என்பவே" (142)

என்றமையாலும் பிரணவமாகிய தனியெழுத்தே இருவடிவு உற்றது என்பதும்,

"முன்பு நீ காண்டலின் மூலமாய் உடையதோர்
மன்பெரும் தொல்பொறி மருவி ஈர் உருவு உறீஇ
அன்பினால் ஆனைபோல் புணருமால் ஆகையால்
நின்பெருந் தகவினை நினைகிலாய் நீயுமே"

"காட்சியால் இதுசெயும் காரணம் பெற்ற நின்
மாட்சிதான் யாம்அலான் மற்றுயார் உணர்குவார்
ஆட்சியால் உற்றதொல் அருமறைக்(கு) அரியினும்
சேட்செலா நிற்கும்நின் திருவருட் செய்கையே" (145,146)

என்னும் செய்யுட்களாலும் இவ்விருவடிவுகளும் சத்தியும் சிவமுமாம் என்பதும்,

"........... தந்தியும் பிடியுமாய்

துன்னியே புணர்வுறுந் தூயசெய் தொழில்விடா" (147)

என்றமையாலும் இவ்விருவடிவங்களின் கலப்பு அசுத்த மாயா தத்துவங்களில் உள்ளோர் அசுத்தக் கலப்புப் போல் ஆகாது சுத்தமாம் என்பதும்,

"......... புவனம் உற்றவர் கடம்

இருள் அறுத்(து) அவர் மனத்(து) இடர்தவிர்த்(து) அருளவோ

அருள் உருத் தனை எடுத்(து) அவதரித்(து)உளன் அவன்" (150)

என்றமையால் விநாயகரது வடிவம் அருள்வடிவமாம் என்பதும்,

"ஒருமையால் உணருவோர் உணர்வினுக்(கு) உணர்வதாம்

பெருமையான்" (149)

என்றமையால் மெய்யன்போடு தியானிப்பவர்களுடைய அறிவுக்கு அறிவாயுள்ளவர் என்பதும்,

"எங்கணும் பிரிவறும் பெற்றியான்"

என்றமையால் சர்வவியாபகர் என்பதும்

"அருமையான்"

என்றமையால் யாவராலும் அறியப்படாதவர் என்பதும்,

"எவரும் அடிதொழுந்தன்மையான்"

என்றமையால் எவராலும் வணங்கப்படும் இயல்பினர் என்பதும், பெறப்பட்டவாறு கண்டு கொள்க.

பிடி அதன் உரு உமை கொள மிகு கரியது

வடி கொடு தன(து) அடி வழிபடும் அவர் இடர்

கடி கணபதி வர அருளினன் மிகுகொடை

வடிவினர் பயில் வலி வலமுறை இறையே.

எனவும்,

செற்றிட்டே வெற்றிச்சேர் திகழ்ந்த தும்பி மொய்ம்புறும்

சேரேவாரா நீள்கோதைத் தெரி இழை பிடியதுவாய்

ஒற்றைச்சேர் முற்றற்கொம்பு உடைத் தடக்கை முக்கண் மிக்(கு)

ஓவாதே பாய் மாதானத்(து) உறுபுகர் முக இறையைப்

பெற்றிட்டே மற்று இப் பார் பெருத்து மிக்க துக்கமும்

பேராநோய் தாமே யாமைப் பிரிவு செய்தவன் திடம்

கற்றிட்டே எட்டெட்டுக் கலைத்துறைக் கரைச்செலக்

காணாதாரே சேரா மெய்க் கழுமல வளநகரே.

- திருஞானசம்பந்தர் திருமுறை - 01

எனவும் வரும் திருவாக்குக்களிலும், சுப்பிரபேத ஆகமும் விக்கினேச ஸ்தாபனவிதி படலத்திலும் இவ்வுண்மைகள் தோற்றுவதை உற்று நோக்கி உணர்க.

வாதுள ஆகமத்திலே, தத்துவபேத படலம் 139ம் சுலோகத்திலே மகேசுரருடைய திருக்கண்டத்தில் இருந்தும் கணேசர் தோற்றினார் என்று கூறப்பட்டிருக்க, கந்தபுராணம், சுப்பிரபேத ஆகமம் முதலியவற்றில் கயமுக சங்காரத்தின் பொருட்டுப் பிரணவத்தில் இருந்து தோற்றினாரெனக் கூறுவது முரணாமோ எனின், ஆகாது. அங்கே கூறியது பிரதம மகாசிருட்டியின் தோற்றத்தை; புராண முதலியவற்றிற் கூறியது அவாந்தர சிருட்டியின் தோற்றத்தை என அறிக.

ஒருநாள் விட்டுணு சிவபெருமானைத் தரிசிக்க திருக்கைலாச மலைக்குப் போய் விநாயகக் கடவுளை வணங்காதவராய் உள்ளே சென்று சிவபெருமானை வணங்கித் துதித்தார். பரமசிவன் அப்பொழுது விட்டுணுவை இருக்கும்படி பணித்து, ஒரு திருவிளையாடலை நினைந்து உமாதேவியாரை நோக்கி, "நீ நம்மோடு சூதாடு" என்றார். உமாதேவியாரும் அதற்கு உடன்பட்டார். விருப்பு வெறுப்பின்றி ஆன்மாக்களது இருவினைகளை முற்றும் ஒருங்கு உணர்ந்து அப்புண்ணிய பாவத்துக்கு ஏற்பத் தனு, கரண, புவன, போகங்களைக் கொடுத்து அருளும் சிவபெருமான் விட்டுணுவை நோக்கி, "நீ இதற்குச் சாட்சியாய் இருப்பாய்" என்று பணித்தார். அவர் அதற்கு உடன்பட்டு இருந்தார். பரமசிவனுடைய உத்தரவின்படி ஆலாலசுந்தரர் முதலியோர் சூதாடு கருவியையும், ஆடுதற்குரிய பலகையையும் கொண்டு வந்தார்கள். திருக்கைலாசபதி விட்டுணுவை நோக்கி, "இக்காய்களை முறையாக வை" என்று கூற, அவர் வைத்தார். உமாதேவியாரைத் தமக்கு எதிராக இருத்திச் சிவபெருமான் தாம் கவற்றை உருட்டினார். பின்பு தேவியாரும் உருட்டினார். எவற்றினும் மேலவராகிய அவ்விருவரும் பஞ்சு என்றும், பாலை என்றும், வெடி என்றும், இஃது அடியென்றும், இஃது பெட்டையென்றும் சூதாடுவதற்கு உரிய குழூஉக்குறிகளை முறைப்படி அளவற்றனவாகச் சொல்லிக் கவற்றை எறிவார்கள். கருவிகளை எதிர் ஏறத் தள்ளி விளையாடுவார்கள். இவ்வாறு சூதாடும்பொழுது சிவபெருமான் தேவியாரிடம் தோற்று, அவரை நோக்கி, "நின்வலிமை நன்று" என்று நகைத்து, "நீ நம்மை வெல்லவில்லை" என்றார். தேவியார் அதனைக் கேட்டுத் தாம் கடவுளோடு வாதாடுவதற்கு அஞ்சி, விட்டுணுவை நோக்கி, "சான்றாக இருந்த நீ இதனைச் சொல்வாய்" என்றார். விட்டுணு, "சூது வென்றவர் சிவபெருமானே" என்றார். உமாதேவியார் "நீ நல்ல

---

**கவற்றை** - சூதாட்டக் காய்  **குழூஉக்குறி** - குறித்த குழுவினருக்கு மட்டும் விளங்கும் சொல்

உண்மையைச் சொன்னாய்'' என்று அவரைக் கோபித்து, நீ இதனைப் பாராதவனும் அல்லன்; பக்கத்தில் இருந்தாய்; நீ அறியாதது ஒன்றும் இல்லை; மாயையிலும், வஞ்சனையிலும் சிறந்த விட்டுணுவே! நீ இறுமாப்பினால் இந்தப் பொய்யைச் சொன்னாய்; ஆதலால் பசி வருத்தக் குருட்டுப் பாம்பாகக் கடவாய்'' என்று சபித்தார். உடனே அவர் பாம்பானார்.

விட்டுணு துன்பம் அடைந்து, சிவபெருமானுடைய பாதங்களை வணங்கி, ''அடியேனுக்கு இவ்வுரு நீங்கும் வழியை அருளுக'' என்றார். சிவபெருமான் விட்டுணுவை நோக்கி, ''நீ தென்திசையிலே, தென்தேசத்திலே, ஆலவனமென்று ஓர் இடமிருக்கின்றது, அதில் மிகப்பெரிய ஓர் ஆலமரம் உள்ளது. நீ அங்கேபோய் அம்மரத்தடியில் உள்ள பொந்தொன்றில் இச்சாபம் நீங்கும்படி பெருந்தவம் செய்து கொண்டிரு; அக்காலத்தில் நம்முடைய குமாரனாகிய விநாயகன் அங்கே வருவான்; நீ அவனை எதிர்கொண்டு தரிசிக்கும் பொழுது, உன்னுடைய இப்பாம்பு வடிவம் நீங்கும்'' என்று சொல்லியருளினார். விட்டுணு சிவபெருமானை வணங்கி, விடைபெற்றுக் கொண்டு, ஆலவனத்தில் போய் அம்மரப்பொந்தில் புகுந்து தவம் செய்து கொண்டிருந்தார்.

சூதாவது சதுரங்க முதலியவற்றால் ஆடுதல். அது தருமமும், பொருளும் இன்பும் ஆகிய மூன்றுக்கும் இடையூறாய் உள்ளது. செல்வத்தை அழித்து, வறுமையைத் தவறாது கொடுக்கும் இயல்புடையது. இம்மை, மறுமை இரண்டிலும் துன்பத்தை அடைவிப்பது. இது பற்றியே ''சூதும் வாதும் வேதனை செய்யும்'' என்றார் பெரியோர். இவ்விதமாகிய தீமைகளை உண்டுபண்ணும் சூதைச் சிவபெருமான் ஆடியது குற்றமாகாதோ? எனின்; ஆகாது. எங்ஙனமெனின்; விட்டுணுவினுடைய அகந்தைச் சூதை நீக்கும்படி தமது திருவருட்சத்தியோடு, ஆன்மாக்களது இருவினைப் பயன்களை முற்றாக ஒருசேர அறிந்து, புண்ணிய பாவத்துக்கு ஏற்பத் தனு, கரண, புவன, போகங்களைக் கொடுத்தருளும் சிவபெருமான் ஆடிய சூது தத்துவச் சூதேயாம்.

> **''பற்று இகல் இன்றியே பழவினைப் பயன்**
> **முற்று உணர்ந்து உயிர்களை முறையில் வைப்பவன்''** (163)
> **- கந்தபுராணம், கயமுகன் உற்பத்திப் படலம்.**

எனவும்,

> **''ஏற்றான் அவன் எய்திய இன் அருள் யாவதேயோ**
> **தேற்றா அ∴து யார்க்கும் அளப்பெரும் செய்கையாலே''**
> **- கந்தபுராணம்.**

எனவும்,

**"காயம் பலகை கவர் ஐந்து கண் மூன்றாய்
ஆயம் பொருவதோர் ஐம்பத்து ஓர் அக்கரம்
மேய பெருமான் இருந்து பொருகின்ற
மாயக் கவற்றின் மறைப்பு அறியேனே"**

**- திருமந்திரம்.**

எனவும் வருவனவற்றால் உணரப்படும்.

பொய்யாவது உள்ளதை இல்லாததாகவும், இல்லாததை உள்ளதாகவும், சொல்லுதல். பொய் மிக இழிவுள்ளது. பொய் சொல்பவர் கோ வதையும், ஸ்திரீவதையும், சிசுவதையும், தந்தைவதையும், செய்தவராவர். பொய்ச்சாட்சி சொன்னவரும், பொய்வழக்குப் பேசினவரும், வழக்கிலே நடுவு நிலைமையில் வழுவித் தீர்ப்புச் செய்தவரும் ஏழுபிறவிகளில் சம்பாதித்த எல்லாப் புண்ணியங்களையும் கெடுத்தவர் ஆவார். அவர்கள் எண்ணில்லாத காலம் நரகத்துன்பத்தை அனுபவிப்பார்கள். பின்னும் அவர்கள் பன்றி, கழுதை, நாய், பாம்பு முதலிய பிறப்புக்களில் பிறந்து, பின்பு மனிதப் பிறப்பிலே பிறவிக் குருடரும், செவிடரும், குஷ்டநோயினரும், ஊமைகளுமாய்ப் பிறப்பர்; மிக்க பசி, தாகம் உடையவராய் வருந்தித் திரிவர்.

சகல உலகங்களையும் காக்கவல்ல விட்டுணுவானவர் சிவபெருமானுடைய சார்பாக இருந்தும், ஒரு பொய்ச் சாட்சியினால் அனுபவித்தற்கு அரிய சாபத்தைப் பெற்றார் என்றால் இவ்வுலகத்திலே பொய்யையே கூறி வாழ்கின்றவர் அனுபவிக்கும் நரகத்துன்பத்தையும், பிறவித்துன்பத்தையும் யார் கூற வல்லவர்.

# 2. கயமுகாசுர சங்காரமூர்த்தி

கயமுகாசுரனுடைய ஏவல் செய்து மனம் வருந்திய இந்திரன் முதலிய தேவர்கள் விநாயகக் கடவுள் திரு அவதாரம் செய்தமையை அறிந்து, மகிழ்ந்து, திருக்கைலாச மலையை அடைந்து, அவருடைய திருவடிகளை வணங்கித் துதித்தார்கள். அத்தேவர்களுள் இந்திரன், "வேத ஒழுக்கங்களை நீக்கி, மிகக் கொடுந்துன்பங்களைச் செய்கின்றவனாகிய கயமுகாசுரனுடைய உயிரையும், எங்களுடைய குறையையும் நீக்கும்படி தேவரீர் வருவீர் என்று எங்களுக்குப் பரமசிவன் அருளிச் செய்தார்; ஆகையால் தேவரீரை அடைந்தோம்; எங்கள் துன்பத்தை நீக்கியருளுக" என்று பூசித்து வேண்டினான். விநாயகக்கடவுள், "அஞ்சற்க; அஞ்சற்க; கயமுகாசுரனைச் சங்காரம் செய்து, உங்களுடைய துன்பத்தை நீக்குவோம்" என்று கிருபை செய்தார். அத்திருவாக்கைக் கேட்ட தேவர்கள் "எங்களுடைய துன்பம் நீங்கியது; மறுமை இன்பங்களையும் அடைந்தோம்" என்று கூறி மகிழ்ச்சியுற்றார்கள்.

விநாயகக்கடவுள் கயமுகாசுரனைச் சங்காரம் செய்யத் திருவுளம் கொண்டு, திவ்விய சிங்காசனத்திலிருந்து எழுந்து, வாசலில் வந்து அசலன் என்பவனது தோளின் மீதேறிப் போருக்குச் சென்றார். பூதசேனைகள் வந்து சூழ்ந்து, அவருடைய புகழைச் சொல்லித் துதித்தும், சாமரைகளை வீசியும், குடைகளை ஏந்தியும், பூக்களைத் தூவியும், பலவகைப்பட்ட வாத்தியங்களை இயம்பியும் சென்றார்கள். விநாயகக் கடவுள் மதங்கமாபுரிக்கு எதிரில் போனார். அதனைத் தூதர்களால் அறிந்த கயமுகாசுரன் கோபமுற்று விரைந்தெழுந்து, யுத்தகோலம் உற்றவனாய்த் தேரில் ஏறி, ஆயிரம் வெள்ளம் சேனைகள் சூழ, யுத்தகளத்தை அடைந்தான். பூதர்கள் அவுணர்களோடு எதிர்த்து யுத்தம்செய்து வெற்றியடைந்தார்கள். அதனைக் கண்ட கயமுகன் வில்லை வளைத்துப் பாணங்களைச் செலுத்தப் பூதர்கள் யாவரும் வருந்தி, வலிமை கெட்டுப் புறம் கொடுத்தார்கள். விநாயகக் கடவுள் கயமுகாசுரனை அணுகினார். கயமுகாசுரன் தேருடன் விநாயகக் கடவுளுடைய திருமுன்னிலையை அடைந்து, கோபித்துப் பார்த்து, "மைந்தனே! உன் பிதா நான் செய்த

---

**அவுணர்கள்** - அசுரர்கள் **புறம்கொடுத்தல்** - தோற்று ஓடுதல்

தவத்தை நோக்கி, எனக்குப் பல வரங்களைத் தந்தார். விட்டுணு முதலிய தேவர்களும் மற்றையோர் யாவரும் போரில் வந்து எதிர்த்தால் அவர்கள் எனக்குப் புறம் தரவும், அவர்களது படைக்கலங்கள் ஒருங்கே வந்தாலும் அவைகளால் இறவாமலிருக்கும் பெரும் வலி பொருந்தவும், தேவர் முதலிய வகுப்பினரால் இறவாதிருக்கவும், என்னை நிகர்த்த ஒருவன் வந்து போர் செய்யினும் அவனுடைய ஆயுதங்களாலும் அழியாதிருக்கவும் வரங்களைப் பெற்றுக்கொண்டேன். நீ இந்திரன் முதலிய தேவர்களுடைய துன்பத்தை நீக்குபவன் போல என்னுடன் போர்செய்ய வந்தாய்; யான் உன்னை வென்று அவர்களுடைய உயிரையும் பருகுவேன்; என்னோடு போர் செய்து வெற்றி கொள்வதற்கு முடிந்தவனாயின் வருவாய்'' என்று கூறினான். சிவகுமாரர் அவனை அருளோடு நோக்கி, ''கயமுகனே! முன்னாளிலே உனக்குப் பலவரங்களையும் தந்த நமது பிதாவே உன்னைச் சம்மாரம் செய்து, இந்திரன் முதலிய தேவர்களது துன்பத்தை நீக்கிச் சுவர்க்கம் முதலிய உலக ஆட்சியை அவர்களுக்குக் கொடுத்து வரும்படி எமக்குக் கட்டளையிட்டு அருளினார். சுவர்க்க உலகத்தை இந்த இந்திரன் அரசு செய்ய விடுத்து, நீ இம்மண்ணுலகத்தில் அரசு செய்திருப்பாயாக; அது உனக்கு முடியாதாயின் நாம் உன்னுயிரைக் கவருவேன்; உன்னுடைய எண்ணம் யாது? சொல்வாய்'' என்றார். கயமுகாசுரன் அக்கினி சொரியப் பார்த்து, விரைந்து ஒரு வில்லை வளைத்துப் பாணங்களைச் செலுத்தினான்.

விநாயகக் கடவுள் ஓர் எழுப்படையினால் அவைகளைச் சிதறடித்துப் பின், அதனால் அவன் வில்லையும் முறித்தார். அவன் வேறொரு வில்லை எடுத்து வளைக்க, அதையும் அழித்தார். கயமுகன் ஒரு தண்டாயுதத்தை எடுத்துக்கொண்டு எதிர்த்தான். அவர் எழுவினால் அத்தண்டையும் அடித்து அழித்து, அவ்வெழுவினால் அவனுடைய மார்பில் அடித்தார். அவன் செயலற்று மனம் நடுங்கி, ஒன்றும் பேசாதவனாய் நாணமுற்று ஒடுங்கி, இறந்தவனுக்குச் சமமாக நின்றான். விநாயகக் கடவுள் அவனுடைய சேனைகளையும் அழிக்கத் திருவுளம் கொண்டு, ஒரு பாசத்தை வீசினார். அது அவனுடைய சேனைகளைக் கட்டியது. அதன்பின் கணிச்சியைச் செலுத்த, அது அச்சேனைகளைக் கொன்றது. கயமுகாசுரன் பதைபதைத்து, மனம் வருந்தித் தன்னிடத்துள்ள படைக்கலங்கள் எல்லாவற்றையும் செலுத்தினான். அவைகள் விநாயகக் கடவுளை வலம் செய்து துதித்துக் கட்டளையின்படி நின்றன. கயமுகாசுரன் கோபம் அதிகரிக்க, பேசாது நின்றான். சிவகுமாரர் அவனை நோக்கி, நாம் ஆயுதங்களைச் செலுத்தினால், நமது பிதா கொடுத்த வரத்தினால் அந்த ஆயுதங்கள் எல்லாம் இவனைக் கொல்லமாட்டா என்று சிறுபொழுது சிந்தித்துத்

---

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **சம்மாரம்** | - அழித்தல் | **பாணங்கள்** | - அம்புகள் | **எழுபடை** | - உருக்காயுதம் |
| **தண்டு** | - தடி | **பாசம்** | - கயிறு | **கணிச்சி** | - கோடரி |

தம்முடைய திருக்கோட்டில் ஒன்றைத் தமது திருக்கரத்தால் முறித்துக் கயமுகாசுரன் மீது விட்டார். அது அவனுடைய மார்பைப் பிளந்து விரைந்து சென்று, சுத்தோதக சமுத்திரத்தில் மூழ்கி, அவருடய திருக்கரத்தில் வந்து வீற்றிருந்தது. கயமுகன் ஆரவாரித்துத் தேர்மேல் வீழ்ந்து மயங்கினான். அவனுடைய மார்பில் இருந்து நதிபோலப் பெருகிய இரத்தவெள்ளம் பக்கத்திலுள்ள ஒரு காட்டில் புகுந்தமையால் அவ்விடம் திருச்செங்காடு என்னும் பெயர் பெற்று, இன்னும் யாவரும் காணும்படி இருக்கின்றது.

சிவபெருமான் கொடுத்த வரத்தினால் இறவாத கயமுகன் வீழ்ந்து இறந்தவன் போன்று, பழைய வடிவை விட்டு, ஒரு பெருச்சாளி வடிவம் கொண்டு, விநாயகக் கடவுளைத் தாக்கும்படி வந்தான். விநாயகர் அவனுடைய போர்வலிமையை நீக்கி, அசலன் என்னும் பூதனுடைய தோளில் இருந்து இறங்கி, "நீ எம்மைச் சுமப்பாயாக" என்று அவனுடைய பிடரில் தாவி வீற்றிருந்து, அப்பெருச்சாளி வாகனத்தைச் செலுத்தி அருளினார்.

அதனைக் கண்ட பிரமா, இந்திரன் முதலிய தேவர்கள், "கயமுகாசுரன் இறந்தான்; நம்முடைய இடர் போயிற்று; பகையும் தீர்ந்தது" என்று ஆடிப்பாடி விநாயகக் கடவுளுடைய திருமேனி மறையும் வண்ணம் பூமழை பொழிந்து நின்று,

**"காப்பவன் அருளும் மேலோன் கண் அகன் ஞாலம் யாவும்**
**தீப்பவன் ஏனைச் செய்கை செய்திடும் அவனும் நீயே**
**ஏப்படும் செய்கை என்ன எம(து) உளம் வெதும்பும் இன்னல்**
**நீப்பது கருதி அன்றோ நீ அருள் வடிவம் கொண்டாய்."**

**"உன்னிடைப் பிறந்த வேதம் உன்பெரு நிலைமை தன்னை**
**இன்னதென்(று) உணர்ந்ததில்லை யாம் உனை அறிவ(து)எங்கன்**
**அன்னையும் பயந்தோன் தானும் ஆயினை அதனான் மைந்தர்**
**பன்னிய புகழ்ச்சி யாவும் பரிவுடன் கேட்டி போலாம்."**

**- கந்தபுராணம்.**

என்று சொல்லி வணங்கித் துதித்து, முகமலர்ச்சியுள்ளவர்களாய் மூத்த பிள்ளையாரை வந்து சூழ்ந்தார்கள். அக்கடவுள் அவர்களுக்குக் கருணையோடு பேரருள் புரிந்தார். பிள்ளையார் போரில் இறந்த பூதர்களை நோக்கி, "எழுக" என்று அருளிச்செய்ய, அவர்கள் எல்லோரும் எழுந்து, ஹர, ஹர என்று துதித்து, அவரை வணங்கிச் சூழ்ந்தார்கள். பூதர்கள் மதங்கமாபுரியில் போய், ஆயுதபாணிகளாயுள்ள அவுணர்களைக் கொன்று, போர்க்களத்திற்கு மீண்டு வந்தார்கள்.

---

கோடு - கொம்பு    இடர் - துன்பம்    பூதர் - பூதகணங்கள்

பிள்ளையார் போர்க்களத்தை நீங்கித் திருச்செங்காட்டில் போய், சிவலிங்கப் பிரதிட்டை செய்து பேரன்போடு பூசித்துத் துதித்தார். அத்தலத்தை மேலோர் கணபதீச்சுரம் என்று வழங்குவர்.

விநாயகக்கடவுள் பின்னர் பெருச்சாளி வாகனத்தில் ஏறி, தேவர்கள் சூழ விட்டுணு பாம்பு வடிவாயிருக்கும் வனத்தை அடைந்து, அவருடைய சாபத்தை நீக்கி, அவ்விட்டுணுவும், பிரமா முதலிய தேவர்களும் விநாயகரை வணங்க, அவர் பெருச்சாளி வாகனத்தில் ஏறி, பூதசேனைகள் சூழத் திருக்கைலாச மலையை அடைந்து, தமது இடத்தில் வீற்றிருந்து அருளினார்.

அத்தினத்தில் விட்டுணு முதலிய தேவர்கள் விநாயகக்கடவுளை வணங்கி அவர் முன் நின்று, "எம்பெருமானே! எங்களை இடர்ப்படுத்திய கயமுகாசுரனைத் தேவரீர் சங்காரம் செய்தமையால் நாம் உய்ந்தோம். நாங்கள் நேற்று வரையும் அந்தக் கயமுகாசுரனுக்கு எதிரே தவறாமல் செய்த தொண்டை இன்றுமுதல் தேவரீருடைய சந்நிதானத்தில் செய்வோம்" என்றார்கள். பிள்ளையார், "அவ்வாறு செய்வீர்" என்றார். தேவர்கள் அன்பினோடு முட்டியாகப் பிடித்த இரு கரங்களினாலும் தங்கள் தங்கள் சிரசுகளில் மும்முறை குட்டி, இரண்டு கைகளையும் எதிர் எதிராக மாற்றி, இரண்டு காதுகளையும் பிடித்துக் கொண்டு, கணைக்காலும் தொடையும் ஒன்றையொன்று தொடும்படி மும்முறை தாழ்ந்தெழுந்து, வணங்கி நின்றார்கள். விநாயகக் கடவுள் மகிழ்ந்தார். "இன்றுமுதல் உலகத்தில் உள்ளோர் எவரும் எங்களைப்போல இத்திருத்தொண்டைத் தேவரீருடைய சந்நிதானத்தில் செய்துவர அருள்செய்யவேண்டும்" என்று தேவர்கள் வேண்டுதல் செய்தார்கள். அவர் "அவ்வாறேயாகுக" என்று அருள்புரிந்து, அவர்கள் யாவர்க்கும் விடைகொடுத்து அனுப்பினார். அவர்கள் தத்தம் பதவிகளில் போய் மகிழ்ச்சியுடன் இருந்தார்கள். இச் சரித்திரம்,

**கைவேழ முகத்தவனைப் படைத்தார் போலும்**
**கயாசுரனை அவனால் கொல்வித்தார் போலும்**
**செய் வேள்வித் தக்கனை முன் சிதைத்தார் போலும்**
**திசைமுகன் தன் சிரமொன்று சிதைத்தார் போலும்**
**மெய்வேள்வி மூர்த்தி தலை அறுத்தார் போலும்**
**வியன்வீழி மிழலை இடம் கொண்டார் போலும்**
**ஐவேள்வி ஆறங்கம் ஆனார் போலும்**
**அடியேனை ஆளுடைய அடிகள் தாமே.**

**- திருநாவுக்கரசர் தேவாரம்.**

எனவும்,

**பேசத்தகா(து) எனப் பேய் எருதும் பெருச்சாளியும் என்(று)**
**ஏசத்தகும்படி ஏறுவதே இமையாத முக்கண்**
**கூசத்தகும் தொழினும் கை உந்தையும் நீயும் இந்தத்**
**தேசத்தவர் தொழும் நாரைப் பதியுள் சிவக்களிறே**

**- பதினொராம் திருமுறை.**

எனவும்,

**நறைகொண்ட மலர்தூவி விரை அளிப்ப நாள் தோறும்**
**முறைகொண்டு நின்(று)அடியார் முட்டாமே பணிசெய்யச்**
**சிறைகொண்ட வண்(டு)அறையும் செங்காட்டங்குடி அதனுள்**
**கறைகொண்ட கண்டத்தான் கணபதீச்சரத்தானே.**

**- திருஞானசம்பந்தர் தேவாரம்.**

எனவும், மிகச் சுருக்கி விளக்கப்பட்டமை காண்க. விரிவு கந்தபுராணத்தால் உணர்ந்து கொள்க.

கயமுக சங்காரத்தின் பொருட்டு முறிக்கப்பட்டதாகிய ஒரு கொம்பை ஏந்தியது, ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களையும் நீக்குபவர் தாம் என்பதை அறிவிப்பதற்காகும். ஆன்மாக்களை அநாதியே பந்தித்த ஆணவ மலமாகிய யானையைப் பாசத்தால் கட்டி அங்குசத்தால் அடக்கி, மறைத்தல் என்னும் கிருத்தியத்தைச் செய்பவர் தாம் என்பதை உணர்த்துவதற்காகப் பாச அங்குசங்களை ஏந்தினார். ஆணவ உருவமாகிய கயமுகனுடைய சேனைகளைப் பாசத்தால் கட்டி, கணிச்சியால் அடக்கி, அவன் மலவலி கெட்டுப் பெருச்சாளி உருவமாக வர, நீங்காத ஞானத்தைக் கொடுத்துச் சுத்தனாக்கி வாகனமாம் பேற்றை அளித்து அடிமை கொண்டதனால், ஆணவமாகிய யானையை அடக்கி, ஆன்மாவை அடிமை கொள்ளுபவர் என்பது இனிது விளங்கும். கணபதியாகிய விநாயகக் கடவுளைப் பூசித்துப் பெறுதற்கு அரும் பேறு பெற்றவரும், அவரது திருவருளினாலே தெய்வப் புலமை கைவரப் பெற்றவரும் ஆன ஔவைப் பிராட்டியார்,

**"கோடு ஆயுதத்தால் கொடுவினை களைந்து"**

**- விநாயகர் அகவல்.**

எனவும், கச்சியப்பர் முனிவர்,

**"கண்ணில் ஆணவ வெங்கரி பிணித்(து)அடக்கிக்**
**கரிசினேற்கு இருகையும் ஆக்கும்**
**அண்ணலைத் தணிகைவரை வளர் ஆபத் சகாயனை**
**அகம் தழீஇக் களிப்பாம்"**

**- தணிகைப் புராணம்.**

---

அநாதி - தொடக்கம் இல்லாதது
பந்தித்த - பீடித்த
கிருத்தியம் - தொழில்
பஞ்சகிருத்தியம் - ஐந்தொழில்

எனவும், திருவாய்மலர்ந்த திருவாக்குகள் உணர்ந்து கொள்ளத்தக்கன.

**"காப்பவன் அருளும் மேலோன்"**

என்னும் செய்யுளால் விநாயகக் கடவுளே படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் பஞ்சகிருத்திய சுதந்திரர் என்பதும், பிரமா முதலிய மூர்த்திகளுக்கு எல்லாம் முதல்வர் அவரே என்பதும் உணரப்படும். சிவபெருமான் பஞ்சகிருத்திய பதி தாம் என்பதை ஈசானம் முதலிய ஐந்து திருமுகங்களினாலும் உணர்த்துதல் போல, விநாயகரும் துதிக்கை முதலிய ஐந்து திருக்கரங்களினாலும் உணர்த்துகின்றார்.

**"உன்னிடைப் பிறந்த வேதம்"**

என்னும் செய்யுளால் ஆன்மாக்களின் பொருட்டு வேதாகமங்களைத் தோற்றுவித்து அருளியவர் அவரே என்பது முதலியனவும் உணரப்படும். குடிலையானது அகரம், உகரம், மகரம், விந்து, நாதமாய்ப் பிரிந்து, அகரத்தில் இருக்கு வேதமும், உகரத்தில் யசுர் வேதமும், மகரத்தில் சாம வேதமும், விந்துவில் அதர்வண வேதமும் தோன்றின என்று வாயுசங்கிதை கூறுகின்றது.

விநாயகக் கடவுள் ஒரு பக்கக் கொம்பு உடையவராதலால் ஆண்போலவும், மற்றொரு கூறு கொம்பின்மையால் பெண் போலவும், இரண்டும் கூடியமையால் அலி போலவும் விளங்குவதால், அவன், அவள், அது என்னும் ஆண், பெண், அலியாகிச் சராசரங்களாகிச் சுத்த சத்தாய், எல்லாமாய், அல்லவுமாய் யார்க்கும் சொல்லுதற்கு அரிதாய் விளங்கும் தற்பர சிவத்தின் இயல்பையும், அவர் கொண்ட கேவலவடிவம் இருபத்தைந்தனுள் ஒன்றாய்ச் சத்தி ஒரு கூறாகவும், சிவம் ஒரு கூறாகவும் அமைந்துள்ள அர்த்தநாரீசுவர மூர்த்தத்தின் தன்மையையும் தம் வடிவால் காட்டி அருளுகின்றார். அது,

**வெண்ணிலாக் கற்றை கான்று**
**விளங்கும் ஓர் பிறைக் கோடின்றி**
**எண்ணில் ஓர் பாகம் கூந்தல்**
**பிடியென இருந்தவாற்றால்**
**பெண்ணொரு பாகம் வைத்த**
**பிஞ்ஞகன் உருவு காட்டும்**
**அண்ணல் அங் களிநல் யானை**
**அடிமலர் சென்னி வைப்பாம்."**

**- கூர்மபுராணம்.**

என அதிவீரராமபாண்டியர் கூறியவாற்றால் தெளிவாக உணரப்படுகின்றது.

❁ ❁ ❁

---

சுதந்திரர் - கட்டுப்பாடு அற்றவர்
குடிலை - மாயை

# 3. அநந்த சாப நிவாரண மூர்த்தி

**வி**நாயகக்கடவுள் கயமுகாசுரனைச் சங்காரம் செய்தபின் பெருச்சாளி வாகனத்தில் ஏறித் தேவர்கள் சூழத் திருமால் பாம்பின் உருவாய்த் தவம் செய்து கொண்டிருந்த ஆலவனத்துக்கு எழுந்தருளினார். அங்கே ஓர் ஆலமரப் பொந்திலே தவம்செய்து கொண்டிருந்த திருமால் விநாயகக் கடவுள் எழுந்தருளி வந்ததை அறிந்து, விரைந்து எதிர்கொண்டு சென்று தரிசித்துத் துதிக்கப் பாம்பு உருவம் நீங்கியது. விட்டுணு தம்முடைய பழைய உருவத்தைப் பெற்று மகிழ்ந்து, சிவபெருமானுடைய திருவருளை எண்ணித் துதித்து, "உமாதேவியார் சொல்லிய சாபத்தைத் தொலைத்த முதல்வரே! தேவரீர் அடியேனுடைய பூசையை ஏற்று அருள வேண்டும்" என்று பிரார்த்தித்துப், பூசைக்குரிய உபகரணங்களைக் கொணர்ந்து, அவரைப் பூசித்துத் தோத்திரம் செய்து, "சுவாமீ! மார்கழி மாதத்துப் பூர்வ பக்கச் சஷ்டியாகிய இத்திதியிலே அடியேன் தேவரீரைப் பூசித்தது போல யாவரும் தேவரீருடைய திருவடிகளையே புகலிடம் என்று, நினைத்துப் பூசனை செய்திடவும், அப்படிப் பூசிப்போருடைய துக்கங்களை எல்லாம் தேவரீர் அன்றைக்கே நீக்கி, அழியாதசெல்வத்தை அவர்களுக்குக் கொடுத்திடவும் வேண்டும். இவ்வரத்தை அடியேனுக்கு அருளுக" என்றார். விநாயகக் கடவுள், "அவ்வாறே ஆகுக" என்று அருள் புரிந்து, "உன் பூசையால் மகிழ்ந்தோம்" என்று கூறி அருளினார். பின்னர் அவ்விட்டுணுவும் பிரம்மா முதலிய தேவர்களும் துதித்துச் செல்லப் பெருச்சாளி வாகனத்தில் ஏறித் திருக்கைலாச மலையை அடைந்து அருளினார்.

❋ ❋ ❋

---

புகலிடம் - அடைக்கலம்

# 4. பிரணவ மூர்த்தி

**வே**தமானது சிவபெருமானை முதல், இடை, கடைகளில் பிரகாசப்படுத்துகின்றது. முதலில் 'ஓம்' என்று தொடங்குகின்றது. அது பிரணவம் என்று சொல்லப்படும். இதன் வடிவமே விநாயகக் கடவுள். வேதத்தின் முதல் எழுத்து விநாயகருடைய சொரூபமாதலை அவரது திருமுகம் உணர்த்தும். அதனையே **"கைவேழமுகம்"** என்று பெரியோர் கூறுவர். அதனை, **"முந்தை வேத முதல் எழுத்தாகிய எந்தை"** எனவும் **"மூல மொழிப் பொருளாம் எந்தை"** எனவும், **"தாரகப் பிரமமான மா கயமுகத்து வள்ளல்"** எனவும் கந்தபுராணம் கூறுவதாலும் உணர்க.

பிரணவத்தின் வரிவடிவை முதற்கண் அறிவது மரபாம். முதலாம், இரண்டாம் உறுப்புகள் நட்சத்திரவடிவு, கீற்றுவடிவுகளாக அமையப்பெற்றது பிரணவம் என்று, காமிக ஆகமம் கூறுகின்றது. ஆகையால் அவ்விரண்டு உறுப்பும் கலந்த வடிவம் ஊமை எழுத்தென்றும், மூலமனு என்றும், பிள்ளையார்சுழி என்றும், மௌன அக்கரம் என்றும், மௌனக்குறி என்றும் சொல்லப்படும். 'உ' என்னும் எழுத்து நாதவிந்துக்களின் வரி வடிவாம். இது ஓங்கார பொருளாகிய விநாயகரது துதிக்கை போன்றதாகும். இது,

> **"மோனமே குறியதாய் முதலெழுத்து அருளிய"**
>
> **- கந்தபுராணம்.**

என்பதாலும்,

> **"கண்டனவெலாம் மோன உரு வெளியதாகவும்**
> **கருதி அஞ்சலி செய்குவாம்"**
>
> **-தாயுமானவர்.**

என்னும் பாடலாலும் உணரப்படும்.

இதுபற்றியே கணபதியை முதலில் வழிபடும் மரபை உலகம் கைக்கொண்டு அனுட்டித்து வருகின்றது. இதனையே சிவபெருமான் அவருக்கு அருளிச்செய்தாரென்று உண்மை நூல்கள் கூறும். விநாயகரும், சிவமும், சத்தியும் பிரணவசொரூபியாவர். விநாயகக் கடவுளைத் தம்மின் வேறாகாத சிவபெருமானையே, ஓங்காரப்பொருளென்று வேதம் கூறும். **"அஸ்துசதாசிவோம்"** என்பதே அதுவாம். திருநாவுக்கரசு சுவாமிகளும்,

"**ஓங்காரத்(து) உட்பொருளானை**" எனவும், "**ஓங்காரத்(து) ஒருவன்**" எனவும் திருவாய் மலர்ந்துள்ளார். சிவத்தோடு அபேதமாய்ச் சத்தி என விளங்கும் விநாயகரது தாயை "உம" என்று வேதம்கூறி, "**உமாசகாயம்**" என்று சிவத்தைத் துதிக்கும். அ - உ - ம என்னும் பிரணவம் உம என்றபோது உ - ம் - அ எனத்திரிந்து விளங்கும். இது பற்றியே கந்தபுராணத்திலும் "**மூல ஓங்காரப் பொருளாயிருந்தாள்**" எனக் கூறப்பட்டது. இதனாலும் விநாயகரும், சிவமும், சத்தியும் ஒருவரேயென்று பெறப்பட்டவாறு காண்க.

**"ஊமை எழுத்தொடு பேசும் எழுத்து உறில்**
**ஆமை அகத்தினில் அஞ்சும் அடங்கிடும்**
**ஓம் மயம் உற்றது உள்ளொளி பெற்றது**
**நாமயம் அற்றது நாம் அறியோமே."**

**-திருமந்திரம்.**

❁ ❁ ❁

---

அபேதம் - பேதம் இல்லாத்

# 5. புராண பரிபாலனமூர்த்தி

**வா**தராயணர் என்னும் பெயர்பெற்ற வியாசமுனிவர் சிவபெருமானுடைய அனுமதிப்படி சநற்குமார முனிவரிடத்தில் மாணவ ஒழுங்கின்படி பதினெண் புராணங்களையும் ஓதி உணர்ந்தார். பின்பு, யாவரும் தம்மை நினைத்துத் தொடங்கிச் செய்கின்ற கருமங்களை விக்கினமின்றி நிறைவேற்றும் தெய்வமாகிய விநாயகமூர்த்தியை வழிபடாது அப்புராண சரித்திரங்களைச் சுலோகவடிவமாகச் சொல்லத் தொடங்கினார். அவர் விக்கினேசுவரருடைய கிருபையைப் பெற்றுத் தொடங்காமையால் உண்மை ஞானத்தைப் பெறாமல் ஊமையைப்போல வருந்தி மயங்கிப் பிரமதேவரிடம் போய் தமது குறையை விண்ணப்பித்தார். பிரமா வியாசரை நோக்கி, "முனிவனே! நீ வேதத்தை நான்காகப் பகுத்தபோது, முதலில் பிரணவத்தை உச்சரியாதபடி வேதம் ஓதுதல் முறையல்ல என்பதை உணர்ந்து முதலில் பிரணவத்தைச் சொன்னாய்; பிரணவப் பொருளாய் இருக்கும் விநாயகர் தம்மைப் பிரணவத்தினால் தோத்திரம் செய்ய, திருவுள்ளம் உவந்து இடையூறு சேராவண்ணம் காத்தருளினார். இப்பொழுது வித்தியா கர்வத்தினால் விக்கினங்களை நீக்கும் கடவுளை மனம், வாக்கு, காயங்களினால் வழிபாடு செய்யாமல் புராணம் சொல்லத் தொடங்கினமையால் இத்துன்பம் வந்த சேர்ந்தது. விநாயகக் கடவுளைப் பூசைசெய்யின் அவர் உண்மை ஞானத்தைத் தந்து, எடுத்த கருமத்தை நிறைவேற்றுவார்" என்று உபதேசித்தார்.

வியாசமுனிவர் பிரமாவை வணங்கி விடை பெற்றுக்கொண்டு, ஒருவனத்தில் சென்று கணபதியைத் தியானித்துப் பன்னிரண்டு வருடம் தவம் செய்தார். விநாயகர் கருணைகூர்ந்து காட்சி கொடுத்தருளினார். முனிவர் அன்புடன் நமஸ்காரம் செய்து, கண்களினின்றும் ஆனந்த அருவி சொரிய, சரீரம் புளகம் கொள்ள, அகமுருகிச் "சச்சிதானந்த சொரூபரே! அடியேனது மலபாசத்தை நீக்கி, நீங்காத மெய்யன்பைத் தருதல் வேண்டும். பதினெண் புராணங்களையும் இடையூறின்றி நிறைவேற்றவும் அருள் செய்ய வேண்டும்" என்று பிரார்த்தித்தார். விநாயகக்கடவுள், "அவ்விதமே ஆகுக" என்று அருள்செய்து, மறைந்தருளினார். வியாசமுனிவர் தமக்குக் கணேசப்பெருமான் காட்சிகொடுத்து அருளிய இடத்தில் ஓர் ஆலயம் உண்டாக்கி, விநாயகரைப் பிரதிட்டைசெய்து பதினெண் புராணங்களையும் இடையூறின்றி நிறைவேற்றினார். இதனை விநாயக புராணம் வியாசர் பிரமனையடுத்த படலத்தாலும், வரம்பெறு படலத்தாலும் உணர்க.

புராணமாவது பரமசிவன் உலகத்தைப் படைத்தல், அழித்தல் முதலியவைகளைக் கூறும் வேதவாக்கியப்பொருளை வலியுறுத்தி பிரித்து அறிவிப்பது. சைவபுராணம் முதல் பிரமாண்ட புராணம் இறுதியாகிய பத்தும் சிவபுராணங்களாம். கருடபுராணம் முதல் பாகவதபுராணம் இறுதியாகிய நான்கும் விஷ்ணுபுராணங்களாம். பிரமபுராணம், பதுமபுராணம் என்னும் இரண்டும் பிரமபுராணங்களாம். ஆக்கினேயம் அக்கினி புராணமாம். பிரமகைவர்த்தம் சூரியபுராணமாம்.

வைஷ்ணவபுராணங்களிலும் பிற இடங்களிலும் சிவன் எனப்படும் உருத்திரன் விட்டுணு இடத்தில் பத்தி செய்தார் என்றாவது, விட்டுணுவை வணங்கினார் என்றாவது குறைத்துக் கூறப்படுமிடங்களில் அவர் சிவனாரது கீழ்நிலை வடிவான அணுஉருத்திரராம் என்று பராசரபுராணம் கூறுகின்றது. சிவபுராணக்கதைகள் சிறிதும் மறுவில்லாதன; அவை எல்லாம் பெருமை படைத்தனவாம். அவற்றுக்குச் சான்றாய் உள்ளன வேதங்கள்; அவ்வுண்மையை அறிஞர்கள் வேதங்களில் ஆராய்ந்து உணர்ந்துகொள்வார்களாக. சிவபுராணங்களை விடுத்து ஏனைய விட்டுணுபுராணம் முதலியன, அவ்வத்தேவர்கள் செய்த செய்கைகள் உள்ளே நல்லனவாய் உள்ளன சிறிதாயிருப்பின் அவற்றை விரித்துப் பேசும். அவர்களிடத்தில் குற்றங்கள் காணப்படின் மறைத்துவிடும். மறைத்து விடுவதோடு அல்லாது இல்லாத கதைகளையும் புகழ்ச்சியாக எடுத்துக்கூறும்; உலகத்துள்ளார் விட்டுணுபுராண முதலியவைகளைப் படித்திருந்தாலும் அவர்கள் சந்தேகங்கள் சிவபுராணங்களைப் படித்தாலன்றித் தீராது. எங்ஙனமெனின், “அரசனுடைய அகண்ட ஐஸ்வரியத்தைப் போய்ப் பாராத ஒவ்வொருவனும் தன்தன் செல்வத்தையே பெரிதென்று எண்ணுவது போலாம்” என்னும் பொருள்தோன்றக் கச்சியப்பசிவாச்சாரிய சுவாமிகள் கந்தபுராணத்தில் கூறியிருக்கின்றார்.

வேதப்பொருள்களை உள்ளபடி உணர்ந்து கொள்வதற்குப் புராணங்களே அங்கமாகின்றன. ஆரணம் முழுதையும் உணர்ந்த வேதியனே ஆனாலும், சிவபுராணத்தின் பொருளை உணர்ந்திலன் ஆயின், வேதமானது அவனைப் பூமியிலே நம்மை வஞ்சிப்பவன் இவனாம் என்று அஞ்சுகின்றது. ஆதலினாலே வேதத்தின் பொருளைப் புராணத்தால் அறியவேண்டும். அரதத்தாசாரியர் தாம் அருளிச் செய்த சதுர்வேத தாற்பரிய சங்கிரகம் சுலோகம் 117ல் வேதப்பொருளை நிச்சயிப்பதற்குப் புராணம் அங்கமாம் என்று அருளினார். சிவஞான சுவாமிகளும் சிவஞானபோத பாஷ்யத்தின் முதல்சூத்திரத்தின் இரண்டாம் அதிகரண உரையில் “இனி உண்மையான் நோக்குவார்க்குச் சிவபுராணங்கள் எல்லாம் வேதப் பொருளையே விரித்தெடுத்து ஓதுதலில் சிறந்த பிரமாணமெனவும், ஏனைய புராணங்கள்

---

மறு - குற்றம் **ஐஸ்வர்யம்** - செல்வம் **ஆரணம்** - வேதம்

அங்ஙனம் அல்லாமையின் இவற்றோடு முரணியவழி முரணாதவாறு உய்த்துணர்ந்து பொருள் கொள்ளப்படும் எனவும்'' என்று அருளிச் செய்தனர். திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் சிவபெருமானது பரத்தன்மையை விளக்குவன புராணங்களே என்னும் உண்மையை,

**வேத முதல்வன் முதலாக விளங்கி வையம்**
**ஏதப்படாமை உலகத்தவர் ஏத்தல் செய்யப்**
**பூதமுதல்வன் முதலே முதலாகப் பொலிந்த**
**சூதன் ஒலி மாலையென்றே கலிக்கோவை சொல்லே.**

**- தேவாரம்.**

என்றருளிச் செய்தனர். சேக்கிழார் சுவாமிகளும் இத்தேவாரப்பொருள் அருளிச்செய்யும் இடத்தில்,

**வேத முதல்வன் எனும் மெய்த்திருப் பாட்டினிலே**
**ஆதி உலகோர் இடர் நீங்கிட ஏத்த ஆடும்**
**பாத முதலாம் பதினெண் புராணங்கள் என்றே**
**ஓது என்று உரைசெய்தனர் யாவும் ஓதா(து) உணர்ந்தார்.**

என அவ்வுண்மையை நிலைநிறுத்தி அருளியமை காண்க.

புறச் சமயத்தார் சைவ சாத்திரங்களின் உண்மையை உணராமல் புராணத்தைப் பொய்க்கதைகள் என்று சொல்லுதல் போல, சைவருள்ளும் அங்ஙனம் கூறுவார் உளரேல் அவர்களுக்குச் சைவசித்தாந்த சாத்திரங்களும், சைவத் திருமுறைகளும் பொய்யென ஆகிச் சமய சாத்திரங்களும் இல்லாததாகி சமயமும் இல்லாததாய் முடியும் என்க. எதனால் எனின்,

**நாயகன் கண் நயப்ப நாயகி புதைப்ப எங்கும்**
**பாய் இருளாகி மூடப் பரிந்(து) உலகினுக்கு நெற்றித்**
**தூய நேத்திரத்தினாலே சுடர் ஒளி கொடுத்த பண்பில்**
**தேயம் ஆர் ஒளிகள் எல்லாம் சிவன் உருத்தே(சு) அது என்னார்.**

**- *சிவஞானசித்தியார்.***

என்ற அத்தொடக்கத்தனவாகச் சைவசித்தாந்த மெய்ச்சாத்திரங்களுள் புராணசரித்திரங்களே அனுபவப் பயனுக்கும், பிறவற்றுக்கும் பலப்பல இடங்களிலும் கூறப்படுவதாலும் "**உயர் காயத்திரிக்(கு) உரிய பொருளாகலின்**" என்னும் செய்யுளுள் அமைந்த இருபத்திரண்டு ஏதுக்களுள் காயத்திரியை ஒழித்து, ஒழிந்த இருபத்தொரு ஏதுக்களும் புராண சரித்திரங்களே ஆதலாலும், சித்தாந்த சாத்திரங்களும் திருமுறைகளும் பொய்யெனப்பட்டுச் சமய சாத்திரங்களும் இலதாய் முடியும்.

---

**பிரமாணம்** - உண்மை. **முரணிய** - முரண்பட்ட.
**பரத்தன்மை** - மேலானதன்மை

முடியவே, அச்சாத்திரங்களால் உணர்த்தப்படும் சைவசித்தாந்த சமயமும் இலதாய் முடியும் ஆதலினால் என்க. இத்துணை விசேடம் உடையன சிவபுராணங்கள். சிவபுராணத்தைக் கேட்பதனாலே பாவம் நீங்கும்; புண்ணியம் வரும்; பத்தி வாய்க்கும்; மகாதேவருடைய அருள் உண்டாகும். தீமை எல்லாம் நீங்கி மேற்கதி உண்டாகும். ஆதலினாலே திருக்கோயில்களிலும், மடங்களிலும், சோலைகளிலும், நதிக்கரைகளிலும், வேள்வி நடக்கும் இடங்களிலும், சுத்தமான இடங்களிலும், மற்றும் புண்ணியம் நிறைந்த இடங்களிலும் புராணங்களை ஓதுதல் சிறந்த புண்ணியமாகும்.

❋ ❋ ❋

# 6. பரம ஆசாரிய மூர்த்தி

மெய்கண்டதேவர் திருவெண்ணெய் நல்லூர்ச் சிவாலயத்தில் சுயம்பு மூர்த்தியாய் எழுந்தருளியிருக்கும் பொல்லாப் பிள்ளையாருடைய திருச்சந்நிதியிலே வேதசிவாகமப் பொருளை உணர்ந்தும், சிவஞானபோதத்தைத் தெளிந்து நிட்டை கூடியும் இருந்தபோது அப்பொல்லாப்பிள்ளையார் மெய்கண்ட தேவருக்குச் சூர்ணிகையைச் செவி அறிவுறுத்தினர். சூர்ணிகையும், மெய்கண்டதேவர் சிவஞானபோதத்திற்கு அருளிய வார்த்திகமும் பொருளால் ஒற்றுமையுடையனவாம். சூர்ணிகை என்பது சூத்திர முதலியனவற்றின் பொருளை இலகுவாகச் சுருங்கிய வசனரூபமாயுரைப்பது எனப்பொருள்படும். வார்த்திகம் என்பது பொழிப்புரை எனப்பொருள்படும்.

பொள்ளார், பொல்லார் என மருவிற்று. உளி முதலியவற்றால் செதுக்கிச் செய்யப்படாதவர் என்பது கருத்து. எனவே, சுயம்பு மூர்த்தி என்றதாம்.

**அல்லாத பரசமய அலகைத் தேர் விண்(டு) அகல**
**அகல் புனல் பெண்ணை அயல்சூழ் வெண்ணெய்ப்**
**பொல்லாத விப முகத்துப் புத்தேள் அன்பால்**
**புனித சிவாகமப்பொருண்மை பொருந்த வாய்ந்து**
**நில்லாத நிலையிது மற்றென்றும் ஒன்றாய்**
**நிற்குநிலை இதுவென மெய்ந்நெறி தேர்ந்து யாரும்**
**வெல்லாத சிவஞான போதம் சொன்ன**
**மெய்கண்டான் சரணம் முடிமீது கொள்வாம்.**

**- சேதுபுராணம்.**

என நிரம்ப அழகிய தேசிகரால் கூறப்பட்டமையாலும் உணர்க.

❋ ❋ ❋

---

சுயம்பு - தானாய்த்தோன்றியது.

# 7. திருமுறை கண்ட மூர்த்தி

சையமலையின் கண்ணே தோன்றிப் பெருகும் திவ்விய தீர்த்தமாகிய பொன்னிநதி சூழ்ந்த சோழநாட்டின் திலகமென விளங்கும் திருவாரூர்த் தியாகேசரது திருப்பாதங்களைப் பணிந்து செங்கோலோச்சும் அபயகுலசேகரராச ராசமன்னர், தமது சபையில் வரும் அன்பர் ஸ்ரீ ஞானசம்பந்த சுவாமிகள் முதலிய நாயன்மார் திருவாய்மலர்ந்தருளிய தேவாரத்துள் ஒரோர் பதிகங்களை ஓதக்கேட்டு, கையிரண்டும் உச்சிமேலேற, கண்ணீர் கரைந்தோட, மெய்ம்முழுதும் புளகம் போர்ப்ப, சிவபெருமானுடைய மலர்ப்பாதங்களைத் துதித்து, தேவாரத் திருமுறைகளைத் தேடி, இல்லாமையினாலே கவலை உறுவாராயினர்.

அங்ஙனம் இருக்கும்போது திருநாரையூரிலே ஓர் ஆதிசைவப் பிராமணருக்கு உலகம் ஈடேறச் சைவம் வாழ, ஒரு புதல்வர் தோன்றினார். அவர் உபநயநம் செய்யப்பெற்று, வேதம் முதலிய கலைகளைப் பயின்று வரும்நாளில், தந்தையார் ஓர் ஊருக்குச் செல்ல, அவர் கட்டளைப்படி பொல்லாப்பிள்ளையாருக்குத் திருமஞ்சனம் முதலியன எல்லாம்செய்து, நிவேதனத்தை அவர் திருமுன்னிலையில் வைத்து, "எம்பெருமானே! இதனைத் திரு அமுது செய்யவேண்டும்" என்று பிரார்த்தித்தார். பிள்ளையார் திரு அமுது செய்யாதிருப்பது கண்டு, அப்புத்திரர் வெம்பி, "அடியேன் ஏதேனும் தவறு செய்ததுண்டோ? அடியேன் நிவேதித்ததை உண்ணாதது ஏன்?" என்று தமது தலையினை மோதப்போனார். அப்பொழுது பிள்ளையார் "நம்பீ! பொறு" என்று தடுத்து அவ்வமுது முழுவதையும் உவந்து திருஅமுது செய்தருளினார்.

நம்பியாண்டார் நம்பி "எந்தையே! அடியேன் இனிப் பாடசாலைக்குச் சென்றால் உபாத்தியாயர் அடிப்பார்; ஆதலாலே வேதம் முதலிய கலைகளைத் தேவரீரே ஓதித்தர வேண்டும்" என்று விண்ணப்பித்தார். பரமாசாரியராகிய விநாயகக்கடவுளும் ஓதுவிக்க, நம்பியாண்டார் நம்பி ஓதி மகிழ்ந்தார். அதுபோல மற்றைநாளும் நிகழ, நம்பியாண்டார் நம்பி வீற்றிருந்திடும் செய்தியை வேந்தர் கேட்டு, திருநாரையூர்ப் பொல்லாப்

---

திவ்விய - புனித. **திருமஞ்சனம்** - அபிசேகம்.
அமுது செய்தல் - உண்ணுதல். **நிவேதித்தல்** - படைத்தல்

பிள்ளையாருக்கு நம்பியாண்டார் நம்பி நிவேதிக்கும்படி வாழைப்பழம், தேன், அவல், எள்ளுருண்டை, முதலியவற்றோடு அந்நகரில் வந்து சேர்ந்தார்.

அங்ஙனம் வந்தவர் நம்பியினுடைய பாதங்களை வணங்கி, "இவற்றைப் பொல்லாப்பிள்ளையாருக்கு இப்பொழுதே நிவேதிக்க" என்று சொன்னார். நம்பி, அரசர் கூறியவற்றைக்கேட்டு யானைமுகக்கடவுளுடைய திருவடிகளை வணங்கி, "அரசன் கொணர்ந்த இப்பொருள்களை ஏற்று அருளுக" என்று படைத்தனர். விநாயகர் துதிக்கையினால் ஏற்றுத் திருவமுது செய்தருளினார். அரசன் அகம் நெகிழ, கண்ணீர்வார, நம்பியினுடைய பாதங்களில் வணங்கி, "மறையவரே! சமயகுரவர் மூவருடைய திருநெறித்தமிழும், அவர்தம் செய்தியும் பூமியில் விளங்கச் செய்து அருளுக" என்று போற்றி நின்றார். நம்பியாண்டார்நம்பி அரசன் வேண்டுகோளுக்கு உடன்பட்டு, ஆநந்த வெள்ளம்சொரிய, பொல்லாப்பிள்ளையாருடைய பாதங்களில் வணங்கி விண்ணப்பம் செய்தார். பிள்ளையார், "நம்பி! தேவாரத்திருமுறைகள் சிதம்பரத்திலே மூவர் கையடையாளம் உள்ள ஓர் அறையில் உள்ளன" என்று திருவாய்மலர்ந்து, அவற்றை அருளிய, நாயன்மார் சரித்திரத்தையும் அருளிச் செய்தார். நம்பியாண்டார்நம்பி அதனைச் சோழராசாவுக்கு உபதேசித்தார். சோழராசா, நம்பியாண்டார் நம்பியுடன் சிதம்பரம் சென்று, கனகசபைக்கு மேற்றிசையிலுள்ள அறையின் எதிரே சமயகுரவர் மூவரையும் உலாவரச்செய்து, நிறுத்திக்கொண்டு, தில்லைவாழ் அந்தணருடைய அநுமதிப்படி திருக்கதவைத் திறந்து பார்த்தார். பார்த்தபொழுது கறையான் மூடியிருப்பது கண்டு கவலையுற்றார். அப்பொழுது "இக்காலத்துக்கு வேண்டும் பதிகங்களை வைத்து ஏனையவற்றை மண்மூடச் செய்தோம்" என்று ஓர் அசரீரி வாக்கு எழுந்தது. அரசர் கவலை நீங்கி மண்மூடாது எஞ்சிய ஏடுகளை எடுத்து, நம்பியாண்டார் நம்பியினுடைய பாதங்களை வணங்கி, அவரைக்கொண்டு தேவாரம் முதலிய அருட்பாக்களைப் பதினொரு திருமுறைகளாக வகுப்பித்தார். நம்பியாண்டார் நம்பி திருத்தொண்டர் திருவந்தாதி முதலிய பிரபந்தங்களைப் பாடித் திருநாரையூரில் சிலகாலம் வீற்றிருந்து சிவபதம் அடைந்தார்.

திருமுறை இருக்கும் இடம் தெரிந்து அருளினமையால் விநாயகருக்குத் திருமுறைகண்ட பிள்ளையார் என்னும் திருநாமம் வழங்குவதாயிற்று.

❋ ❋ ❋

# 8. வரம்பெறு மூர்த்தி

கச்சியிலுள்ள அநேகதங்காவதம் என்னும் தலத்திலே விநாயகமூர்த்தி அநேகபேச்சுரர் என்னும் திருநாமத்தோடு சிவலிங்கம் தாபித்துப் பூசித்தார். சிவபெருமான் உமாதேவி சமேதரராய்த் தோன்றி அருளினார். விநாயகக்கடவுள் அவர்களை நமஸ்காரம் செய்தார். அவர்கள் கருணை பாலித்தனர். சிவபெருமான் விநாயகரைத் தமது வலத்தொடையின் மேலிருத்தி, அவரை நோக்கி, "யாவரே ஆயினும் யாதொரு கருமத்தைச் செய்யத் தொடங்குமுன் அது இடையூறின்றி முடிவுபெறவேண்டும் என்று உன்னை வழிபடுவாராயின் அவர் கருத்தின்படி அதனை முற்றுப்பெறச் செய்வாய்; உன்னை முன்பு வழிபடாமல் செய்வோருடைய கருமங்களுக்கு இடையூறு செய்வாய்; திருமால் முதலான தேவர்களுக்கும், மற்றைய ஆன்மாக்களுக்கும், நம்முடைய பூதகணங்களுக்கும், பிறர்க்கும் அருளோடு நாயகனாய் இருப்பாயாக" என்று அளவற்ற பெருங்கருணையால் உச்சிமோந்து எடுத்து அணைத்து அருளினார். இச்சரித்திரத்தை காஞ்சிபுராணம் அனேகதங்காவதப் படலத்தால் அறிக. கணங்களுக்கு அதிபர் ஆதலினால் அன்றோ கணபதி, கணேசர், கணநாயகர் என்னும் திருநாமங்களையும், துட்டர்களையும், விக்கினங்களையும் அழித்தலாலும் சுதந்திரர் ஆகையாலும், தமக்கு மேலான தலைவர் இல்லாமையானும் விநாயகர் என்னும் திருநாமத்தையும் பிள்ளையார் பெற்றனர் என அறிந்துகொள்க.

❋ ❋ ❋

# 9. விக்கினேசுவர மூர்த்தி

**த**ம்மை நினையாதவர்களுக்கு விக்கினங்களை உருவாக்குவதாலும், தம்மை நினைத்தவர்களுக்கு விக்கினங்களைப் போக்குவதாலும் விக்கினேசுவரர் என்னும் திருநாமத்தை மூத்த பிள்ளையார் பெற்றனர்.

திருமால் முதலிய தேவர்கள் தேவாமிர்தம் பெறுவதற்காகத் திருப்பாற்கடலைக் கடைந்தபொழுது, விக்கினேசுவரரை வழிபாடு செய்திலர். அக்காரணத்தினால் மந்தரமலையாகிய மத்துக் குலைந்து, பாதலத்தில் ஆழ்ந்தது. தேவர்கள் அவ்விடையூற்றைக் கண்டு இது விக்கினேசுவர வழிபாடின்மையால் வந்ததென்று அறிந்து அவரைப் பூசித்தார்கள். உடனே அக்கடவுளின் அருளால் மந்தரமலையாகிய மத்து முன்போல நிலைபெற்றது. தேவர்கள் மனமகிழ்ந்து பாற்கடலைக் கடைந்து அமிர்தம் பெற்றார்கள். இச்சரித்திரம் கந்தபுராணம் முதலிய நூல்களுள் காணப்படுகிறது. மெய்கண்டதேவர் சாக்கிரத்தே அதீதத்தைப் புரியும் தமக்கு இடையூறு சிறிதும் அணுகாமை அறிந்தாராயினும் ஆன்றோர் ஆசாரம் பாதுகாத்தல்பொருட்டும் முதற்கண் இடையூறு நீக்குதற்குரிய கடவுளை வாழ்த்துவதாகிய மங்கலவாழ்த்தைச் சிவஞானபோதத்தில் அருளிச்செய்தார்.

அது,

**கல் ஆல் நிழல்**
**மலை வில்லார் அருளிய**
**பொல்லார் இணைமலர்**
**நல்லார் புனைவரே.**

என்பதேயாம்.

சைவசித்தாந்தத்திலே விநாயகரை எவ்விடத்தும், எப்பொழுதும் முதலில் வழிபடுக என்னும் ஒழுங்கு உள்ளது. விநாயகர் இடரைப்போக்குபவர் என்பதும் முதலில் வழிபடுதற்கு உரியவர் என்பதும்,

**"குமரனும் விக்கின விநாயகனும்........**
**போற்றிசைப்ப"**

---

**சாக்கிரம்** - நனவுநிலை (அவத்தைகளில் ஒன்று)
**அதீதம்** - துரியாதீதம் - அதி ஆழ் நித்திரை (அவத்தைகளில் ஒன்று)

- **அப்பர் சுவாமிகள்.**

எனவும்,

"**தன(து) அடி வழிபடும் அவ் இடர்**
**கடி கணபதி**"

- **சம்பந்த சுவாமிகள்.**

எனவும்,

"**இயம்புநூல் இருந் தமிழ் இன் செய்யுளாற்றால்**
**இடையூறு தீர்ந்(து) இனிது முடியவேண்டித்**
**தயங்கு பேரொளியாகி எங்கும் நின்ற**
**தலைவனார் மலைமாது தன்னோ(டு) ஆடிப்**
**பயந்த ஐங்கர நாற்றோள் முக்கண் இருபாதப்**
**பரியதொரு நீள்கோட்டுப் பெரியபண்டிக்**
**கயம் தன் அடிக்கமலங்கள் நயந்து போற்றிக்**
**கருத்தில் உற இருத்தி மிகக்காதல் செய்வாம்.**

- **அருணந்தி சிவாச்சாரியார்.**

எனவும் கூறி அருளுமாற்றால் உணர்ந்து கொள்க.

"**திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொற்**
**பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்**
**ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்**
**காதலால் கூப்புவர் தம் கை.**"

- **கபிலதேவர் மூத்தநாயனார் திருவிரட்டைமணிமாலை.**

என அருளியதும் காண்க. இன்னும், விநாயகப் பெருமான்,

"**வந்து வந்தனை செய்து முன்போயினன் மாதோ**"

- **திருக்கல்யாணப் படலம்: கந்தபுராணம்.**

எனக் கூறப்பட்டதும் விநாயகர் முதலில் வணங்கப்படுபவர் என்பதை உலகினர்க்கு உணர்த்திய உண்மையேயாம்.

❋ ❋ ❋

# 10. அச்சு அறுத்து அருள் மூர்த்தி

திரிபுர சங்காரத்தின் பொருட்டுத் தேவர்களால் அமைக்கப்பட்ட பூமியாகிய தேரின்மீது சிவபெருமான் ஏறி, பிரமாவை நோக்கித் "தேரை ஓட்டுக" என்று உத்தரவிட்டார். பதுமாசனர் நான்மறைப் புரவியைச் செலுத்தினார். இரதம் அசைய மறுத்தது. பிரமர் மத்திகையினால் குதிரைகளின்மீது அடித்தார். குதிரைகள் தங்களால் ஆனமட்டும் பாய்ந்து செல்ல முயன்றும் தேரானது நின்ற நிலையினின்றும் அசையவில்லை. அங்குள்ள தேவர் முதலிய யாவரும் அதனைக்கண்டு, மனத்தில் ஆலோசித்தவர்களாய், இது யானை முகமுடைய கணேசப்பெருமான் செயலென்று மனம் வருந்தினார்கள். வருந்திய அமரர்கள் பிரமாவோடும் கணபதியைப் பூசித்தார்கள். முற்றறிவுள்ள கயமுகப்பெருமான் பெருச்சாளி வாகனத்தில் தோன்றி அருளினார்.

அப்பொழுது தேவர்கள் புகழ, தும்புரு, நாரதர் பாட, தேவதுந்துபி முழங்க, முரசோடு மத்தளம் அதிர, பேரிகை சப்திக்க, வலம்புரி கோஷிக்க துளைக்கருவிகளின் ஒலி அட்ட திசைகளிலும் பரவ, பிரளய வெள்ளம் உடைத்துப் புரண்டு செல்லும் வேகம் போல, தேர்ச்சில்லினால் மலைத்தொகுதி அதிர, வலிய இரதமானது விரைந்து சென்றது. தேரானது நிலை பிரியாது நின்ற இடம் திரு அச்சிறு பாக்கம் என்று சொல்லப்படும். இறுதல் - முறிதல்; பாக்கம் - ஊர். இச்சரித்திரத்தை உபதேசகாண்டம் திரிபுர விசயச்சருக்கத்தில் விரிவாகக் காண்க.

> **"முப்புரம் எரிசெய்த அச்சிவன் உறை ரதம்**
> **அச்சது பொடிசெய்த - அதிதீரா"**
>
> **- அருணகிரிநாத சுவாமிகள்.**

என்று திருவாய்மலர்ந்து அருளினர். விநாயகக்கடவுளுக்குக் கொடுத்த வரம் தம்மையும் தொடரும் வலிமையும், உண்மையும் உடையதென்பதைச் சிவபெருமான் இதனால் வெளியாக்கினர். சிவபெருமான் பிதாவும் விநாயகர் புத்திருருமாக உண்மை நூல்கள் சொல்லும்.

---

பதுமாசனர் - பிரம்மா
மத்திகை- குதிரையோட்டும் கருவிகளில் ஒன்று.

**"கரியின் மாமுகம் உடைய கணபதி தாதை"**

**- சம்பந்தர்.**

எனவும்,

**"தண்டக மாமுகத்தினாற்குத் தாதை காண்"**
**"கை வேழ முகத்தானைப் படைத்தார் போலும்"**

**- அப்பர்.**

எனவும் வரும் திருவாக்குக்களை நோக்கி இவ்வுண்மை தெளிக.

பிதாவுக்குப் பிள்ளை இடர் விளைத்தல் எங்ஙனமெனில், கூறுதும்: பிதா, பிள்ளை என்றது அருள் நாடகமாம் என்றறிக. பூவும், பூவினது நிறமும், பூவினது மணமும்போலச் சிவனும், சத்தியாரும், சிவகுமாரரும் எண்ணப்படுதல் சைவாகம நூல் துணிபாம். ஆதலால் அவரிடத்து உயர்வு, தாழ்வு கற்பித்தல் குற்றமாம். ஒரு பொருளே மூன்றாகப் சொல்லப்படுதல் ஆன்மாக்களது பயன் குறித்தேயாம். இதனால் பிதாவாய் இருந்து அனுக்கிரகித்தலும், பிள்ளையாய் இருந்து இடர் விளைத்தலும் பிறர் பயன் கருதி என்பது பெறப்பட்டது. அவனே மகேசன்; அவனே உமை; அவனே விநாயகன்; அவனே கந்தன் என அதர்வ சிரோப உபநிடதமும், "நீயே பெண்; நீயே ஆண்; நீயே குமரன்" என சுவேதா சுவதர உபநிடதமும், **"என்னானைக் கன்றினை"** என அப்பர்சுவாமிகள் தேவாரத் திருவருட்பாவும்,

**"தனதனத் தோழா சங்கரா சூலபாணியே**
**தாணுவே சிவனே**
**கனக நற்றூணே கற்பகக் கொழுந்தே**
**கண்கள் மூன்(று) உடையதோர் கரும்பே**
**அனகனே குமர விநாயக சனக**
**அம்பலத்(து) அமர சேகரனே**
**உனகழல் இணை என் நெஞ்சினுள் இனிதாய்த்**
**தொண்டனேன் நுகருமா(று) நுகரே."**

**- திருமாளிகைத்தேவர்: திருவிசைப்பா.**

எனவும்,

**"ஒருமையால் உணருவோர் உணர்வினுக்(கு) உணர்வதாம்**
**பெருமையால் எங்கணும் பிரிவரும் பெற்றியான்**
**அருமையானே வரும் அடிதொழும் தன்மையான்**
**இருமையான் ஈசனே என்ன நின்(று) அருளுவான்."**

**- கந்தபுராணம்.**

எனவும், சிவனே விநாயகரென்று தெளிவாய் உணர்த்தி நிற்பது காண்க.

❋ ❋ ❋

# 11. மூலாதார அதிப மூர்த்தி

குய்யத்துக்கும், குதத்துக்கும் நடுவே குண்டலினி வட்டவடிவாய் இருக்கும். அதன் நடுவில் முக்கோணமிருக்கும். முக்கோணத்தின் நடுவில் வ,ச,ஷ, ஸ என்னும் அக்கரங்களாகிய நான்கு இதழ் கமலம் இருக்கும். அதன் நடுவில் பிரணவ அக்கரம் இருக்கும். அதில் விக்கினேசுவரர் யானைமுகத்தையும், செந்நிறத் திருமேனியையும் உடையவராய், அபய வரத கரங்களும், பாச அங்குசங்களைத் தரித்த திருக்கரங்களும் உடையவராய் பெருச்சாளி வாகனராய், வல்லபை எனும் சத்தியுடன் கூடினவராய் எழுந்தருளி இருப்பர்.

**மாமலர் நாலையும் வட்டத்தின் மேலிடு**
**மாமலர் நாலினும் வவ்வாதி சவ்விடு**
**மாமலர் நாலிலே வட்டத்தின் உள்ளே**
**ஓமென விநாயகன் உலாவி நின்றானே.**

**- திருமந்திரம்.**

பாசத்தையும், அங்குசத்தையும் ஏந்தியது தம்மைக்கட்டுபவரும், செலுத்துபவரும் பிறிதொருவர் இல்லை என்பதை உணர்த்துவதற்காகும்.

**"ஏர் கொண்ட தன்னைத் தளைப்பவரும்**
**ஊருநரும் இலரென்பது தேறற்(கு)**
**எடுத்த வெம்பாசமோ(டு) அங்குசம்**
**தன்கரத்(து) ஏந்தி."**

**- சிவஞானசுவாமிகள்.**
**செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழ்.**

என்று கூறியுள்ளார்.

ஆணவம், கன்மம், மாயையாகிய மும்மதம் உற்று, ஞானமாகிய தூணை அறமுறித்து, அன்பாகிய சங்கிலியை உதறி, திருவருளாகிய கூடத்தினின்றும் நீங்கி, இருநூற்றி இருபத்து நான்கு புவனங்களாகிய கடிய காட்டில் ஓடி, எப்பாகர்க்கும் அடங்காதனவாய் இயங்குகின்ற

---

**குய்யம்** - குறி. **கூடம்** - இருப்பிடம். **புவனங்கள்** - ஆன்மாக்கள் வாழும் இடங்கள். **பாகர்** - யானை மேய்ப்போர்

உயிர்களாகும் யானைகளை விடாது தொடர்ந்து பிணிக்கும் வலியுடையன அங்குசபாசங்களென அறிக.

**"மும்மல மாமதம் உற்றுப் போத முழுத்தறி அறவீசி**
**முகிழ்த்(து)அலர் அன்பின் சங்கிலி உதறி முதிர்ந்தவருள் கூடத்(து)**
**திம்மென நீங்கி வெளிக்கொடு புவனம் எனும் கடுவனம் ஓடி**
**எப்பாகர்க்கும் அடங்கலவாகி இயங்கும் உயிர்க்கரிகள்**
**தம்மை விடாது தொடர்ந்து பிணிப்பத் தகும் அங்குச பாசம்**
**தாங்குதல் கண்டும்."**

பக்குவ முதிர்ச்சியால் சிவபுண்ணியம் நிரம்பி, மலபரிபாகம் பிறந்து, சிவசக்தி பதியப்பட்டு, இருவினைஒப்புப் பழுத்த ஆன்மாக்களது பிறவி நீக்கும்படி ஞானகுருவாய் வந்து அடிமை கொள்பவர் விநாயகரே என்பதை உணர்த்துவது அவருடைய ஒரு திருக்கரமாம்.

முற்பிறவிகளிலே ஒன்றன்பின் ஒன்றாகியபடி முறையாலே சரியை முற்றிய பின் கிரியையும், கிரியை முற்றியபின் யோகமும் அனுட்டித்து, முற்றுப்பெற்றபின் அம்மூன்றும் முற்றுதலால் மலபரிபாகமும், சத்திநிபாதமும் தோன்றும். மலபரிபாகமாவது: மலசத்தி தேய்தல்; அதாவது ஆணவமல காரியமான மோகம், மதம், இராகம், கவலை, தாபம், வாட்டம், விசித்திரம் என்னும் ஏழு கெட்ட குணங்கள் ஆன்ம அறிவைவிட்டு நான்கு பாதமாக நீங்குதல். மோகம் - குருவினாலும், நூலினாலும் தீயவென்று அறிந்தவற்றில் நீங்காமல் நிற்கும் மயக்கம். மதம் - தன்னைப்போல ஒருவருமில்லை யென மதித்தல். இராகம் - கிடையாத பொருளினிடத்து ஆசைப்படுதல். கவலை - கிட்டிய பொருள் பிரிந்தபொழுது வருந்துதல். தாபம் - சுற்றத்தை விட்டுப் பிரிந்ததற்கும், பிரிவதற்கும் ஆற்றாமை. வாட்டம் - அவ்வாற்றாமையால் மலர்ச்சியின்றி வாடுதல். விசித்திரம் - எச்செயலும் வினையின் வழியாய் நிகழ்வதென்று எண்ணாது தான் செய்ததாகவும் பிறர் செய்ததாகவும் எண்ணுதல். சத்திநிபாதம் - சத்தி பதிதல்; சத்தி - திருவருள்; நிபாதம் - பதிதல். சத்திநிபாதமாவது: ஆன்மாவினது ஞானத்தைத் தடுக்கும் ஆணவ மலசத்தி நழுவும் அவசரத்தில் முன்பின்பால் அறச் சிவத்தினது சிற்சத்தி பதிந்து அவ்வான்மாவினது நித்திய ஞானக்கிரியை விளக்குவதாம். சத்திநிபாதம் மந்ததரம், மந்தம், தீவிரம், தீவிரதரம் என நான்கு வகைப்படும். (தீவிரதரம் எனினும் அதிதீவிரம் எனினும் ஒக்கும்) மந்ததரமாவது: நமக்குப் பெறுபேறாயுள்ள பதி ஒருவர் உளார் என்று அறிவு ஒழிந்திருத்தல். மந்தமாவது அப்பதியை அடைதற்கு வழி எங்ஙனம் என்று ஆராய்தல். தீவிரமாவது அங்ஙனம் ஆராய்ந்து அறிந்த பதியை அடையும் பொருட்டு அதற்குத் தடையாயுள்ள பிரபஞ்சத்தை அகத்தால் வெறுத்துப் புறத்தால் தழுவுதல். தீவிரதரமாவது: அப்பிரபஞ்சத்தை அகம், புறம் என்னும் இரண்டாலும் முற்றத்துறந்து, ஞானாசாரியர் ஒருவரையே பொருட்படுத்தித் திரிகரணங்களினாலும்

வழிபடுதல். இருவினையொப்பாவது: நல்வினை, தீவினை என்னும் இருவினைகளும் பொன்விலங்கும், இரும்பு விலங்கும் போலப் பிறப்பு, இறப்புக்களில் கட்டுப்படுத்தும் தன்மையில் சமமுடையன ஆகும் என ஆன்ம அறிவின்கண் விளங்கி, அவ்விருவினைகளையும் ஒப்பநாடி, உவர்த்து விடுதலேயாம். மேன்மேல் முறுகி வளர்வனவாய சரியை முதலிய தவங்களால் அறம், பாவம் என்னும் இரண்டினையும் ஒன்றாகக் கருதி அச்சரியை முதலிய தவத்தின் முதிர்ச்சியால் ஞானகுருவைத்தேடி அடைந்து ஞானத்தை அடைவர்.

கொடுப்பவரும், அனுபவிப்பவரும், உலகவடிவினரும், எல்லாப் பொருள்களிலும் வியாபித்திருப்பவரும் விநாயகரே. நாம் அவருக்கு அடிமை என்றறிந்து, மலவாசனை நீங்குதற்பொருட்டும், ஆன்மா சீவ உபாதியைப் பொருந்தாமல் அதற்கு அதீதமாய் அலைவற்று நின்மலமாயுள்ள விநாயகரின் சலனமற்று இருக்கும்படியும் உயிரும், உடம்பும், பொருளும் கடவுளுடைமை எனத் திருவருளால் அறிந்து, தானம்செய்து கொடுக்க அங்கீகரிப்பது வரதகரமாம்.

**"பக்குவம் முதிர்ந்து சிவ புண்ணியம் நிரம்பி மல**
**பாகம் பிறந்து சத்தி**
**பதிந்து வினை ஒப்புப் பழுத்தவர்கள் பந்தநோய்**
**பாற்றும் ஒரு செங்கை மலரும்**
**அக்கருணை அடியவர்கள் உயிருடன் பொருள் காயமாம்**
**எவ்வகைப் பந்தமும்**
**அங்கீகரிக்குமோர் கைமலரும்."**

**- சிவஞானசுவாமிகள்.**
**செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழ்**

❁ ❁ ❁

---

உவர்த்து - வெறுத்து.

# 12. சர்வலோக நாயகப் பிரதட்சிணமூர்த்தி

முன்னொருகாலத்து ஆயிரம் நரம்புகளையுடைய மகதி யாழில் வல்ல நாரதமுனிவர் சத்திய லோகத்தில்போய், பிரமாவை வணங்கி மகதி யாழை எடுத்து அன்பில் ஆழ்ந்து, விரல்கள் நரம்புகளின் மீது தடவ, வார்தல், வடித்தல், உந்தல், உறழ்தல், உருட்டல், தெருட்டல், அள்ளல், பட்டடை என்னும் இசை உறுப்புக்கள் எட்டினாலும், பருந்தின் இயக்கமும் நிழலும்போலப் பாடினார். பிரமா தலையை அசைத்து மகிழ்ந்து, தமது கையிலிருந்த மாதுளம் பழத்தைக் கொடுத்தார். நாரதமுனிவர் அதனை ஏற்று, "இது சிவபெருமானுக்கே உரியது" என்று கூறினார். பிரமா "நம் கருத்தும் அவ்விதமேயாகும்" என்று சொன்னார்.

நாரதமுனிவர் அவ்விடத்தில் இருந்து விடைபெற்றுச் சென்று சிவசந்நிதிதானத்தில் அம்மாதுளம் பழத்தை வைத்து வணங்கினார். சிவபெருமான் மாதுளம்பழத்தை விருப்புடன் எடுத்து நாரதர்க்கு நல்லருள் புரிந்து விநாயகக்கடவுளையும், சுப்பிரமணியக் கடவுளையும் பார்த்துப் புன்னகை செய்தனர். விநாயகக் கடவுளும், சுப்பிரமணியக் கடவுளும் வந்து தமக்கு அப்பழத்தைக் கொடுக்கும்படி வேண்டினர். சிவபெருமான் அவர்களை நோக்கி, "உம்மில் எவர் ஒரு கணத்துள் பிருதுவி முதல் நாதம் ஈறாகிய உலகங்களை எல்லாம் வலம் வருகின்றாரோ அவருக்கே இப்பழம் உரியதாகும்" என்று சொல்லி அருளினார். சுப்பிரமணியக் கடவுள் மயில்வாகனத்தில் ஏறி எல்லா உலகங்களையும் ஒரு நொடியில் கண்டு திருக்கைலாசத்தை அடைந்தார். சுப்பிரமணியக் கடவுள் உலகை வலம் வந்து கைலை சேர்வதன் முன்னரே, விநாயகக்கடவுள் சர்வலோகங்களிலும் பாலும் நீரும், வெளியும் காற்றும், உடலும் உயிரும், கண்ணொளியும் சூரியனொளியும் போலப் பிரிப்பின்றி அத்துவிதமாக வியாபித்து நிற்கும் தன்மையுடைய சிவனாரை வலம் வந்து, "உலகங்களிலும் பலவகைப்பட்ட ஆன்மாக்களிலும் ஒருமித்து நிறைந்து விளங்கும் ஒரு பொருள் உண்டென்று சொல்லுவது தேவரீர் அல்லாமல் வேறொன்று உண்டோ? தேவரீரை வலம் வந்தது உலகத்தைச் சுற்றியதனோடு ஒக்கும்" என்று கூறினார். கூறியதும் சிவபெருமான்

---

**இசை உறுப்புக்கள்** - இசை பாடும் முறைகள், **பிருதுவி** - மண்,
**நாதம்** - நாத தத்துவம், **அத்துவிதம்** - இரண்டற்ற நிலை.

விநாயகக்கடவுள் கையில் தம்முடைய கையிலிருந்த மாதுளங்கனியைக் கொடுத்து அருளினார். (சில நூல் மாங்கனியைக் கொடுத்து அருளினார் எனக் கூறும்.)

**மலம் செய்த வல்வினை நோக்கி உலகை வலம் வரும் அப்**
**புலம் செய்த காட்சிக் குமரற்கு முன்னே புரிசடை மேல்**
**சலம் செய்த நாரைப் பதி அரன் தன்னைக் கனிதரவே**
**வலம் செய்து கொண்ட மதக்களிறே உன்னை வாழ்த்துவனே.**

**- நாரையூர் திருஇரட்டைமணிமாலை.**

❁ ❁ ❁

# 13. ஆபத்சகாய மூர்த்தி

**"களவெனும் இன்பக் கடற்றுறை**
**வழக்கமும் உலகில்**
**நாட்டிய நுதலும் கருத்தொடும் தமியே**
**நண்ணினன் வள்ளிமால் விளங்கல்."**
**- தணிகைப்புராணம்.**

எனக்கூறியபடியே, உலகத்திலே களவொழுக்கம் நிகழ்தல்பொருட்டுத் திருவுள்ளம் கொண்ட ஆறுமுகக் கடவுள் வள்ளிமலையை அடைந்தருளினார். அடைந்தருளிய பெருமான் வள்ளியம்மையார் முன் பல திருவிளையாடல்களைச் செய்து இரந்தும், அவர் இசையாதவர் ஆயினர். அப்பொழுது குமாரக்கடவுள் பாங்கன் வழியாகப் புணருகின்ற திருமணமுறையை மதித்து, தமக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாது தணிகைமலையில் எழுந்தருளி இருக்கும் ஐந்துகரத்து எந்தையாகிய ஆபத்சகாய விநாயகரை நினைத்ததும், அவர் தோன்றிப் பாங்கனாம் முறைக்கண் நின்று பல அகப்பொருள்துறைகளைக் காட்டியருளி ஒரு வேழ வடிவமானார். வேழமானது மும்மதநீர் பாய, நாற்கால்களிலும் பட்டன தூசாக, மரங்களைச் சாய்த்துக் கொப்புகளை முறித்து வள்ளியம்மையாருக்கு நேரே வந்தது. அவர் அந்த யானையைக் கண்டு அஞ்சி, சுப்பிரமணிய சுவாமியை நெருங்கி, "எந்தையே! இந்த யானையால் வரும் இடையூற்றை நீக்கி, என்னைக் காத்து அருளுக" என்று அவருடைய பின்பக்கத்திலே சேர்ந்து தழுவிக்கொண்டார்.

அப்பொழுது குமாரக்கடவுள் தமது முன் பக்கத்திலே விநாயகராகிய களிற்றின் தந்தம் முட்டவும், பின்பக்கத்திலே வள்ளிநாயகியாகிய பிடியின் தனமென்னும் கொம்புகள் ஊன்றவும் அவ்விரண்டுக்கும் நடுவே ஒரு தம்பம் போலே நின்றார். அவர் விநாயகரை வந்தனைகள் செய்து, "எம்பெருமானே! தேவரீர் வருவதால் புத்தி மயக்கம் தீர்ந்தேன்; புனை இழையும் சேர்ந்தனள்; இனி நீர் மீண்டு எழுந்து அருளுக" என்று கூறிக்

---

**ஆபத்சகாயன்** - ஆபத்தில் உதவுபவன், **களவு** - காதல், **பாங்கன்** - நண்பன் **வேழம்** - யானை, **பிடி** - பெண்யானை, **தம்பம்** - தூண், **புனைஇழை** - நகைகளை அணிந்த வள்ளி

கும்பிட்டார். விநாயகர், "நன்று" என்று மீண்டு அருளினார். சுப்பிரமணியக்கடவுளை இடரில் நீக்கி, வள்ளியம்மையாரைச் சேர்த்த திறமையினால் திருத்தணிகையில் வீற்றிருக்கும் விநாயகரை உலகம் ஆபத்சகாய விநாயகர் என்றும் போற்றும்.

**"முன்னொருசார் வந்து முதுகளிற்றின் கோ(டு) ஒற்ற"**

என்றமையால் பிரணவ உபதேசமும்,

**"பின்னொருசார் வந்து பிடியின் மருப்பு ஊன்ற"**

என்றமையால் பரிசதீக்கையும், பண்ணியதென்னும் குறிப்புப்பொருள் கொள்ளத்தக்கது. மூத்த பிள்ளையாரை நோக்கித் தேவரீர் வருதலால்,

**"புந்திமயல் தீர்ந்தேன் புனையிழையும் சேர்ந்தனளால்"**

என்றதும் அக்கருத்துப் பற்றியேயாம் என்க.

மயல் - பிரணவம் உபதேசிக்கவேண்டும் என்னும் ஆசை: சேர்தல் - பரிசதீட்சை.

**அத்துயர் அதுகொடு சுப்பிரமணி படும்**
**அப்புனம் அதன் இடை இபமாகி**
**அக்குற மகளுடன் அச்சிறு முருகனை**
**அக்கணம் மணம் அருள் பெருமாளே.**
**- திருப்புகழ்.**

**தணி அறு காதல் மீக்கூர் தம்பியை இடரின் நீக்கி**
**மணி நகை மாதைச் சேர்த்த வண்மையினானும் நேரில்**
**கணிகவெற்(பு) அமரும் ஐங்கைக் கடவுள் எம் பெருமான் தன்னை**
**அணி கிளர் உலகம் ஆவச் சகாயன் என்(று) அறிந்து போற்றும்.**
**- களவுப்படலம்: தணிகைப்புராணம்.**

❋ ❋ ❋

---

பரிசதீட்சை - தொடுதலால் செய்யப்படும் தீட்சை.

# 14. வலம்புரி விநாயக மூர்த்தி

முன்னொருகாலத்திலே விநாயகக்கடவுள் கணங்களோடும் உலாவி, எல்லா இடத்திலும் திருவிளையாடல் செய்யத் திருவுள்ளம் கொண்டு, பாதாளத்திலுள்ள பாம்புகளை எடுத்து, ஆபரணமாகத் திருத்தோள்களில் அணிவார்; நவக்கிரகங்களையும், நட்சத்திரங்களையும் தொடுத்து, அசைகின்ற ஒருவகை நாகத்தைத் துதிக்கையினால் பறித்துத் திருமார்பில் நவரத்தினமாலையாகத் தரிப்பார்; பாம்புகளைப் பற்றி, ஆகாயத்தில் ஏறிய உடைந்த ஆகாசகங்கையைத் தமது பிதாவைப்போல திருமுடியில் தரிப்பார். நீர் விளையாட்டில் காதல் உற்றவராய் ஒருநாள் சமுத்திரம் யாவையும் உளக்கி, திருப்பாற்கடலை அடைந்து, நீர் முழுவதையும் துதிக்கையால் அள்ளினார். பிரமா, விட்டுணு முதலியோர் அத்துதிக்கையில் சேர்ந்தார்கள்; இவ்வாறு திருப்பாற்கடல் வற்றி அழியத் திருக்கரத்தில் ஏற்ற நீரை மீளவும் பூமியில் விடுத்தார்; அந்நீருடன் பிரம, விட்டுணு முதலியோர் வீழ்ந்தார்கள்; விழுந்தவர்கள் ஓரிடத்தில் திரண்டு, தாம் துன்பம் அடைந்தமையைத் தம்முள்ளே பேசி, நாங்கள் முன் செய்த நல்வினை காரணமாக இன்று இவ்வுலகத்தில் வந்தது மறுபிறப்பென்று மதித்தார்கள்.

மயக்கம் தீர்ந்தபின் விட்டுணு தமது இடக்கரத்திலிருந்து வழுவிய சங்கைக் காணாதவராய் வருந்தித் தேடினார். அது விநாயகக்கடவுளது கணங்களுள் ஒருவரின் வாயிலிருந்து ஒலிப்பதை அறிந்தார். அறிந்த விட்டுணு சிவ ஆணையினால் காஞ்சிப்பதியை அடைந்து, வலம்புரிக் கணேசரைத் தாபித்து விதிப்படி பூசித்துத் துதித்தார். "உபநிடதங்களாலும் அறிதற்கு அரிய ஆனந்தவடிவை உடையவரே! பிரணவப் பொருளானவரே! யானைமுகத்தை உடையவரே! வெண்மைநிறம் உடையவரே! பொன்னிறம் உடையவரே! செந்நிறம் உடையவரே! பச்சைநிறம் உடையவரே! கருணைக்கு இருப்பிடமானவரே! அடியவர் துன்பம் அகற்ற அவதரித்தவரே! துட்டர்களுக்கும், அசுரர்களுக்கும் இடையூற்றை உண்டாக்குபவரே! மெய்யடியார் நினைத்த நினைத்த வரங்களைக் கொடுத்து அருளும் வள்ளலே! நமஸ்காரம்" என்று தோத்திரம் செய்து, "தேவரீர் திருவிளையாடல் செய்யும்போது உம்முடைய துதிக்கையின் உள்ளே

---

கணம் - பூதகணம். பாதாளம் - பாதாளஉலகம்

புகுந்துவரப் பெற்றேன். ஆகையால் நான் பரிசுத்தமுடையவன் ஆனேன். அப்பொழுது அடியேனது கையிலிருந்து அகன்ற பாஞ்சசன்னியம் என்னும் சங்கு உம்முடைய கணநாதருடைய கையில் உள்ளது; அதனை இப்பொழுதே தந்து அருளுக" என்று இரந்தார்.

விநாயகக்கடவுள் விட்டுணுவின் முன்னே தோன்றி பூதகணத் தலைவனுடைய கையிலிருந்த பாஞ்சசன்னியத்தைக் கொடுத்தருளினார். விட்டுணு கணபதியை வணங்கி, பாஞ்சசன்னியத்தைப் பெற்றுக்கொண்டார். காஞ்சிப்புராணம் வலம்புரி விநாயகப்படலத்தில் இச்சரித்திரத்தை இனிதே. காணலாம்.

❊ ❊ ❊

# 15. விகடசக்கர விநாயக மூர்த்தி

தக்கன் யாகம் அழிந்தநாளில் விட்டுணு, சிவபெருமானுடைய திருவடிகளை வணங்கி, விடைபெற்று வைகுந்தம் அடைந்து, சிங்காசனத்தில் வீற்றிருந்தார். அப்பொழுது விடுவசேனன் திருமாலை வணங்கினான். திருமால், தம்மை வணங்கிய விடுவசேனனது முகத்தை நோக்கி, "முன்னாளில் எனது சக்கரம் ததீசி முனிவரால் கூர் மழுங்கிற்று. பின்பு நான் சிவபெருமானிடத்தில் இருந்து சலந்தரா அசுரனைச் சங்காரம் செய்த சுதர்சனச்சக்கரத்தைப் பெற்றுக்கொண்டேன். இன்று அதை வீரபத்திரர் மீது விட, அவர் பூண்ட வெண்தலை ஒன்று அதைக் கௌவியது; இனி உலகத்தைக் காப்பது எவ்வாறு" என்று துக்கத்துடன் சொன்னார். விடுவசேனன், "என்னை வைரவக்கடவுளது சூலத்திலிருந்து விடுவித்த தலைவரே! நான் இப்பொழுதே போய் வீரபத்திரக் கடவுளை மகிழ்வித்துச் சக்கரத்தைப் பெற்றுக்கொண்டு வருவேன்" என்று சொல்லி விடைபெற்றுப் போனான்.

சென்றவன் காஞ்சியை அடைந்து, சிவலிங்கப் பிரதிட்டை செய்து, மெய்யன்போடு பூசித்துத் தவம் செய்து கொண்டிருந்தான். வீரபத்திரக்கடவுள் அங்கே எழுந்தருளியபோது, விடுவசேனன் அவரை வணங்கித் துதித்து, "சுவாமீ! தக்கன் யாகத்தை அழித்த நாளில் உம்மீது விட்டுணு விடுத்த சக்கரப்படையைத் தேவரீர் திருமேனியில் தரித்துள்ள கபாலம் பற்றி விழுங்கியது. இப்பொழுதே அதைத்தருதல் வேண்டும்" என்று பிரார்த்தித்தான். வீரபத்திரக்கடவுள் அதனைக் கேட்டுச் சக்கரம் நம்முடைய கையில் இல்லை; கபாலத்திடம் உள்ளதேல் எவ்வாறேனும் அதுவே தரப் பெற்றுக்கொள்" என்று சொன்னார். விடுவசேனன் வீரபத்திரக் கடவுளுடைய திருவாக்கைக் கேட்டு, "இனி நான் என்ன செய்வது என்று ஆலோசித்து, அவருடைய திருமுன்நின்று கால் இரண்டையும் கை இரண்டையும் முடக்கிக்கொண்டு, வாயையும், மூக்கையும், இருகண்களையும் மாறி மாறிச் சுழித்து அசைத்துப் பற்கள் தோன்ற விகடக் கூத்தாடினான். இவ்வண்ணம் ஒரு விகடம் இயற்ற அதை நோக்கி எல்லோரும் சிரித்தார்கள்.

---

**வெண்தலை** - மண்டை ஓடு  **கபாலம்** - மண்டையோடு.
**விகடக்கூத்து** - நகைச்சுவை நடனம்

அப்பொழுது வெண்தலையும் சிரித்தது. சக்கரம் அதன் வாயில் இருந்து வழுவிப் பூமியில் விழுந்தது.

விடுவசேனன் முதலில் விநாயக வணக்கம் செய்யாது விகடம் இயற்றியமையால், விக்கினேசுரர் விரைந்து சென்று, அதைக் கவர்ந்து கொண்டு அறியாதவர் போலிருக்க, விடுவசேனன், "இனி என்ன செய்வது" என்று வருந்தி, விநாயகக் கடவுளுடைய திருமுன்பும் அந்த விகட நடனத்தை ஆடினான். அந்த விகட நடனத்தை எம்பெருமான் நோக்கிக் அருள்செய்து, சக்கரத்தைக் கொடுத்து அருளினார். அன்று முதலாகக் காஞ்சிப்பதியில் இருக்கும் விநாயகரை விகட சக்கர விநாயகர் என்று உலகம் போற்றுகின்றது.

காஞ்சிப்புராணம் விடுவசேனீசப் படலத்தால் இச்சரித்திரத்தை இனிது உணர்க.

**உச்சியில் மகுடம் மின்ன ஒளிர்தர நுதலின் ஓடை**
**வச்சிரமருப்பின் ஒற்றை மணிகொள் கிம்புரி வயங்க**
**மெய்ச்செவிக் கவரிதூங்க வேழமா முகம்கொண்(டு) உற்ற**
**கச்சியின் விகடசக்ர கணபதிக்(கு) அன்பு செய்வாம்.**

**- கந்தபுராணம்.**

**தெருளாத தக்கனார் வேள்வியை அழித்(து) உம்பர்**
**சென்னியை உருட்டி நினையும்**
**தேய்த்த சயவீரனும் இவன் தம்பி என்பதும்**
**திருமார்பன் அவமதிப்ப**
**உருள் ஆழி கைக்கொண்டு மற்றவன் இரந்(து) ஆங்(கு)**
**உளுற்றும் விகடக் கூத்தினுக்(கு)**
**உள்ளம் பெரும்கருணை பூத்தபின் ஆங்(கு) அதனை**
**உதவினான் இவன் என்பதும்**
**வெருளாது சீறிய அரக்கனைப் பந்தாடி**
**விட்டதும் கேட்டிலாய் போல்**
**வேண்டி நாமே வலின் அழைத்திடவும் மதியாது**
**விண் ஆறு சேறி கண்டாய்**
*அருள் ஆதி வன்கடியில் வேறு புகலே(து) உனக்(கு)*
*அம்புலீ ஆட வாவே*
*அருட்குணம் நிரம்பும் செங்கழுநீர் மதக்களிறொ(டு)*
அம்புலீ ஆட வரவே.

**- சிவஞானசுவாமிகள் பிரபந்தம்.**

❀ ❀ ❀

# 16. கூர்மசங்கார மூர்த்தி

முன்னொரு காலத்திலே தேவர்களும், அசுரர்களும் திருப்பாற்கடலைக் கடைந்தபொழுது, மந்தரமலையாகிய மத்துக் கவிழ்ந்தது. விட்டுணு ஆமை உருக்கொண்டு அக்கடலுள் போய் மத்தை முதுகினால் சுமந்தார். தேவர்கள் பின்பு கடலைக் கடைந்து அமுதத்தைப் பெற்றார்கள். விட்டுணுவாகிய ஆமை மந்தரமலையைச் சமுத்திரத்துள் நிறுத்திக் காத்தேன் என்று நினைத்துப் பெரிதும் அகந்தை உற்று, சமுத்திரங்களில் போய் அவைகளைக் கலக்கித்திரிந்தது. அதனால், உலகிற்கு அழிவுண்டானது. தேவர்கள் திருமாலாம் ஆமையால் வருந்திக் கைலாசபதியான சிவனாரிடம் முறையிட்டார்கள்.

**இடுக்கண் என்ப(து) எமை அடைந்தால் அது**
**தடுக்க நின் அல(து)யாவர் தருக்குளார்**
**கடுக்கை அம்சடைக் கண்நுதலே நினக்(கு)**
**அடுத்த நாங்கள் அடைக்கலம் ஐயனே.**

**மாயன் ஆமை வடிவு கொண்டான் அவன்**
**ஆய வேலைய கடு(கி) இடந்தனன்**
**தீய செய்வன செப்பவற்றோ இனி**
**நீ அவன் செயல் நீத்(து) உற வேண்டுமால்.**

இவ்வாறு தோத்திரம் செய்தலைக் கண்ட சிவபெருமான் அருள்செய்து கணேச மூர்த்தியை அனுப்பினார். கணேசர் போய் எழுகடலையும் துதிக்கையால் அள்ளி உறிஞ்ச, ஆமையும் அவர் துதிக்கையுள் சென்றது. கணேசர் உறிஞ்சிய நீரைப் பின்னர் வெளியே சிந்தினார். அந்நீர் முழுவதும் கடலுள் மீண்டும் சென்றது. ஆமை நிலத்தில் வீழ்ந்தது. வீழ்ந்த ஆமையை விநாயகக் கடவுள் தமது தந்தத்தால் குத்தித் தோண்டி ஓட்டைப் பிடுங்கிச் சிவபெருமானுக்குச் சாத்தக் கொடுத்தார். அப்பொழுது பிரமா முதலியோர் துன்பம் நீங்கி வணங்கினார்கள். இச்சரித்திரத்தை உபதேசகாண்டம் கூர்ம அவதாரச் சருக்கத்துள் காண்க.

---

மத்து - தயிர் கடையும் கருவி.

சில இடங்களிலே ஆமையோட்டைப் பிடுங்கியவர் சிவபெருமான் என்றே கூறப்பட்டுள்ளது. சிவனே கணேசர்; கணேசரே சிவன் என்னும் ஒற்றுமை நயம்பற்றிக் கணேசர் செய்ததைச் சிவன் செய்ததாகக் கூறினார்கள் என்க. அங்ஙனமே வீரபத்திரக்கடவுள் செய்தருளிய யாகசங்காரம், வைரவக்கடவுள் செய்து அருளிய பிரம சிரச்சேதம் முதலியவற்றையும் சிவபெருமானே செய்தாரென்று தேவாரம் முதலியவற்றில் உரைக்கப்பட்டமை காண்க.

❋ ❋ ❋

---

**யாக சங்காரம்** - யாகம் அழித்தல் **சிரச்சேதம்** - தலை அறுத்தல்

# 17. சந்திர சிட்ஷா ரட்ஷக மூர்த்தி

முன்னொரு காலத்திலே தேவர்கள் ஆவணிமாதச் சதுர்த்தி திதியில் விநாயகக்கடவுளைப் பூசித்தார்கள். ஐங்கரக்கடவுள் ஆன்மாக்களிடத்தில் விருப்புற்ற திருவுள்ளத்துடன் பஞ்சகிருத்திய நடனம் செய்து அருளினார். தேவர்கள் வணங்கிப் பிள்ளையாருடைய அருளைப் பெற்றார்கள்.

விநாயகப்பெருமான் நடனம் செய்ய, தேவர் வணங்கிய பொழுது, சந்திரன் விநாயகக்கடவுளுடைய பல மடிப்புகளைக் கொண்ட சரிந்த திருவயிற்றையும், துதிக்கையில் தாங்கிய மோதகத்தையும் குள்ளமான கால்களையும் பார்த்துச் சிரித்தான். விநாயகர் சந்திரனை நோக்கி, "யாரும் காண விரும்பாது இழிவு செய்து அகல நீசர்போல் ஆவாய்" என்றார். அதனால் யாவரும் இகழ்ந்து, அவனைப் பாராதவராய் அகல, அவன் வெட்கப்பட்டு ஒடுங்கித் திரிந்தான். பிரமா முதலிய தேவர்கள் அதனைக்கண்டு, திருக்கைலாசமலையில் போய் விநாயகக் கடவுளுடைய திருவடிகளை வணங்கி, "சந்திரன் தேவரீருடைய திருவாக்கின் வண்ணம் இழிந்ததன்மையை அடைந்து வருந்தி ஒடுங்கினான். அவன் இவ்வுலகிற்கு வேண்டும். தேவரீர் சொல்லிய சாபத்தை ஒரு வருடத்தில் ஒரு நாளைக்கு அவன் அடையும்படி அருளுக" என்றார்கள். விநாயகக்கடவுள் அதுகேட்டு அவ்வாறே அருள் புரிந்தார். ஆவணிமாத வளர்பிறைச் சதுர்த்தி திதியில் உலகோர் அவனை நோக்காது, அத்தினத்தில் விநாயகக்கடவுளுக்கு விஷேட பூசை செய்வர்.

இச்சரித்திரத்தை உபதேசகாண்டம் சிவவிரத மான்மியச் சருக்கத்திலும், கந்தபுராணம் சந்திரசாபப் படலத்திலும் விரிவாகக் காண்க.

அடியார்கள் பசுஞானத்தைத் திரட்டி ஒப்பிக்க, அதனை உண்டு, "**கணபதியேல் வயிறுதாரி**" எனச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவோணகாந்தன்றளித் தேவாரத்தில் கூறியபடி பெரியதாய் இருக்கும் திருவயிற்றில் உள்ளாக அடக்கி, சிவஞானத்தைக் கொடுப்பவர் தாம் என்பதை உணர்த்த, கவள உணவாகிய மோதகத்தை ஏந்தினர். இதனை,

> **"உள்ளம் எனும் கூடத்தில் ஊக்கம் எனும் தறி நிறுவி உறுதியாகத்**
> **தள்ள அரிய அன்பென்னும் தொடர்பூட்டி இடைப்படுத்தித் தறுகண் பாசக்**
> **கள்ள வினைப்பசு போதக் கவளம் இடக் களித்(து) உண்டு கருணை என்னும்**
> **வெள்ள மதம் பொழிசித்தி வேழத்தை நினைந்துவரு வினைகள் தீர்ப்பாம்."**
>
> **- திருவிளையாடற் புராணம்.**

எனவும்,

"மாமாயைத் தொடர் அறுத்துப் பசுபோதக் கவளம் உண்டு மதம்மேல் கொண்டு
காமாதித் தறி பிடுங்கி வினைக்கடலை உழக்கி வரு களபம் தானே."

**- குளத்தூர்ப் பதிற்றுப்பத்தந்தாதி.**

எனவும்,

"மும்மலக் கந்தினைப் பிடுங்கி உயிர்ப்போதக் கவளம் மாந்திக்
கருத்துடைய சிவானந்தக் களி மிகுத்துத் திரியும் மதக் களபம் தானே."

**- இளசைப் பதிற்றுப்பத்தந்தாதி.**

எனவும் கூறியவற்றால் உணர்க.

❋ ❋ ❋

# 18. இந்திர அனுக்கிரக மூர்த்தி

இந்திரன், சூரபதுமன் செய்யும் கொடுமைகளுக்கு அஞ்சி வருந்தி, மனைவியுடன் மறைந்து தென்தேசத்திலே,

**பிரமபுரம் வேணுபுரம் பெரும்புகலி வெங்குருநீர்ப்**
**பொருவி இருந் (து) தோணிபுரம் பூந்தராய் சிரபுரமுன்**
**வரு புற அம் சண்பைநகர் வளர்காழி கொச்சை வயம்**
**பரவு திருக்கழுமலமாம் பன்னிரண்டு திருப்பெயர்த்தால்.**

**-பெரியபுராணம்.**

எனக் கூறியபடி பன்னிரண்டு திருநாமங்களையுடைய சீகாழியை அடைந்து துன்பம் நீங்கி இருந்தான். அவன் சிவபெருமானைப் பூசை செய்வோமென்று நினைத்து, சந்தனம், அகில் முதலிய மரங்களால் வேலி அமைத்து சிறுசண்பகம், கோங்கு முதலிய மரங்களையும், மல்லிகை, முல்லை, செவ்வந்தி முதலியவற்றைத் தெரிந்து ஒரு நந்தனவனத்தை உண்டாக்க, அவை மிகமலர்ந்தன. இந்திரன் அம்மலர்களாலே தினந்தோறும் சிவபெருமானைப் பூசித்து இருந்தான். அங்ஙனம் இருக்கும் காலத்திலே அசுரருடைய ஆணையினாலே, முகில், மழை பெய்யாதிருக்க, அந்த நந்தனவனம் வாடியது. அதனால் இந்திரன் வருந்திச் சிவபெருமானைத் துதித்தான். அப்பொழுது, "இந்திரனே! நீ வைத்த நந்தனவனம் அழியாது; இத்தலத்தில் ஆறு ஒன்று வரும்; வருந்தாதே" என்று ஓர் அசரீரி வாக்கு எழுந்தது. அந்த வாக்கை இந்திரன் கேட்டு மன உறுதியோடு இருந்தான்.

அவ்வாறு இருக்கும்பொழுது நாரதமுனிவர் இந்திரனிடம் போனார். இந்திரன் தொழுத கையினனாய், "அடியேன் செய்யும் சிவ அர்ச்சனைக்கு ஓர் இடையூறு உண்டு. நந்தனவனம் சிறிதும் நீரின்றி வாடியது. சிவ அர்ச்சனை செய்வதற்குப் பூவும் இல்லை" என்று விண்ணப்பம் செய்து, ஓர் ஆசனத்தின் மீது அவரை இருத்திப் பின் தானும் இருந்தான். நாரதமுனிவர் அதைக்கேட்டு, "அகத்தியமுனிவர் வில்லன், வாதபி என்னும் இருவரை வதைத்து, அதனால் வந்த பிரமகத்தி தோசம் நீங்கும்படி சிவபூசை

---

பிரமகத்தி தோசம் - பிராமணரை கொன்றதால் வரும் குற்றம்.

செய்து கொங்கதேசத்தில் இருக்கின்றார். சிவபெருமானால் கொடுக்கப்பட்டு அவருடைய கமண்டலத்தில் இருக்கின்ற காவிரிநதியை இங்கே வரும்படி செய்தால் உன் மனக்குறை தீரும்'' என்றார்.

இந்திரன் ''அந்நதியை இங்கே வரச்செய்வது எப்படி?'' என்றான். அவர், ''இந்திரனே, விநாயகக் கடவுளை வழிபட்டு வேண்டிக்கொள்வாயானால், அக்கடவுள் அந்தக் கமண்டலத்தைக் கவிழ்த்து விடுவார்'' என்று சொல்லித் தமது இருப்பிடத்தை அடைந்தார்.

இந்திரன் பேரானந்தம் அடைந்து, முனிவர் சொல்லியபடி விநாயகக் கடவுளது திருவுருவத்தைத் உருவாக்கி அர்ச்சித்து,

> **இக்கொடு தென்னங்காயும் ஏனலின் இடியும் தேனும்**
> **முக்கனி பலவும் பாகும் மோதக முதல முற்றும்**
> **தொக்குறு மதுர மூலத் தொடக்கமும் சுவை தீம்பாலும்**
> **மிக்க பண்ணி நியமமுமாக விருப்புற நிவேதித்தானால்.**

இந்தவகையாக படைத்து வழிபாடு செய்ய, விநாயகக் கடவுள் பலகோடிப் பூதகணங்கள் சூழத் தோன்றினார். இந்திரன் ''அடியேன் உய்வடைந்தேன்'' என்று கூறி அவருடைய திருப்பாதங்களில் தனது தலைபடும்படி வணங்கினான். விநாயகக்கடவுள் பேரருளோடு அவனை நோக்கி, ''இந்திரனே உனது பூசையை ஏற்றுக்கொண்டோம்; உனக்கு வேண்டிய வரம் யாது?'' என்றார். இந்திரன் அது கேட்டு ''எம்பிரானுக்காக இங்கே ஒரு நந்தனவனத்தை வைத்தேன். அது நீர் இல்லாமையால் நெருப்புப் பட்டதுபோலக் கருகிப்போயிற்று. எந்தையே! அகத்தியமுனிவர் சிவ அர்ச்சனை செய்துகொண்டு கொங்கதேசத்தில் இருக்கின்றார். அவரது கமண்டலத்தினுள்ளே காவிரி என்னும் தீர்த்தம் உள்ளது. அதனை தேவரீர் பூமியிலே கவிழ்த்துவிட்டால், இந்த வனத்தில் அது பாய்ந்துவரும். அப்போது அடியேனுடைய குறை தீரும்'' என்றான்.

விநாயகக்கடவுள் இந்திரனை நோக்கி, ''அங்ஙனமே செய்வோம்'' என்று அருள்செய்து அவனை அங்கேயே நிறுத்தி, சிவபெருமானுடைய திருவருளினாலே அகத்தியமுனிவருடைய கமண்டலத்தில் காவிரிநதி வந்தமையையும், அதற்கு இந்த முனிவன் என்றைக்கு உனது பொருட்டாகக் கை காட்டுவானோ அன்றைக்கே இம்முனிவனை விட்டுநீங்கி பூமியிலே செல்வாயாக என்று சிவபெருமான் வரம்கொடுத்த சூழ்ச்சியையும் நினைத்து, கொங்கதேசத்தை அடைந்து, அகத்தியமுனிவரது

---

**கமண்டலம்** - தூக்குச்செம்பு **தீர்த்தம்** - நீர்.

கமண்டலத்திலே காகத்தின் வடிவாய் வீற்றிருந்தார். அகத்தியமுனிவர் அதனைக்கண்டு, விநாயகக்கடவுள் என்று அறியாதவராய், தமது கமண்டலத்தில் இருப்பது ஒரு காகம்தான் என்று எண்ணி அதனை ஓட்டும் பொருட்டுக் கையை உயர்த்தித் துரத்தினார். உடனே விநாயகர் கமண்டலத்தைக் கவிழ்த்து, காவேரியை நோக்கி, "நீ பூமியில் செல்வாயாக" என்று பணித்தருளினார். அது பல காததூரம் சென்று, இந்திரன் வணங்கி இருக்கும் சீகாழி வனத்திலே சோலையில் புகுந்தது. இந்திரன் ஆனந்தக் கூத்தாடிக் கவலை நீங்கினான். நந்தனவனம் குளிர்ச்சியோடு தழைத்துப் புஷ்பித்தது. அவன் சைவ ஆகம விதிப்படி பூசித்துச் சீகாழியில் இருந்தான்.

முனி சிரேட்டராகிய அகத்தியருக்குச் சிவபெருமானால் கொடுக்கப்பட்டதாலும், அகத்தியரது பரிசுத்தமாகிய கமண்டலத்திலிருந்து விநாயகக்கடவுள் கவிழ்க்கப் பாய்ந்தமையாலும் காவிரிநதி மிகவும் விசேடம் உடையது; இதில் ஸ்நாநம் செய்வோர் போக, மோட்சங்களை அடைவர். "**போகரும் யோகரும் புலரிவாய் மூழ்கச் செல்லுமா காவிரி**" எனவும், "**வளம்படப்பெருகி, ஆடுவார் பாவம் தீர்த்(து) அஞ்சனம் அலம்பித் திகழும் மாகாவிரித் துருத்தியார்**" எனவும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் கூறி அருளி இருப்பதனாலும் உணர்க.

❋ ❋ ❋

# 19. அகத்திய அனுக்கிரக மூர்த்தி

**வி**நாயகக்கடவுள் காக வடிவத்தை நீங்கி, ஒரு பிராமணப் பிரமச்சாரி வேடம் கொண்டு சென்றார். அகத்திய முனிவர் அதைக்கண்டு **கோபித்து**, இவன் நம்முடைய கமண்டலத்தில் உள்ள நதியைக் கவிழ்த்து விடுவானோ; என ஐயுற்று, ''இவன் வலிமையை விரைந்து அறிவேன்'' என்று சொல்லிக்கொண்டு பிராமணச்சிறுவன் வேடம் கொண்டு செல்கின்ற விநாயகக்கடவுளை வேகத்தோடு தொடர, விநாயகக்கடவுள் அதுகண்டு, பயந்தவர்போல ஓடினார். அகத்தியனார் அவருடைய சிரசிலே குட்டுவதாக நினைந்து கைகளை முட்டியாகப் பிடித்துக்கொண்டு, அவரைத் துரத்தினார். அப்பொழுது விக்கினேசுரர் அகத்திய முனிவரை அண்மிப்பார்; ஆகாயத்தில் தோன்றுவார்; திசைகளில் செல்லுவார்; பூமியில் வருவார்; அவருடைய கைக்கும் எட்டுவார்; தூரத்தில் செல்வார். இப்படி அகத்தியர் கோபத்தோடு அலையும்படி விநாயகக் கடவுள் அவர்தம் கைகளுக்கு அகப்படாமல் திரிந்ததால், முனிவர் மிகவும் தளர்ந்து, ''இவன் மாயத்தைச் சொல்லமுடியாமல் இருக்கிறது; இனி நான் செய்வது என்ன?'' என்று நினைந்தார். அப்பொழுது விநாயகக்கடவுள் அதனைத் திருவுள்ளம் கொண்டு, இரங்கித் தமது திருமேனியை விரைந்து அவருக்குக் காட்டி அருளினார். அகத்தியமுனிவர் தரிசித்து, விநாயகக்கடவுளை நாய் ஆகிய நானோ ஆணவத்தோடு துரத்தினேன் என்று கலங்கி, ஏங்கி, இரங்கி முன்னர் விநாயகக்கடவுளைக் குட்டும்படி செய்த தம் கைகள் இரண்டையும் எடுத்து, வருத்தம் உண்டாகத் தம்முடைய நெற்றியிலே குட்டினார்.

அதனை விநாயகக் கடவுள் பார்த்து, ''அகத்தியனே! உன்செயல் என்ன? சொல்லுவாயாக'' என்றார். அகத்திய முனிவர், ''ஐயனே! சிறிதும் அறிவில்லாத நான் தேவரீரை அந்தணகுமாரர் என்று மதித்துச் சிரசில் குட்டச் சிந்தனை செய்தேன், அதற்குப் பரிகாரத்தையும் செய்து கொள்ளுகின்றேன்'' என்று கூறினார். விநாயகக்கடவுள், ''உனது மனத்துன்பத்தை நீக்குவாயாக'' என்று அருளிச்செய்ய, முனிவர் துயரம் நீங்கி, கடவுளுடைய திருவடிகளில் பலமுறை வீழ்ந்து வணங்கி, ''தேவரீரது பெருமையை அறியாது நான் செய்த பிழையைப் பொறுத்தருளுக'' என்று பிரார்த்தித்தார். விநாயகக்கடவுள் முனிவரை நோக்கி, ''அகத்தியனே! இந்திரன் நமது தந்தையைப் பூசிப்பதற்காக உண்டாக்கிய

---

சிரசு - தலை. மாயம் - தந்திரம்.

நந்தனவனம் நீர் இல்லாமையால் காய்ந்து போய்விட்டது; அதன் பொருட்டு நீரை வேண்டி, எம்மை வழிபட்டான்; ஆதலினால் உனது கமண்டலத்தைக் கவிழ்த்து, அந்நதியைப் பூமியில் செல்லக் கட்டளை இட்டோம். நீ பொறுக்காது செய்தவற்றைச் சிறிதும் மனத்தில் கொள்ளோம்; நீ நம் தந்தையாகிய சிவபெருமானிடத்தில் மெய்யன்பு உடையவன்; ஆதலால் நமக்கும் அன்பன் ஆவாய்; வேண்டிய வரங்களைக் கேட்பாய்; தருவோம்'' என்றார்.

அகத்தியமுனிவர் எம்பெருமானை வணங்கி, ''அடியேன் உய்ந்தேன்'' என்று கூறி, ''தேவரீரிடத்தும், சிவபெருமானிடத்தும் நான் அன்புடையவனாய் இருக்கும் வரத்தைத் தந்தருள வேண்டும். இப்பொழுது நான் செய்தது போல உமது திருமுன்னிலையில் முட்டியாகப் பிடித்த இருகரங்களாலும் தம் நெற்றியில் குட்டுபவர்களுடைய குறையை நீக்கி, அன்னையைப்போல வந்து அருள்செய்ய வேண்டும்'' என்று வேண்டிக்கொண்டார். சிவகுமாரர், ''அவ்வரங்களைத் தந்தோம்'' என்றருளி, ''இன்னும் நீ விரும்பிய வரங்களைக் கேட்பாயாக'' என்று கூற, முனிவர் அதுகேட்டு, ''சுவாமீ! கமண்டலத்திலிருந்த நதியானது தேவரீர் கவிழ்த்தமையால் நீர் துளியுமின்றிப் பூமியில் கவிழ்ந்து விட்டது. சிவபெருமான் தந்த அந்த நதி போனதால், அதுபோல எனக்கு வேறு நதியொன்று உண்டா? ஆதலினால் ஒரு தீர்த்தத்தைத் தந்து அருளுதல் வேண்டும்'' என்றார்.

விநாயகக்கடவுள் தாம் கவிழ்த்ததனால் ஓடுகின்றதாகிய ஆற்றில் சிறிது நீரைத் துதிக்கையால் அள்ளி, முனிவருடைய கமண்டலத்தில் விட்டார். அந்நீர் கமண்டலத்தை நிரப்பியது. எஞ்சிய பாகம் முழுவதும் ஆற்று வெள்ளத்தோடு பாய்ந்தது. அகத்தியமுனிவர் தமது கமண்டல நீர் முன்போல் இருப்பதைக் கண்டு, பிரணவப்பொருளாகிய கடவுளுக்கு இதுபோன்ற செயல்கள் அரியனவா என்று நினைத்து, அவரை வணங்கி, ''அடியேன் இனி ஒரு குறையும் இல்லாதவனானேன்; கவிழ்த்த நதியையும் முன்புபோலத் தந்தருளினீர்; அன்பற்ற சிறியேன் உய்ந்தேன்; இனியும் அடியேன் நினைத்தபொழுது எழுந்தருளி வந்து அருள் புரிக. அடியேனை மறக்காதே'' என்று வேண்டினார். விநாயகர் ''அங்ஙனமே ஆகுக'' என்று தம்மைச் சுற்றிவந்த படையோடும் மறைந்து அருளினார். அகத்தியமுனிவர் விம்மிதம் உடையவராய்ச் சிவகுமாரருடைய திருக்கோலத்தைத் தியானித்து, கொங்க தேசத்தை விட்டு அகன்றார்.

யாவரும் விநாயகக்கடவுளை வணங்கும்பொழுது இரு கரங்களினாலும் சிரசில் ஐந்து முறை குட்டுதல் வேண்டும். குட்டும்பொழுது சிரசிலிருக்கும் அமிர்தமானது பெருகி மூலாதாரத்தில் எழுந்தருளியிருக்கும் விநாயகரை அடைந்து, அபிடேகமாக, அவர் உவந்து அருள் செய்வார். மும்முறை குட்டுவதும் உண்டு; அது மும்மல நீக்கத்தின் பொருட்டாம்.

# 20. இராவண கர்வபங்க மூர்த்தி

இலங்கைக்குத் தலைவனாகிய இராவணன் தான் அழியாது இருக்கும்படி சிவபெருமானைக் குறித்துத் திருக்கைலாச மலையிலிருந்து தவம் செய்தான். அவன் முன்னிலையில் சிவபெருமான் தோன்றி, "உனக்கு என்ன வரம் வேண்டும்" என்று வினாவி அருளினார். இராவணன் சிவபெருமானை நோக்கி, "இலங்கையும் நானும் அழியாதவண்ணம் அருள்புரிக" என்றான். சிவபெருமான் ஒரு சிவலிங்கத்தை அவனுடைய கையில் கொடுத்து, "இராவணனே! இச்சிவலிங்கத்தை இலங்கையில் ஸ்தாபிப்பாயாயின் அவ்விலங்கை அழியாது; விட்டுணு முதலிய தேவர்களும் உன்னை வெல்லமாட்டார்கள். வாகனங்களில் ஏறிச்செல்லாமல் ஆசாரத்துடன் நடந்து செல்வாயாக. வேறிடத்தில் வைத்தால் இச்சிவலிங்கத்தை எடுக்க முடியாது; இதனை அறிவாயாக" என்று சொல்லி மறைந்தருளினார்.

இராவணன் அந்த இலிங்கத்தைக் கையிலேற்று இலங்கையை நோக்கிச் சென்றான். தேவர்கள் அதை அறிந்து வருந்தி, இவன் இந்த இலிங்கத்தை இலங்கையில் பிரதிட்டை செய்வானே ஆனால், அதன் அருள் விசேடத்தால் என்றும் அழியாதவனாவான்; எம்மையும் முன்னிலும் பார்க்க, அதிகமாக வருத்துவான் என்று தங்களுள் ஆலோசித்து, விக்கினேசுரரைப் பூசித்து, "இராவணனுடைய மனக்கருத்து நிறைவேறாமல் விக்கினம் செய்து, எம்மை காத்து அருளுக" என்று பிரார்த்தித்தார்கள். விநாயகக்கடவுள் அவர்களுக்குக் அருள்செய்து, வருணனை அழைத்து, "நீ இராவணனுடைய வயிற்றில் புகுந்து, சல உபாதையை உண்டாக்குவாயாக" என்று அனுப்பித் தாம் ஒரு பிராமணப் பிரமச்சாரியாகி, அவன் வரும் வழியில் நின்றார். இராவணன் அப்பிரம்மச்சாரியை நோக்கி "எனக்கு சிறுநீர் பெருகி உடலை வாட்டிப் பெரும் துன்பம் செய்கின்றது; நான் சலம் கழித்து, சுத்தம் செய்து இங்கு வரும் வரையும் இந்த இலிங்கத்தை வைத்திரும்" என்றான். அதற்கு விநாயகக்கடவுளாகிய பிரமச்சாரி "நான் மெல்லிய யாக்கை உடையவன்; இந்த இலிங்கத்தைத் தாங்கும் வல்லமை இல்லாதவன் நீ வலிய வந்து தருகின்றாய்; தந்தால் நல்லதே; மும்முறை அழைப்பேன்; அழைக்க நீ வராது விட்டால் பூமியில் வைப்பேன்" என்றார். இராவணன்

---

**ஆசாரம்** - ஒழுக்கம், **விக்கினம்** - துன்பம், **யாக்கை** - உடம்பு

இசைந்து சிவலிங்கத்தை அவர் கையில் கொடுத்துச் சலம் கழிக்கப் போனான். போய் நெடுநேரம் வராதிருந்ததால், அப்பிரமச்சாரியானவர் மும்முறை அழைத்தார். அரக்கன் வரவில்லை. விநாயகப் பெருமானும் சிவலிங்கத்தை பூமியில் வைத்தார். வருணனும் அவன் வயிற்றில் இருந்தும் விலகினான்.

இராவணன் சுத்தம் செய்தபின், பிரமச்சாரியின் முன் சென்றபோது சிவலிங்கம் பூமியில் இருப்பதைக் கண்டான். விநாயகரைக் கோபித்துப் பார்த்து, இலிங்கத்தை இருபது கரங்களாலும் பெரும் பலத்துடன் பிடித்து இழுத்தான். இலிங்கம் அசையவில்லை. இராவணன் தன்னால் அசைக்க முடியாமையால் இது "மகாபலம்" என்றான். இராவணன் கூறியதை உலகமறிந்து மகாபலநாதர் என்று வணங்குகின்றது. இராவணன் பின்பும் தன்னால் முடிந்த மட்டும் அசைத்தான். அந்த இலிங்கம் வளைந்து பசுவின் காதுபோல நிமிர்ந்தது. அதனால் அத்தலம் திருக்கோகர்ணம் என்று புகழ்ந்து துதிக்கும்படி இருக்கின்றது (இறைவியார் பெயர் கோகர்ணநாயகி).

இராவணன் பிரமச்சாரியின் தலையில், கோபமிகுதியினால் இருபது கரங்களாலும் குட்டினான். குட்டியவுடன் விநாயகக்கடவுள் பிருதிவி முதல் நாதம் ஈறாகிய தத்துவங்களும், சராசரங்களும், பிறவும் திருவடிமுதல் திருமுடிவரையும் பொருந்த, நிமிர்ந்து ஒரு விசுவரூபம் கொண்டு தோன்றி, இராவணனைத் திருக்கரத்தினால் தூக்கிப் பந்துபோல் பூமியில் விழாதபடி பலமுறை எறிந்து ஏந்தினார். தசக்கிரீவன் இளைப்படைந்து அகந்தை நீங்கியவனாய், "என்னுடைய அறியாமையால் பார்ப்பனச் சிறுவன் என்று எண்ணி இவ்விதம் செய்தேன்; அப்பிழையைப் பொறுப்பது உமக்கு இயல்பாகும்." என்று இரந்து இரந்து துதிக்க, விக்கினராஜர் அவனைப் பூமியில் விடுத்தார். விடுத்தகடவுள் "நிருதர் குலவேந்தே! உனது குற்றத்தை நாம் பொறுத்தோம்; உனது இருபது கரங்களாலும் பத்துச் சிரசுகளிலும் குட்டுவாயாக" என்று சொல்ல, இராவணன் குட்டிக்கொண்டு, ஆனந்தக்கூத்தாடி விநாயகக் கடவுளை மகிழ்வித்தான். விநாயகமூர்த்தி அருள்பார்வை செய்து, "எம்முடைய அருள் நலத்தை விரும்பி, உன்னைப்போல இரு கரத்தாலும் சிரசில் குட்டி வணங்கியவர்களிடம் மகிழ்ச்சி செய்வோம்" என்று சொல்லி மறைந்து அருளினார். இச்சரித்திரத்தைப் "பிரமோத்தர காண்டம்" சிவதான மகிமை உரைத்த அத்தியாயத்தினால் அறிந்துகொள்க.

❁ ❁ ❁

---

**பிருதுவி** - மண், **நாதம்** - நாத தத்துவம், **சராசரங்கள்** - பிரபஞ்சங்கள், **தசக்கிரீவன்** - பத்துத்தலைகளை உடைய இராவணன். **அகந்தை** - ஆணவம், **பார்ப்பனச் சிறுவன்** - பிராமணச் சிறுவன், **நிருதர்** - அரக்கர்

# 21. மகாபாரத லிகித மூர்த்தி

ஸ்ரீ கிருஷ்ணர் அருச்சுனனுக்கு உபதேசித்த பகவத்கீதையைத் தன் மனத்தே கொண்டமையாலும், விட்டுணு முதலாகிய தேவர்களுடைய சரித்திரங்களைக் கூறுகின்றமையாலும், சிலநாள் பல்பிணிச் சிற்றறிவினராகிய மக்கள் எளிதில் உணரும்படி உறுதிப்பொருள்களைக் கூறுகின்றமையாலும், வேதங்களை நான்காக வகுத்த வியாசமுனிவரால் அருளிச்செய்யப்பட்ட உரிமையாலும் பாரதம் ஐந்தாம் வேதம் என்று சொல்லப்படும்.

விநாயகக்கடவுள் கயமுகாசுரனைச் சங்கரிக்கும்படி முறித்ததாகிய தமது தந்தத்தை எழுத்தாணியாகவும், மேருவை ஏடாகவும் கொண்டு பாரத சரித்திரத்தை எழுதியருளினார் என்று புராண இதிகாசங்கள் கூறுகின்றன.

**"ஒரு கரிக்கொம்பால் - சுவடு பட்டிடும் மேருவும்"**
**-முதனாட்பானுகோபன் - கந்தபுராணம்.**

**அறி உற்றிடு பாரதம் ஆன எலாம்**
**குறி உற்றிடு தோள்முகர் குஞ்சரன் மேல்**
**எறி உற்ற மருப்பினிலே என வாய்ப்**
**பொறி உற்றிடும் என்பது பொய்த்திடுமோ..**
**-வீந்தகிரிப்படலம் - கந்தபுராணம்.**

**விரிதரு பசும்பொன் குன்றில் பாரதம் விளங்கத் தீட்டி**
**வரிசெயும் மருப்புத் துண்டம் வளர்சடைச் செருகி ஆங்கு**
**தெரிதரக் குழவித் திங்கள் சென்னி சேர்த்(து) ஆலம் காட்டில்**
**பரிவுசெய் மூலத்தானக் கரியினைப் பணிதல் செய்வாம்.**
**-திருவாலங்காட்டுப் புராணம்.**

---

**லிகிதம்** - எழுதுதல், **பிணி** - நோய், **உறுதிப் பொருள்கள்** - அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கும்,

..........பாரதப் பெரும் போர்
தவள மா மருப்(பு) ஒன்று ஒடித்(து) ஒரு கரத்தில்
தரித்(து) உயர் கிரிப்புறத்(து)எழுதும்
கவள மா களிற்றின் திருமுகம் படைத்த
கடவுளை நினைந்து கை தொழுவாம்.

-திருவாதவூரடிகள் புராணம்.

நீள் ஆழி உலகத்து மறை நாலொ(டு) ஐந்தென்று நிலை நிற்கவே
வாடாத தவ வாய்மை முனிராசன் மாபாரதம் சொன்ன நாள்
ஏடாக மா மேரு வெற்பாக வங்கூர் எழுத்தாணி தன்
கோடாக எழுதும் பிரானைப் பணிந்(து) அன்பு கூர்வாம் அரோ.

-வில்லிபுத்தூராழ்வார் பாரதம்.

❋ ❋ ❋

# 22. விண்டு விநாயக மூர்த்தி

**கா**சிபமுனிவரது மனைவியருள் ஒருத்தியாகிய அதிதி என்பவள், விட்டுணு தனக்குப் புத்திரராகத் தோன்ற வேண்டுமென்று தவம் செய்தாள். அதனை, அவளுக்கு மாற்றாளாகிய திதி என்பவள் அறிந்து, தேவர்களை வெல்லத்தக்க புத்திரர்களைப் பெறவிரும்பிக் காசிபமுனிவரோடு கூடினாள். அப்பொழுது இரணியன், இரணியாக்கன் என்னும் இரண்டு அசுரர்கள் பிறந்தார்கள். அவர்களுள் இரணியன் என்பவன் பிரமாவை நோக்கிப் பெருந்தவம் செய்தான். பிரமதேவர் தோன்றி "இரணியனே! நீ விரும்பிய வரங்கள் யாவை? கூறுவாயாக" என்று வினாவினார். இரணியன், "பிருதுவி முதுலிய பஞ்சபூதங்கள், மிருகங்கள், பட்சிகள், விலங்குகள், ஆயுதங்கள் முதலியவற்றால் இரவிலும், பகலிலும், பூமியிலும், ஆகாயத்திலும் இறவாது இருக்கவேண்டும்; எனது உதிரம் பூமியில் சிந்தினால் அதிலிருந்து என்னைப்போல் உருவம் உண்டாகி என் பகைவரை அழிக்கவேண்டும்" என்று வேண்டினான். பிரமதேவர், "அவ்வாறே ஆகுக" என்று மறைந்து அருளினார். அவன் செருக்குற்றுத் தேவர் முதலியோரை வருத்திக் கொடுங்கோல் செலுத்தி வந்தான்.

அங்ஙனம் நிகழும் காலத்தில் விட்டுணுமூர்த்தி இரணியனைக் கொல்ல ஓர் உபாயத்தைப் பெறவிரும்பிப் பூமியிலே போய் ஒரு வன்னி விருட்சத்தின் கீழ் விநாயகமூர்த்தியைப் பிரதிட்டை செய்து பூசித்து வந்தார். பூசித்து வரும் காலத்தில் விநாயகக்கடவுள் அருள் செய்து தோன்றி அருளினார். விட்டுணு தொழுது, "சுவாமி! இரணியனைக் கொல்ல அடியேனுக்கு வரம் தரவேண்டும்" என்று பிரார்த்தித்தார். விநாயகக்கடவுள் "விண்டுவே! பகலும், இரவும் இல்லாத மாலைப்பொழுதில், ஆகாயமும், பூமியும் இல்லாத மடியில் அவனை வைத்து நகத்தினால் கீறிப் பிளந்து, இரத்தம் பூமியில் விழாதவண்ணம் வாயால் உறிஞ்சுவாயாக" என்று அருள்செய்து மறைந்தருளினார். பின்னர் திருமால் நரசிங்க அவதாரம் கொண்டு ஐங்கரக்கடவுள் கூறிய உபாயத்தின்படி இரணியனைச் சங்கரித்தனர்.

---

**விண்டு** - விட்டுணு, **பட்சிகள்** - பறவைகள், **உதிரம்** - இரத்தம்,
**விருட்சம்** - மரம், **உபாயம்** - தந்திரம், **சங்கரித்தல்** - அழித்தல்.

தேவநாயகராகிய விநாயகர் விட்டுணுவுக்கு வேண்டிய வரங்களைக் கொடுத்து அருளிய காரணத்தினால் விண்டுவிநாயகர் என்னும் திருநாமத்தைப் பெற்றார்.

விட்டுணு இரணியனைக் கொன்றமை,

**"தூங்க நகத்தால் அன்றித் தொலையா வென்றித்**
**தொகு திறல் அவ் இரணியனை ஆகம் கீண்ட**
**அங் கனகத் திருமாலும்"**

**-அப்பர் தேவாரம்.**

எனக் கூறியிருத்தல் காண்க.

❋ ❋ ❋

# 23. சமி மந்தார அனுக்கிரக மூர்த்தி

**மு**ன்னொரு காலத்தில் நந்திகோத்திரமுனிவருக்கு ஔரவர் என்னும் ஒரு புத்திரர் இருந்தார். ஔரவ முனிவரும் சுமேதை என்பவளும் கலந்து சமி என்னும் புத்திரியைப் பெற்றார்கள். தாய் தந்தையர்கள் தமது மகளாகிய சமியைத் தௌமிய முனிவருடைய புத்திரனும், சௌனக முனிவருடைய மாணாக்கனும் ஆகிய மந்தார முனிவனுக்கு விதிப்படி தத்தம் செய்து கொடுத்தார்கள். சிலநாள் சென்றபின் மந்தாரன், தாய், தந்தையர் ஆச்சிரமத்திற்கு மனைவியை அழைத்துச் சென்றான். அவர்கள் காட்டு வழியாகச் செல்லும்பொழுது, விநாயகக் கடவுளுடைய வடிவத்தைப் பெற்ற புருசுண்டி முனிவர் எதிரே வந்தார். அத்தம்பதிகள் பழையவினை அனுபவிக்கும் காலம் நேரிட்டவர்களாய் அம்முனிவரது துதிக்கரத்தையும் தொந்தி வயிற்றையும் பார்த்துச் சிரித்தார்கள்.

முனிவர் அதைக்கண்டு, "பெரியோர்முன் செய்யத்தகாத குற்றத்தை நீங்கள் இப்பொழுது என்முன் செய்தமையால் வன்னி, மந்தாரை என்னும் மரங்கள் ஆவீர்கள்" என்று சபித்தனர். அவ்விருவரும் முனிவருடைய பாதங்களை வணங்கி, "நாங்கள் அறிவின்மையால் செய்த பிழையைப் பொறுத்து அருள் செய்து அருளுக" என்று பலவாறு வேண்டினார்கள். அதற்கு முனிவர் சிறிது இரங்கி, "நீங்கள் வன்னிமரமும், மந்தாரமரமுமாக இருக்கும்பொழுது விநாயகக்கடவுள் உங்களிடத்தில் எழுந்தருளுவார். அப்பொழுது நீங்கள் மேன்மையை அடைந்து இம்மரவடிவு நீங்காமல் கடவுளுக்கு உரிமை ஆவீர்கள்; ஆன்மாக்கள் உங்களை வணங்குவார்கள்; முடிவில் முத்தி அடைவீர்கள்." என்று சொல்லித் தமது ஆச்சிரமத்தை அடைந்தார். மந்தாரன் மந்தாரை மரமாகவும், சமி என்பவள் வன்னி மரமாகவும் இருந்தார்கள்.

சௌனகமுனிவர் தமது மாணாக்கன் வராமையால் வருந்திப் பின் யோக மார்க்கத்தால் அவ்விருவரும் சாபம் ஏற்ற வரலாற்றை அறிந்தார். ஔரவமுனிவரும் அவ்விதம் அறிந்தார். தௌமியமுனிவரும் அவ்வண்ணம் அறிந்து புத்திரசோகத்தால் இறந்தார். பின்பு சௌனகமுனிவரும் ஔரவமுனிவரும் விநாயகமூர்த்தியைத் தியானித்துத் தவம் செய்தார்கள். விநாயகர் சௌனகருக்குக் காட்சி கொடுத்து அருளினார். முனிவர்

அன்புடன் வணங்கித் தோத்திரம் செய்தார். கடவுள், "உனக்கு வேண்டிய வரம் யாது?" என்று வினாவி அருளினார். முனிவர் மீண்டும் வணங்கி, "மந்தாரனும் சமி என்பவளும் தேவரீரது அடியவருள் சிறந்த புருசுண்டி முனிவரை, அறியாமை காரணமாக அவமதித்தமையால் அவரது சாபத்தைப் ஏற்றார்கள்; அவ்விருவரது சாபத்தையும் நீக்கி அருளுக" என்று விண்ணப்பம் செய்தார். விநாயகமூர்த்தி புன்னகை செய்து, "அன்பனே! எமது அடியவர்கள் வெகுண்டு கூறினும் உவந்து கூறினும் அவை அவ்வப் பயன்களை நல்கியே விடும். அவற்றை ஒருவராலும் நீக்க முடியாது; வன்னி, மந்தாரை என்னும் அவ்விரு மரநிழலிலும் நாம் வீற்றிருந்து அடியார்கள் விரும்பிய போக மோட்சங்களைக் கொடுத்து அருளுவோம். அவைகளின் இலைகளாலும், பூக்களாலும் எம்மை அர்ச்சித்த அடியவர்கள் விரும்பும் வரங்களைக் கொடுப்போம்" என்று அம்மரநிழலில் வீற்றிருந்து அருளினார்.

சமி என்னும் பெண்ணுக்கும் மந்தாரம் என்பவருக்கும் அநுக்கிரகம் செய்தமையால் விநாயகர் சமி மந்தார அநுக்கிரக மூர்த்தியானார்.

விநாயகருக்குரிய அறுகு, மந்தாரை, வன்னி என்பவற்றின் பெருமை எம்மால் கூறத்தக்கது அன்று. அறுகு கிடையாவிடின் மந்தார மலராலும் அறுகும், மந்தாரமும் கிடையாவிடின் வன்னி இலையாலும் வணங்குக. இவற்றின் விரிவுகளை விநாயகபுராணம் சமிமந்தார உற்பத்திப் படலத்தால் அறிக.

பிறவியை நீக்க விரும்பியவர்கள் சிவபெருமானிடத்தில் நீங்காத அன்பை உடைய அடியவரைக் கண்டவுடன், மனிதர் செய்யும் வழிபாட்டை அறிவோம் என்று சிவபெருமானே தபோதனர் என்னும் உருவினைத் தரித்து வந்தார் என்று நினைந்து வணங்கல் வேண்டும். அவர்களைப் பிறர் நிந்திக்கக் கேட்டவர்களும், நிந்தித்தவரும், அதற்கு உடன்பட்டவரும், நிந்திக்கும்படி ஏவிவிட்டவரும், மனத்தினாலும், உடலினாலும் தவறு செய்தவரும், அடியார்களைக் கண்டவுடன் ஆசனத்தை விட்டு எழாதவர்களும், அவர்கள் முன் உயர்ந்த ஆசனத்தில் இருப்பவர்களும், சிரித்தவர்களும், அவர் பேசும்போது பாராமுகம் செய்தவர்களும், அவர் கோபிக்கும்போது தாமும் கோபிப்பவரும், அவருடைய ஆசனம், படுக்கை, உடை, குடை, காலணி முதலியவைகளைத் தாமும் உபயோகிப்பவரும், பிறகுற்றங்களை அவருக்குச் செய்தவர்களும் பெரும் துன்பத்தை அடைவார்கள்.

---

**வெகுண்டு** - கோபப்பட்டு, **உவந்து** - மகிழ்ந்து, **தபோதனர்** - முனிவர், **நிந்தித்தல்** - அவதூறு பேசுதல், **பாராமுகம்** - அலட்சியம்.

"காட்டும் உள் ஒளியைக் கண்ட கண்ணனைக் கயந்து சொல்லக்
கேட்டவர் கேட்பித்தார்கள் கெழுமினர் உடன்பட்டார் முன்
மூட்டினர் என்(று) அவ் ஐந்து மூடரும் கூடி மூழ்கி
மீட்டிடுவாரும் இன்றி எரி நிரயத்துள் வேவார்."

-சிவதருமோத்தரம்.

சிவனடியாராகிய புருசுண்டி முனிவரைச் சிரித்து இகழ்ந்த சமி, மந்தாரை இருவரும் அவரால் மரமாகச் சபிக்கப்பட்டமையை அறிக. ஆதலால் சிவனடியார்களுக்கு மறந்தும் தீங்கு நினையாது இருக்க.

❋ ❋ ❋

# 24. பாலசந்திர மூர்த்தி

**மு**ன்னொரு காலத்திலே யமதர்மராசன் சித்தர், கின்னரர், கருடர், விஞ்சையர், சாரணர், முனிவர் முதலியோர் சூழச் சிம்மாசனத்தின்மீது வீற்றிருந்தான். அப்பொழுது தேவ அரம்பையர்கள் தங்கள் மனம் கண்வழி செல்லவும், கண்கள் கைவழி செல்லவும் அபிநயித்து நடித்தனர். அங்ஙனம் நடிக்கும் காலத்தில், திலோத்தமை என்பவளது ஆடை நழுவியது. அவள் நாணமுற்றுச் சபையிலிருந்தவர்கள் அறியாத வண்ணம் அவ்விடத்தில் இருந்தும் போயினாள்.

இயமன் அவள் தனங்களைக்கண்டு காமநோய் அதிகரிக்கச் சபையைவிட்டு அந்தப்புரத்துக்குப் போனான். அதற்கிடையில் அவன் வீரியம் நிலத்தில் வீழ்ந்தது. அதிலிருந்து அனலாசுரன் தோன்றினான். அச்சபையில் இருந்தவர்கள் அவனைக்கண்டு பயந்து ஓடினார்கள். யமன் அப்புதல்வனது கொடிய உருவத்தைக்கண்டு பயந்து கதவை அடைத்துக்கொண்டான். அனலாசுரன் யமனைத் தனது பிதாவென்று விடுத்துப் பூவுலகத்தை அடைந்து, சீவராசிகளை உண்டான். பின்பு தேவர்களை உண்ண நினைத்துச் சுவர்க்க உலகத்துக்குப் போனான். அதை இந்திரன் முதலிய தேவர்கள் அறிந்து விட்டுணுவினிடம் போய்த் தங்கள் குறைகளைக் கூறினார்கள்.

விட்டுணு யோசித்து, இவன் விநாயகக் கடவுளாலன்றி எம்மால் அழியான் என நினைத்து, தேவர்களுடன் அவரை வேத சிரசுகளால் தோத்திரம் செய்தார். விநாயகமூர்த்தி திருவுள்ளம் இரங்கி ஒரு பிராமணப் பிரமச்சாரியைப்போல் தோன்றினார். விட்டுணு முதலிய தேவர்கள் இவரே பிரணவத்து உதித்த விநாயகர் என்று நிச்சயித்து, வணங்கி, அனலாசுரனுடைய உயிரையும் எங்கள் துன்பத்தையும் நீக்கியருளவேண்டும் என்று பிரார்த்தித்தார்கள். விநாயகக்கடவுள் அருள் செய்தார். சுவர்க்கத்தை அடைந்த அனலாசுரன் அங்கே தேவர்களைக் காணாமல் பல இடங்களிலும் தேடி, அவர்கள் நிற்குமிடத்தை அடைந்தான். அவன் வரவைக் கண்ட முனிவர்கள் ஓடினார்கள். தேவர்கள் வருந்தி மூவர் முதல்வராகிய

---

**அரம்பையர்கள்** - தேவலோகப் பெண்கள், **வீரியம்** - விந்து, **வேதசிரசு** - உபநிடதம்.

விநாயகக்கடவுளுக்குப் பின்பக்கமாக மறைந்து நின்றார்கள். அவுணன் வருவதையும், தேவர்கள் வருந்துவதையும் விநாயகக்கடவுள் நோக்கி, "அனலாசுரனுக்கு இனி அஞ்ச வேண்டாம்" என்று அபயம் கொடுத்தருளினார். தேவர்கள் உய்ந்தோம், உய்ந்தோம் என்று மகிழ்ச்சி உற்றார்கள்.

விநாயகக்கடவுள் தமது சுயரூபத்துடன் தோன்றி, சிவபெருமான் ஆலகாலவிடத்தைக் கண்டத்தில் அடக்கியதுபோல, அவனைத் தமது திருக்கரத்தில் அடங்கும்படி எடுத்து, ஒரு உருண்டையாக்கி விழுங்கினார். அவ் அற்புதத்தை நோக்கியவர்கள் அதிசயமடைந்து துதித்தார்கள். விநாயகக்கடவுளுடைய திருவயிற்றில் அனலாசுரன் அடங்குதலும், ஆன்மாக்களுடைய உதரங்களில் அக்கினி பற்றியது போல வெப்பம் உண்டானது. அப்போது எல்லோரும் துன்பமடைந்து வருந்தினார்கள். விநாயகக்கடவுளுக்கு நாற்பத்தெண்ணாயிரம் முனிவர்களும் அறுகுகளால் தனித்தனியாகப் பூசித்தார்கள். உடனே வெப்பம் நீங்கிவிட்டது. தேவர்கள் புஷ்பங்களைச் சொரிந்து வணங்கினார்கள். மூவுலகங்களும் மகிழ்வுற்றன.

பால வயதுடன் வந்து எல்லா உயிர்களையும் வருத்திய வெப்பம் நீங்கும்படி சந்திரனைப்போலக் குளிர்ச்சி கொடுத்தமையால் பாலச்சந்திரமூர்த்தி என்னும் திருநாமத்தைப் பெற்றார்.

❋ ❋ ❋

---

**விடம்** - நஞ்சு, **கண்டம்** - தொண்டை, **உதரம்** - வயிறு, **அக்கினி** - நெருப்பு.

# 25. மயூரேச மூர்த்தி

காசிப முனிவரது மனைவியர் பதின்மூவருள் விநதை என்பவளிடம் கத்துரு என்பவள் சென்றாள். பழைய பகை காரணமாக விநதை கத்துருவை அவமானம் செய்தாள். விநதையின் புத்திரனாகிய சடாயுவும் கத்துருவைத் துன்பப்படுத்தினான். கத்துரு மனம் வருந்தியவளாய்த் தனது புத்திரராகிய நாகர்க்கு அவற்றைக் கூறினாள். தாய் சொல்வதைக் கேட்ட ஆதிசேடன் கோபம் கொண்டு இப்பொழுது சடாயுவினுடைய உயிரைக் கவர்கின்றேன் என்று எழுந்தான். அப்பொழுது அஷ்டநாகங்களும் ஆதிசேடனைப் பணிந்து "நாங்கள் போய்ச் சடாயுவை அடக்கி வருகின்றோம்" என்று சொல்லி அனுமதி பெற்றுக்கொண்டு, நாகசேனைகளுடன் பூவுலகத்தை அடைந்து, விநதையின் மாளிகைக்குப் போனார்கள். நாகர்கள் வந்ததைச் சடாயு, சம்பாதி, சேனன் என்னும் மூன்று பட்சி அரசர்களும் கண்டு, நாகசேனைகளுடன் யுத்தம் செய்தார்கள். நாகசேனைகள் தோற்று, அஞ்சிப் குகை வழியாகப் பாதாளத்துக்குப் போனார்கள். அதை அட்டநாகங்களும் கண்டு, கோபமுற்று யுத்தம் செய்து, அம்மூன்று பட்சிகளையும் பற்றிச் சிறை வைத்தன. அதைக் கத்துரு கண்டு, சந்தோஷமுற்றாள்.

விநதை துன்பமுற்றுத் தனது நாயகனாகிய காசிபமுனிவருக்கு நிகழ்ந்தவற்றைக் கூறி, எனது புத்திரர்களுடைய சிறையை நீக்குவதற்கு ஒரு புத்திரன் என்னிடத்தில் உண்டாகும்படி அருள் செய்ய வேண்டும் என்று பிரார்த்தித்தாள். காசிபமுனிவர் "பெண்ணே! உனது புத்திரர்களைச் சிறை மீட்பதற்கு உன்னுடைய வயிற்றில் ஒரு முட்டையை உண்டாக்குகின்றோம்" அதை விநாயகக்கடவுள் ஒருவரே அன்றி வேறு ஒருவரும் உடைக்கமாட்டார்கள். அவர் அதை உடைத்தவுடன் ஒரு மயில் வெளிப்படும். அவர் அம்மயிலை வாகனமாக்கிக் கொண்டு, உனது புதல்வர்களின் சிறையை மீட்பார்" என்று சொல்லி அவளுடன் சேர்ந்தார். விநதையின் வயிற்றிலிருந்து ஒரு முட்டை தோன்றியது. விநதை அம்முட்டையைப் பாதுகாத்து வந்தாள்.

---

**ஆதிசேடன்** - பாம்பு. **அஷ்டநாகங்கள்** - எட்டு நாகங்கள், பட்சி - பறவை. **சேனை** - படை, **சடாயு, சம்பாதி, சேனன்** - கழுகுகள்,

ஒருநாள் விநாயகக்கடவுள் முனிபுத்திரர்களோடு விநதை தவம் செய்து கொண்டிருந்த காட்டில் திருவிளையாடல் செய்து கொண்டிருந்தார். விநதை அதை அறிந்து முட்டையைக் கொண்டுபோய்ப் பிள்ளையாருக்கு எதிரே வைத்து வணங்கினாள். பிள்ளையார் அவளுடைய குறிப்பை அறிந்து தமது திருக்கரத்தினால் அம்முட்டையைக் கீறினார். அதிலிருந்து மலை போன்ற பருத்த உருவத்தையுடைய ஒரு மயில் தோன்றியது. அதைக் கடவுள் அருளோடு பார்த்தருளி, அதன் முதுகில் ஏறி விநதையை நோக்கி, "உனக்கு வேண்டிய வரங்களைக் கேட்பாயாக" என்றார். விநதை நமஸ்காரம் செய்து; "எனது புத்திரர்களை நாகர்கள் வைத்திருக்கின்ற சிறையிலிருந்து விடுவித்தல் வேண்டும்; தேவரீரது திருவடிகளை மறவாத அன்பையும் எனக்குத் தந்தருள வேண்டும்" என்று பிரார்த்தித்தாள். கடவுள் "அவ்விதமே ஆகுக" என்று அருள்செய்து, முனிவர்கள் புடைசூழ மயில்வாகனத்தைச் செலுத்திக்கொண்டுவந்து, சிவபெருமானையும் உமாதேவியாரையும் வணங்கித் தமது இடத்தில் இருந்தார். அத்தினம் முதலாக விநாயகரை மயூரேசர் என்று பெயரிட்டு அடியார்கள் துதிக்கின்றனர்.

❋ ❋ ❋

# 26. புஜங்க ஆபரண மூர்த்தி

விநாயகக் கடவுள் விநதைக்குக் கொடுத்த வரத்தை நிறைவேற்றத் திருவுள்ளம் கொண்டு பாதாள உலகத்திற்குச் சென்றார். அங்கே வாசுகியின் புதல்வி அன்புடன் பூசிக்க அவளுக்கு அருள் செய்து, வாசுகியின் சபைக்கு எழுந்தருளினார். விநாயகரின் வரவைக் கண்ட வாசுகி எழுந்து நமஸ்காரம் செய்யாமல் இறுமாந்து இருந்தான். கணேசர் அவனருகில் போய்ப் சிரோரத்தினத்தைப் பறித்தார். உடனே வாசுகி மயங்கி விழுந்தான். அவனைச் சூழ்ந்திருந்த நாகர்கள் மனங்கலங்கி நடுங்கினார்கள். விநாயகர் சம்பாதி முதலியோரைச் சிறைமீட்டு அழைத்துச் சென்றார். வாசுகி மயக்கம் நீங்கிப் பிள்ளையாரை எதிர்த்தான். விநாயகர் அவனை எடுத்து மோதிரமாக அணிந்தருளினார்.

ஆதிசேடன் அதனை அறிந்து கோபம் கொண்டு சேனைகளோடு வந்து கணேசரை எதிர்த்து யுத்தம் செய்தான். விநாயகர் தமது வாகனமாகிய மயிலை நோக்கி, "நீ போய் நாகசேனைகளை வென்று ஆதிசேடனைப் பிடித்து வா" என்று ஆணையிட்டார். உடனே மயில் கோபத்தோடு போய்ச் சிலரை மூக்கினால் குத்தியும், சிலரைச் சிறகுகளால் மோதியும், சிலரைக் கால்களினால் உதைத்தும் யுத்தம் செய்தது. நாகசேனைகள் தோற்று ஓடின. ஆதிசேடன் எதிர்த்தான். மயில் அவன்மீது பாய்ந்து அவனது உடலின் நடுவில் கொத்திக் கௌவிக்கொண்டு போய்க் கணேசர் திருமுன்புவிட்டது.

உடனே விநாயகமூர்த்தி அந்த ஆதிசேடனை எடுத்து அரைஞாணாகத் தரித்தருளினார். முன்பு தோற்று ஓடிய நாகர்கள் வந்து கணேசரை வணங்கினார்கள். தந்தை செய்ததை மைந்தர் செய்வது முறை என்றவாறு சிவபெருமானைப் போலத் தாமும் நாகங்களை அணியத் திருவுளம் கொண்டு தம்மிடம் அடைக்கலமாக வந்த

---

வாசுகி - பாம்பு, **இறுமாப்பு** - செருக்கு, **சிரோரத்தினம்** - தலையிலுள்ள இரத்தினம், **அரைஞாண்** - இடுப்பைச்சுற்றி அணியும் கயிறு

நாகர்களை அங்கதம், குழை, ஆரம் முதலிய ஆபரணங்களாகத் திருத்தோள், திருச்செவி, திருமார்பு முதலிய இடங்களில் அணிந்தருளினார். வாசுகியின் புத்திரியும், நாககன்னியர்களும் வந்து நமஸ்கரிக்க, அருள் செய்தார். பின்னர் சம்பாதி முதலியோர் சூழ்ந்துவர மயில் வாகனத்தைச் செலுத்திக்கொண்டு பூவுலகத்தை அடைந்து சிவபெருமானும், உமாதேவியாரும் வீற்றிருக்கும் திருக்கோயிலில் போய் அவர்களை நமஸ்கரித்து இருந்தார்.

சம்பாதி முதலிய மூன்று பட்சிகளும் விநாயகக் கடவுளை வணங்கி விடை பெற்றுக்கொண்டுபோய், காசிப முனிவரையும், விநதையையும் வணங்கிச் சுகத்தோடு இருந்தனர்.

❋ ❋ ❋

---

**அங்கதம்** - தோளில் அணியும் ஆபரணம்,
**குழை** - காதில் அணியும் ஆபரணம்,
**ஆரம்** - கழுத்தில் அணியும் ஆபரணம் (மாலை).

# 27. வல்லாள மூர்த்தி

முன்னொரு ஊழிக்காலமுடிவில் பிரமா சிவ அனுக்கிரகத்தினால் விட்டுணுவினுடைய நாபிக் கமலத்தில் உதித்தார். சிவபெருமான் வேத ஆகமங்களை அவருக்கு உபதேசித்து அருளினார். பிரமா வேத ஆகமங்கள் எழுதிய புத்தகத்தை நாள்தோறும் பூசித்து வந்தார். ஒரு காலத்தில் தேவர்களும் அசுரர்களும் தம்முள் பகைத்து யுத்தம் செய்தார்கள். தேவர்கள் வேத மனுக்களைப் படைகளாக்கிப் பிரமாஸ்திரத்தோடு சேர்த்துப் பிரயோகித்தார்கள். அதனால் அசுரர்கள் தோல்வி அடைந்தார்கள். சிலகாலம் சென்றபின் சங்காசுரன் என்பவனும் தனது தம்பியாகிய கமலாசுரன் என்பவனும் வரத்தினாலும், வலிமையினாலும் உயர்ந்தவர்கள் ஆனார்கள். முன்னர் தேவர்களிடம் தோற்ற அசுரர்கள் அவ்விரு அசுரத் தலைவர்களிடமும் போய் நிகழ்ந்தவற்றை முறையிட்டார்கள். சங்காசுரன் அவற்றைக் கேட்டுக் கமலாசுரனை நோக்கி, “பிரமாவிடம் இருக்கும் வேதப் புத்தகத்தை நீ இன்று போய்க் கவர்ந்து வருவாய்” என்று கட்டளை இட்டான். கமலாசுரன் தான் கற்ற மாயையினால் தன் வடிவத்தை வெளித்தெரியாது மறைத்து பிரமாவின் இருப்பிடத்தை அடைந்தான். பிரமா சிவத்தியானத்தில் யோகநித்திரை செய்துகொண்டிருந்தார். புத்தகங்கள் அவர் முன்பு இருந்தன. அப்பொழுது கமலாசுரன் வேதத்தைக் கவர்ந்துகொண்டு போய்ச் சங்காசுரன் முன்பு வைத்தான். அவன் அதைக் கொண்டுபோய்க் கடலுள் மறைத்து வைத்தான். அதனால் உலகங்களில் வேத ஒழுக்கம் குறைந்தது; பாவம் அதிகரித்தது. வறுமையும், துன்பமும் மிகுந்தன. வருணாச்சிரம தருமங்கள் தவறின.

சிலநாள் சென்றபின் பிரமா தமது யோகநித்திரையில் இருந்து எழுந்தார். அவர் தமக்கு முன்னால் இருந்த வேதப் புத்தகத்தைக் காணாதவராய்த் துன்பமடைந்து, பின்னர் நடந்ததை ஞானத்தால் அறிந்து, மனம் வருந்தினார். அவ்வாறு வருந்திய பிரமா திருக்கைலாச மலைக்குப் போய்ச் சிவபெருமானை நமஸ்கரித்து, “அசுரன் ஒருவன் வேதப் புத்தகத்தைக் கவர்ந்து சென்றான். அவனை அழித்து எமது துயரை நீக்கியருளுக” என்று பிரார்த்தித்தார். சிவபெருமான் பிரமாவை நோக்கி

---

ஊழிக்காலம் - உலகம் முழுவதையும் இறைவன் ஒடுக்கும் காலம்.
யோகநித்திரை - அறிதுயல்.

''தம்மை அடைந்த அடியார்களது விக்கினங்களைப் போக்கி அவர்களை காக்க வல்லவன் விக்கினேசுவரன் ஆவான். நீ அவனிடம் போவாயாக; அவன் உலகங்களில் வேத ஆகமங்களைப் பரவச் செய்வான்'' என்று சொல்லி அருளினார். பிரமா நமஸ்காரம் செய்து விடைபெற்றுக்கொண்டு, தமது உலகத்தை அடைந்து தாமரை ஆசனத்தில் இருந்து விக்கினேஸ்வரரைத் தியானித்து யோகம் செய்து கொண்டிருந்தார். விநாயகர் அவருக்கு அருள் செய்து, தமது திருக்கரத்தினால் அவர் கரத்தைப் பிடித்து எழுப்பினார். எழுப்பி, ''பிரமனே! வேத ஆகம புராணங்கள் எமது மூன்று கண்களாகப் பிரகாசிக்கின்றன. வேதம் அழிந்தது என்று வருந்த வேண்டாம், நாம் அவைகளைப் பழையபடி விளங்கச் செய்வோம், கமலாசுரனையும் அழிப்போம்'' என்று சொல்லி அருளினார்.

உடனே விநாயகப்பெருமான் ஒரு பிராமண வடிவம் கொண்டு வேதம், ஆகமம் எழுதிய புத்தகத்தைத் தாங்கி ஆயிரம் சீடர்கள் தம்மைச் சூழ்ந்துவர முனிவர்கள் வசிக்கும் சுந்தர ஆச்சிரமத்தை அடைந்தார். அங்கே நித்திய கருமங்களை விட்டு துன்பம் உற்றிருந்த முனிவர்கள் ''நாம் உய்ந்தோம், உய்ந்தோம்'' என்று சீடர்களோடு எழுந்து அந்த அந்தணருடைய திருவடிகளை வணங்கி; இவ்வாறு கூறினார்கள் ''வேத வித்தகரே! நாங்கள் கமலாசுரனால் வேத ஒழுக்கம் இழந்து குற்றம் அடைந்தோம். இன்று உம்மைத் தரிசித்தமையால் அந்த இடையூறு நீங்கியது; நாங்கள் உய்வடையும்படி வந்து அருளினீர். உமது இருப்பிடம் யாது? இங்கே வந்து அருளிய காரணம் என்ன? கூறுக'' என்றார்கள்.

அதற்கு விநாயகப்பெருமான், ''அடியவர்கள் நித்தியகருமம் முதலியவைகளை இழந்து, துன்பம் உற்றிருப்பதை அறிந்து வேத ஆகம புத்தகத்தைக் கொண்டு இங்கு வந்தோம். இப்புத்தகத்தை ஆராய்ந்தறிந்து எல்லாக் கிரியைகளையும் செய்யுங்கள். என்னை வல்லாளர் என்று சொல்லுவார்கள். இங்கே நமக்கு ஓர் இருக்கை தந்து, உங்கள் கவலைகளை நீக்கிப் பேரின்பம் உற்று இருப்பீர்களாக'' என்றார். அத்திருவாக்கை, கௌதமர் முதலிய உயர்ந்த முனிவர்கள் கேட்டு மகிழ்ச்சி உற்றார்கள். அந்தணர் வடிவுகொண்டு எழுந்தருளிய விநாயகக்கடவுள் முனிவர்களால் கொடுக்கப்பட்ட மாளிகையில் வீற்றிருந்து அருளினார்.

சில முனிவர்கள் வேத ஆகமங்களைச் சொல்லி அருளிய சிவபெருமானே இவர் என்று வணங்கினார்கள். சில முனிவர்கள் அவைகளை எமக்கு உபதேசித்து அருளவேண்டும் என்று பிரார்த்தித்தார்கள். நான்கு வேதங்களையும் உபதேசிக்கக் கேட்டுச் சிலர் ஆனந்தம் அடைந்தார்கள். வேதங்களின் உண்மைப்பொருளைக் கேட்டுச் சிலர் சந்தேகம்

நீங்கினார்கள். ஆகமங்களில் கூறப்பட்ட முப்பொருள்களுடைய உண்மையைச் சிலர் கேட்டனர். சிலர் புராணங்களைக் கேட்டுப் பேரின்பம் அடைந்தனர். முனிவர்கள் இவ்விதம் வல்லாளருடைய திருவடிகளைத் தினம் தோறும் நமஸ்காரம் செய்து, வேத ஆகம புராணங்களைச் சந்தேகம், விபரீதம் அறக் கற்றனர். கற்று அவைகளைத் தங்கள் சீடர்களுக்கு கற்பித்தார்கள். அதனால் உலகம் முழுவதும் வேதநெறி தழைத்து ஓங்கிற்று. நித்திய நைமித்திய கருமங்கள் முறையாக நடைபெற்றன. பிரமதேவர் அதனை நோக்கி, விநாயகக்கடவுளைத் தியானித்திருந்தார்.

வைதிக சைவநெறி விளங்கி இருப்பதைச் சங்கராசுரன் அறிந்து, தனது தம்பியாகிய கமலாசுரனை நோக்கி, "நீ சுந்தர ஆச்சிரமத்திற்குப் போய், அங்கே ஆசிரியனாக இருக்கும் வல்லாளனைக் கொன்று, அவன் வைத்திருக்கும் வேதநூலைக் கவர்ந்து வா" என்று அனுப்பினான். கமலாசுரன் போர்க்கோலம் கொண்டு வல்லாளரைத் தேடிச் சென்றான். அவனது வரவைக்கண்ட முனிவர்கள் மனம் நொந்து புலம்பினார்கள். வருந்துகின்ற முனிவர்களை வல்லாளராக வந்திருந்த விநாயகர் அருளோடு நோக்கி "நீங்கள் எனக்குப் பின்னே வந்து இருங்கள்; கமலாசுரனை நாம் அழிப்போம்" என்று கூறி அருளினார். உடனே கடவுளுடைய மாயையினால் அளவற்ற சேனைகள் தோன்றின. வல்லாளர் அந்த ஆசிரிய உருவத்தை மாற்றி, ஒரு யுத்த வீரராகத் தோன்றினர். பெருமான் யாக அக்கினியில் இருந்து உண்டான மயிலை வாகனமாகக் கொண்டார். யுத்தம் ஆரம்பமாகியது. கமலாசுரனுடைய சேனைகளை விநாயகக்கடவுளுடைய சேனைகள் அழித்தன. கமலாசுரன் விநாயகருடன் போரிட்டான். அவர் தமது சூலப்படையால் குற்றி அசுரனைக் கொன்றார். அதனால் தேவர்களும் மற்றையோர்களும் துன்பம் நீங்கி வைதீக சைவ முறைப்படி ஒழுகினார்கள்

மேம்பட்ட கடவுளாய், பஞ்ச மந்திர சரீரியாய் உள்ள சதாசிவ கடவுளாலே பிரதம மகா படைப்பின் ஆரம்பத்திலே அருளிச் செய்யப்பட்ட வேதம், உறுதிப் பிரமாணமாகும். சாமானிய சுருதி வேதமும், விசேட சுருதி ஆகமமும் ஆகும்.

**தொகுத்தவன் அருமறை அங்கம் ஆகமம்**
**வகுத்தவன் வளர்பொழில் கூகம் மேவினான்**
**மிகுத்தவன் மிகுத்தவர் புரங்கள் வெந் (து) அறச்**
**செகுத்தவன் உறைவிடம் திருவிற்கோலமே."**

**-தேவாரம்.**

என்று சம்பந்தர் அருளியுள்ளார்.

---

முப்பொருள்கள் - பதி, பசு, பாசம், **சந்தேகம்**- நிச்சயிக்கப்படாத கருத்து, **விபரீதம்** - தவறான கருத்து, **நித்தியம்** - அன்றாடபூசை, **நைமித்தியம்** - நித்தியத்தில் நிகழும் குற்றங்களை நீங்குவதற்காகச் செய்யப்படுவது, **வைதீக சைவம்** - வேதநெறிப்பட்ட சைவம், **சரீரி** - சரீரமுடையவர்.

சிவபெருமானை வேதத்துக்குக் கர்த்தா எனல் பொருத்தமா? அன்றா? எனச் சிலர் சந்தேகிப்பர். அதற்கான பதிலைக் கூறுவோம்: வேதத்துக்குச் சிவனைக் கருத்தாவாகக் கூறுதல் பொருத்தமே. இருக்குவேதம், யசுர்வேதம், சாமவேதம் என்பன "இந்தப் பரம்பொருளின் சுவாசம்" என்று தொடங்கும் சுருதியினால் (பிருகதாரணியக உபநிடதம் 4-10), சுவாசம்போல பரப்பிரம சிவபெருமானில் இருந்து முயற்சி ஏதும் இன்றி வேதத்தொகுதிகள் உதித்தன என்பது பெறப்படுவதாலும், "பல்வகை மார்க்கம் உடைய இந்தப் பதினெட்டு வித்தைகளுக்கும் காப்பாளராக, முதற்கர்த்தாவாய் உள்ளவர் சூலத்தைக் கையில் ஏந்திய சிவபெருமான் என்று வேதம் கூறுகின்றது" என வாயு சங்கிதையின் முற்பாகம் கூறுவதாலும், வித்தைகள் அனைத்துக்கும் சிவபெருமானே கர்த்தாவாகக் அறியப்படுவதாலும் சிவபெருமானே வேதத்தின் கர்த்தா என்பது பெறப்படுகிறது.

இன்னும் "வித்தைகளுக்கு ஆதாரமானவர் ஈசானர் எனவும், 'இந்தச் சிவபெருமான் நம்மைச் சிவஞானத்திலே சேர்ப்பாராக' எனவும் வரும் சுருதிகளினால் (மகாநாராயணோபநிடதம்) சிவபெருமானே வித்தைகளுக்கு முதல்வர் ஆதலும் அருள் ஞானத்துக்குக் காரணர் ஆதலும் அறியப்படுகின்றது. அங்ஙனமாயின் தைத்திரீயோ உபநிடதத்தில் "பிரமன் அறுவகை ஹோமங்கள் இயற்றி இருக்கு, யசுர், சாமங்களாகிய இவை அனைத்தையும் படைத்தனர்." என்று தொடங்கும் சூத்திரத்தினால் பிரமா முதலாயினோரும் வேதங்களுக்கு முதல்வராகப் பெறப்படுகின்றனரே எனின், சுவேதா சுவதர உபநிடதத்தில் (6-18) "பிரமாவை முதலில் படைத்து, அவருக்கு வேதங்களை அருளினர்" என்று கூறப்படுகின்றமையால் பிரமா முதலியோர் வேதங்களுக்குக் முதல்வராதல் பெறப்படாது.

தேவர் அனைவருக்கும் தலைவராய், பிரமாவுக்கு முதல்வராய் அவருக்குச் சகல வேதங்களையும் உபதேசித்த சிவபெருமானே மேலானவரும், வேத முதல்வரும், பரமகுருவும் ஆவார். இது பற்றியே "தேவர்கள் எல்லாருக்கும் முன் உள்ளவரான பிரமா பிறக்க, உலக முதல்வராகிய எந்த உருத்திர மகாரிஷி முதலில் கண்டாரோ, அவர் நம்மை அருள் ஞானத்தில் சேர்ப்பாராக" எனச் சுவேதா சுவதரசுருதி தெளிவுறக் கூறுகின்றது.

**வேதமே முதலா உள்ள வியன்கலை அனைத்தும் தொன்னாள்**
**ஓதினான் அவனே எங்கட் (கு) உரைத்திட உணர்ந்தாம் அன்றே**
**ஈது நீ அவற்றிற் காண்டி யாரும் ஒன்றாகக் கொண்டாய்.**

**-கந்தபுராணம்.**

❋ ❋ ❋

---

கர்த்தா - முதல்வர். மார்க்கம் - வழி.

# 28. வக்கிரதுண்ட விநாயக மூர்த்தி

முன்னொரு காலத்திலே பிரமா, எடுத்த கருமங்களை இடையூறு இன்றி முற்றுப்பெறச் செய்பவர் விநாயகர் என்பதை மறந்து அவரை வணங்காது படைத்தல் தொழிலைத் தொடங்கினார். விநாயகக் கடவுளின் அருள் கிடைக்காமையினாலே படைப்புத்தொழில் நிறைவேறாமற்போயிற்று. பிரமாவே கண்டு அஞ்சும்படியான பல விகார வடிவங்கள் உண்டாகின. அவைகள் பிரமாவைப் பார்த்து ஆர்ப்பரிப்பதும், சிரிப்பதும், அடிப்பதும், கோபித்துப் பார்ப்பதும், தள்ளுவதும், பிடிப்பதும், நடிப்பதுமாகப் பலதுன்பங்களைச் செய்தன. பிரமா புத்தி கலங்கித் தளர்ச்சி உற்றிருந்தார். பின்பு ஏரம்பமூர்த்தியினது அருள் சிறிதே தோன்றியதும், "எம்மை அடிமையாகக் கொண்ட வக்கிரதுண்ட மூர்த்தியை மறந்து எனது அகங்காரத்தினால் படைக்கத் தொடங்கினேன். ஆகையாலேதான் இவ்விக்கினங்கள் வந்தன. இனி அவ்விக்கின கர்த்தாவைப் பணியாது இவ்விடர் நீங்காது" என்று மனம் தெளிந்தார்.

உடனே நீராடல் முதலிய கருமங்களைச் செய்து தியானத்தில் இருந்தார். அவ்வாறு தியானத்தில் இருக்கும்போது, ஒரு குழந்தை விநாயக வடிவமாகிக் காட்சி கொடுத்ததாகவும், படைப்புச் செய்யத் தொடங்கும்பொழுது இடையூறுகள் உண்டானதாகவும், அந்த இடையூறுகளின்றிப் படைப்புத்தொழில் செய்ய அருள்செய்ய வேண்டும் என்று பிரார்த்தித்ததாகவும், அதற்கு விக்கினேஸ்வரர், "பிரமனே! நீ திருவருளுக்கு ஆட்படாது அகங்காரத்துடன் படைப்புத்தொழில் செய்ய ஆரம்பித்தாய்; ஆதலால் இவ்விடையூறுகள் எல்லாம் உண்டாயின. இடையூறு நீங்கும்படி நமது ஏக அட்ஷர மந்திரத்தைச் செபிப்பாய்" என்று திருவாய் மலர்ந்து அதனை உபதேசித்ததாகவும் கண்டார்.

கண்டு, மனம் உறுதிபெற்று அந்த ஏக அட்ஷர மந்திரத்தைப் பன்னிரண்டு வருசம் செபித்து வந்தார். தமக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாத பரிபூரணராகும் விநாயகர் "ஒரு கரத்தில் மழுவும், ஒரு கரத்தில்

---

**விகாரவடிவம்** - அவலட்சணம், **ஏரம்பமூர்த்தி** - விநாயகர், **வக்கிரம்** - கலக்கம் , **துண்ட** - துண்டித்த, **மழு** - கோடரி,

கமண்டலமும் மற்றை இரு கரங்களும் அபய, வரதமுமாகப் பொருந்த அவர் முன்னிலையில் தோன்றி அருளினார்'' உடனே பிரமதேவர் நமஸ்கரித்து; ''படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழிலையும் செய்யாமல் செய்கின்ற கடவுளே! ஆன்மாக்களது ஆணவ மாயா கன்மங்களை அழித்து அருளும், நின்மலரே! உரையாலும், உணர்வாலும், உடலாலும் உணர்தற்கு அரியவரே! கல் நெஞ்சும் கரைய எமக்கு முன்னிலையில் எழுந்தருளிய கடவுளே! அடியேனைப் பாதுகாத்து அருளுக'' என்று தோத்திரம் செய்தார். விநாயகக்கடவுள், ''பிரமனே! நீ விரும்பிய வரங்களைக் கேட்பாயாக'' என்று திருவாய் மலர்ந்தார். பிரமதேவர் அவரை வணங்கி, ''மகாதேவ! தேவரீருடைய பாத தாமரைகளில் நீங்காத அன்பையும், உலகத்தை விக்கினமின்றிப் படைக்கச் செய்யத் தகுந்த வலிமையையும் தந்தருளுக'' என்று பிரார்த்தித்தார். விநாயகர், ''பிரமனே! எமது கிரியாசத்தி, ஞானசத்திகளைத் தியானித்து உன் படைப்புத் தொழிலைச் செய்யக்கடவாய்'' என்று அருள்செய்து மறைந்தருளினார்.

பிரமதேவர் அவ்விரண்டு சத்திகளையும் வணங்கினார். சத்திகள் இருவரும் சித்தி, புத்தி என்னும் திருநாமங்களோடு அவர் எதிரில் தோன்றினார்கள். பிரமர் அவ்விருவரையும் நோக்கி, ''தாயர்களே! அடியேனுக்கு எக்காலத்திலும் இடையூறு அணுகாதபடி எனது அருமைப் புத்திரிகளாக அமர்ந்து அருள வேண்டும்'' என்று பிரார்த்தித்தார். அவ்வாறே தேவியர் இருவரும் பிரமனின் வேண்டுகோளுக்கு உடன்பட்டு அருள் செய்தார்கள். பிரமா ஆனந்தித்து, விநாயகப்பெருமான் இச் சித்தி, புத்திகளோடும் வீற்றிருப்பதாகப் பாவித்துப் பூசித்து வரத்தொடங்கினார். மலரோனுடைய படைப்புத் தொழில் இனிது நிறைவேறியது.

❋ ❋ ❋

---

**அபயம்** - அடைக்கலம். **வரதம்** - வரந்தருதல். **நின்மலர்** - மலங்கள் அற்றவர். **கிரியை** - செயல். **ஞானம்** - அறிவு. **மலரோன்** - பிரமன்.

# 29. சித்திபுத்தி திருமண மூர்த்தி

பிரமதேவர் ஒருநாள் விநாயகக்கடவுளை வணங்கி, "உலகங்களின் உள்ளும், வெளியுமாக நிறைந்திருக்கும் பரம்பொருளே! படைப்புத் தொழில் கைகூடும்படி முன்னர் எம்மிடம் அனுப்பிய கிரியாசத்தி, ஞானசத்தி எனப்படும் சித்தி, புத்திகளை உலகமுய்யும் பொருட்டுத் திருமணம் செய்து அருள வேண்டும்" என்று பிரார்த்தித்தார். அட்டமூர்த்தியாகிய விநாயகர் அதற்கு இசைந்து, "நீ திருமணத்துக்கு உரிய முயற்சிகளைச் செய்வாயாக; நாம் கணநாதர் முதலியவர்களுடன் அங்கே வருவோம்" என்று ஆணையிட்டார். பிரமா திருக்கைலையை அடைந்து சிவபெருமானையும், உமாதேவியாரையும் நமஸ்காரம் செய்து, விநாயகக்கடவுளுக்கு எனது புத்திரிகள் இருவரையும் திருமணம் செய்ய அநுமதி தரல் வேண்டும்" என்று வேண்டினார். சிவபெருமானும், தேவியாரும் அனுக்கிரகம் புரிந்தனர்.

பிரமா தனது சத்திய உலகத்தை அடைந்து, தேவர் முதலியோருக்கு விநாயகக்கடவுளுடைய விவாக மங்களச் செய்தியைச் சொல்லும்படி தூதுவரை அனுப்பினார். பின்பு பிரமதேவர் விசுவகன்மனை நோக்கி, "திருக்கல்யாண மண்டபத்தையும், பிறவற்றையும் சாத்திர முறைப்படி உண்டாக்குவாயாக' என்று கட்டளை செய்தார். விசுவகன்மா திருமண மண்டபம் முதலியவற்றைச் சிறப்புற அமைத்தான். தூதுவரால் விவாக மங்களச் செய்தியை அறிந்த நவக்கிரகங்கள், தேவர்கள், முனிவர்கள், கந்தருவர் முதலியோர் யாவரும் கணேசருடைய திருக்கல்யாணத்தைத் தரிசித்து ஈடேறும் நோக்கமாக வந்தனர்.

நாரதமுனிவர் திருக்கைலாசபதியை வணங்கி, "தயாநிதியே! விநாயகக்கடவுளுடைய திருமணத்திற்கு உரிய முயற்சிகள் எல்லாம் நிறைவேறிவிட்டன. தேவரீர் அனுக்கிரகம் செய்தருளுக" என்று பிரார்த்தித்தார். சிவபெருமான் கிருபையோடு விநாயகரை நோக்கி அருளினார். அவர் திருமணக் கோலம் கொண்டு, ஈராயிரம் கொம்புகளையுடைய ஐராவணம் என்னும் யானையில் ஏறி அருளினார்.

---

**அனுக்கிரகம்** - அருள், **விசுவகன்மன்** - தேவதச்சன். **ஈடேறுதல்** - உய்வடைதல். **கிருபை** - அருள்.

சிவபெருமானும், உமாதேவியாரும் இடப வாகனத்தில் ஆரோகணித்தனர். சுப்பிரமணியக்கடவுளும், வீரபத்திரர் முதலியோரும் தத்தம் ஊர்திகளில் ஏறினார்கள். பதினொரு உருத்திரர்களும், ஆதித்தியரும், வித்தியேசுரரும், வசுக்களும், திக்குப்பாலகர் முதலியோர்களும் அருகாமையில் வந்து வணங்கிச் சூழ்ந்தார்கள். பூதசேனைகளும், திருநந்திதேவரும், கணநாதர்களும் வந்து வணங்கினார்கள். பிரணவமும், வேதங்களும், கலைகளும், காலங்களும், இராசிகளும், சத்தகோடி மந்திரங்களும், சிவாகமங்களும் தேவவடிவு கொண்டு வந்தன.

விநாயகக்கடவுள் திருமணக் கோலத்துடன் உருத்திரர் முதலியோர் புடைசூழ வருகின்றமையை, பிரம விட்டுணுக்கள் கண்டு நமஸ்கரித்தனர். விநாயகக்கடவுள் ஐராவணத்திலிருந்து இறங்கித் திருமணமண்டபத்துள் அமைத்த மாணிக்க சிங்காசனத்தில் வீற்றிருந்து அருளினர். உமாதேவியாரும், மகேஸ்வரரும் ஓர் அழகிய சிங்காசனத்தில் வீற்றிருந்தார்கள். சுப்பிரமணியர் முதலியோரும் தத்தமக்கு விதித்த ஆசனங்களில் இருந்தார்கள். தேவமகளிர் அட்டமங்கலப் பொருள்களை ஏந்தினர்.

இலக்குமி முதலிய தெய்வப்பெண்கள் சித்தி, புத்திகளை நமஸ்காரம் செய்து புடைசூழ்ந்துவர, அவர்கள் மணச்சாலையுள் வந்து விநாயகக்கடவுளுடைய பக்கத்தில் இருந்தார்கள். பிரமா தமது புத்திரிகளின் கரங்களை, கணேச மூர்த்தியினது திருக்கரத்தில் வைத்து, சரசுவதி நீர் வார்க்கத் தத்தம் செய்து கொடுத்தனர். அப்பொழுது மங்கல வாத்தியங்கள் சத்தித்தன. தேவர் முதலியோர் "அர அர" என்று சொல்லித் துதித்தார்கள் சனகமுனிவர் விவாகக் கிரியையைச் செய்தார்.

திருமணம் நிறைவேறியபின் தேவர், முனிவர், கணநாதர் முதலிய யாவரும் உமாமகேசுவரரை நமஸ்காரம் செய்து, அதன்பின் சித்தி, புத்தி சமேதராகிய கணேசரையும் வணங்கித் திருவருளைப் பெற்றுத் தத்தம் பதவிகளை அடைந்தனர். சிவபெருமான் கந்தவேள் முதலியோர் புடைசூழ்ந்துவர சித்தி, புத்தி சமேதராய் விநாயகரைத் திருக்கைலாச மலைக்கு அழைத்துச் சென்று அருளினார். விநாயகக்கடவுள் கிரியாசத்தி, ஞானசத்தியாகிய சித்தி, புத்திகளோடு உலகம் உய்ய வீற்றிருந்து அருளினார்.

❁ ❁ ❁

---

**ஆரோகணித்தல்** - ஏறுதல். **ஊர்தி** - வாகனம், **பிரணவம்** - ஓங்காரம், **புடை** - அருகில், **சத்தித்தல்** - ஒலித்தல், **பதவி** - இடம்.

# 30. சித்திவிநாயக மூர்த்தி

முன்னொரு காலத்தில் விட்டுணு திருப்பாற்கடலில் நித்திரை செய்தார். அவரது காதுகளில், தேவர்கள் அஞ்சத்தக்க வலிமையுடைய மது, கைடவர் என்னும் இரண்டு அசுரர்கள் தோன்றினார்கள். அவர்கள் முனிவர் முதலிய பெரியோர்களை வருத்தினார்கள். வேத ஆகம ஒழுக்கங்களை அழித்தார்கள். தேவர்கள் தமது உருவங்களை மறைத்துக்கொண்டு, ஐங்கரக் கடவுளுடைய திருவருளையே துணையாகக் கொண்டு திருப்பாற்கடலை அடைந்தார்கள். அங்கு, திருமால் துயில் செய்வதைக் கண்டார்கள். பிறருடைய நித்திரையைக் கலைத்தல் கூடாது என்று வேத ஆகமங்கள் கூறுகின்றன. ஆகையால், இவரை எழுப்புதல் கூடாது என்று எண்ணி, நித்திராதேவியை அழைத்து, "விட்டுணு உன் வசப்பட்டு நெடுநாள் துயில்கின்றார். மது, கைடவர் எம்மை வருத்துகின்றனர். இந்த விட்டுணு அசுரர்களைச் சங்காரம் செய்து, எமது துன்பத்தை நீக்க நீ அருளவேண்டும்" என்றார்கள். நித்திராதேவி விட்டுணுவை விட்டு நீங்கினார். உடனே விட்டுணு எழுந்தார். அப்பொழுது அசுரர்களால் துன்புற்ற தேவர்கள் வணங்கினார்கள். பிரமா, விட்டுணுவை நோக்கி, "மது, கைடவர் எம்மை வருத்துகின்றார்கள். அவர்களைச் சங்காரம் செய்து எம்மை காக்க வேண்டும்" என்றார்கள். திருமால், பிரமா முதலிய தேவர்களை நோக்கி, "மது, கைடவர்க்கு அஞ்சற்க" என்றார். இங்ஙனம் கூறி, உடனே எழுந்து, பலவகை ஆயுதங்களை ஏந்தி, ஊழிக்காலத்தில் எழும் பேரொலி போலச் சங்கை ஊதினார். அச்சத்தத்தை மது, கைடவர் கேட்டு விட்டுணுவின் முன்னிலையில் வந்து நின்று அறை கூவினார்கள். இரு திறத்தாரும் நெருங்கி நின்று பலவகைப்பட்ட யுத்தங்களை நெடுநாள் செய்தார்கள்.

விஷ்ணுமூர்த்தி அவர்களை வெல்வதற்குச் சத்தி அற்றவராய் கந்தருவ வடிவம் கொண்டு மறைந்து திருக்கைலாச மலையை அடைந்து யாழைக் கையில் எடுத்து வாசித்துக் கொண்டிருந்தார். அவ்வோசையானது சாமவேதப் பிரியராகிய சிவபெருமானுடைய திருச்செவியில் ஏறியது.

---

**கந்தருவர்** - இசை பாடும் ஒரு தெய்வச்சாதியினர்

உடனே சங்கரனார் பிருட்டதந்தன், நிகும்பன் என்னும் பூதகணத் தலைவரை நோக்கி "மலைச்சாரலில் யாழ் வாசிப்பவன் திருமால் ஆவான்; நீங்கள் அவனை இங்கே அழைத்து வாருங்கள்" என்று அருளினார். அப்பூதகணத் தலைவர்கள் திருமாலை அழைத்துச்சென்று சதாசிவனாருடைய திருச்சந்நிதியில் விட்டார்கள். விட்டுணு சங்கரரை வணங்கி ஒரு பக்கமாக நின்று யாழை மறுபடியும் கையிலெடுத்து அக்கடவுளது பெருமைகளைப் பாடி வாசித்தார். சிவபெருமான் விட்டுணுவை நோக்கி, "அன்பனே! உனக்கு என்ன வரம் வேண்டும்" என்று கேட்டு அருளினார். திருமால் மனம் மகிழ்ந்து, "சுவாமி! எனது காதுகளில் இரண்டு அசுரர்கள் தோன்றினார்கள். நான் அவர்களுடன் பல நாளாக நின்று யுத்தம் செய்தும் வெற்றி பெற்றிலேன். எனது உருவை அவர்களுக்குத் தெரியாதவண்ணம் மறைத்து வந்து, தேவரீரை அடைக்கலம் புகுந்தேன். அவர்களை வெல்லும் வலிமையைத் தந்து அருளுக" என்று பிரார்த்தித்தார். சிவபெருமான் விட்டுணுவை நோக்கி, "நீ விக்கினேசுவரனைப் பூசை செய்யாது அவர்களுடன் யுத்தம் செய்யத் தொடங்கினாய்; ஆகையால் அவர்களிடம் தோற்றாய்; இனி விநாயகனை வழிபட்டுப் பகைவர்களை வெல்வாயாக" என்று உபதேசித்து அருளினார்.

விட்டுணு அந்த அருளைப் பெற்று நமஸ்கரித்து, அனுமதி பெற்றுக்கொண்டு பூவுலகத்தில் வந்து வேத ஆகம முறைப்படி நூறு வருடம் விநாயகரைப் பூசித்துச் சட் அட்சரத்தைச் செபித்து வந்தார். கணநாயகர் அருள சுரந்து தோன்றி அருளினார். விட்டுணு வணங்கித் தோத்திரம் செய்தார். விநாயகர், "விட்டுணுவே! உனக்கு யாது வரம் வேண்டும்?" என்று வினாவி அருளினார். விட்டுணு, "கிருபா மூர்த்தியே! எனது செவிகளிலிருந்து தோன்றிய அசுரர்கள் உயிர்களை வருத்துகின்றார்கள். அவர்களைக் கொல்வதற்கு வலிமையைத் தரவேண்டும்; அவர்கள் அன்றி மற்றைய துட்டர்களையும் அழிக்கும் வரத்தையும் தரல் வேண்டும். உம்முடைய திருவடிகளில் நீங்காத அன்பையும் தருதல் வேண்டும். அடியேன் தெரியாமல் செய்யும் குற்றங்களையும் குணமாகக்கொண்டு பொறுத்து அருள வேண்டும்" என்று பிரார்த்தித்தார். "விட்டுணுவே, உனக்கு அவைகளைத் தந்தோம்; முன்னர் உன்னுடன் யுத்தம் செய்த அசுரர்கள் ஒரு வஞ்சகத்தை நினைத்து மறைந்திருக்கிறார்கள். நீ நமது சடாட்சரத்தைத் தியானம் செய்துகொண்டு யுத்தத்திற்குச் செல்வாயாக; அவர்கள் வெளிப்படுவார்கள்" என்று கூறி மறைந்தருளினார்.

அதன் பின்னர் விட்டுணு பேரானந்தம் அடைந்து, விநாயகமூர்த்தி தமக்குத் தோன்றி அருளிய இடத்தில் ஓர் ஆலயம் உண்டாக்கி அதில் விநாயகரைப் பிரதிட்டை செய்து, தாம் விரும்பியவைகளைச் சித்தியாக்கியமையால்

---

**சட் அட்சரம்** - ஆறு எழுத்து, **துட்டர்கள்** - தீயவர்கள், **கிருபை** - கருணை, **சித்தி** - வெற்றி.

அவருக்குச் சித்தி விநாயகர் எனத் திருநாமம் இட்டு வழிபாடு செய்து ஆனந்தக் கடலில் மூழ்கினார். விட்டுணு விநாயகரைப் பூசித்த தலம் சித்திகேத்திரம் என்று வழங்கி வருகின்றது.

விட்டுணு சித்திவிநாயகரது அனுக்கிரகத்தால் மது, கைடவரைக் கண்டு கொண்டார். அசுரர்கள் உடனே திருமாலைப் பார்த்து, ''மாயவனே! முன்னர் எங்களிடம் தோற்று ஓடினாய்; இப்போது யுத்தத்திற்கு நாணம் இன்றித் திரும்பி வந்தனை'' என்று கூற, அதைக் கேட்ட திருமால் கோபித்து, ''புலி பதுங்குவது பாய்தலுக்காகும் என்பதை நீவிர் அறியீரோ'' என்றார். அசுரர்கள் கோபம் கொண்டு எதிர்த்தார்கள்; இருபகுதியினருக்கும் இடையே பெரும்போர் நடந்தது. விட்டுணு பாஞ்ச சன்னியம் என்னும் சங்கை ஊதிச் சாரங்கம் என்னும் வில்லை வளைத்துச் சக்கரத்தை எடுத்து, விநாயகமூர்த்தியினுடைய திருவுருவைத் தியானித்துப் பிரயோகித்தார். சக்கரம் பட்டு அசுரர்ப்பதகர் இருவரும் இறந்து போனார்கள். விட்டுணு அசுரர்களது ஆவியை உண்டமையை தேவர்கள் கண்டு ஆடிப்பாடிப் புஷ்பமழை பொழிந்து பேரானந்தம் கொண்டார்கள்.

❋ ❋ ❋

# 31. வல்லபா கணேச மூர்த்தி

**மு**ன்னொரு காலத்திலே பிரமா சத்திய உலகத்தில் மரீசி முதலிய முனிவர்களும், தேவர்களும் சூழ வீற்றிருந்தார். அவர்களுள் மரீசி முனிவர் பிரமாவை வணங்கி, "படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழில்களைச் செய்யும் மும்மூர்த்திகளுக்கும் தலைவரும், உலககாரணரும், சர்வ வியாபியுமாய் உள்ள கடவுள் எவர் என்பதை எமக்குச் சொல்லவேண்டும்" என்றார். பிரமா தமக்கு ஒப்பாரும், மிக்காரும் இன்றி விளங்கும் விநாயகக்கடவுளைத் தியானித்து, ஆனந்தப்பரவசராய் வேதங்களினால் துதித்தார்; பின்பு மரீசி முனிவரை நோக்கி, "மைந்தனே! முன்னொரு காலத்தில் ஆணவமல மறைப்பினால் நானும், விட்டுணுவும் தனித்தனி நாமே பரப்பிரமம் என வாதித்து யுத்தம் செய்தோம். அப்பொழுது எங்கள் நடுவில் ஒரு சோதி தோன்றியது; அச்சோதியாய் நின்றவரே சிதாகாச மத்தியர். அவரே சர்வேசுரர்; அவரே கணேசர்; அவரே மும்மூர்த்திகளுக்கும் தலைவர்" என்று சொன்னார். மரீசி முனிவர் திரும்பவும் நமஸ்கரித்து, "படைத்தல் காத்தல்களைச் செய்கின்ற உம்மோடு ஒருவராய் இருந்து அழித்தல் தொழிலைச் செய்கின்ற உருத்திரர் உங்களுக்குத் தலைவராய் இருப்பதற்குக் காரணம் என்ன?" என்று வினாவினார்.

பிரமா புன்னகை புரிந்து "புதல்வனே! சிவபெருமான் எங்களை முன்னாளில் சிருட்டித்து, படைத்தல், காத்தல் என்னும் தொழில்களைத் தந்து எம் இருதயத்திலிருந்து அவைகளை நடத்துவிக்கின்றார். அவர் பிரளய காலத்தில் எங்களையும் அழிக்கின்றார். மீளவும் சிருட்டித்து எல்லாச் சுகங்களையும் தந்து அருளுகின்றார். வேத ஆகமங்களை உண்டாக்கி, எங்களுக்கு உபதேசித்தவரும் அவரே. "பரமான்ம சிவபெருமான் எள்ளில் எண்ணெய் போன்றும், தயிரில் நெய் போன்றும், நதியில் நீர் போன்றும், அரணியில் (தீக்கோளில்) அக்கினி போன்றும் மறைந்துள்ளார்; இங்ஙனம் ஆன்மாவிலே பரம ஆன்மா அறியப்படுகின்றார் எனச் "சுவேதா சுவதரம்" கூறுமாறு எங்கும் வியாபித்திருக்கின்றார். ஆகையால், சங்கார கர்த்தாவாகிய அச்சிவபெருமானே எங்களுக்கும் முதல்வர். சிவபெருமானே தீயவர்களை அழித்தல் பொருட்டும், நல்லவர்களைக் காத்தல் பொருட்டும் விநாயகராகத் திரு அவதாரம் செய்தார்" என்று உபதேசித்தார்.

மரீசி முனிவர் தமது உள்ளத்தில் கொண்ட சந்தேகத்தை நீக்கி மானத வாவிக்கரையிலிருந்து கணேசமூர்த்தியைத் தியானித்து அருந்தவம் செய்தார். விநாயகர் மூஷிக வாகனத்தின் மீது காட்சி கொடுத்து அருளினார். முனிவர் எழுந்து நமஸ்காரம் செய்து துதித்து நின்றார். விநாயகக்கடவுள் முனிவரை நோக்கி, "உனக்கு யாது வரம்வேண்டும்?" என்றார். "அடியேனுக்கு உலக அரசாட்சியையும், வேதங்களில் வல்லுநராய், மிகுந்த சற்குணமுடையவராய், பேரறிவுடையவராய், பாவங்களைச் சிறிதும் சிந்தியாதவராய் விளங்குகின்ற பல புத்திரர்களையும் தந்து உதவ வேண்டும்; உம்மிடத்தில் நீங்காத அன்பைத் தரல் வேண்டும்; வள்ளலே! உம்முடைய இடப்பாகத்தில் இருக்கின்ற ஈசுவரியே எனக்குப் புத்திரியாக வர வேண்டும்; அவரை நான் தத்தம் செய்துதர நீரே கொள்ளல் வேண்டும்" என்று மரீசி முனிவர் பிரார்த்தித்தார். விநாயகர், 'அவ்வாறே ஆகுக' என்று மறைந்தருளினார். முனிவர் பிரமாவினால் உண்டாக்கிக் கொடுத்த பிரம நகரத்திலிருந்து இந்திரன் முதலியோர் நமஸ்கரிக்க அரசு செய்தார். பின்பு தேவவல்லியை விவாகம் செய்து, பல புத்திரர்களையும் புத்திரிகளையும் பெற்று வாழ்ந்து இருந்தார்.

மரீசி முனிவரது தவத்தை நிறைவேற்றத் திருவுள்ளம் கொண்டு மகேசுவரன் மகேசுவரிக்கு அனுக்கிரகித்தார். உமாதேவியார் மகேசுவரரிடம் அனுக்கிரகம் பெற்றுக்கொண்டு யமுனையை அடைந்து அதில் பூத்திருந்த தாமரை மலர்களுள் ஒரு மலரின்மீது சங்கு வடிவமாய் சிவத் தியானத்துடன் இருந்தார்.

மரீசி முனிவர் ஒருநாள் தமது மனைவியுடன் யமுனையை அடைந்து விதிமுறைப்படி ஸ்நாநம் செய்து நித்திய கருமத்தை முடித்தனர். அப்பொழுது நதியில் உள்ள ஒரு புஸ்பம் சிறப்புற்று விளங்குவதையும், அதில் தெய்வத்தன்மை பொருந்திய ஒரு சங்கு இருப்பதையும் கண்டார். அதைக் கண்ட முனிவர் அதை எடுப்பதற்காக அதனருகில் போனார். அது ஒரு பெண்குழந்தை வடிவமாக மாறியது. முனிவர் அக்குழந்தையைப் பார்த்து சகல தீவினைகளையும் நீக்கி நற்கதி அடைவித்தல் காரணமாக மகேசுவரியே தோன்றினார் என்று நினைந்து ஆவலோடு அவரைக் கையில் தாங்கி கரை ஏறினார். முனிவர் தமது மனைவியான தேவவல்லியை நோக்கி, "ஆணவ இருளினால் கட்டுண்டு இருக்கும் ஆன்மாக்களைப் போல இக்குழந்தையை நினையாதே. இது மேலான பேற்றினைக் கொடுக்கத்தக்க குழந்தை. அன்பாக இக்குழந்தையை வளர்ப்பாயாக." என்று கொடுத்தார். தேவவல்லி அக்குழந்தையைக் கைகளில் ஏற்ற உடனே அவள் தனங்களிலிருந்து பால் சொரிந்தது. அவர் அதை உலக மாதாவுக்கு ஊட்டினாள். பின்பு முனிவர், மனைவியாரும் தாமும் பரிவாரம்


சூழ நகரத்தை அடைந்தார். அடைந்து அப் புதல்விக்கு வல்லபை என்னும் திருநாமத்தைச் சூட்டிப் போற்றி வணங்கினார்.

வல்லபா தேவிக்கு ஐந்து வயதாகியது. அவர் ‘‘சிவபெருமானைக் குறித்து தவம் செய்தற்கு அனுமதி தரல் வேண்டும்’’ என்று தாய், தந்தையரிடம் விண்ணப்பித்தார். மரீசி முனிவர் ஒரு தவச்சாலை அமைத்துக் கொடுத்தார். வல்லபை அத்தவச்சாலையை அடைந்து சிவபெருமானின் திருவடிகளைத் தியானித்து ஏக அட்சர மந்திரத்தை செபித்துக்கொண்டு அரிய தவத்தைச் செய்தார். சிவபெருமான் சிவ சின்னங்களை அணிந்த ஒரு பிராமண வேடம் பூண்டு வந்து தவத்தைச் சோதித்து நல்லருள் செய்து பின் அவ்வுருவத்தை மாற்றிக் கணேசமூர்த்தியாய் காட்சி கொடுத்து அருள் செய்தார்.

அதனை அறிந்த மரீசி முனிவர் விவாகத்திற்கு உரிய கருமங்களை நிறைவேற்றித் தேவர் முதலியோருக்குத் திருமணப் பத்திரங்களை அனுப்பி முனிவர்கள் புடைசூழ தவச்சாலையை அடைந்து வேதங்களாலும் அறிதற்கு அரிய விநாயகக் கடவுளை நமஸ்காரம் செய்தார். விநாயகக் கடவுள் அவருக்கு அருள் செய்தார். சுவாமியை அழைத்துக் கொண்டு சென்று மணமண்டபத்தில் இருத்தினார்கள். தெய்வப் பெண்கள் வல்லபையை அந்தப்புரத்திற்கு அழைத்து வந்து மணக்கோலம் செய்து கணேச மூர்த்தி இருக்கும் மண்டபத்திற்கு அழைத்துச் சென்று அவரின் பக்கத்தில் இருத்தினார்கள். அப்பொழுது விட்டுணு முதலிய தேவர்களும், தெய்வ மகளிர்களும், கணேசரையும், வல்லபையையும் துதித்தார்கள். கின்னரர் யாழ் வாசித்தார்கள். அரம்பையர்கள் நடித்தார்கள். தேவவல்லி நீர் வார்க்க மரீசி முனிவர் வல்லபையினுடைய திருக்கரத்தை விநாயகக் கடவுளுடைய திருக்கரத்தில் வைத்துத் தத்தம் செய்து கொடுத்தார். பிரமா அக்கினியைக் கொணர்ந்து விவாகக் கிரியைகளைச் செய்து முடித்தார்.

விநாயகக் கடவுள் அவரவருக்கு ஏற்றவாறு அருள் செய்து மரீசி முனிவருக்குப் பல வரங்களையும் கொடுத்து அருளினார். பின்பு பல வகைப்பட்ட வாத்தியங்கள் ஒலிக்க, கணேசரும், வல்லபையும் மணித்தீபம் என்னும் ஆலயத்தை அடைந்து ஆன்மாக்கள் உய்ய இனிது வீற்றிருந்து அருளினார்கள். தேவர், முனிவர் முதலியோர் வல்லபா சமேதராகிய விநாயகரை வணங்கி விடை பெற்றுக்கொண்டு தத்தம் நகரங்களை அடைந்து வாழ்ந்திருந்தார்கள்.

**விநாயக பரத்துவம் முற்றிற்று.**



வல்லபை கணபதி

அகரம் என அறிவாகி உலகம் எங்கும்
அமர்ந்(து) தகர உகர மகரங்கள் தம்மால்
பகரும் ஒரு முதலாகி வேறுமாகிப்
பல வேறு திருமேனி தரித்துக் கொண்டு
புகரில் பொருள் நான்கினையும் இடர் தீர்ந்(து) எய்த
போற்றுநருக்(கு) அறக்கருணை புரிந்(து) அல்லார்க்கு
நிகரில் மறக் கருணை புரிந்(து) ஆண்டு கொள்ளும்
நிருமலனைக் கணபதியை நினைந்து வாழ்வாம்.

❀ ❀ ❀

# "மகோற்சவ விளக்கம்"



## "ஐந்தொழிலாடல்"

தோற்றம் துடியதனில் தோயும் திதி அமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் - ஊற்றமா
ஊன்று மலர்ப்பதத்தில் உற்ற திரோதம் முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு

# மகோற்சவ விளக்கம்

# மகோற்சவ விளக்கம்

உள்ளடக்கம் பக்கம்


| | | |
|---|---|---|
| 1. | மானுடப்பிறவி | 83 |
| 2. | சிவ புண்ணியம் | 84 |
| 3. | திருக்கோயில் | 88 |
| 4. | திரைச்சீலை | 93 |
| 5. | ஆலய சேவை | 94 |
| 6. | திரு அலகிடுதல் | 96 |
| 7. | திரு மெழுக்கிடுதல் | 96 |
| 8. | கீதம் பாடல் | 97 |
| 9. | தூபம் இடுதல் | 97 |
| 10. | திரு விளக்கு இடுதல் | 97 |
| 11. | பிற திருத்தொண்டுகள் | 97 |
| 12. | சிவாலயத்தில் செய்யத் தகாத குற்றங்கள் | 98 |
| 13. | கோயில் அதிகாரிகள் (தர்மகர்த்தாக்கள்) | 98 |
| 14. | கோயில் சிவாச்சாரியர்கள் | 99 |
| 15. | நித்தியாதி கருமங்கள் | 101 |
| 16. | உற்சவம் | 102 |
| 17. | உற்சவ ஆரம்பம் மூன்று விதம் | 104 |
| 18. | மூவகை உற்சவம் | 104 |
| 19. | அமாவாசை உற்சவம் | 105 |
| 20. | சங்கிராந்தி உற்சவம் | 106 |
| 21. | மாத பூசை | 106 |
| 22. | தனுர் மாசப் பூசை(மார்கழி மாதப் பூசை) | 107 |
| 23. | மகர மாசப் பூசை (தை மாதப் பூசை) | 107 |
| 24. | கும்ப மாசப் பூசை (மாசி மாதப் பூசை) | 108 |
| 25. | மீன மாசப் பூசை (பங்குனி மாதப் பூசை) | 108 |
| 26. | மேஷ மாசப் பூசை (சித்திரை மாதப் பூசை) | 108 |
| 27. | இடப மாசப் பூசை (வைகாசி மாதப் பூசை) | 109 |
| 28. | மிதுன மாசப் பூசை (ஆனி மாதப் பூசை) | 109 |
| 29. | கர்க்கடக மாசப் பூசை (ஆடி மாதப் பூசை) | 110 |
| 30. | சிம்ம மாசப் பூசை (ஆவணி மாதப் பூசை) | 110 |
| 31. | கன்னி மாசப் பூசை (புரட்டாதி மாதப் பூசை) | 110 |
| 32. | துலா மாசப் பூசை (ஐப்பசி மாதப் பூசை) | 111 |
| 33. | விருச்சிக மாசப் பூசை (கார்த்திகை மாதப் பூசை) | 111 |
| 34. | திரு ஊஞ்சல் (டோள உற்சவம்) | 112 |

| | | |
|---|---|---|
| 35. | பவித்திர உற்சவம் | 113 |
| 36. | உற்சவ மாதம் | 114 |
| 37. | சாவன மாத உற்சவம் | 114 |
| 38. | சௌர மாத உற்சவம் | 115 |
| 39. | சாந்திர மாத உற்சவம் | 115 |
| 40. | நட்ஷத்திர மாத உற்சவம் | 115 |
| 41. | உற்சவ பேதம் | 117 |
| 42. | ஒரு நாள் விழா | 118 |
| 43. | பதினெட்டு நாள் விழா | 119 |
| 44. | இருபத்தேழு நாள் விழா | 120 |
| 45. | பதினொரு நாள் விழா | 121 |
| 46. | பலிக்கிரமம் (பலி ஒழுங்கு) | 122 |
| 47. | ஒரு தினம் | 122 |
| 48. | மூன்று தினம் | 122 |
| 49. | ஐந்து தினம் | 122 |
| 50. | ஒன்பது தினம் | 122 |
| 51. | பதினொரு தினம் | 123 |
| 52. | பதின்மூன்று தினம் | 123 |
| 53. | பதினைந்து தினம் | 123 |
| 54. | பதினேழு தினம் | 123 |
| 55. | உற்சவ தின பலன் | 123 |
| 56. | உற்சவ பஞ்சகிருத்தியம் | 124 |
| 57. | தீட்சை வகைகள் | 127 |
| 58. | உற்சவத்தில் தீட்சை நிகழும் முறைமை | 130 |
| 59. | ஐந்துவித உபசாரங்கள் | 131 |
| 60. | அபிஷேக பலன் | 132 |
| 61. | புஷ்ப விசேடம் | 134 |
| 62. | வாத்திய பேதங்களும் பலன்களும் | 136 |
| 63. | தீப பேதங்களும் பலன்களும் | 137 |
| 64. | தாசி நடனமும் வான வேடிக்கையும் | 137 |
| 65. | மூர்த்திகளை அலங்காரம் பண்ணல் | 138 |
| 66. | வீதி நிர்ணயம் முதலியவைகள் | 139 |
| 67. | பக்த உற்சவம் | 140 |
| 68. | விக்கினேசுவர அனுஜ்ஞை | 140 |
| 69. | கிராம சாந்தி | 142 |
| 70. | வாஸ்து சாந்தி | 142 |
| 71. | மிருத் சங்கிரகணம் | 144 |
| 72. | அங்குரார்ப்பணம் | 145 |

| | | |
|---|---|---|
| 73. | இரட்சா பந்தனம் | 145 |
| 74. | பேரீதாடனம் | 146 |
| 75. | துவஜாரோகணம் | 146 |
| 76. | திரு உலாக்கொண்டு அருளுதல் | 147 |
| 77. | யாகம் | 148 |
| 78. | பத்து நாள் உற்சவப் பலன்கள் | 150 |
| 79. | முதல் நாள் உற்சவம் | 152 |
| 80. | இரண்டாம் நாள் உற்சவம் | 152 |
| 81. | மூன்றாம் நாள் உற்சவம் | 152 |
| 82. | நான்காம் நாள் உற்சவம் | 152 |
| 83. | ஐந்தாம்நாள் உற்சவம் | 152 |
| 84. | ஆறாம்நாள் உற்சவம் | 153 |
| 85. | ஏழாம் நாள் உற்சவம் | 153 |
| 86. | எட்டாம் நாள் உற்சவம் | 153 |
| 87 | ஒன்பதாம் நாள் உற்சவம் | 153 |
| 88. | பத்தாம் நாள் உற்சவம் | 153 |
| 89. | தைல அப்பியங்கம் (எண்ணெய் முழுக்கு) | 154 |
| 90. | வசந்த உற்சவம் | 154 |
| 91. | மிருக யாத்திரை (வேட்டைத் திருவிழா) | 154 |
| 92. | கிருஷ்ணகந்தம் | 155 |
| 93. | இரதோற்சவம் (தேர்த் திருவிழா) | 155 |
| 94. | சூர்ணோற்சவம் (சுண்ணம் இடித்தல்) | 156 |
| 95. | தீர்த்தம் | 156 |
| 96. | யாக கும்ப அபிஷேகம் | 158 |
| 97. | மௌன உற்சவம் | 158 |
| 98. | சண்டேசுவர உற்சவம் | 159 |
| 99. | ஆசாரிய உற்சவம் | 159 |
| 100. | முதலாம் நாள் உற்சவம் – தத்துவ விளக்கம் | 161 |
| 101. | இரண்டாம் நாள் உற்சவம் – தத்துவ விளக்கம் | 167 |
| 102. | மூன்றாம் நாள் உற்சவம் – தத்துவ விளக்கம் | 167 |
| 103. | நான்காம் நாள் உற்சவம் – தத்துவ விளக்கம் | 173 |
| 104. | ஐந்தாம்நாள் உற்சவம் – தத்துவ விளக்கம் | 175 |
| 105. | ஆறாம்நாள் உற்சவம் – தத்துவ விளக்கம் | 180 |
| 106. | ஏழாம்நாள் உற்சவம் – தத்துவ விளக்கம் | 183 |
| 107. | எட்டாம் நாள் உற்சவம் – தத்துவ விளக்கம் | 184 |
| 108. | ஒன்பதாம் நாள் உற்சவம் – தத்துவ விளக்கம் | 185 |
| 109. | பத்தாம் நாள் உற்சவம் – தத்துவ விளக்கம் | 186 |

# 1. மாநுடப்பிறவி

ஆன்மாக்களுக்கு ஆணவமாகிய மூலமல காரணத்தினாலே, கன்மம் காரணமாக உண்டாகும் பிறப்பு: அண்டசம், சுவேதசம், உற்பிச்சம், சராயுசம் என நால்வகைப்படும். அண்டசம் முட்டையில் தோன்றுவன. சுவேதசம் வேர்வையில் தோன்றுவன. உற்பிச்சம் வேர் வித்துக்களை மேற்பிளந்து தோன்றுவன. சராயுசம் கருப்பையில் தோன்றுவன. இவைகளின் விரிவு எண்பத்து நான்கு நூறாயிரம் பிறவிப் பேதமாம். (யோனிப்பேதம்) இவ்வாறு உள்ள பிறவிகளுள் மற்றைய பிறவிகள் எல்லாவற்றையும் போகத்தினாலும், பிராயச்சித்தம் முதலியவைகளினாலும் நீக்கி மானுடப் பிறவி எடுத்தல் மிக அருமையாம். அவ்வருமையானது சமுத்திரத்தைக் கையினாலே நீந்திக் கரையேறுதல் போன்றது. இத்தகைய மானுடப் பிறவியை எடுப்பினும் சாத்திரம் பயிலப்படாத மலைகளிலும், காடுகளிலும் குறவர், மறவர் முதலியோர்களாய்ப் பிறவாது சாத்திரங்கள் வழங்கும் தேசங்களிலே பிறப்பது மிகுந்த புண்ணியம். அதிலும் சிவனால் செய்யப்பட்ட வேத, ஆகமங்கள் வழக்கில் இல்லாத மிலேச்ச தேசத்தைவிட்டு அவை வழக்கில் இருக்கும் உத்தம தேசத்திலே பிறப்பது மிகுந்த புண்ணியம். அந்த உத்தம நாட்டிலே தோன்றிடினும், தவம் செய்தற்குரிய உத்தம சாதியிலே தோன்றுதல் அரிது. அதிலும், வேற்றுச் சமயங்களில் செல்லாமல் சிவனே உயர்ந்த தலைவன் என்று தெளிந்து வழிபடும் சைவசமயத்தைச் சார்தல் இத்தகையது என்று சொல்வதற்கு அரிய பெரும் புண்ணியமாம்.

**அண்டசம் சுவேதசங்கள் உற்பிச்சம் சராயுசத்தோடு**
**எண்தரு நால் எண்பத்து நான்கு நூறாயிரத்தால்**
**உண்டு பல் யோனி எல்லாம் ஒழித்து மானுடத்(து) உதித்தல்**
**கண்டிடில் கடலைக் கையால் நீந்தினன் காரியம் காண்.**

**நரர் பயில் தேயம் தன்னில் நான்மறை பயிலா நாட்டில்**
**விரவுதல் ஒழிந்து தோன்றல் மிக்கபுண்ணியம் தானாகும்**
**தரையினில் கீழை விட்டுத் தவம் செய் சாதியினில் வந்து**
**பர சமயங்கள் செல்லாப் பாக்கியம் பண்ணொணாதே.**

**வாழ்வெனும் மையல் விட்டு வறுமையாம் சிறுமை தப்பித்**
**தாழ்வெனும் தன்மையோடும் சைவமாம் சமயம் சாரும்**
**ஊழ்பெறல் அரிது சால உயர் சிவஞானத்தாலே**
**போழ் இளமதியினானைப் போற்றுவார் அருள் பெற்றாரே.**

— சிவஞானசித்தியார்.

இப்படி மிக அருமையாகப் பெற்ற மனிதப்பிறவியினால் வரும் பயன் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு பாதங்களிலும் நின்று சிவபெருமானை வழிபட்டுப் மேலான வீடாகிய நித்திய ஆனந்த முத்தியை அடைதலேயாம்.

❁ ❁ ❁

# 2. சிவபுண்ணியம்

**சரியை, கிரியை, யோகம், ஞானம்** என்னும் நான்கு பாதங்களும் தனித்தனியே உபாயம், உண்மை என வேறுபாடு காரணமாக இரு வகைப்படும். புகழ் முதலியவற்றை விரும்பி, உலகப் பயனை நோக்கிச் செய்யும் **உபாயச் சரியை** முதலான நான்கும், மெய்யன்போடு முத்தி நோக்கமாகச் செய்யும் **உண்மைச் சரியை** முதலான நான்குமாக சிவபுண்ணியம் எட்டாம். மேலும் இவை ஒவ்வொன்றும் நந்நான்காகி முப்பத்திரண்டாக விரிந்து பல வகைப்படும். உபாயச்சரியை முதலியவற்றைச் செய்பவர்கள் ஸ்ரீ கண்டபுவனம் வரையும் உள்ள புவனங்களை அடைந்து, அங்குள்ள போகங்களை அனுபவித்து, மீண்டும் பூமியில் வந்து, உயர்குடியில் பிறந்து, சைவசித்தாந்த உணர்ச்சியுடையவர்களாய் உண்மைச் சரியை முதலியவற்றை அநுட்டிப்பார்கள். உண்மைச் சிவபுண்ணியத்தின் பயனாகிய முத்தி **பதமுத்தி**, **பரமுத்தி** என இருவகைப்படும். பதமுத்தி - சாலோகம், சாமீபம், சாரூபம் என்பன. பரமுத்தி - சாயுச்சியமாம்.

**சரியையை** அனுட்டித்தோர் அகத்தொண்டர்க்குரிய உரிமைபோல, சிவபெருமான் திருமேனி கொண்டிருக்கும் உலகத்துள் எவ்விடத்தும் தடையின்றிச் சஞ்சரித்து, அவ்வுலக போகங்களை அனுபவித்து வாழ்வர் (சாலோகமுத்தி).

**கிரியையை** அனுட்டித்தோர் புத்திரர்க்கு உரித்தாகிய உரிமைபோல, சிவபெருமானுக்குச் சமீபமாக இருந்து அப்போகங்களை அனுபவித்து வாழ்வர் (சாமீபமுத்தி).

**யோகத்தை** அனுட்டித்தோர் தோழர்க்கு உரித்தாகிய உரிமை போலச் சிவபெருமான் கொண்டருளும் திருமேனியைப் பெற்று வாழ்வர் (சாரூபமுத்தி).

**ஞானத்தை** அனுட்டித்தோர் சிவபெருமானுடைய திருவடியில் இரண்டறக் கலந்து நித்திய ஆனந்தத்தை அனுபவித்து வாழ்தலாகிய பரமுத்தியை அடைவர் (சாயுச்சியமுத்தி).

முத்தியாகிய பேரின்பச் சுவையை அனுபவிப்பதற்கு அரும்புபோல் விளங்கும் தாத மார்க்கமாகிய சரியையும் (தாதர் - அடிமை), மலர்போல்

விளங்கும் புத்திர மார்க்கமாகிய கிரியையும், காய்போல் விளங்கும் சக மார்க்கமாகிய யோகமும், கனிபோல் விளங்கும் சன் மார்க்கமாகிய ஞானமும் படிகளாக இருக்கின்றன. அரும்பில்லாமல் மலர் உண்டாகாதது போலச் சரியை இல்லார்க்குக் கிரியை பயன் தராது; மலர் இல்லாமல் காய் உண்டாகாதது போலக் கிரியை செய்து அதனால் சித்தியடையாதவருக்கு யோகம் பயன் தராது. காயில்லாமல் கனி உண்டாகாததுபோல யோகமில்லாதவருக்கு ஞானம் பயன்தராது. கனி உண்ணாதவர் அதன் சுவையை அறியாதது போல ஞானம் இல்லாதவருக்கு முத்தியின்பம் கைகூடாது.

**விரும்பும் சரியை முதல் மெய்ஞ்ஞானம் நான்கும்**
**அரும்பு மலர் காய் கனி போல் அன்றோ பராபரமே.**

— தாயுமான சுவாமிகள்.

**மனிதர்காள் இங்கே வம் ஒன்று சொல்லுகேன்**
**கனி தந்தால் கனி உண்ணவும் வல்லீரே**
**புனிதன் பொற்கழல் ஈசன் என்னும் கனி**
**இனிது சாலவும் ஏசற்றவர்கட்கே.**

— திருநாவுக்கரசு நாயனார்.

**சரியையில் சரியை** : சிவபெருமான் வீற்றிருக்கும் திருக்கோயிலுக்கு ஆசாரம் உடையவர்களாய்ச் சென்று, மெல்லிய துடைப்பத்தினால் திருவலகிடல், நீரை வடித்தெடுத்துச் சுத்தமாகிய சாணத்தினால் திருமெழுக்கிடுதல், தூபமிடுதல், தீபம் ஏற்றுதல், நந்தனவனங்கள் அமைத்தல், மலர் எடுத்தல், அம்மலர்களினால் மாலைகளைத் தொடுத்துச் சாத்துதுதல். சிவனடியார்களையும், குருவையும் காணும்பொழுது சிவனாகவே பாவித்து, அவர்களை வணங்கல் முதலான புறத்தொண்டுகளைச் செய்தலாகும்.

**நிலைபெறுமா(று) எண்ணுதியே நெஞ்சே நீ வா**
**நித்தலும் எம் பிரானுடைய கோயில் புக்குப்**
**புலர்வதன் முன் அலகிட்டு மெழுக்கும் இட்டுப்**
**பூமாலை புனைந்(து) ஏத்திப் புகழ்ந்து பாடித்**
**தலையாரக் கும்பிட்டுக் கூத்தும் ஆடிச்**
**சங்கரா சய போற்றி போற்றி என்றும்**
**அலைபுனல்சேர் செஞ்சடை எம் ஆதீ என்றும்**
**ஆரூரா என்றென்றே அலறா நில்லே.**

— திருநாவுக்கரசு நாயனார்.

**சரியையில் கிரியை :** சந்திரசேகரர், உமாமகேசுரர், இடபாரூடர், சபாபதி, கல்யாணசுந்தரர், பிச்சாடனர், காமாரி, காலாரி, திரிபுராரி, சலந்தராரி, மாதங்காரி, அரியர்த்தர், அர்த்தநாரீசுரர், கிராதர், கங்காளர், சண்டேச அனுக்கிரகர், நீலகண்டர், சக்கரப்பிரதர், விக்கினேச அனுக்கிரகர், சோமாஸ்கந்தர், ஏகபாதர், சுகாசனர், தட்சணாமூர்த்தி, இலிங்கோற்பவர், விநாயகர், சுப்பிரமணியர் முதலிய மூர்த்திகளுள் ஒன்றை வழிபடுதலாம்.

**சரியையில் யோகம்:** மனதில் சிவபெருமானுடைய உருவத் திருமேனியைத் தியானித்தலாம்.

**சரியையில் ஞானம்:** அத் தியான பாவனையின் வலிமையினால் ஓர் அனுபவ உணர்வு நிகழ்தலாம்.

சரியையை அனுட்டித்து வரவர உண்டாகும் பக்குவ முதிர்ச்சியினால் நுண்ணுணர்வு உடையவர்களாய், அருவுருவத்திருமேனியே பொருள், உருவத்திருமேனி அதனை உணர்தற்கு இடமாகிய திருமேனி என்று அறிந்து கிரியையில் விருப்புடையவர்களாய், அகத்தொழிலாலும் புறத்தொழிலாலும் வழிபடுவர்.

**கிரியையில் சரியை :** புஷ்பம், தூபம், அபிசேகம், திருவமுது முதலிய யாவற்றையும் சேகரித்தலாம்.

**கிரியையில் கிரியை :** பூதசுத்தி, தானசுத்தி, திரவியசுத்தி, மந்திரசுத்தி, இலிங்கசுத்தியாகிய பஞ்சசுத்தியும் செய்து, சிவலிங்கத்தின் பீடத்திலே சத்தியை முதலும், முடிவுமாகக் கொண்ட தாமரையாகிய சிவ ஆசனத்தில் பூசித்து, அதன்மேல் இலிங்கத்திலே அறிவு வடிவாகிய மூர்த்தியை யோகம் செய்து, அவ்வறிவு வடிவுக்கு சீவனாயுள்ள நிஷ்கள ரூபரும், ஞான ஆனந்த மயமானவரும், சர்வ கர்த்தாவும், சர்வ வியாபகருமாகும் பரமசிவனாகிய மூர்த்திமானைத் துவாத சாந்தத்திலே தியானித்து, "சுவாமீ, உலகம் முழுவதற்கும் நாதரே! பூசையின் முடிவு எதுவரையுமோ அதுவரையும் நீர் விருப்புடன் இந்த இலிங்கத்திலே சமுகம் தந்து (சாந்நித்தியமாய்) இரும்" என்று விண்ணப்பம் செய்து பூசித்துத் தோத்திரம் செய்து, வலம் வந்து, நமஸ்காரம் பண்ணி முடித்தலாம்.

**பஞ்சசுத்தி செய்து நின்னைப் பாவித்துப் பூசை செய்தால்**
**விஞ்சிய ஞானம் விளங்கும் பராபரமே.**

— தாயுமான சுவாமிகள்.

| | | |
|---|---|---|
| **கிரியையில் யோகம்** | : | இருதயத்திலும், தொப்புள்க்குண்டத்திலும். புருவமத்தியிலும் செய்யும் பூசை, ஓமம், சமாதி என்னும் அகவேள்விப் (அந்தர்யாகப்) பூசையாம். |
| **கிரியையில் ஞானம்** | : | அகவேள்விப் பூசையின் வலிமையினால் ஓர் அனுபவ உணர்வு நிகழ்தலாம். |
| | | கிரியையை அனுட்டித்து வரவர உண்டாகும் பக்குவ முதிர்ச்சியினால், அதிநுட்ப அறிவு உடையவர்களாய் அருவத்திருமேனியே (வடிவற்ற மேனி) பொருள், உருவத்திருமேனியும், அருவுருவத்திருமேனியும் அதனை அறிவதற்குக் காரணமான திருமேனிகளே என்றறிந்து யோகத்தில் விருப்பம் உடையவர்களாய் அகத்தொழில் அளவிலேயே வழிபடுவர். |
| **யோகத்தில் சரியை** | : | இயமம், நியமம், ஆசனம், பிரணாயாமம் என்பன. அவற்றுள் இயமமாவது:- கொல்லாமை, உண்மை கூறல், கள்ளாமை, பிரமசரியம், தயை, வஞ்சனை இல்லாமை, பொறுமை, மனம் கலங்காமை, அற்ப ஆகாரம், சுத்தி உடைமை என்னும் பத்துமாம். நியமமாவது:- தவம், சந்தோஷம், தெய்வம் உண்டென்னும் நம்பிக்கை, தானம், ஈசுவரபூசை, சித்தாந்த சாத்திரக் கேள்வி, வெட்கம், புத்தி, செபம், விரதம் என்னும் பத்துமாம். ஆசனமாவது:- அமரும் முறை; அது சுகாசனம் முதலாகப் பலவகைப்படும். பிராணாயாமமாவது:- பிராணவாயுவை அடக்குதல். அது மந்திர செபத்துடன் அடக்குவதும், மந்திர செபமின்றி அடக்குவதுமென இரு வகைப்படும். |
| **யோகத்தில் கிரியை** | : | பிரத்தியாகாரம், தாரணை என்பன. பிரத்தியாகாரமாவது: மனதைப் புறத்தில் செல்லவிடாது அடக்குதல். தாரணையாவது: மனதை பத்துநாடிகளுள் ஒன்றான சுழுமுனா நாடியின் வழியில் செலுத்துதல். |
| **யோகத்தில் யோகம்** | : | தியானமாகும். அது மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆஞ்ஞை என்னும் ஆறு ஆதாரங்களையும், அதிதேவதை களையும் அறிந்து மூர்த்தியின் சொரூபத்தை மனதால் பிரம தந்திரத்தில் தியானித்தலாம். |

| | | |
|---|---|---|
| **யோகத்தில் ஞானம்** | : | சமாதியாம். அது மூர்த்தியாகிய தோற்றமும், சிந்தித்தலாகிய தொழிலும், சிந்திக்கின்ற தானுமாகிய வேறுபாடுகள் இன்றி மூர்த்தியும், தானும் இரண்டறக் கலந்து நிற்றலாகும். இயமம் முதலிய எட்டும் வினைகள் கெடுதற்கு வழியாகிய அட்டாங்க யோகம் எனப்படும். |

சரியை, கிரியை, யோகம் என்னும் மூன்றையும் அநுட்டித்து வரவர உண்டாகும் பக்குவ முதிர்ச்சியினால் மெய்யறிவு விளங்கிச் சச்சிதானந்த வடிவாகிய ஒளிப்பிளம்பே இறையின் சொரூபவடிவம் எனவும், உருவத்திருமேனி முதலிய மூன்றும் அதனை உணர்தற்பொருட்டும், வழிபடுதற்பொருட்டும் கொண்ட திருமேனிகள் என்றும் அறிந்து, உடல், மனத் தொழில்கள் இரண்டையும் விட்டு அறிவில் (ஞானத்தில்) விருப்புடையவர்களாய் அவ் அறிவுத்தொழில் அளவிலேயே வழிபாடு இயற்றுவர்.

| | | |
|---|---|---|
| **ஞானத்தில் சரியை** | : | குருவினிடத்து ஞானசாத்திரங்களைக் கேட்டல். |
| **ஞானத்தில் கிரியை** | : | கேட்டவைகளைச் சிந்தித்தல். |
| **ஞானத்தில் யோகம்** | : | சிந்தித்தது கொண்டு தெளிதல். |
| **ஞானத்தில் ஞானம்** | : | தெளிந்த விடயத்தில் நிட்டை கூடல். |

❁ ❁ ❁

# 3. திருக்கோயில்

**சி**வபெருமான் எங்கும் நிறைந்து (வியாபகமாய்) இருப்பினும் சிவலிங்கம் முதலிய திருமேனியும், குருவும், சங்கமமும் (அடியார் கூட்டம்) இடமாகக் கொண்டிருந்தும், அகத்தே உயிரை இடமாகக் கொண்டு இருந்தும் ஆன்மாக்கள் செய்யும் வழிபாட்டை ஏற்று அருளுவார். சிவபெருமான் இந்த [illegible]களில் தயிரில் நெய்போல விளங்கி நிற்பார். மற்றைய இடங்களில் எல்லாம் பாலில் நெய்போல வெளிப்படாது நிற்பார். ஆதலினாலே நாமெல்லாம் நமது மேலான தலைவராகிய சிவபெருமானை குரு, இலிங்க, சங்கமம் ஆகிய இடங்களிலே விதிப்படி அன்போடு வழிபடல் வேண்டும்.

**தாபர சங்கமங்கள் என்(று) இரண்டு உருவில் நின்று**
**மாபரன் பூசை கொண்டு மன்னுயிர்க்(கு)கருளை வைப்பன்**
**நீபரன் தன்னை நெஞ்சில் நினைவையேல் நிறைந்த பூசை**
**யாய் பரம்பொருளை நாளும் அர்ச்சி நீ அன்பு செய்தே.**

**– சிவஞானசித்தியார்.**

இவ்வழிபாடு மேற்கூறிய சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு மார்க்கத்தவராலும் செய்தற்கு உரியதேயாம். மலம் நீங்கிய சிவஞானிகளும், முன்னைய மலவாசனை தம்மைத் தாக்காமைப் பொருட்டும்,

சிவானந்தம் மேன்மேலும் வளர்தற்பொருட்டும் சிவலிங்கம் முதலிய திருமேனிகளை வழிபடுவர். ஆன்மாக்களை முத்தியாகிய கரையில் ஏற்றுவதற்காகவே மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் மூன்று வடிவாய்ச் சிவபெருமான் விளங்குகின்றார். இவற்றை முறையாக வழிபடுவோர் மேலான குருவிடம் உண்மை ஞானம் பெற்று முத்தியடைவர். அது,

**"ஈண்டு நாற் பிறப்பில் எழுவகைத் தோற்றத் (து)**
**எண்பத்து நான்கெனும் இலக்கம்**
**மாண்ட பல் பவத்தில் பன்முறை வினையான்**
**மறிதரும் உயிர்களை எடுப்ப**
**ஆண் (டு) அருள் அமலன் ஆதியில் உலகம்**
**ஆக்குழி அருந்தலம் தீர்த்தம்**
**காண்டகு மூர்த்தி என்ன மூன் (று) உருவாய்க்**
**கண்ணகன் உலகெலாம் கதித்து."**

– தணிகைப்புராணம்.

எனவும்,

**"மூர்த்தி தலம் தீர்த்தம் முறையால் தொடங்கினர்க் (கு) ஓர்**
**வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே"**

– தாயுமான சுவாமிகள்.

எனவும்,

**"பேயடையா பிரி (வு) எய்தும் பிள்ளையினோ (டு) உள்ளநினை**
**வாயினவே வரம் பெறுவர் ஐயுற வேண்டா ஒன்றும்**
**வேயன தோள் உமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்**
**தோய் வினையார் அவர் தம்மைத் தோயாவாம் தீவினையே."**

– திருஞான சம்பந்த சுவாமிகள்.

எனவும் வரும் அருள் வாக்குக்களால் உணரப்படும்.

சிவபெருமானுடைய திருவடிகளை நினையவிடாமல் தடுக்கும் மும்மல அழுக்கை ஞான நீரால் கழுவி அயராத அன்பைச் செய்யும் மெய் அடியார்களோடு கலந்து கூடி மலமயக்கம் நீக்கும்படி மிகுந்த அன்புடைய அவரது திருவேடத்தையும், சிவாலயத்தையும் சிவன் எனவே கண்டு வழிபட்டு வாழும் இயல்புடையவர்களே சீவன் முத்தராவார் எனச் சிவஞானபோதம் கூறுகின்றது. ஆலய வழிபாடு செய்து பெரும்பேறு எய்திய மார்க்கண்டேய முனிவர் இதற்குச் சான்றாவார்.

**"அத்தன் ஆலயம் அனைத்தும் வைகலும்**
**பத்தியோடு முன் பரவியே மிகும்**
**சுத்தன் ஆகியே தொலை (வு) இல் ஆருயிர்**
**முத்தி எய்தினான் முழு (து) உணர்ந்துளான்.**

– கந்தபுராணம்.

ஆலய வழிபாட்டின் பெருமையை ஆன்மக்களுக்கு உணர்த்தி அவர்களை நல்வழிப்படுத்த திருவுள்ளம் கொண்ட உமாதேவியார் காஞ்சீபுரம், திருவானைக்கா, மாயூரம், திருமயிலாப்பூர் முதலிய தலங்களிலும்; விநாயகர், திருச்செங்காட்டங்குடி, திருநாரையூர், திருவெண்ணெய் நல்லூர் முதலிய தலங்களிலும்; சுப்பிரமணியக் கடவுள் திருச்செய்ஞலூர், திருப்பரங்குன்று, திருத்தணிகை, பழநி முதலிய தலங்களிலும் ஆலயம் அமைத்துப் பூசித்தார்கள். திருநந்திதேவர், அகத்திய முனிவர், வசிட்ட முனிவர், பிரமா, விட்டுணு, சரஸ்வதி, இலக்குமி, நவக்கிரகங்கள், ஏனைய முனிவர், தேவர்கள், சமயக் குருமார்கள், பட்டினத்தடிகள், அரசர்கள் முதலிய பற்பலரும் ஆலய வழிபாடு செய்தன்றோ போக, மோட்சங்களைப் பெற்றார்கள். அஃறிணைகளாகிய சிலந்தி, நாரை, கரிக்குருவி, சர்ப்பம், யானை முதலியனவும் ஆலய வழிபாட்டாலேயே முத்தியடைந்தன.

சிவாலயங்கள் இல்லாத ஊர் எந்தச் செல்வங்களால் நிறைந்திருப்பினும் திரு அமைந்த ஊர் அன்று; காடேயாம். இவ்வுண்மை "**திருக்கோயில் இல்லாத திருவில் ஊரும்..... அவை எல்லாம் ஊர் அல்ல அடவி காடே**" என வரும் தேவாரத்தாலும், "விபூதி இல்லாத நெற்றி பாழ்" சிவாலயம் இல்லாத கிராமம் பாழ்; சிவபெருமானைப் பூசியாக சென்மம் பாழ்; சிவபெருமானைப் பற்றிக் கூறாத சாஸ்திரம் பாழ்; எனவரும் பிருகஜ்ஜாபாலோ உபநிடத வாக்கியத்தாலும் உணரப்படும்.

சைவ ஆலயங்களிலே நித்தியபூசை, உற்சவம், பிரதிஷ்டை, பிராயச்சித்தங்கள் எல்லாம் சிவபெருமான் ஆன்மாக்களின் பொருட்டு அருளிச்செய்த சிவாகம விதிப்படியேதான் நடைபெறவேண்டும், இவை எல்லாம் வேறு எந்த நூலிலும் விதிக்கப்படவில்லை. அது,

**பொங்கு மாமறைப் புற்றிடம் கொண்டவர்**
**எங்கும் ஆகி இருந்தவர் பூசனைக்(கு)**
**அங்கண் வேண்டும் நிபந்தம் ஆராய்ந்(து) உளான்**
**தூங்க ஆகமம் சொன்ன முறைமையால்.**

எனவும்,

**எய்திய சீர் ஆகமத்தில் இயம்பிய பூசனைக்(கு) ஏற்பக்**
**கொய்த மலரும் புனலும் முதலான கொண்(டு) அணைந்தார்**
**மை தழையும் கண்டத்து மலை மருந்தை வழிபாடு**
**செய்து வரும் தவமுடைய முனிவர் சிவ கோசரியார்.**

எனவும், வரும் சேக்கிழார் திருவாக்காலும்,

**இவ்வரை ஒருசார் தன்னில் ஆறு தோள் உடைய எந்தை**
**மைவிழி அணங்கும் தானும் மால் அயன் உணரா அன்ன**
**ஐவகை உருவில் ஒன்றை ஆகமவிதியால் உய்த்து**
**மெய்வழிபாடு செய்து வேண்டி ஆங்(கு)அருளும் பெற்றான்.**

எனவரும் கச்சியப்பசிவாசாரியர் திருவாக்காலும் அறியப்படும்.

வழிபாடானது அகவழிபாடு, புறவழிபாடு என இருவகைப்படும். அகவழிபாடு அந்தர்யாகம் என்றும், உட்பூசை என்றும், மானசபூசை என்றும் சொல்லப்படும். புறவழிபாடு புறப்பூசை என்றும், பெகிர்யாகம் என்றும் சொல்லப்படும். புறவழிபாட்டிற்கு உள்ள ஆலயம், தூபம், தீபம், திருமஞ்சனம், நைவேத்தியம் முதலான உபகரணங்களை எல்லாம் அகத்தே மனத்தினால் பொருத்திச் செய்வதே அந்தரியாக பூசையாம். அந்தரியாக பூசை செய்தே புறப்பூசை செய்யவேண்டும் என்பது ஆகம விதி. "அகத்தில் ஆன்மாவில் உறையும் சிவனைப் பூசை செய்யாது மறந்து புறத்தில் பூசிப்பவன் பசுவின் பால் தன் உள்ளங்கையில் இருப்பதைக் கண்டும் புறங்கையை நக்குவோனை ஒப்பாவன்" என்று **சிவதருமோத்தர ஆகமம்** கூறுகின்றது.

**உள் ஏவல் செய்வாளைக் காந்தன் மிக உகப்பன்**
**உள்ளே செய் பூசை உகந்து.**

எனச் **சைவசமயநெறி**யும் செப்பும்.

இங்ஙனம் சிவலிங்கப் பெருமானை அகத்தும், புறத்தும் வழிபடாதவர்கள் பிறப்பு, இறப்புக்கு ஆளாகின்றார்கள்.

**திருநாமம் அஞ்செழுத்தும் செப்பார் ஆகில்**
**தீவண்ணர் திறம் ஒருகால் பேசார் ஆகில்**
**ஒருகாலும் திருக்கோயில் சூழார் ஆகில்**
**உண்பதன் முன் மலர் பறித்திட் (டு) உண்ணார் ஆகில்**
**அருநோய்கள் கெட வெண்ணீ (று) அணியார் ஆகில்**
**அளியற்றார் பிறந்தவா (று) ஏதோ என்னில்**
**பெருநோய்கள் மிக நலியப் பெயர்த்தும் செத்துப்**
**பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்றாரே.**

– அப்பர்.

திருக்கோயிலும், அங்கே நடைபெறும் பூசை, உற்சவம் ஆகியனவும் அகவழிபாட்டின் உண்மையை விளக்கி ஞானத்தை உண்டாக்குவதற்கு இன்றியமையாத கருவியாய் உள்ளன. மலநோயை நீக்கும் வைத்தியநாதராகிய பரமசிவனார் ஆலயங்களையும், பூசை, உற்சவம் முதலியவைகளையும் செய்யும்படி விதித்திருத்தல், அப்புற வழிபாடு காரணமாக ஆன்மாக்கள் அந்தர்யாக பூசையின் உண்மையை உணர்ந்து செய்து, சிவஞானம் அதிகரித்த இடத்து அத்துவித முத்தியில் சேர்த்தல் பொருட்டாம். அவ்வுண்மை தேவாலயங்களிலே அமைக்கப்பட்டுள்ள மண்டபங்களாலும், தூபி, பிராகாரம், கோபுரம் முதலியவற்றாலும் உணரப்படும்.

சரீரத்தில் ஆறு ஆதாரங்கள் அமைந்திருத்தல் போல, புறத்தே காணப்படும் ஆலயத்திலும் கருப்பக்கிருகம் முதலிய மண்டபங்கள் ஆறு ஆதார வடிமாய் விளங்குகின்றன.

திருக்கோயிலுள்ள ஐந்தாம் சுற்றால் அன்னமயகோசம் அறியப்படும். நான்காம் சுற்றால் பிராணமயகோசம் அறியப்படும். மூன்றாம் சுற்றால் மனோமயகோசம் அறியப்படும். இரண்டாம் சுற்றால் விஞ்ஞானமயகோசம் அறியப்படும். முதலாம் சுற்றால் ஆனந்தமயகோசம் அறியப்படும். ஆதலினால், ஐந்து சுற்றுக்களும் (பஞ்சாவரணங்களும்) பஞ்ச கோசங்களைக் குறிப்பனவாகும். மூன்று பிராகாரம் மாத்திரம் உள்ள ஆலயங்களில் அவை தூலம், சூக்குமம், காரணம் என்னும் மூன்று சரீரங்களையும் குறிக்கும். இரண்டு பிராகாரம் உளவாயின், அவை தூலம், சூக்குமம் என்னும் இரண்டு சரீரங்களையும் குறிக்கும். பிராகாரம் ஒன்றேயாய் இருப்பின் இவைகளெல்லாம் அவ்வொன்றிலே அடங்கும். கோபுரத்திலுள்ள ஒவ்வொரு பகுதிகளும் இறைவனது தூலத் திருமேனியின் ஒவ்வோர் உறுப்பைக் குறிப்பன. கோபுரத்தில் ஈசுவரனது வீரத் திருவிளையாடல்களும், அவரது அதிகாரம் பெற்ற பிரமா, விஷ்ணு முதலிய தேவர்கள், அட்டதிக்குப் பாலகர், சூரியர், சந்திரர் முதலியோரது உருவங்களும் அமைக்கப்பட்டுள்ளன. அதனால், பரமேசுரனது கடவுள் தன்மையின் சிறப்பை அறிந்து அவரிடம் அன்பு செய்ய அது காரணமாகும்.

சிவமுர்த்தத்தைச் சூழ்ந்திருக்கும் திருவாசி பிரணவ வடிவமாகும். அது "ஓங்காரமே நற் திருவாசி உற்றதனி நீங்கா எழுத்தே நிறை சுடராம்" என்னும் உண்மை விளக்கத்தால் அறியப்படும்.

தூபியானது பிருதுவி (மண்) தத்துவம் முதல் முப்பத்தாறு தத்துவங்களாலும் கற்பிக்கப்பட்ட இருதயக் கமலத்தில் சிவபெருமான் எழுந்தருளி இருக்கும் உண்மையைக் குறிக்கின்றது. தூபி கோபுரம் தூலலிங்கம் எனவும், விமானத்துள் எழுந்தருளி இருக்கும் சிவலிங்கம் சூக்குமலிங்கம் எனவும், அதற்கு முன்னுள்ள பலிபீடம் பத்திரலிங்கம் எனவும் கூறப்படும். இவ்வுண்மை நோக்கி,

**தூய விமானமும் தூலம் அதாகும் மால்**
**ஆய சதாசிவம் ஆகும் நற் சூக்குமம்**
**பாய பலிபீடம் பத்திர லிங்கமாம்**
**ஆய அரன் நிலை ஆய்ந்து கொள்வார்கட்கே.**

என்று திருமூலநாயனார் அருளிச் செய்தார்.

சைவசமய நெறியிலும்,

**தூலலிங்கமாம் தூபி சூக்குமமாம் உள் இலிங்கம்**
**மேலும் பலி பத்திரம்.**

என்று சொல்லப்பட்டிருக்கின்றது.

சிவலிங்கம், நந்தி, பலிபீடம் என்னும் மூன்றினுள் சிவலிங்கம் பதியும், நந்தி பசுவும், பலிபீடம் பாசமுகமாகக் கொள்ளப்படும். ஆலயங்களிலே சிவலிங்கமும் அதற்கு நேராக நந்தியும், பலிபீடமும் இருக்கின்றன. அவை மூன்றும் நேராகத் ஸ்தாபிக்கப்பட்டிருத்தலால், அவை என்றும் உள்பொருளாய் (அநாதி நித்தியம்) உள்ளவை என்னும் உண்மை உணரப்படும்.

இனி கொடிமரம், கொடிக்கயிறு, கொடிச்சீலை, தருப்பைக்கயிறு என்பவற்றுள் கொடிமரம் பதியையும், கொடிக்கயிறு திருவருள் சத்தியையும் கொடிச்சீலையில் எழுதப்பட்ட இடப தேவர் பசுவையும், தருப்பைக்கயிறு பாசத்தையும் குறிக்கும் என்று காரணம் முதலிய ஆகமங்கள் கூறுகின்றன.

❁ ❁ ❁

# 4. திரைச்சீலை

சிவ சந்நிதானத்திலே இடப்படும் திரைச்சீலையினாலே, மாயையாகிய திரையே அநாதி முத்த சித்துருவாகிய சிவத்தை அறியவிடாது மறைத்திருக்கின்றது என்று உணர்ந்து, அவ் இறைவனாரது திருவருள் என்னும் கத்தியினாலே கீறி, ஞானக்கண் கொண்டு உள்ளபடி தரிசித்தவர்களே சிவகதி பெறுவர் என்னும் உண்மை அறியப்படும்.

உயர்ந்த நான்கு வருணத்தாருள் உறுப்புக்குறைந்தவர்களும் (அங்கவீனர்களும்) நான்கு வருணத்தார் அல்லாத சங்கர சாதியாரும் தங்கள் தங்கள் அதிகார அநு குணமாக குருவினிடத்துத் தீட்ஷை பெற்று,

> **தூவியினைக் கோபுரத்தை ஈசன் எனக் கண்டு தொழு**
> **பாவம் அறும் வாய்த்து உறும் இன்பம்.**

என்று "வருத்தம் அற உய்யும் வழி" என்னும் நூல் கூறியபடி தூபியையும், கோபுரத்தையும் சிவபெருமானாகப் பாவித்து அவற்றுக்கு எதிரே பத்திர (இலைகள்) புஷ்பங்களைத் (மலர்கள்) தூவித் துதித்தல் முறையாம்.

இவ்வாறான அரும்பெரும் விசேடங்கள் அமைந்துள்ள ஆலயங்களை இகழாது அடைந்து சிவபெருமானைத் தரிசிக்கும் கண்களே கண்களாம். சிவாலயத்தைப் வலம் செய்யும் கால்களே பயனுள்ள கால்களாம். சிவபெருமானை வணங்கும் தலைகளே தலைகளாம். சிவசரிதையைக் கேட்கும் செவிகளே செவிகளாம். விட்டுணு முதலிய தேவர்களும் அந்த இறைவனை வழிபடுதல் ஏனைய உலகங்களில் கிட்டாமையினால் மண்ணுலகத்தில் வந்து சிவனை அர்ச்சிப்பார்கள். மாநுட தேகத்தைப்

பெற்றவர்கள் அர்ச்சிக்க வேண்டும் என்னும் உண்மையைப் பிறவில் அகப்பட்டு உழலும் சிறியோர் சிறிதும் அறியார்கள்.

**மானுடப் பிறவி தானும் வகுத்தது மனவாக் காயம்**
**ஆனிடத்(து) ஐந்தும் ஆடும் அரன் பணிக்காக அன்றோ**
**வான் இடத்தவரும் மண்மேல் வந்(து) அரன் தனை அர்ச்சிப்பர்**
**ஊன் எடுத்(து) உழலும் ஊமர் ஒன்றையும் உணரார் அந்தோ.**

— அருணந்தி சிவாசாரிய சுவாமிகள்.

எனவும்,

**உற்ற திருநீறும் சிவாலயமும் உள்ளத்துச்**
**செற்ற புலையர்பால் செல்லாதே - நற்றவம் சேர்**
**வேடமும் பூசை அருள் மெய்ஞ்ஞானம் இல்லாத**
**மூடருடன் கூடி முயங்காதே.**

— உமாபதி சிவாசாரிய சுவாமிகள்.

எனவும் திருவாய் மலர்ந்து அருளி இருப்பது காண்க.

❁ ❁ ❁

# 5. ஆலய சேவை

**சி**வபுண்ணியம் பொதுவும், சிறப்பும் என இரு வகைப்படும். சிவதீட்சை பெறாமல் செய்வது பொதுச் சிவபுண்ணியமாம். சிவதீட்சை பெற்றுச் செய்வது சிறப்புச் சிவபுண்ணியமாம். சிறப்புச் சிவபுண்ணியத்தை அடைவதற்குப் பொதுச் சிவபுண்ணியம் உதவியாய் இருக்கும். ஆதலால் தீட்சைபெற்றுத் திருத்தொண்டு செய்வது உத்தமத்தில் உத்தமமாகும்.

மகோற்சவ காலத்தில் சரியைத் தொண்டு இயற்றுவோர் முதலிய யாவரும் தத்தமக்கு உரிய நித்திய கருமத்தை முடித்துக்கொண்டு, ஆசார சீலர்களாய் ஆலயத்துக்குப் போதல் வேண்டும். தூலலிங்கமாகிய கோபுரத்தையும், சூக்குமலிங்கமாகிய சிவலிங்கப் பெருமானையும் வழிபட்டு வலம் வருதல், நமஸ்காரங்களைச் செய்தல் முதலியவற்றை இயற்றி, சிவத்தொண்டுகளைச் செய்தல் வேண்டும். ஆலயத்திலுள்ள ஐந்து பிராகாரங்களையும் வலம் வருதலால் ஐந்து கோசங்களிலும் (சரீரங்களிலும்) தங்கியிருக்கும் பாவங்கள் தேயும். பின்பு பஞ்ச சரீரங்களும் நீங்கிச் சிவ வியாபகம் (சிவ நிறைவு) ஆன்மாவில் உண்டாகும். மூன்று வீதிகளை வலம் வருவதால் தூல, சூக்கும, காரண முச்சரீர நீக்கமும், இரு வீதிகளை வலம் வருவதால் தூலம், சூக்குமம் ஆகிய இரு சரீர

நீக்கமும் உண்டாகும். நமஸ்கரிப்பதனால் தற்போதம் (தன்னறிவு) நீங்கி, சிவனது எண்குணம் உண்டாகி சிவத்தோடு அத்துவிதம் (இரண்டறக் கலத்தல்) உண்டாகும் என்று "சதாசிவ ரூபம்" கூறும்.

சிவபெருமானது திருவிழாவில் ஒரு நாள் வலம் வருவோர் ஒவ்வோர் அடிக்கும் ஒவ்வோர் அசுவமேத யாகம் செய்த பலனை அடைவர். குருவுக்குப் பின்னே செல்பவருக்கும் பலன் அஃதேயாகும். கொடியேற்ற (துவசாரோகண) காலத்தில் கொடிச்சீலையின் (துவஜபடத்தின்) பின் வலம் வருவோர் பொன், மகவு, பௌத்திரர் முதலிய ஐசுவரியங்களை அனுபவித்திருப்பார். திருவிழாவில் நாள் தோறும் வலம் வருவோர் (பிரதஷிணம்), உருத்திரர் ஆவார் என்று "சிவபுண்ணியத் தெளிவில்" கூறப்பட்டிருக்கின்றது.

காலையில் வலம் வருவதால் வியாதி நீக்கமும், மத்தியானத்தில் வலம் வருவதால் விரும்பிய சித்தியும், சாயங்காலத்தில் வலம் வருவதால் அனைத்துப் பாவ நீக்கமும், அர்த்தசாமத்தில் வலம் வருவதால் மோட்ஷசித்தியும் உண்டாகுமென்று "சகலாகம சாரசங்கிரகத்தில்" சொல்லப்பட்டிருக்கிறது. சூரியோதயம் தொடங்கி, அர்த்தசாமம் வரையிலாயினும் அல்லது ஒரு சாமமாயினும் அங்கப்பிரதட்ஷிணம் செய்வோர் தீவினைகள் எல்லாம் நீங்கப்பெற்று முத்தியடைவர் என்று "அருணகிரிபுராணம்" கூறுகின்றது.

வரகுண பாண்டியனார் பிரமஹத்தி தோசத்தால் (பிராமணரைக் கொன்ற குற்றம்) பீடிக்கப்பட்டு வருந்தி அதனை நீக்குவதற்குத் தானம் செய்தும், அரசமரத்தை வலம் செய்தும், பசுக்களுக்குப் புல் முதலியன கொடுத்தும், வேறும் பற்பல புண்ணியங்களைச் செய்தும் நீங்கப்பெறாமல் முடிவில் சிவாலயத்தை வலம் வந்ததாலன்றோ அக்குற்றத்தில் இருந்து நீங்கப்பெற்றனர்.

சிவாலய தரிசனம், விடியற்காலையிலே (பிராதக்காலத்திலே) செய்தால் இரவிலே செய்த பாவம் போகும். மத்தியானத்திலே செய்தால் பிறந்தநாள் தொடங்கிச் செய்த பாவம் முழுவதும் போகும். சாயங்காலத்திலே செய்தால் ஏழு பிறவிகளில் செய்த பாவம் முற்றும் போகும். ஆதலால் சைவசமயிகள் யாவரும் எந்நாளும் காலம்தோறும் தவறாமல் விதிப்படி மெய்யன்போடு சிவதரிசனம் செய்வார்களாக.

திங்கட்கிழமை (சோமவாரம்), அட்டமி, பிரதோஷம், பௌர்ணமி, அமாவாசை, திருவாதிரை, உத்தராயணம் (தை முதல் ஆடி வரை), தட்ஷிணாயனம் (ஆடி முதல் மார்கழி வரை), சித்திரை மாதப்பிறப்பு (விஷு), ஐப்பசி மாதப்பிறப்பு, சூரியகிரகணம், சந்திரகிரகணம், சிவராத்திரி, உற்சவம் முதலிய புண்ணிய காலங்களிலே சிவதரிசனம் செய்தல் மிக மேலாகிய சிவபுண்ணியமாம்.

**ஆக்கையால் பயன் என் - அரன்**
**கோயில் வலம் வந்து**
**பூக்கையால் அட்டிப் போற்றி என்னாத இவ்**
**ஆக்கையால் பயன் என்.**

**கால்களால் பயன் என் - கறைக்**
**கண்டன் உறை கோயில்**
**கோலக் கோபுரக் கோகரணம் சூழாக்**
**கால்களால் பயன் என்.**

– திருநாவுக்கரசு சுவாமிகள்.

திருக்கோயிலிலே செய்யத்தகும் சிவபுண்ணியங்கள் திருவலகிடுதலும் (கூட்டுதல்), திருமெழுக்குச் சாத்தலும் (மெழுகுதல்), திருமாலை கட்டிச் சாத்துவித்தலும், சிவசந்நிதியில் அருட்பாக்களைப் பாடுதலும், வாசனைப்புகை (சுகந்த தூபம்) இடுதலும், திருவிளக்கு ஏற்றுதலும், தங்கள் தங்கள் வசதிக்கு ஏற்பத் திருப்பணியும், பூசையும் செய்வித்தலும் பிறவுமாம்.

❋ ❋ ❋

## 6. திரு அலகிடுதல்

**தி**ருச்சந்நிதியிலும், வீதியிலும் உள்ள குப்பைகளை மெல்லிய துடைப்பத்தினால் திருவலகிடுபவர்கள் காமம், கோபம், மயக்கம், பொய் ஆகிய குப்பைகள் நீங்கிப் பரிசுத்தராய் விளங்குவார்.

**காமம் வெகுளி கழி பெரும் பொய் என்னும்**
**தூய்மை இல் குப்பை தொலைவின்றிக் கிடந்ததை**
**அரிதின் அகழ்ந்து போக்கி.**

– பட்டினத்தடிகள்.

❋ ❋ ❋

## 7. திரு மெழுக்கிடுதல்

**கோ**பம் முதலிய குப்பைகளை ஒருமித்து நீக்கித் தத்துவஞானம் என்னும் நறுஞ்சாணத்தைக்கொண்டு அன்பென்னும் நீரோடு கலந்து மெழுகியவர், தமது மனக்கோயிலில் சிவலிங்கம் தோன்றும் பயனைப் பெறுவர்.

❋ ❋ ❋

## 8. கீதம் பாடல்

சிவபெருமானது திருமேனி நாத உருவாகுமென்று வேதம் அறிவிப்பதால், அவ்வுண்மையை விளக்கவே அவரது திருமுன்னிலையில் கீதம் பாடப்படுகின்றது என்பதும், அதனைச் செய்தோர் உண்மை விளங்கப்பெற்று முத்தியடைவர் என்பதும் பெறப்படும்.

**ஆதி நம்பன் உரு நாத உருவாகும் என முன்**
**ஓதுகின்ற மறை யாவையும் உணர்த்திடுதலால்**
**கீத சமீசன் முன நாளும் நவில் கேண்மை உடையோர்**
**தீ(து) இல் இவ் உலகு சேர்குவர் எனா உரை செய்தார்.**

— காசிகாண்டம்.

❁ ❁ ❁

## 9. தூபம் இடுதல்

தூபம் தாங்குபவர்கள் ஆணவ மலசத்தி நீங்கப் பெறுவார்கள்.

❁ ❁ ❁

## 10. திருவிளக்கு இடுதல்

திருவிளக்கு ஏற்றுபவர்களும், தீபம் தாங்குபவர்களும் சிவஞானத்தைப் பெறுவார்கள்.

❁ ❁ ❁

## 11. பிற திருத் தொண்டுகள்

சாமரையால் பணி செய்பவர்கள் மலநீக்கமும், திருவருள் செல்வமும் அடைவார்கள்.

குடை பிடிப்பவர்கள் ஆணைச் சக்கரத்தையும், பலத்தையும் அடைவார்கள்.

வாகனம் தூக்குபவர் கணநாதராய்த் திருக்கைலாசத்தை அடைந்து இன்புற்று இருப்பார்கள்.

சிவாசாரியாரை நமஸ்கரித்து அருமருந்தாதிய விபூதி பெறுவது திருவருளைப் பெறுதல் என்னும் குறிப்பாகும்.

இங்கே கூறிய இத்திருத்தொண்டுகளையும், இவை போன்ற ஏனைய தொண்டுகளையும் செய்வதற்கு மனம் கூசுவதும், மெய்யன்போடு செய்பவர்களை இகழ்வதும் குற்றமாகும்.

❋ ❋ ❋

## 12. சிவாலயத்தில் செய்யத் தகாத குற்றங்கள்

தூபி, கொடித் தம்பம், பலிபீடம், இடபம், விக்கிரகம் என்னும் இவைகளின் நிழலை மிதிப்பதும், இருமூர்த்திகளுக்கு ஊடாகச் செல்வதும், வணங்க வந்த பெண்களைத் தீண்டுவதும், அவர்களை விரும்பிப் பார்ப்பதும், வீண்வார்த்தை பேசுவதும், பயனின்றிச் சிரிப்பதும், பயனின்றிப் பேசுவதும், வீண் கீதங்களைப் பாடுவதும், கேட்பதும், சிவபெருமானுக்கும் பலிபீடத்துக்கும் நடுவே செல்லுவதும், சுவாமி திரு உலா வந்து அருளும்போது அங்கே நிற்காமல் கோயிலின் உள்ளே போய் வணங்குவதும், அகாலத்தில் வணங்குவதும் பிறவுமாம். இதற்கான ஆதாரத்தை அருணகிரிபுராணத்திலும், ஆகமங்களிலும் கண்டு கொள்ளலாம்.

❋ ❋ ❋

## 13. கோயில் அதிகாரிகள் (தர்மகர்த்தாக்கள்)

குரு, லிங்க, சங்கம பக்தி உள்ளவர்களும், ஆகம உணர்ச்சி உள்ளவர்களுமாகிய பெரியோர்களே ஆலய தருமகருத்தாக்களாய் இருத்தல் வேண்டும். அவர்களே ஆலயத்தை விதிப்படி நடாத்திச் சமயத்தை வளர்ப்பார்கள். அவர்கள் அங்கே நடைபெறும் கிரியைகளையும், முறைகளையும் முறைப்படி செய்யாவிடின், அதனால் வரும் கேட்டையும், அறிந்து பழி, பாவங்களுக்குப் பயந்து வேத ஆகம அறிவும் நல்லொழுக்கமும், ஈஸ்வர பத்தியும் உடைய சிவாசாரியர்களை நியமித்துக் கிரியைகளைச் செய்விப்பார்கள்.

❋ ❋ ❋

# 14. கோயில் சிவாச்சாரியர்கள்

கோச்செங்கட்சோழநாயனார் திருவானைக்காவில் அமுதலிங்கேசுரருக்கு அர்ச்சகர்களாக அறிவு, ஒழுக்கங்களில் சிறந்தவர்களான ஆதிசைவர்களை (பிராமணர்களை) நியமித்தார். அவர்கள் சிவனை அர்ச்சித்து வரும் நாளிலே அரசரும் தம்மைப் பணிதலாலும், மற்றையவர்களும் எக்கருமம் செய்யினும் இன்றியமையாது நல்ல விருப்பத்துடன் தம்மை ஏற்றுக்கொள்வதாலும் மதிப்பு உயர தம்மைத் தாமே மதித்துக் கர்வம் கொண்டார்கள். ஞான தவத்தில் வாழ்தலினாலும், அமுதலிங்கேசருக்குப் பூசை செய்வதினாலும்தான் பெருமைகள் எல்லாம் தமக்கு வந்தன என்று அறியாமல் சுயமதிப்பால் பரத்தையருடைய அழகை நுகர்ந்தும், சிவத்திரவியங்களைக் கவர்ந்தும், சிவபுண்ணியங்களைச் செய்யாதும், கடைப்பிடித்து வந்த ஒழுக்கங்களை முற்றாக விடுத்தும், மணி அடித்தல், வாத்தியங்களை முழக்குதல் என்னும் இவைகளே அன்றி, பிறவிப்பிணி நீங்க மெய்யன்போடு பூசைசெய்யாது தவறுகளையே செய்தார்கள். மனதில் குற்றமுடையவர்களாய் அச்சிவமறையோர் நடக்க "மனமுருகி நினையாதார்க்கு வஞ்சன் காண்" என ஸ்ரீவாகீசர் கூறியபடி வஞ்சர்க்கு வஞ்சகராகிய சிவபெருமான் திருவுள்ளம் கோபித்து அவர்களை அழிப்பதற்குத் திருவுள்ளம் கொண்டிருந்தார்.

ஒருநாள் அந்தணர்கள் அமுதலிங்கேசுரருக்குப் பூசை செய்வதற்குச் சிறுவன் ஒருவனை அமர்த்திவிட்டு எல்லோரும் கொள்ளிடத்தைக் (ஓர் ஆறு) கடப்பதற்கு மரப்படகில் ஏறிச் சென்றார்கள். சிவபெருமானுடைய திருவருளால் சூறைக்காற்று வீச படகு கவிழ்ந்தது. சிவ பிராமணர்களும், மனைவியர்களும், பிள்ளைகளும் நீரில் வீழ்ந்து துன்பமடைந்து இறந்தார்கள். அவர்களோடு படகில் செல்லாது சிவபூசை செய்ய நியமிக்கப்பட்ட சிறுவனைச் சிவபெருமான் தமது திருவருளுக்கு இலக்காக்கி, தேவ ஆகமங்களை உபதேசித்து, சிவபுண்ணியங்களைச் செய்யுமாறு வைத்தருளினார்.

முன்னொருகாலத்தில் குமாரக்கடவுள் சிவபெருமானுக்குப் பூசை செய்வதற்கு உரியவர் என்று கருதி திருக்கைலாச மலையில் இருந்து சிவப்பிராமணர்களை திருப்பிடவூருக்கு அழைத்து வந்தார். சிவபெருமான் அவர்களுள் சிலரை அழைத்து நித்திய, நைமித்தியங்களைச் செய்யும்படி நியமித்தருளினார். வினைத்தொடர்ச்சியற்ற அந்த அந்தணர்கள் ஆன்ம நாயகராகிய சிவபெருமான் நல்வினை செய்பவர்களுக்கு அருளும் தன்மையையும், தீவினை செய்பவர்களைத் தண்டிக்கும் தன்மையையும் கொண்டவர் என்பதை மனதில் நினைந்து, அச்சமும், அன்பும் உள்ளவர்களாய் நித்திய நைமித்தியங்களைச் சிவபெருமானுடைய

திருவுள்ளத்துக்கு இசையவும், மூவுலகும் வியக்கும் வண்ணமும் செய்தார்கள். இச்சரித்திரம் திருவானைக்காப் புராணத்தில் காணப்படுகிறது.

ஆதிசைவர்கள் பூசிப்பதனால் சர்வசித்திகளும் உண்டாகும். சதாசிவமூர்த்தியினுடைய பஞ்ச அத்திரங்களால் தீட்சிக்கப்பட்ட கௌசிகர் முதலிய முனிவர்களுடைய வம்சத்தில் உதித்தவராயும், உடல் ஊனம் அற்றவராயும், சமய ஆசார சீலராயும் ஆடம்பரம் (இடம்பம்), பொறாமை (அசூயை), முதலிய குற்றங்கள் அற்றவராயும் உள்ளவரே பரார்த்த பூஜை செய்வதற்கு தகுதி உடையவர் ஆவார். பூணூல் (உபவீதம்), உருத்திராட்ஷம், (உட்டிணீட்ஷம்), தோள்ச் சால்வை (உத்தரீயம்), விபூதி என்பவை ஆசாரியருக்குரிய பஞ்சமுத்திரைகளாம். ஆசாரியர் மாறுபட்டுக் கிரியைகளைச் செய்தால் அவர் சயரோகத்தால் தண்டிக்கப்படுவர்.

கோச்செங்கட் சோழநாயனார், புகழ்ச்சோழநாயனார், அமர் நீதிநாயனார் முதலிய நாயன்மார்களும், முசுகுந்தன் முதலிய அரசர்களும் பிறபெரியோர்களும் ஆகமவிதிப்படி பெரும் பொருள் செலவிட்டுப் பழைய கோயில்களைப் பெரிதாக்கியும், அழகு பெறப் புதுப்பித்தும், சுற்றுக்கோயில், கோபுரம் முதலிய பல உறுப்புக்களுடன் புதிய ஆலயங்களை உண்டாக்கியும், விதிமுறைப்படி பிரதிட்டை செய்வித்தும், நித்தியபூசை புரிவித்தும், திருவிழாக்களைத் தவறாது நடாத்துவித்தும், பூசை விழாக்கள் வழுவாது நடைபெற்றுவருவதற்கு அறக்கட்டளைகளை (நிபந்தங்கள்) அமைத்தும், அன்பு மேற்கொண்டு தரிசித்தும் வந்த சிவபுண்ணியப் பேற்றால் அன்றோ தாம் தாம் விரும்பிய பயன்களை அடைந்து இன்புற்றார்கள். அது பெரியபுராணம், கந்தபுராணம், தலபுராணங்கள் முதலியவற்றால் நன்கு அறியப்படும்.

**இப்படியே ஒரு பகலில் எழுவரையும் தாபித்து**
**மெய்ப் பரிவில் வழிபாடு விதிமுறையால் புரிவித்துச்**
**செப்பரிய புகழ் ஆரூர்த் தேவனுக்கு விழாச் செய்வான்**
**முப் புவனங்களும் போற்றும் முசுகுந்தன் முன்னினனால்.**

**பூங்கமலா புரிவாழும் புனிதனார்க்(கு) அன் அதற்பின்**
**ஓங்கு திருவிழா நடத்தி ஒழிந்த பதிப் பண்ணவர்க்கும்**
**ஆங்கது போல் நிகழ்வித்தே அந்தமில் சீர் முசுகுந்தன்**
**பாங்கில் வரு வீரருடன் பார் உலகம் புரந்திருந்தான்.**

– கந்தபுராணம் கந்தவிரதப்படலம்.

❁ ❁ ❁

# 15. நித்தியாதி கருமங்கள்

**ஆ**லய கருமங்கள் நித்தியம், நைமித்திகம், காமிகம் என மூன்று வகைப்படும். இம்மூன்றும் நித்தியம் நித்தியாங்கம் என்றும், நைமித்திகம் நைமித்தியாங்கம் என்றும், காமியம் காமியாங்கம் என்றும் ஒவ்வொன்றும் இவ்விரண்டாக ஆறு வகைப்படும்.

**நித்தியம்** - அன்றாடம் செய்யும் பூசை.

**நைமித்தியம்** - அன்றாடப் பூசையில் நிகழும் குற்றங்கள் நீங்கச் செய்யும் பூசை.

**காமியம்** - விருப்பங்களை நிறைவேற்றச் செய்யும் பூசை.

**நித்திய கருமங்கள் :** ஸ்நானம், தருப்பணம், சிவ அர்ச்சனை, அக்கினி காரியம் செய்வதும் பிறவுமாம்.

**நித்தியாங்க கருமங்கள் :** நித்திய கருமங்களுக்குக் குறைவு வந்தபோது அதற்குப் பரிகாரம் செய்தலும், அஷ்டபந்தன சேதம் வந்தால் மீளவும் அஷ்டபந்தனம் சாத்தலும், சாம்வத்சரிகப் பிராயச்சித்தமாகப் பவித்திரம் சாத்துதலும், சிவராத்திரி, அர்த்தோதயம், மகோதயம், தேய்பிறை (அபரபக்க) அஷ்டமி, வளர்பிறை (பூர்வபக்க) அஷ்டமி, பிரதோஷம், அமாவாசை, பௌர்ணமி, சூரிய சந்திர கிரகணங்கள், மாதசங்கிராந்தி முதலிய புண்ணிய காலங்களில் விஷேச பூசை செய்தலும் பிறவுமாம்.

**அஷ்டபந்தனம்** - கோயில் விக்கிரகங்கள் அசைவின்றி இருக்க அடியில் சாத்தும் சாதிலிங்கம், எருமை வெண்ணெய், குங்குலியம், சுக்கான்கல், தேன்மெழுகு, செம்பஞ்சு, கொம்பரக்கு, காவிக்கல் ஆகிய எட்டும் சேர்ந்த கூட்டுச்சரக்கு வகை.

**சம்வத்சரம்** - வருடம், ஒருவருடத்தில் நாள் தோறும் செய்யும் பூசையில் மந்திரக் குறைவு (மந்திரலோபம்) முதலியனவற்றால் நேர்ந்த குறைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டுப் பவித்திரம் சாத்துவதாகும்.

**பவித்திரம்** - நூல்

**அர்த்தோதயம்** - அறுபது வருடத்திற்கு ஒருமுறை வரும் ஒரு விசேட காலம். அது தை மாதத்தில் ஞாயிற்றுக்கிழமையும், அமாவாசையும், திருவோண நட்சத்திரமும் கூடியது.

**மகோதயம்** - தை அமாவாசையும், திங்கட்கிழமையும், திருவோணமும் வியதீபாத யோகமும் கூடிய சூரியோதயப் புண்ணிய காலம்.

**மாதச் சங்கிராந்தி** - மாதப்பிறப்பு.

**நைமித்திக கருமங்கள் :** பிரதிஷ்டை, தீட்ஷை, மகோற்சவம், நவ கலச ஸ்நபனம், அஷ்டோத்தர சத கலச ஸ்நபனம், சதஸ்ர கலச ஸ்நபனம் முதலாயினவாம்.

**நைமித்திகாங்க கருமங்கள் :** பிரதிஷ்டை முதலியவற்றிற்கு குரு தட்ஷணையும், தீட்ஷைக்குச் பிதுர்ப்பூசையுடன் (சபிண்டீகரணத்துடன்) கூடிய மரணயாகமுமாம். (அந்தியேஷ்டி)

**காமிய கருமங்கள் :** சித்திகளைப் பெறவிரும்பி விஷேச தினங்களிலே விசேஷமாகச் செய்யும் விரதம், பூசை, செபம் முதலியனவாம்.

**காமியாங்க கருமங்கள் :** விதிப்படி செய்யும் விரத உத்தியாபனம் முதலியனவாம்.

ஆன்மாக்களது பக்குவம் நோக்கி, அருள் செய்யும் காரணமாகச் சிவபெருமான் ஒருவரே சந்திரசேகரர், விநாயகர், சுப்பிரமணியர் முதலிய திருமேனிகளைக் கொண்டு அருளினார். சிவபெருமானைத் தந்தையாகவும், விக்கினேசுவர், சுப்பிரமணியர், வைரவர், வீரபத்திரர் என்னும் நால்வரையும் புதல்வர்களாகவும் உண்மை நூல்கள் சொல்கின்றன. அவ்வாறு புகழப்படுதல் ஆன்மாக்களின் பயன் கருதியேயாம் என்பது,

**"சிவனது ஆடலின் வடிவமாய் உற்றிடும் செவ்வேள்."**

**"ஈசனே ஆவன் ஆடலான் மதலையாயினன் காண்**
**ஆசிலா அவன் அறு முகத்(து) உண்மையால் அறி நீ**
**பேசில் ஆங்(கு) அவன் பரனொடு பேதகன் அல்லன்**
**தேசுலா அகன்மணி இடைக்கதிர் வரும் திறம் போல்."**

— கந்தபுராணம்.

முதலிய அருள்வாக்குக்களினாலே நன்கு அறியப்படும்.

இம்மூர்த்திகளுக்குச் செய்யப்படும் நித்தியம், நித்தியாங்கம் முதலிய வழிபாடுகளில் மந்திரபேதம் (மந்திரவேறுபாடு) இருக்குமேயன்றிக் கிரியாபேதம் (செயல்வேறுபாடு) இல்லை; ஆகையால் விநாயகர் முதலியோருக்கும் சிவலிங்கப்பெருமானுக்கும் கூறியபடியே நித்தியம் முதலான கிரியைகளைச் செய்க என்று சிவாகமங்கள் செப்புகின்றன.

❁ ❁ ❁

# 16. உற்சவம்

**உ**ற்சவம் என்பது உத்தம யாகம் எனவும், மேலான ஐந்தொழில் (பஞ்சகிருத்தியம்) எனவும், சிருஷ்டி (படைத்தல்) மார்க்கத்தைக் குறிப்பது எனவும், போக (இன்ப அனுபவம்), மோட்சங்களைக் (வீடு) கொடுப்பது

எனவும் பொருள்படும். உத்தம யாகமாகிய உற்சவத்தைச் செய்தவர்களும், செய்வித்தவர்களும், அதற்கு உதவி செய்தவர்களும் சகல போகங்களையும் அனுபவித்து மோட்சத்தை அடைவார்கள்.

"விதிப்படி உற்சவம் செய்பவர்களுக்கும், செய்விப்பவர்களுக்கும் பாவம் நீங்கும், ஞானம் உண்டாகும், எல்லா மங்களமும் உண்டாகும்" எனவும்,

"அசுரர்களின் அழிவின் பொருட்டு உற்சவத்தைச் செய்க" எனவும்,

"சர்வதோஷ நிவிர்த்தியின் (அனைத்துக்குற்ற நீக்கத்தின்) பொருட்டும், சர்வலோக சுகத்தின் பொருட்டும், சர்வதேவ பிரியமாகவும், சர்வபிராணிகளின் சுகத்தின் பொருட்டும், அரசர்களுக்கு விஜய சித்தியின் பொருட்டும், எல்லாரையும் இரட்சித்தல் பொருட்டும் உற்சவத்தைச் செய்க" எனவும்,

"புத்தி, முத்தியைக் கொடுப்பது; சர்வ ஆன்மாக்களுக்கும் சுகத்தைத் தருவது; பரிசுத்தமானது; எப்பொழுதும் விஜயத்தை உண்டாக்குவது; சர்வ சித்தியையும் கொடுப்பது; இஷ்ட காமிய (விருப்பமான) பலனைத் தருவது" எனவும்

சிவ வாக்காகிய திவ்ய ஆகமங்கள் உற்சவத்தின் பெருமையை வெளியிடுகின்றன.

தேவாரம் முதலிய திருமுறைகளும் உற்சவங்களைப் பற்றி ஆங்காங்கு விசேடித்துக் (சிறப்பித்துக்) கூறுகின்றன. ஆகம விதிப்படி உற்சவம் செய்து, பற்பலர் பேறு உற்றமையைச் சூதனொலிமாலை ஆகிய (சூதமுனிவரால் செய்யப்பட்ட) புராணங்களும் விரித்து அறிவுறுத்துகின்றன. இவற்றினாலே மண்ணினில் பிறந்தார் பெறும் பயன் அண்ணலாரது (இறைவனது) விழாக்களை மனவுறுதியோடு நடத்துதலும், தரிசித்தலுமே எனும் உண்மை இனிது பெறப்படுகின்றது.

**மண்ணினில் பிறந்தார் பெறும் பயன் மதிசூடும்**
**அண்ணலார் அடியார்தமை அமுது செய்வித்தல்**
**கண்ணினால் அவர் நல்விழாப் பொலிவு கண்(டு) ஆர்தல்**
**உண்மையாம் எனின் உலகர்முன் வருகென உரைப்பார்."**

– திருஞானசம்பந்தநாயனார் புராணம்.

❁ ❁ ❁

# 17. உற்சவ ஆரம்பம் மூன்று விதம்

துவஜாரோகணபூர்வம் (கொடியேற்றத் தொடக்கம்), பேரீதாடனபூர்வம் (மேளவாத்திய வாசிப்புத் தொடக்கம்), அங்குரார்ப்பண பூர்வம் (முளையிடல் தொடக்கம்) என உற்சவ ஆரம்பம் மூன்று விதமாம். முதலில் துவஜாரோகணம் செய்து பின்பு பேரீதாடனமும், அங்குரார்ப்பணமும் செய்தல் **துவஜாரோகண பூர்வமாம்.** முதலில் பேரீதாடனமும் துவஜாரோகணமும் செய்து, அங்குரார்ப்பணம் செய்தல் **பேரீதாடன பூர்வமாம்.** முதலில் அங்குரார்ப்பணம் செய்து, அதன்பின் பேரீதாடணமும், பின்பு துவஜாரோகணமும் செய்தல் **அங்குரார்ப்பண பூர்வமாம்.** துவஜாரோகண பூர்வம் நடைபெற்றால் சர்வபிராணிகளுக்கும் சுகம் உண்டாகும். பேரீதாடன பூர்வம் நடைபெற்றால் தேவர்கள் பிரீதி அடைவார்கள். அங்குரார்ப்பண பூர்வம் நடைபெற்றால் சர்வசம்பத்தும், செல்வமும் உண்டாகும். இவ்வாறு ஸ்ரீ வாதுள ஆகமத்தில் கூறப்பட்டது.

சௌரோற்சவம் (சூரிய உற்சவம்) துவஜாரோகண பூர்வமாகச் செய்யத்தக்கது. சாந்திரமும், தைவிகமும் அங்குரார்ப்பண பூர்வமாகச் செய்யத்தக்கன. பேரீதாடன பூர்வமும் உற்சவத்தில் மேலானது. சௌரோற்சவத்தில் திரவியம் இல்லாதபோதும், சங்கடம் உற்றபோதும் சாந்திர உற்சவமாவது, தைவிக உற்சவமாவது செய்க. சாந்திர, தைவிக உற்சவங்கள் துவஜாரோகண பூர்வமாகவும் செய்யலாம். மாறிச்செய்தல் குற்றமாம். இவ்வாறு உத்தரகாரண ஆகமத்தில் கூறப்பட்டுள்ளது.

❋ ❋ ❋

# 18. மூவகை உற்சவம்.

உற்சவமானது **நித்தியோற்சவ**மும், **நைமித்தியோற்சவ**மும், **காமியோற்சவ**மும் என மூன்று விதமாம்.

**நித்தியோற்சவம் :** தினம் தோறும் நித்திய பூசையின் முடிவில் செய்வது.

**நைமித்திய உற்சவம் :** வருடம் தோறும் குறித்த மாதத்தில் வரும் திதி, நட்ஷத்திரம், சங்கிராந்தி என்பவற்றுள் ஒன்றை முடிவாகக் கொண்டு செய்வது.

**காமிய உற்சவம் :** விருப்பமான காலத்தில் செய்வது.

உற்சவமானது **நித்தியோற்சவம்** (நித்திய உற்சவம்), **மாசோற்சவம்** (மாச உற்சவம்), **வருசோற்சவம்** (வருச உற்சவம்) என மூன்று விதமாம் என்று அருணாசல உற்சவ பத்ததியில் சொல்லப்பட்டிருக்கிறது.

உற்சவமாவது **மாசோற்சவம், மகோற்சவம், பட்சோற்சவம்** (பட்ச உற்சவம்) என மூன்று விதமாமென்று குமாரதந்திரம் கூறும்.

உற்சவமானது **வாரோற்சவம்** (வார உற்சவம்), **பட்சோற்சவம், மாசோற்சவம்** என மூன்று விதமுமாம்.

**வாரோற்சவம் :** புண்ணியத்தைக் கொடுக்கும்.

**பட்ஷோற்சவம் :** புஷ்டியைக் கொடுக்கும்.

**மாசோற்சவம் :** விஜயத்தைக் கொடுக்கும்.

**ஆதித்திய வார உற்சவம் :** (ஞாயிற்றுக்கிழமைத் திருவிழா) உருத்திர பதவியையும், ஆரோக்கியத்தையும் கொடுக்கும்.

**சோமவார உற்சவம் :** (திங்கட்கிழமைத் திருவிழா) சௌக்கியத்தைக் கொடுக்கும்.

**மங்கலவார உற்சவம் :** (செவ்வாய்க்கிழமைத் திருவிழா) கிராமவிஜயத்தைக் கொடுக்கும்.

**புதன்வார உற்சவம் :** (புதன்கிழமைத் திருவிழா) சர்வகாமிய சித்தியைக் கொடுக்கும்.

**குருவார உற்சவம் :** (வியாழக்கிழமைத் திருவிழா) வித்தையைக் கொடுக்கும்.

**சுக்கிரவார உற்சவம் :** (வெள்ளிக்கிழமைத் திருவிழா) மகத்தான செல்வத்தைக் கொடுக்கும்.

**மந்தவார உற்சவம் :** (சனிக்கிழமைத் திருவிழா) அபமிருத்துவையும் (துர்மரணத்தை), நாசத்தையும் உண்டாக்கும்.

❁ ❁ ❁

# 19. அமாவாசை உற்சவம்

**அ**மாவாசையில் மூல லிங்கத்திற்கும், ஏனைய மூர்த்திகளுக்கும் அபிஷேகம், அலங்காரம், நிவேதனம் (அமுது படைத்தல்) செய்து உற்சவம் செய்க. அமாவாசை உற்சவம் செய்பவர் புண்ணியப் பேற்றை அடைவர். காலம் தவறிப் பெய்யும் மழை , ரோகம் (நோய்) முதலியன உண்டாகாது. அமாவாசை திங்கட்கிழமையோடு சேர்ந்துவரின் விஷு புண்ணிய காலத்துக்கும் (சித்திரை, ஐப்பசி மாதப்பிறப்பின் முன் எட்டும், பின் எட்டுமான நாழிகைக் காலம்), சிவராத்திரிக்கும் ஒப்பானதாகும். அமாவாசை திருவாதிரையோடு திங்கட்கிழமையில் வந்தால் கோடி யாகத்தின் பலனையும், கோடி தவ, தானங்களின் பலனையும் கொடுக்கும்.

பௌர்ணமி உற்சவத்தை அமாவாசை உற்சவத்தில் கூறியதுபோல் செய்க. இதற்கான சான்றினை (பிரமாணத்தை) "மகோற்சவவிதியில்" காண்க. (ஒரு நாழிகை = 24 நிமிடம்)

❋ ❋ ❋

# 20. சங்கிராந்தி உற்சவம்

ஆனி, புரட்டாதி, மார்கழி, பங்குனி என்னும் இந்நான்கு மாதப் பிறப்பும் (சங்கிரமும்) சடசீதி முகம் எனப்படும். இந்நாட்களிலே மாதம் பிறந்தபின் பதினாறு நாழிகை புண்ணியகாலம் ஆகும்.

கார்த்திகை, மாசி, வைகாசி, ஆவணி என்னும் இந்நான்கு மாதப் பிறப்பும் விஸ்ணுபதி எனப்படும். இந்நாட்களிலே மாதம் பிறப்பதற்கு முன்னதான பதினாறு நாழிகை புண்ணிய காலம் ஆகும்.

தட்ஷிணாயனம் ஆகிய ஆடிமாதப் பிறப்பிலே மாதம் பிறப்பதற்கு முன்னான பதினாறு நாழிகை புண்ணியகாலம். உத்தராயணமாகிய தைமாதப் பிறப்பிலே மாதம் பிறந்தபின் பதினாறு நாழிகை புண்ணியகாலம்.

சித்திரை, ஐப்பசி என்னும் இரண்டுமாதப் பிறப்பும் விஷு எனப்படும். இந்நாட்களிலே மாதம் பிறக்குமுன் எட்டு நாழிகையும் பின் எட்டு நாழிகையும் புண்ணியகாலம்.

**சூரிய கிரகணத்திலே** பரிசகாலம் (கிரகணத் தொடக்கம்) புண்ணியகாலம்.

**சந்திரகிரகணத்திலே** விமோசனகாலம் ( கிரகண முடிவு) புண்ணியகாலம்.

சங்கிராந்தி புண்ணியகாலத்திலும், கிரகணபுண்ணிய காலத்திலும் விசேடபூசை செய்து, உற்சவம் செய்க.

❋ ❋ ❋

# 21. மாத பூசை

**ஓ**ர் ஆண்டின் தை மாதம் முதல் ஆடி மாதம் வரையிலான காலம் உத்தராயண காலம் எனப்படும். இது சூரியன் உத்தரமாகிய வடக்குத் திசையில் செல்வது. இது தேவர்களுக்குப் பகற்காலம். ஆடி மாதம் முதல் மார்கழி மாதம் வரையிலான காலம் தட்ஷிணாயன காலம் எனப்படும். இது சூரியன் தட்ஷிணமாகிய தெற்குத் திசையில் செல்வது. இது தேவர்களுக்கு இராக்காலம். மாதம் ஒன்றிற்கு ஐந்து நாழிகையாக, பன்னிரண்டு மாதங்களும் தேவர்களுக்கு அறுபது தேவநாழிகை ஆகின்றது.

ஒரு நாளில் சிவபெருமானை அரச்சித்தற்குரிய முக்கிய காலங்கள் உஷக்காலம் (அதிகாலை), பிராதக்காலம் (காலை), மத்தியான்னம் (மதியம்), சாயான்னம் (மாலை), அர்த்தயாமம் (நடுச்சாமம்) என்ற ஐந்துமாம். அதுபோலவே ஓர் ஆண்டில் மார்கழி மாதம் உஷக்காலம். தை மாதம் பிராதக்காலம். சித்திரை மாதம் உச்சிக்காலம். ஆடி மாதம் சாயங்காலம். ஐப்பசி மாதம் அர்த்தயாமமாம்.

❋ ❋ ❋

## 22. தனுர் மாசப் பூசை(மார்கழி மாதப் பூசை)

**மா**ர்கழி மாதம் முப்பது நாட்களிலும் அதிகாலையில் சிவாகம விதிப்படி அர்ச்சிப்பவர்கள் இம்மை (இப்பிறப்பு), மறுமைப் (மறுபிறப்பு) பயன்களை அடைவார்கள். மார்கழி மாத அதிகாலையின் ஒரு சந்தியில் (இரண்டு காலங்கள் சந்திக்கும் நேரம்) செய்யும் பூசையானது, ஆயிரம் நாட்களில் செய்த சிவபூசைக்குச் சமமானதாகும். மார்கழித் திருவாதிரை நட்ஷத்திரத்தில் சிவபெருமானை வழிபட்டு சுவஸ்தி கமண்டலத்தைப் (தீட்சாமணையை - யோகம் செய்வோர் இருப்புகளில் ஒன்று) பூசித்து மூலலிங்கத்திற்கு விசேடமாக நெய்யாலும், இளவெந்நீராலும், ஸ்நபன கும்பத்தாலும் அபிசேகித்துத் திருவூஞ்சல் விழாச் செய்க.

❋ ❋ ❋

## 23. மகர மாசப் பூசை (தை மாதப் பூசை)

மகரராசியில் சூரியன் வரும் தை மாதத்தில் பூச நட்ஷத்திரம், பூரணையுடன் சேர்ந்துவரின் உத்தமம். சேராது வந்தாலும் நட்ஷத்திரம் பிரதானம். அத்தினம் யாகசாலையின் மத்தியிலுள்ள வேதிகையில் (பிரதான கும்பம் வைக்கும் மேடையில்), உமாகாந்த மண்டலத்தில் மண்டல ஈஸ்வரனைப் (மண்டல அதிபதி) பூசித்து, அத்தி மர சமித்தினால் (ஓம விறகு) அக்கினியில் விசேடமாக ஓமம் செய்க. விசேஷமாகத் தேனாலும், ஸ்நபனகும்பத்தாலும் அபிஷேகம் செய்து, கிருஷ்ணகந்தம் (குங்குமப்பூ, புனுகு, பச்சைக் கர்ப்பூரம் என்னும் வாசனைத்திரவியங்களைப் பனிநீர் கலந்து காரகில் கட்டையால் சேர்க்கப்படுகையில் உருவாகும் சந்தனம்) சாத்தி, உற்சவம் முதலியவைகளைச் செய்க. மகரமாத பூசையை விதிப்படி செய்தவர்கள் ஆயுள், செல்வம் ஆகியவற்றை அடைவார்கள்.

**மைப்பூசம் ஒண்கண் மடநல்லார் மாமயிலைக்**
**கைப்பூசு நீற்றான் கபாலீச்சரம் அமர்ந்தான்**
**நெய்ப்பூசும் ஒண்புழுக்க நேரிழையார் கொண்டாடும்**
**தைப்பூசம் காணாதே போதியோ பூம்பாவாய்.**

– திருஞானசம்பந்த மூர்த்திகள்

## 24. கும்ப மாசப் பூசை (மாசி மாதப் பூசை)

**கு**ம்பராசியில் சூரியன் வரும் மாசி மாதத்தில் மக நட்ஷத்திரத்தில் கம்பளபூசை செய்தவர்கள் ஞானத்தையும், புத்திர, பௌத்திர விருத்தியையும், சரீர ஆரோக்கியத்தையும், இஷ்ட சித்திகளையும், சிவதீட்சைப் பலனையும் எய்துவார்கள். பதும மண்டலத்தில் மண்டலேசுரனைப் பூசித்து, அக்கினியில் அரசமர சமித்தினால் விசேஷமாக ஓமம் செய்தல் வேண்டும்.

பஞ்சவர்ணமுள்ள இரத்தினக் கம்பளத்திலேனும், அது இல்லாவிடில் பருத்திநூல் வஸ்திரத்திலேனும் (துணி) நெய், பால், பச்சைக்கர்ப்பூரம் என்னும் இத்திரவியங்களை லேபனம்செய்து (பூசி) கம்பளத்தை அப்பாத்திரத்தில் வைத்துப் பூசித்துச் சர்வ அலங்காரங்களுடனும் வலம் வந்து சிவலிங்கத்தில் சாத்திப் பூசித்தல் வேண்டும்.

❃ ❃ ❃

## 25. மீன மாசப் பூசை (பங்குனி மாதப் பூசை)

**சூ**ரியன் மீனராசியில் சஞ்சரிக்கும் பங்குனி மாதத்தில் உத்தர நட்ஷத்திரத்தில் ததிபூசை (தயிர்பூசை) செய்தல் வேண்டும். யாகசாலை மேடையின் மத்தியில் சுவத்திக மண்டலத்தில் சிவனைப் பூசித்து நாயுருவிச்செடிச் சமித்தினால் ஓமம் செய்து சந்தனாதித் தைலம் முதலியவைகளால் அபிஷேகம் பண்ணி, விசேஷமாகத் தயிரினால் அபிஷேகித்து நைவேத்தியம் செய்து உற்சவம் செய்க. அதனால் ஆரோக்கியம் உண்டாகும்.

**மலி விழா வீதி மடநல்லார் மாமயிலைக்**
**கலி விழாக் கண்டான் கபாலீச்சரம் அமர்ந்தான்**
**பலி விழாப் பாடல்செய் பங்குனி உத்திரநாள்**
**ஒலி விழாக் காணாதே போதியோ பூம்பாவாய்.**

– சம்பந்தமூர்த்தி நாயனார் தேவாரம்.

❃ ❃ ❃

## 26. மேஷ மாசப் பூசை (சித்திரை மாதப் பூசை)

**சூ**ரியன் மேடராசியில் வரும் சித்திரை மாதத்திலே சித்திரை நட்ஷத்திரத்தில் இலட்சுமீகரத்தின் பொருட்டும், சர்வசம்பத்தின் (எல்லாச் செல்வத்தின்) பொருட்டும் தமனோற்சவம் செய்யத்தக்கது. தமனம் என்பது மருக்கொழுந்து. யாகசாலையின் மத்தியில், சர்வதோபத்திர மண்டலம் அமைத்து, அதில் பரமேசுரனை அருச்சித்து, ஓமம் செய்து, மருக்கொழுந்தைப் பூசித்து, வாத்திய சகிதமாக வலம் வந்து, சிவபெருமானுக்கு அதனைச் சாத்துக. விதிப்படி தமனோற்சவம் செய்யின், வேந்தனுக்கு வெற்றி உண்டாகும். புத்திர சம்பத்தும் நலமும் உளதாகும். வசந்தோற்சவமும் செய்க.

மனங்குளிர அன்னவர்கள் பின்னு முன் ஊன்
மருவில் நைமித்திகங்கள் வகுப்பான் மாதத்
தினங்கள் தொறும் உணர்ந்து மது மாதம் மேவத்
திருந்து தமனக விதியைச் செலுத்து முன்னா
அனங்கனது வளநகரம் அனையும் காலை
அந்நகர் போல் மன்னவன் இங்(கு)அமைக்க வென்ன
வினங்கொள் இரும் சனங்கள் பணிந்(து) இன்பம் எய்தி
எந்தை திரு வசந்தவிழா எழுவித்தார்ககள்.

மருக்கொழுந்தின் வரலாறு சோமசம்பு பத்ததியில் கூறப்பட்டுள்ளது. அது வருமாறு:- முற்காலத்தில் பரமசிவனுடைய கோபத்திலிருந்து தமனர் என்னும் பெயரையுடைய வைரவர் உற்பத்தியானார். அவரால் அசுரர் ஆகியோர் அடக்கப்பட்டனர். அதனால் சந்தோஷம் அடைந்த பரமேசுரன் அந்த தமன வைரவரை நோக்கி, நீ பூமியில் செடியாகத் தோன்றக் கடவாய்; உன்னுடைய தளிர் முதலியவற்றால் எம்மைப் பூசிப்பவர் மேலான நிலையை அடைவார். சித்திரைப்பூரணையில் மருக்கொழுந்தாலாகிய உற்சவத்தைச் செய்தால் சிறந்த பலனுண்டாம் என்று கூறியருளினார். இதனால் தமனோற்சவம் சிறந்தது என்று அறியப்படும்.

❁ ❁ ❁

# 27. இடப மாசப் பூசை (வைகாசி மாதப் பூசை)

**சூ**ரியன் இடபராசியில் வரும் வைகாசி மாதத்திலே விசாக நட்ஷத்திரத்திலே ஸ்கந்தபூசை (வாசனத்திரவியப் பூசை) செய்யத்தக்கது. சுவஸ்திக மண்டல பூசை செய்து வில்வமரச் சமித்தினால் ஓமம் பண்ணி, ஸ்நபனகும்ப பூசை செய்து, கஸ்தூரி, பச்சைக்கர்ப்பூரம் முதலிய வாசனைத் திரவியங்களோடு பன்னீரும் சேர்க்கப்பட்ட வாசனைத் திரவியத்தைப் பூசித்து சர்வ வாத்தியங்களோடும் வலமாக வந்து மூலமூர்த்திக்கு அபிஷேசம் செய்ய வேண்டும். வைகாசியில் கந்தபூசை செய்தவர் அடையும் பலன் சாயுச்சிய முத்தியாம். குமாரதந்திரப்படி சுப்பிரமணியருக்கு விசேஷ பூசை உற்சவம் செய்க.

❁ ❁ ❁

# 28. மிதுன மாசப் பூசை (ஆனி மாதப் பூசை)

**சூ**ரியன் மிதுனராசியில் வரும் ஆனி மாதத்தில் மூல நட்சத்திரத்தில் பழபூசை செய்க. மேடை அமைத்து நவநாப மண்டலத்தைப் பூசித்து, அரசமரச் சமித்தினால் ஓமம் செய்து பலா, வாழை, முதலிய பழவகைகளில்

பொருந்தாதவைகளை நீக்கி, பக்குவமான பழவகைகளினால் சேர்க்கப்பட்ட பஞ்சாமிர்தத்தையும் மற்றும் பழங்களையும் பூசித்துப் வலமாகக் கொண்டுவந்து மூலலிங்கத்திற்கு அபிஷேகம் செய்க. பின்பு ஸ்நபன கும்பத்தால் அபிஷேகம் பண்ணி உற்சவம் செய்க. ஆனி மாதத்தில் பழபூசை செய்தவர்கள் காரியசித்தியை அடைவார்கள்.

❋ ❋ ❋

## 29. கர்க்கடக மாசப் பூசை (ஆடி மாதப் பூசை)

**சூ**ரியன் கர்க்கடகத்தை அடைகின்ற ஆடி மாதத்திலே உத்தராட நட்ஷத்திரத்தில் க்ஷீரபூசை செய்க (க்ஷீரம் - பால்). யாகசாலையின் மத்தியில் மேடை அமைத்து சர்வதோபத்திர மண்டலத்தில் சிவபெருமானுக்குப் பூசை செய்து மாமரச் சமித்தால் ஓமம் செய்து பாலைப்பூசித்து அபிஷேகம் செய்து, பாலைக்காய்ச்சிப் படைக்க. விசேஷபூசை செய்து உற்சவம் செய்க. க்ஷீரபூசை விதிப்படி செய்வதினால் வெற்றியும் புண்ணியமும் முண்டாகும்.

❋ ❋ ❋

## 30. சிம்ம மாசப் பூசை (ஆவணி மாதப் பூசை)

**சூ**ரியன் சிம்மராசியில் செல்லுகின்ற ஆவணி மாதத்து அவிட்ட நட்ஷத்திரத்தில் சர்க்கரா பூசை செய்க. சுவாயம்புவ மண்டலத்தில் சிவனைப் பூசித்து மூங்கில் சமித்தால் ஓமம் செய்து, ஸ்நபன கும்ப அபிஷேகம் செய்க. எள்ளை நன்றாக கழுவிச் சுத்தம் செய்து சர்க்கரையுடன் கலந்து பாத்திரத்தில் இட்டுப் பூசித்து, நைவேதித்து அர்ச்சிக்க. விதிப்படி சர்க்கரா பூசை செய்தவர்கள் விரும்பிய சித்திகளைப் பெறுவார்கள்.

❋ ❋ ❋

## 31. கன்னி மாசப் பூசை (புரட்டாதி மாதப் பூசை)

**சூ**ரியன் கன்னிராசியில் செல்லும் புரட்டாதி மாதத்து உத்தரட்டாதியிலே சௌபாக்கிய சம்பத்தின் (பெரும் பாக்கியம்) பொருட்டு அபூபபூசை (அபூபம் - பணிகாரம்) செய்க. அபூப வகைகள்: வடை, தேன்குழல், எள்ளுண்டை முதலியவைகள். மேடையிலே பத்திர மண்டலத்தில் சிவபெருமானைப் பூசித்து நாயுருவிச் சமித்தால் ஓமம் செய்து, அபூபம் முதலியவைகளை நிவேதித்து, இராச உபசாரமாகச் சிவபெருமானைப் பூசிக்கவேண்டும். புரட்டாதியில் தேவிக்கு நவராத்திரிப் பூசை செய்ய வேண்டும். இப்பூசை செய்வோர் முடிவில்லாத இன்பத்தை நுகருவார்கள்.

**கன்னி மதியின் வரை உயிர்த்த கன்னி மகிழப் பேரன்பான**
**மன்னு நவராத்திரி பூசை மரபின் இயற்று முறைமையோர்**
**நன்னர் உலகம் பணி கேட்ப நவைதீர் செல்வத்திடை மூழ்கி**
**முன்னும் கதியின் இனிது உறீஇ முடிவில் இன்பம் நுகர்வாரால்.**
– பேரூர்ப்புராணம்.

❋ ❋ ❋

## 32. துலா மாசப் பூசை (ஐப்பசி மாதப் பூசை)

**சூ**ரியன் துலாராசியில் செல்லும் ஐப்பசி மாதத்தில் அச்சுவினி நட்சத்திரத்தில், சர்வ சௌபாக்கியத்தின பொருட்டு அன்ன அபிஷேகம் செய்க. அன்னம் உயிரை நிலைப்படுத்துவது ஆகையால் அன்ன அபிஷேகம் சிவப்பிரீதியாய் (சிவனுக்கு விருப்பமானது) உள்ளது. அன்னரூபம், சிவரூபம் என்று நினைக்கத்தக்கது. யாகசாலையின் மேடையில் கௌரீலதா மண்டலத்தில் சிவனைப் பூசித்து ஓமம் செய்க. அதிசூடுள்ள அன்னத்தையும், குறைந்த சூடுள்ள அன்னத்தையும் நீக்கிச் சாதாரண சூடுள்ளதும் பக்குவமாகச் சமைக்கப்பட்டதுமாகிய அன்னத்தை எடுத்து, அதைச் சுத்தபாத்திரத்தில் போட்டு நெய்யினால் சுத்திபண்ணிப் (நெய் சேர்த்து) பரிசாரகனுடைய (உதவி அந்தணருடைய) சிரசில் வைத்து வாத்தியகோஷத்துடன் வலம் வந்து, மூலபேரத்தில் (மூலவடிவம்) அபிஷேகம் செய்க. சுத்த அன்னம், தேன் அன்னம், தயிர் அன்னம், பாயச அன்னம், எள்ளு அண்னம், சர்க்கரை அன்னம், பருப்புப் பொங்கல், புளி அன்னம் முதலிய அன்ன வகைகளை நிவேதித்துப் பூசித்து உற்சவம் செய்க.

❋ ❋ ❋

## 33. விருச்சிக மாசப் பூசை (கார்த்திகை மாதப் பூசை)

**சூ**ரியன் விருச்சிக ராசியில் செல்லும் கார்த்திகை மாதத்தில் கார்த்திகை நட்ஷத்திரத்தில் தீபபூசை செய்க. பூரணையிலும் தீப உற்சவம் செய்யலாம். யாகமேடையில் சர்வதோபத்திர மண்டலம் இட்டுச் சிவபிரானைப் பூசித்து அத்திமரச் சமித்தால் ஓமம் செய்க. மூல மூர்த்திக்கு லாஜபூசை (லாஜம் - நென்மலர்) செய்க. தீப தண்டத்தைத் (தீபத்தைத் தாங்கும் தடி - வாழைத்தண்டு) தாபித்துத் தீப அலங்காரம் செய்க. ஒரு பாத்திரத்தில் பஞ்சதீபம் ஏற்றி சோமாஸ்கந்தருடன் கிராமத்தை வலம் வந்து, தண்டத்தில் தீபத்தை சூரிய அஸ்தமன காலத்தில் ஏற்றி நான்கு திசைகளிலும் சுவாலிக்கச் செய்க. சுவாலையை இலிங்கமாகப் பாவித்து வணங்க வேண்டும். அக்கினி இல்லாமல் போனதும் தண்டத்தை ஐந்து பாகம் பண்ணி மூன்று பங்கு மேலும், இரண்டு பங்கு கீழுமாக நடுவில் தண்டத்தை வெட்டுக. தண்டம் கிழக்கில் விழுந்தால் அரசனுக்கும், பிரசைகளுக்கும் விருத்தியுண்டாகும்.

அக்கினித் திக்கில் (தென்கிழக்கில்) விழுந்தால் மரணமாம். தெற்கில் விழுந்தால் திருடர் பயமாம். நிருதியில் (தென் மேற்கு) விழுந்தால் அரச பயமாம். மேற்கில் விழுந்தால் மோட்ஷ சித்தியாம். வாயுவில் (வட மேற்கு) விழுந்தால் அறிவுக் கேடாம். வடக்கில் விழுந்தால் செல்வமாம். ஈசானத்தில் (வட கிழக்கு) விழுந்தால் வெற்றியுண்டாம். விழுந்தபின் அந்த பஸ்மத்தை (நீறு) எடுத்து, சுவாமிக்கும் சண்டேசுரருக்கும் சாத்துக. ஆசாரியர் (குருக்கள்) முதலியோர் தரித்துக் கொள்க. விதிப்படி தீப உற்சவத்தைச் செய்தவர் விரும்பிய பலனை அடைவர்.

**வளைக் கை மட நல்லார் மாமயிலை வண் மறுகில்**
**துளக்கில் கபாலீச்சரத்தான் தொல் கார்த்திகை நாள்**
**அளம் ஏந்தி இளமுலையார் தையலார் கொண்டாடும்**
**விளக்கீடு காணாதே போதியோ பூம்பாவாய்.**

— திருஞானசம்பந்தர்.

**நித்தியத் திருநாள் பக்க விழா நிகழ் திங்கட்சாறும்**
**புத்தலர் இளவேனிற்கண் பொருவரும் வசந்தம் கோடை**
**மெத்திய முதுவேனிற்கண் மிதவை நீராட்டும் மாரி**
**மொய்த்த கார்ப் பருவம் தன்னில் பவித்திர முதுவிழாவும்.**

**அன்புறு கூதிர்க்காலை ஐப்பசிப் பூரச் சாறு**
**முன்பனிப் பருவம் தன்னில் வைகறை முகிழ்த்த பூசை**
**பின்பனிப் பருவம் தன்னில் பிறங்கு பொன் ஊசல் ஆட்டு**
**என்பன சிறப்புமான இயற்றுவோர் வீடு சேர்வார்.**

— சிவஞானசுவாமிகள் காஞ்சிபுராணம்.

❁ ❁ ❁

# 34. திரு ஊஞ்சல் (டோள உற்சவம்)

**சி**வபெருமான் திருவருட்சத்தி வடிவாய் அமைந்த ஊஞ்சலின் மீது இருந்து ஆடுதல், ஆன்மாக்களுடைய குற்றங்களைக் கெடுத்துப் பிறவித் துன்பங்களையும், பிறவிக்குக் காரணமாகிய பாசங்களையும் நீக்கி, ஆன்மாக்களை அடிமை கொண்டு திருவருள் வாயிலாகத் தம்முடன் சேர்க்கும் குறிப்பாம். அத்திருவருளாகிய திருவடியே ஆன்மாக்களுக்கு உறைவிடமாம்.

**ஊர் திரை வேலை உலாவும் உயர் மயிலைக்**
**கூர் தரு வேல் வல்லார் கொற்றம் கொள் சேரிதனில்**
**கார் தரு சோலைக் கபாலீச்சரம் அமர்ந்தான்**
**ஆதிரைநாள் காணாதே போதியோ பூம்பாவாய்.**

நற் தாமரை மலர்மேல் நான்முகனும் நாரணனும்
உற்(று) ஆங்(கு) உணர்கிலா மூர்த்தி திருவடியைக்
கற்றார்கள் ஏத்தும் கபாலீச்சரம் அமர்ந்தான்
பொற்றாப்புக் காணாதே போதியோ பூம்பாவாய்.

– திருஞானசம்பந்த மூர்த்திகள்.

❋ ❋ ❋

# 35. பவித்திர உற்சவம்

**ஆ**திதைவிகம் (தெய்வத்தால் வரும் துன்பம்), ஆதிபௌதிகம் (பஞ்சபூதங்களால் வரும் துன்பம்), ஆத்தியான்மிகம் (தன்னால் வரும் துன்பம்) என்னும் மூவகைத் துன்பங்களை நீங்குதல் பொருட்டுப் பவித்திரம் (நூல்) சாத்துவதாகும். பூசைகளின் குறைவை நீக்கிப் பரிசுத்தம் செய்வதால் நூல் பவித்திரம் எனப்பெயர் பெற்றது. ஒரு வருடத்தில் நாள் தோறும் செய்யும் பூசையில் மந்திரலோபம் (மந்திரக்குறைவு), திரவியலோபம் (திரவியக்குறைவு), கிரியாலோபம் (கிரியைக் குறைவு) முதலியவைகளினாலும், மோகத்தினாலும் (ஆசை), அஞ்ஞானத்தினாலும் (அறிவின்மை), இராச, சோர பயம் (அரசராலும், கள்வராலும் ஏற்படும் பயம்) முதலியவற்றினாலும் நேர்ந்த குறைவைப் பூர்த்தி செய்யும் பொருட்டுப் பவித்திர சமர்ப்பணம் (நூல் சாத்துதல்) செய்யவேண்டும். இந்தப் பவித்திரம் நாள் தோறும் செய்வது தைவசிகம் என்றும், வருஷம் தோறும் செய்வது வார்ஷிகம் என்றும் இருவகையாம். இருவகையில் ஒன்று மாத்திரம் செய்தால் போதாதோ எனில் போதாதாம். ஏனெனில் விசேட கர்மமாகையால் நாள் தோறும் அதனைச் செய்ய முடியாது; ஆகையால் சூத்திரத்துக்குப் (நூலுக்குப்) பதிலாகப் புஷ்பம், தருப்பை முதலியவற்றால் நாள்தோறும் செய்ய வேண்டும். அந்தக் குறைவு பூர்த்தியாக வருஷ பவித்திரமும் செய்யவேண்டும். இதன் விரிவை பவித்திர உற்சவ விதியில் காண்க. (இந்த உற்சவம் செய்ய ஆடி மாதம் உத்தமம். ஆவணி மாதம் மத்திமம். புரட்டாதி மாதம் அதமம்.)

உரிஞ்சாய வாழ்க்கை அமண் உடையைப் போர்க்கும்
இரும் சாக்கியர்கள் எடுத்(து) உரைப்ப நாட்டில்
கருஞ்சோலை சூழ்ந்த கபாலீச்சரம் அமர்ந்தான்
பெரும் சாந்தி காணாதே போதியோ பூம்பாவாய்.

– திருஞானசம்பந்த மூர்த்திகள்.

"ஆடி புரட்டாதிக்(கு) உட்புகழ் பதினான்(கு) அட்டமிகள் ஒன்றில் பூசை
தரும் தகுதி மிகுதி குறை தவறு நீங்கத்தந்து நவம்தரும் பந்தர் சமைத்(து)
- யாகம்
பரந்த விரத அங்கமுடன் பவித்திரத்தைப் பயில்வித்து."

– கோயிற்புராணம்.

(பெரும்சாந்தி - பவித்திரோற்சவம்)

ஆடிப்பூரத்தில் உமாதேவியாருக்குப் பூர கர்ம உற்சவத்தைச் செய்க. அது சர்வ சாந்தியையும், சகல சித்தியையும், சுபத்தையும், புண்ணியத்தையும் கொடுக்கும்.

**ஆடிமதியில் பூரத்தில் அகிலம் உயிர்த்த பார்ப்பதி தன்**
**தோடு விரி தாமரைப் பதங்கள் தொழுது வணங்கிப் பூசிப்போர்**
**பீடு விரியும் விழுச்செல்வம் பெருக வாழ்ந்து கடைநாளில்**
**சேடு விரியும் அவள் உலகில் சென்று போகம் திளைப்பாரால்.**

– பேரூர்ப்புராணம்.

❁ ❁ ❁

## 36. உற்சவ மாதம்

உற்சவ மாதங்கள் சாவனமாதம் (முப்பது நாட்கள் கொண்ட சூரியச் சுற்றினை அடிப்படையாகக் கொண்ட மாதம்), சாந்திரமாதம் (பூர்வ பக்கத்துப் பிரதமை முதல் அமாவாசை இறுதியாக வரும் சந்திரச்சுற்றினை அடிப்படையாகக் கொண்ட மாதம்), நட்ஷத்திரமாதம் (நட்ஷத்திரங்களை முக்கியப்படுத்தி கணிக்கப்படும் மாதம்), சௌரமாதம் (சூரிய மாதம்) என நான்கு வகைப்படும். இந்த நான்கு மாதங்களிலும் உற்சவத்தைச் செய்யலாம். சௌர மாதத்தில் சாகல்யம் (கொடியேற்றம் முதல் தீர்த்தோற்சவம் வரை செய்யப்படுவது), பாவனம் (அலங்கார உற்சவம்) என்னும் உற்சவங்கள் செய்யத்தக்கன. சாவனம், சாந்திரம், நட்ஷத்திரம் என்னும் மாதங்களில் சாந்தி (பரிகாரம்), மங்களம் (சுபகாரியம்) என்னும் உற்சவங்கள் செய்யத்தக்கன. எல்லா உற்சவங்களும் சௌரமாதத்தில் செய்யத்தக்கன. சாவனமாத உற்சவம் சாந்தியையும், சாந்திரமாத உற்சவம் முத்தியையும், நட்ஷத்திரமாத உற்சவம் பாபநாசத்தையும், சௌரமாத உற்சவம் பிரஜாவிருத்தியையும் கொடுக்கும்.

❁ ❁ ❁

## 37. சாவன மாத உற்சவம்

அரசனுடைய ஜன்ம நட்ஷத்திரம், பட்டாபிஷேகதினம், யுத்த ஆரம்பதினம், லயதினம் (ஒடுக்கம்), எசமானுடைய நட்ஷத்திரம், கிராம நட்ஷத்திரம் முதலியவற்றைத் தீர்த்த உற்சவ முடிவு நாளாக நிச்சயிப்பது **சாவன உற்சவமாம்.** பிரதிஷ்டா நட்ஷத்திரத்தை அந்தமாகக் கொள்வது **பிரதிஷ்ட உற்சவமாம்.** இது புத்தி, முத்திகளைக் கொடுக்கும்.

❁ ❁ ❁

## 38. சௌர மாத உற்சவம்

**சூ**ரியன் ஒவ்வொரு ராசிகளிலும் செல்லும் காலம் சங்கிராந்தி எனப்படும். பிராதக்காலத்திலாவது (காலைப்பொழுதிலாவது) சங்கம காலத்திலாவது (சந்தி), மத்தியான்னத்திலாவது (மதியம்), அபரான்னத்திலாவது (மாலை), பிரதோஷ காலத்திலாவது, அர்த்தராத்திரியிலாவது, இராத்திரியின் இறுதியிலாவது சங்கிராந்தி சம்பவிக்கின்றதோ, அக்காலத்தில் தீர்த்தத்தை ஆரம்பிக்க, அத்தீர்த்தம் எல்லாப் பலனையும் கொடுக்கும். சௌரமாத உற்சவம் சர்வாரிட்டங்களையும் (சர்வ வினைகளையும்) நீக்கும்.

❋ ❋ ❋

## 39. சாந்திர மாத உற்சவம்

**எ**ல்லா மாதங்களிலும் பூரணையையும், அமாவாசையையும், வைகாசியில் கிருஷ்ண (அபரபக்க) சதுர்த்தசியையும், மாசியில் சஷ்டியையும், ஆனியில் அட்டமியையும் முடிவாகக்கொண்டு தீர்த்தோற்சவத்தைச் செய்வது சாந்திரமாத உற்சவம் எனப்படும். அது உத்தமத்தில் உத்தமம் ஆகும்.

❋ ❋ ❋

## 40. நட்ஷத்திர மாத உற்சவம்

**தை** மாசத்தில் பூசத்தையும், மாசியில் மகத்தையும், பங்குனியில் உத்தரத்தையும், சித்திரையில் சித்திரையையும், வைகாசியில் விசாகத்தையும், ஆனியில் மூலத்தையும், ஆடியில் உத்தராடத்தையும், ஆவணியில் திருவோணத்தையும், புரட்டாதியில் பூரட்டாதியையும், ஐப்பசியில் அச்சுவினியையும், கார்த்திகையில் கார்த்திகையையும், மார்கழியில் திருவாதிரையையும், எல்லா மாதங்களிலும் திருவாதிரையையும், திருவோணத்தையும், ரோகிணியையும் அந்தமாகக் கொள்வது நட்ஷத்திரமாத உற்சவமாகும்.

தானம், ஆலயசேவை, ஓமம், தீர்த்தம், வேத அத்தியாயனம், தமிழ் வேதபாராயணம் முதலியவைகளை எல்லாச் சம்பத்தையும் (செல்வத்தையும்) அடைதல் காரணமாக அக்காலத்திலே விசேஷமாகச் செய்க.

ஒரு மாதத்தில் இருமுறை திதியாவது, நட்ஷத்திரமாவது வரின் முந்தியதை விட்டுப் பிந்தியதில் தீர்த்தோற்சவத்தைச் செய்க.

ஒரு மாதத்தில் இரண்டுமுறை நட்ஷத்திரம் வந்தால், பிந்திய நட்ஷத்திரத்தில் சங்கிராந்தி நிகழும்போது முந்திய நட்ஷத்திரத்தில் செய்க. முந்திய நட்ஷத்திரம் பூரணையோடு கூடிவரின் பிந்திய நட்ஷத்திரத்தை விட்டு முந்திய நட்ஷத்திரத்தில் செய்க.

ஒவ்வொரு வருஷத்திலும், எந்த மாதத்தில், எந்தத் திதியில், எந்த நட்ஷத்திரத்தில் உற்சவம் செய்யப்பட்டு வந்ததோ, அந்தத் திதி, நட்ஷத்திரத்திலேயே உற்சவத்தைச் செய்தல் வேண்டும். செய்யாவிடின் கோயில் அதிகாரிகளுக்கும், கிராம மக்களுக்கும் நலம் உண்டாகாது. சிகரத்தாபனம் (கோபுரக்கலசம்) இல்லாத ஆலயங்களில் உற்சவம் செய்தல் ஆகமத்திற்கு உடன்பாடானது அன்று. உற்சவங்கள் மூன்றுநாள், ஐந்துநாள், ஏழுநாள், ஒன்பதுநாள், பதின்மூன்றுநாள், பதினைந்துநாள், பதினேழுநாள் முதலிய பிரிவுகளை உடையன. ஏழுநாள் முதலாகிய விழாக்களுக்கே துவஜாரோகணம் (கொடியேற்றம்) செய்யத்தக்கது.

மகோற்சவத்தின் மத்தியில் வேறு உற்சவம் வந்தால் இரட்சாபந்தனம் (காப்புக் கட்டுதல்), யாகம், தீர்த்தம் என்பவைகளை விடுத்து அந்த உற்சவத்தை மாத்திரம் செய்க. இதற்குப் பிரமாணம் காமிக ஆகமத்திலும், பீமசங்கிதையிலும் காண்க.

ஆசாரியரும், கோயில் அதிகாரியும், ஊரவர்களும் உற்சவ புண்ணிய காலங்களிலே ஒரு நேரப் போசனம் (உணவு) உண்டு, விதிப்படி விரதம் அநுட்டித்தல் கடனாகும். தருப்பைப்பாய் முதலியவற்றில் சயனித்தலும் (உறங்குதலும்), தைலாப்பியங்கம் (எண்ணெய் முழுக்கு), ஸ்திரி சம்போகம் (உடலுறவு) முதலியவற்றை விடுதலும் முறையாகும். அந்தக் கிராமவாசிகள் அவரோகணம் (கொடியிறக்கம்) வரை விவாகம் முதலிய சுபக்கிரியைகளும், பிரயாணமும் செய்தல் ஆகாது.

ஒவ்வொரு தினங்களிலும் காலைச்சந்தி (காலங்கள் சந்திக்கும் நேரம்) உற்சவத்தில் செய்யும் ஓமம், பலி முதலியவைகளைப் பத்து நாழிகைக்கு உள்ளாகவும், சாயங்கால (மாலை) ஓமம், பலி முதலியவைகளை இரவு பத்து நாழிகைக்குள்ளாகவும் செய்தல் உத்தமம். கால அதீதத்தில் (காலம் தவறி) செய்யும் கிரியைகள் பயன்படாது ஆகையால் காலம் தவறாது சிரத்தையோடு கிரியைகளைச் செய்தல் வேண்டும் (ஒரு நாழிகை இருபத்துநான்கு நிமிடம்).

❋ ❋ ❋

# 41. உற்சவ பேதம்

**உ**ற்சவம் சாகல்யம், பாவனம், சாந்தி, மாங்கல்யம் என நான்கு வகைப்படும்.

| | | |
|---|---|---|
| **சாகல்யம்** | : | கொடியேற்றம் முதல் தீர்த்தம் வரையிலான உற்சவம். |
| **பாவனம்** | : | சாகல்ய உற்சவத்திற்குக் கூறியதில் கொடியேற்றம் இன்றி மற்றெல்லாக் கிரியைகளையும் செய்வது. |
| **சாந்தி** | : | பிராதக்காலத்தில் (காலைப் பொழுதில்) ஓமமும், பலியும் மாலையில் உற்சவமும் செய்வது. |
| **மாங்கல்யம்** | : | எசமானும், குருவும் ஒரு தினத்தை முடிவு நாளாக நியமித்துச் செய்யும் சிவ உற்சவம். |

சாகல்ய உற்சவமானது சௌரம், சாந்திரம், சாவித்திரம், கௌமாரம், தைவிகம், பௌவனம், பௌதிகம், கௌணம், சைவம் என ஒன்பது வேறுபாட்டைக் கொண்டது.

ஸ்ரீமத் உத்தரகாரண ஆகமத்தில் கூறப்பட்டபடி உற்சவ பேதங்களும், அதன் பயன்களும் பின்வருமாறு:

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | **சௌரம்** | 27 நாள் | - உத்தமம் | - சுகத்தைக் கொடுக்கும். |
| 2. | **சாந்திரம்** | 17 நாள் | - உத்தமம் | - சுகத்தைக் கொடுக்கும். |
| 3. | **சாவித்திரம்** | 15 நாள் | - உத்தமம் | - சுகத்தைக் கொடுக்கும். |
| 4. | **கௌமாரம்** | 13 நாள் | - மத்திமம் | - வெற்றியைக் கொடுக்கும். |
| 5. | **தைவிகம்** | 09 நாள் | - மத்திமம் | - வெற்றியைக் கொடுக்கும். |
| 6. | **பௌவனம்** | 07 நாள் | - மத்திமம் | - வெற்றியைக் கொடுக்கும். |
| 7. | **பௌதிகம்** | 05 நாள் | - அதமம் | - செல்வத்தைக் கொடுக்கும். |
| 8. | **கௌணம்** | 03 நாள் | - அதமம் | - செல்வத்தைக் கொடுக்கும். |
| 9. | **சைவம்** | 01 நாள் | - அதமம் | - செல்வத்தைக் கொடுக்கும். |

சூட்சும ஆகமத்தில் கூறப்பட்டபடி உற்சவ பேதங்களும், அதன் பயன்களும் பின்வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| 1. | **சைவம்** | 01 நாள் | - அதமம் |
| 2. | **கௌணம்** | 03 நாள் | - அதமம் |
| 3. | **பௌதிகம்** | 05 நாள் | - அதமம் |
| 4. | **பௌவனம்** | 07 நாள் | - மத்திமம் |
| 5. | **தைவிகம்** | 09 நாள் | - மத்திமம் |

| | | | |
|---|---|---|---|
| 6. **பைத்ருகம்** | 11 நாள் | - | மத்திமம் |
| 7. **கௌமாரம்** | 13 நாள் | - | உத்தமம் |
| 8. **சாவித்திரம்** | 15 நாள் | - | உத்தமம் |
| 9. **சாந்திரம்** | 17 நாள் | - | உத்தமம் |

குமாரதந்திர ஆகமத்திலே கூறப்பட்டபடி உற்சவ பேதங்களும், அதன் பயன்களும் பின்வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| **பைத்ருகம்** | 11 நாள் | - | உத்தமம் |
| **சௌக்கியம்** | 09 நாள் | - | உத்தமம் |
| **ஸ்ரீகரம்** | 07 நாள் | - | உத்தமம் |
| **பௌதிகம்** | 05 நாள் | - | உத்தமம் |
| **சாத்துவிகம்** | 03 நாள் | - | உத்தமம் |
| **சிவம்** | 01 நாள் | - | உத்தமம் |

இந்த ஆறு வகைகளுள் பௌதிகம், சாத்துவிகம், சைவம், ஆகிய உற்சவங்களில் துவஜாரோகணம் (கொடியேற்றம்) செய்வதைத் தவிர்க்க. ஸ்ரீகரம் முதலியவைகளில் துவஜாரோகணம் செய்க.

சுப்பிரபேத ஆகமத்திலே கூறப்பட்டபடி உற்சவ பேதங்களும், அதன் பயன்களும் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| **09 நாள் விழா** | - | உத்தமம் |
| **07 நாள் விழா** | - | மத்திமம் |
| **05 நாள் விழா** | - | அதமம். |

❋ ❋ ❋

# 42. ஒரு நாள் விழா

**ஒ**ருநாள் உற்சவமானது **கோஷணம், கேவலம்** என இரு வகைப்படும். பேரீதாடனத்தோடும் (மேளவாத்தியங்களோடும்), இரட்சாபந்தனத்தோடும் (காப்புக் கட்டுதலோடும்) செய்யும் ஒருநாள் விழா **கோஷணம்** எனப்படும். இரட்சாபந்தனமும், பேரீதாடனமுமம் இன்றிச் செய்யும் ஒருநாள் விழா **கேவலம்** எனப்படும். கோஷணம் எல்லாச் சித்தியையும், கேவலம் முத்தியையும் கொடுக்கும்.

கர்த்தாவினுடைய (முதல்வர்) ஜனன தினம் (பிறந்த தினம்), அவர் முத்தியடைந்த தினம், சங்கிராந்தி (மாதப்பிறப்பு), சதுர்த்தசி, அட்டமி, அமாவாசை, அயன புண்ணியகாலம் (உத்தராயணம், தெட்சணாயணம் தொடங்கும் நாட்கள்), கிரகண புண்ணியகாலம் (சந்திர ·கிரகணம்,

சூரியகிரகணம்), தமனோற்சவம் (தமனம் - மரிக்கொழுந்து), பவித்திரோற்சவம் (பவித்திரம் - நூல்), மாதபூசை, கார்த்திகை தீபம், சிவராத்திரி முதலிய புண்ணிய காலங்களில் ஒரு நாள் உற்சவம் செய்க.

❁ ❁ ❁

# 43. பதினெட்டு நாள் விழா

**ப**தினெட்டு நாள் உற்சவத்தில் கணேசயாகம் ஆறுகாலமும்; கந்தயாகம் மூன்றுகாலமும், பக்தயாகம் (பக்தர்கள் - சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் போன்றோர்) மூன்று காலமுமாகப் பன்னிரண்டு காலம் பூசைபண்ணி யாகத்தைப் பூர்த்தி செய்து அபிஷேகம் செய்க. ஏழாம் நாள் சாயங்காலத்தில் ஆரம்பித்து ஒன்பதாம் நாள் பிராதக்கால (காலை) உற்சவம் வரையும் அஸ்திரயாகம்(அஸ்திர தேவர்களுக்கு செய்யப்படும் யாகம்) நான்கு காலமென்று சொல்லப்படுகின்றது. யாக முடிவில் அஸ்திரராஜருக்கு அபிஷேகம் செய்க. உற்சவத்திற்கு முதலிலும், நடுவிலும், முடிவிலும் சிவ பக்தர்களுக்கு விதிப்படி உற்சவத்தைச் செய்க.

ஒன்பதாவது நாள் சாயங்காலத்தில் மகா யாகத்தை ஆரம்பித்து, பதினெட்டாம் நாள் பிராதக்காலம் (காலை) வரையுமுள்ள ஒன்பது தினங்களிலும் பூசைசெய்து முடிக்க.

முதலில் கணேச யாக வேதிகையில் (பிரதான கும்பம் வைக்கும் மேடை) விக்கினேசுரர், சக்தி, அட்ட வித்தியேசுரர்களைத் தாபிக்க. பஞ்ச (ஐந்து) குண்டத்தையாவது, ஏக (ஒன்று) குண்டத்தையாவது போடுக. சமித்து, நெய், அன்னம், நெல், மலர், மோதகம், அபூபம் (பலகாரங்கள்), பலா, மா, வாழை முதலிய பழவகைகள், நாளிகேரம் (தேங்காய்), கருப்பந்துண்டு, முதலியவைகளால் குரு ஓமம் பண்ணுக. ஓமத்தின் முடிவில் பலியையும், பலி முடிவில் உற்சவத்தையும் செய்தல் முறையாகும்.

அஸ்திர யாகத்தில் அஸ்திர மூர்த்தியையும், சக்தியையும், அஷ்ட வித்தியேசுரர்களையும் பூசிக்க. மகா யாகத்தில் விசேஷமாக வேதி மத்தியில் சிவனையும், சக்தியையும், அஷ்ட வித்தியேசுரர்களையும் பூசிக்க. நவ (ஒன்பது) குண்டத்தில் விசேஷமாக ஓமம் செய்க. ஒவ்வொரு தினமும் சாயங்காலத்திலும், பிராதக் (காலை) காலத்திலும் விதிப்படி பூசையும், ஓமமும் செய்து பலி போடுக. பலியின் முடிவிலே உற்சவம் செய்க. முதலில் நித்திய உற்சவப் பலியும், பின்பு துவசாதி (கொடிக்கம்பம்) முதல் பலிபீடம் முடிவாக உற்சவப் பலியும் இடுக. இந்திரன் முதலிய தேவர்களுக்குப் பலியிட்டு அதன்பின் தினத்திற்குரிய தேவருக்குப் பலியிடுக.

ஆறாம் நாள் உற்சவத்தில் சீர்காழியில் திருஞானசம்பந்தப் பிள்ளையாருக்கு ஞானப்பால் கொடுத்த லீலா பாவனை (திருவிளையாடலை அபிநயித்து) செய்க. அந்த உற்சவத்தால் உமாதேவியார் பிரீதியடைவர் (மகிழ்ச்சியடைவார்). சமணர் கழுவேறிய பாவனையும் செய்க.

ஏழாம் நாள் உற்சவத்தில் பிச்சாடனமூர்த்தியை அலங்கரித்து, பிராமணருடைய ஆச்சிரமங்களிலும், சிவபக்தர்களுடைய ஆச்சிரமங்களிலும் நிருத்தம் (நடனம்) செய்து பிச்சை ஏற்றலைப் பாவனையாகச் செய்க.

எட்டாம் நாள் உற்சவத்தில் அபரான்னத்திலே (மாலையிலே) அருச்சுனனுடைய தவ சோதனை செய்த திருவிளையாடலையும், மிருக யாத்திரையையும் (வேட்டைத் திருவிழா) செய்க.

ஏழாம் நாளும் ஒன்பதாம் நாளும் நடேசருக்கு உற்சவம் செய்க. உரிய வாரங்களில் (கிழமைகளில்) தைலாப்பியங்கம் (எண்ணெய் முழுக்கு) செய்க.

சூர்ண (பொற்சுண்ணம்) உற்சவம், தீர்த்தம், மகா பூர்ண ஆகுதி, யாக கும்பாபிஷேகம், அதன்பின் துவஜ அவரோகணம் (கொடியிறக்கம்), லோகபாலவிசர்ச்சனம் (அட்ட திக்குப் பாலகர்களையும் அனுப்புதல்), மௌன உற்சவம், சக்தி உற்சவம், உடுபாரோபணம் (உடுபம் - தெப்பம் உடுபாரோபணம் - தெப்பவிழா), சண்ட யாகம் (சண்டேசுர உற்சவம்), ஆச்சாரிய உற்சவம் செய்க.

❁ ❁ ❁

## 44. இருபத்தேழு நாள் விழா

**கொ**டியேற்றத்திற்கு முதல்நாள் இரவு துவச அங்குரார்ப்பணத்தைச் (கொடிமரத்தைச் சுற்றி முளையிடுதல்) செய்க. விருஷபத்துக்கு (கொடிச்சீலை நந்திக்கு) அதிவாசக் கிரியைகளைச் (ஆரம்பச் சடங்கு) செய்க. மறுநாள் காலைப்பொழுதில் விருஷப யாகத்தைச் சமாப்தி செய்து (முடிவு செய்து), துவச படத்தை (கொடித்துணி) வலம் செய்து, துவச பீடத்துக்குத் (கொடித்தம்ப பீடத்திற்கு) தெற்குப் பக்கத்தில் தாபிக்க. மண்டபத்துக்கு வெளியில் கொடித்தம்ப பீடத்தினுடைய தெற்குப் பக்கத்தில் சந்திரசேகர நாயகரை வடக்கு முகமாகத் தாபனம் செய்க. அஸ்திர மூர்த்தியை நன்றாக அர்ச்சிக்க. பின்பு புண்ணிய யாகத்தைச் செய்க. அபிஷேகம் நியாசம் (கிரியை) முதலியவைகளைச் செய்க. கயிற்றினால் கொடித்துணியைக் கட்டி ஸ்திர ராசியில் (இடபம், சிம்மம், விருட்சிகம், கும்பம்) கொடியேற்றம் செய்க. சக்தி உற்சவத்தில் உபய ராசியில் (மிதுனம், கன்னி, தனுசு, மீனம்) கொடியேற்றம் செய்க. யாக

ஆரம்பங்களுக்கு முதலில் யாக அங்குரார்ப்பணம் (முளையிடுதல்) செய்க. பின்பு யாக பூசையைச் செய்து ஓம கருமங்களைச் செய்க.

கொடியேற்ற தினத்தில் சாயங்காலம் தொடங்கி பதின் மூன்றாம் தினம் காலை வரையும் பன்னிரண்டு தினங்களுக்கு கணேச யாக பூசை செய்து யாக கும்பங்களைக் கணபதிக்கு அபிஷேகம் செய்க.

பதின்மூன்றாம் உற்சவத் தினத்தன்று இரவு அஸ்திர யாகத்தைத் தொடங்கி ஐந்து தினம் பூசித்து, பதினெட்டாம் உற்சவத் தினத்தன்று காலையில் அஸ்திர தேவரில் அஸ்திரகும்பத்தை அபிஷேகம் செய்க.

பதினெட்டாம் நாள் மாலையில் மகா யாகத்தைத் தொடங்குக. மகா யாகத்தில் தீர்த்தத்திற்கான அங்குரார்ப்பணம் செய்க.
மகா யாகபூசையை ஒன்பது தினங்களுக்குச் செய்க. இருபத்தேழாம் நாள் காலையில் தீர்த்தோற்சவத்தின் பின் யாக கும்பங்களை மூர்த்திக்கு அபிஷேகம் செய்க.

❋ ❋ ❋

# 45. பதினொரு நாள் விழா

| | | |
|---|---|---|
| முதல் விழா | : | பிரகிருதி (மாயா) நடனம் |
| இரண்டாம் விழா | : | இருவினை (நல்வினை, தீவினை) நடனம் |
| மூன்றாம் விழா | : | முக்குண (சாத்வீகம், இராஜசம், தாமசம்) நடனம் |
| நான்காம் விழா | : | அந்தக்கரண (மனம், சித்தம், புத்தி, அகங்காரம்) நடனம் |
| ஐந்தாம் விழா | : | பஞ்சேந்திரிய (மெய், வாய், கண், மூக்கு, செவி) நடனம் |
| ஆறாம் விழா | : | காமாதியாறின் (காமம், குரோதம், மதம், மார்ச்சரியம், லோபம், மோகம்) நடனம் |
| ஏழாம் விழா | : | சப்த (ஏழு) கோடி மகாமந்திர பத நடனம் |
| எட்டாம் விழா | : | வித்தியா தத்துவ (காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன், பிரகிருதி மாயை), ஆணவ நடனம் |
| திருக்காப்பு நாள் | : | திரோதாயி (மறைப்புச் சக்தி) நடனம், திருச்சாந்து திருவெழுச்சியில் நவ (ஒன்பது) பத நடனம், திருவுலாப் புறத்தில் சத்தி முத்தி நடனம், திருவனந்தலில் வாதனை (வாசனை) நடனம். |
| பத்தாம் விழா | : | பேரின்ப, அதீத (மேற்பட்ட) நடனம் |
| பதினோராம் விழா | : | பதி, பசு, பாச நடனம் |

❋ ❋ ❋

# 46. பலிக்கிரமம் (பலி ஒழுங்கு)

முதலில் கொடியும், இரண்டாவதாக சங்கு, பேரி (மேளம்), தாளம் என்னும் வாத்தியங்களும், மூன்றாவதாக ஆசாரியரும், அதன்பின் அஸ்திரதேவரும், ஐந்தாவதாகப் பலிபீடமும் செல்லுதல் வேண்டும்.

❋ ❋ ❋

# 47. ஒரு தினம்

ஒரு நாள் உற்சவத்தில் முதல் நாள் மாலையில் ஆரம்பித்து, மறு நாள் காலையில் தீர்த்தோற்சவத்தைச் செய்க. ஒரு நாள் உற்சவத்தில் இரண்டு காலப் பலியிடுக.

❋ ❋ ❋

# 48. மூன்று தினம்

தீர்த்த தினத்தை நியமித்துக் கொண்டு, அதற்கு மூன்று நாட்கள் முன்னதாக மாலையில் ஆரம்பித்து மூன்று நாள் உற்சவத்தைச் செய்து, ஆறு காலப் பலியிடுக. நான்காம் நாள் காலையில் தீர்த்தோற்சவத்தைச் செய்க.

❋ ❋ ❋

# 49. ஐந்து தினம்

தீர்த்த தினத்தை நியமித்துக் கொண்டு முதல் நாள் மாலையில் ஆரம்பித்துப் பத்து காலப் பலியிட்டு, ஆறாம்நாள் காலையில் தீர்த்தோற்சவத்தைச் செய்க.

❋ ❋ ❋

# 50. ஒன்பது தினம்

தீர்த்த தினத்தை நியமித்துக் கொண்டு, முதல் நாள் மாலை ஆரம்பித்து, பதினெட்டுக் காலப் பலியிட்டு, பத்தாம்நாள் காலையில் தீர்த்தோற்சவத்தைச் செய்க.

❋ ❋ ❋

# 51. பதினொரு தினம்

தீர்த்த தினத்தை நியமித்துக் கொண்டு, முதல் நாள் மாலை யாகம் ஆரம்பமாகி, இருபத்திரண்டு காலப் பலியிட்டு, பன்னிரண்டாம் நாள் காலையில் தீர்த்தோற்சவத்தைச் செய்க.

❋ ❋ ❋

# 52. பதின்மூன்று தினம்

தீர்த்த தினத்தை நியமித்துக் கொண்டு, முதல் நாள் மாலை முதலாகக் கொண்டு இருபத்தாறுகாலப் பலியிட்டு, பதினான்காம் நாள் காலையில் தீர்த்தோற்சவத்தைச் செய்க.

❋ ❋ ❋

# 53. பதினைந்து தினம்

தீர்த்த தினத்தை நியமித்துக் கொண்டு, முதல் நாள் மாலை மாலையில் ஆரம்பமாகி, முப்பது காலப் பலியிட்டு, பதினாறாம் நாள் காலையில் தீர்த்தோற்சவத்தைச் செய்க.

❋ ❋ ❋

# 54. பதினேழு தினம்

தீர்த்த தினத்தை நியமித்துக் கொண்டு, முதல் நாள் மாலையில் ஆரம்பமாகி, முப்பத்து நான்கு காலப் பலியிட்டு, பதினெட்டாம் நாள் காலையில் தீர்த்தோற்சவம் செய்க.

❋ ❋ ❋

# 55. உற்சவ தின பலன்

## (ஸ்ரீ சூட்சும ஆகமத்தின் படி)

| | |
|---|---|
| 1 நாள் உற்சவம் | : இராஜ விருத்தியின் பொருட்டு, |
| 3 நாள் உற்சவம் | : சிவத்தைச் சந்தோஷப்படுத்துதலில் பொருட்டு, |
| 5 நாள் உற்சவம் | : போகத்தின் பொருட்டு, |
| 7 நாள் உற்சவம் | : சிவப்பிரியத்தின் (சிவ விருப்பின்) பொருட்டு, |

| | | |
|---|---|---|
| **9 நாள் உற்சவம்** | : | சாந்திகத்தின் (அமைதியின்) பொருட்டு, |
| **11 நாள் உற்சவம்** | : | புஷ்டியின் (ஆரோக்கியத்தின்) பொருட்டு, |
| **12 நாள் உற்சவம்** | : | முத்தியின் பொருட்டு, |
| **13 நாள் உற்சவம்** | : | அனைத்துச் சித்திகளின் பொருட்டு, |
| **15 நாள் உற்சவம்** | : | மக்களின் சுகத்தின் பொருட்டு, |
| **17 நாள் உற்சவம்** | : | புண்ணியப் பேற்றின் பொருட்டு, |
| **19 நாள் உற்சவம்** | : | எல்லாப் பாபத்தையும் போக்கும் பொருட்டு, |
| **21 நாள் உற்சவம்** | : | உலகத்தைக் காத்தலின் பொருட்டு |

### (ஸ்ரீ காமிக ஆகமத்தின் படி)

| | | |
|---|---|---|
| **1 நாள் உற்சவம்** | : | சிவப்பிரியத்தின் (சிவ விருப்பின்) பொருட்டு, |
| **3 நாள் உற்சவம்** | : | கிராமத்தைக் காத்தல் பொருட்டு, |
| **5 நாள் உற்சவம்** | : | பஞ்ச பூதங்களைக் காத்தல் பொருட்டு, |
| **7 நாள் உற்சவம்** | : | உமைக்குப் பிரியத்தின் பொருட்டு, |
| **9 நாள் உற்சவம்** | : | உலகத்தைக் காத்தலின் பொருட்டு, |
| **11 நாள் உற்சவம்** | : | புத்தியின் பொருட்டு, |
| **12 நாள் உற்சவம்** | : | தேவருக்கும், சகலருக்கும் மகிழ்ச்சியின் பொருட்டு, |
| **13 நாள் உற்சவம்** | : | சாந்நித்தியத்தின் பொருட்டு, |
| **15 நாள் உற்சவம்** | : | சுகத்தின் பொருட்டு, |
| **17 நாள் உற்சவம்** | : | மக்கள் ஆரோக்கியத்தின் பொருட்டு, |
| **19 நாள் உற்சவம்** | : | புபுட்சுக்களின் (போகத்தை விரும்புவோரின்) முக்தியின் பொருட்டு, |
| **21 நாள் உற்சவம்** | : | எல்லாத் தேவர்களையும் மகிழ்விக்கும் பொருட்டு |

❋ ❋ ❋

## 56. உற்சவ பஞ்ச கிருத்தியம்

**சி**வபெருமான் பஞ்சகிருத்தியம் (படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழில்கள்) செய்வது ஆன்மாக்களது பக்குவம் நோக்கிப் பெத்தகாலத்துச் (ஆன்மா மாயைக்கு உட்பட்டு அனுபவங்களைப் பெறும் நிலை) சுவர்க்கம் முதலிய போகங்களையும், பதமுத்தியையும் கொடுத்தல் பொருட்டும், முத்திக் காலத்தில் மலங்களை அருளால் நீக்கி வீடுபேறு கொடுத்தல் பொருட்டுமாகும். பஞ்சகிருத்தியமானது சூக்கும பஞ்சகிருத்தியம், தூல பஞ்சகிருத்தியம், அதிசூக்கும பஞ்சகிருத்தியம் என மூன்று வகைப்படும். அதிசூக்கும ஐந்தொழில் கேவலாவத்தையில் (ஆன்மா தனித்து ஆணவ வயப்பட்டு சடம்போல் கிடக்கும் நிலை) நிகழும்.

**சூக்கும ஐந்தொழில் விபரம்:**

**படைத்தல்** : தோன்றுதற்குரிய இயங்கும் பொருட்களையும், இயங்காப் பொருள்களையும் பார்த்துக் கொண்டிருத்தல்.

**காத்தல்** : மாயா காரியங்களை வெளிப்படத் தகுந்தவைகளாகச் செய்தல்.

**அழித்தல்** : ஆன்மாக்களின் சஞ்சித கன்மங்களைப் பக்குவப்படுத்துதல்.

**மறைத்தல்** : மறைக்கத்தக்கவற்றை மறைத்தல்.

**அருளல்** : மலபரிபாகத்துக்குத் தக்கபடி அறிவிக்கத் தக்கவற்றை அறிவித்தல்.

**தூல ஐந்தொழில் விபரம்:**

**படைத்தல்** : ஆன்மாக்கள் செய்த கன்மங்களை நீக்குவதற்காகவும், மலபரிபாகம் உண்டாக்குவதற்காகவும், தனு, கரண, புவன, போகங்களை முதற்காரணத்தினின்றும் தோற்றுவித்தல்.

**காத்தல்** : அவரவர் செய்த கன்மங்களை அவரவர் அனுபவித்து முடியும்வரையும் உண்டாக்கப்பட்ட தனு முதலியவற்றைக் காத்தல்.

**அழித்தல்** : ஆன்மாக்கள் பிறந்திறந்த வினைப்பயன்களை அனுபவித்தலாலாய இளைப்பு நீங்குவதற்காகத் தநு முதலியவற்றை முதற்காரணத்தில் ஒடுக்குதல்.

**மறைத்தல்** : அனுபவிக்கவேண்டிய வினையின் பயனை முறைப்படி அனுபவிக்கச் செய்து மலத்தைத் தேய்த்தல்.

**அருளல்** : மலத்தினின்று விடுவித்து நிரதிசயானந்தத்தைக் கொடுத்தல்.

**அதிசூக்கும ஐந்தொழில் விபரம்:**

**படைத்தல்** : ஆன்மாக்களுக்குச் சிவஞானத்தை உணர்த்துதல்.

**காத்தல்** : உணர்ந்த சிவஞானத்தில் அழுந்தச் செய்தல்.

**அழித்தல்** : பாசத்திலிருந்து பிரித்தல்.

**மறைத்தல்** : சிவஞானத்தை அறியும் சமயத்தில் முன்பிரிக்கப்பட்ட பாசஞானத்தில் செல்ல விடாது மறைத்தல்.

**அருளல்** : சிவஞானத்தை அனுபவிக்கச் செய்தலாம்.

உற்சவகாலத்திலே செய்யப்படும் ஒவ்வொரு கிரியையும் படைத்தல் முதலிய ஒவ்வொரு கிருத்தியத்தைக் குறிப்பதால், அக்கிரியைகள் ஒவ்வொன்றும்

ஆன்மாக்களது மலத்தை நீக்கி வீடுபேறு அருளுதற்காக வைக்கப்பட்டன என்று உணரப்படும்.

**படைத்தலைக் குறிக்கும் மகோற்சவக் கிரியைகள்:**

| | |
|---|---|
| **அனுஞ்ஞை** | : அனுமதி |
| **வாஸ்துசாந்தி** | : வாஸ்து தேவதைக்குச் செய்யும் சாந்தி |
| **மிருத்சங்கிரகணம்** | : மண் அகழ்தல் |
| **அங்குரார்ப்பணம்** | : முளையிடுதல் |
| **பேரீதாடனம்** | : மேளவாத்தியம் வாசித்தல் |
| **இரட்சாபந்தனம்** | : காப்புக் கட்டுதல் |
| **விருஷப யாகம்** | : கொடிச்சீலை நந்திக்கான யாகம் |
| **அஸ்திரதேவஆவாகனம்** | : அஸ்திரதேவரை எழுந்தருளச் செய்தல் |
| **துவஜாரோகணம்** | : கொடியேற்றம் |
| **துவஜபீடபலி** | : கொடித்தம்ப பீடத்திற்கான பலி |
| **சந்தி ஆவாகனம்** | : 9 திசைச் சந்திப்பிலும் இந்திரன் முதலிய தேவர்களை எழுந்தருளச் செய்தல். |
| **கிராமப்பிரதட்ஷிணம்** | : ஊரை வலம்வருதல் |
| **கோபுரத்துவார நீராசனம்** | : கோபுரவாசலில் கர்ப்பூரதீபம் காடடுதல். |
| **யாகமண்டபபூசை** | : திருவிழா காலங்களில் செய்யும் சிறப்புப் பூசை. |

திருக்கல்யாணம் பிரமத்தானத்திலும் எட்டுத் திக்கிலும் போடும் பலி

**காத்தலைக் குறிக்கும் மகோற்சவக் கிரியைகள்:**

வாகன உற்சவம்
ஓம கருமம்
பலி

**அழித்தலைக் குறிக்கும் மகோற்சவக் கிரியைகள்:**

| | | |
|---|---|---|
| **மிருக யாத்திரை** | : | வேட்டைத் திருவிழா |
| **இரதாரோகணம்** | : | தேர்த் திருவிழா |
| **கிருஷ்ணகந்தஅர்ச்சனை** | : | (தர்ப்பைச் சாம்பலை வாசனைத் திரவியங்களில் கலந்து இறைவனுக்குச் சாத்துதல்) |

**மறைத்தலைக் குறிக்கும் மகோற்சவக் கிரியைகள்:**

| | | |
|---|---|---|
| **சூர்ணோற்சவம்** | : | பொற்சுண்ணம் |
| **தீர்த்தம்** | : | தீர்த்தோற்சவம் |
| **அங்குரவிசர்ச்சனம்** | : | முளை எடுத்தல் |
| **யாக கும்ப அபிஷேகம்** | : | யாக கும்பத்தால் செய்யும் அபிஷேகம் |

அவரோகணம் : கொடியிறக்கம், மௌனோற்சவம்
இரட்சாபந்தனவிசர்ச்சனம் : காப்பு அவிழ்த்தல்
சண்டயாகம் : சண்டேசுவரர் யாகம்

**அருளலைக் குறிக்கும் மகோற்சவக் கிரியைகள்:**

சத்தியாத்திரை என்னும் ஊடல்
சண்டேசுவரர் உற்சவம்
ஆசாரிய உற்சவம்

❋ ❋ ❋

# 57. தீட்ஷை வகைகள்

**ஆ**ன்மாவுக்குப் பாசத்தைக் கெடுத்துச் சிவத்துவத்தைக் கொடுப்பதாகிய சிவசத்திக் கிரியையே தீட்ஷை எனப்படும். தீட்ஷையானது மாந்திரி, சத்தி, சாம்பவி என மூன்றாம்.

**மாந்திரி தீட்ஷை** : குண்ட மண்டலங்களைப் புறத்தேயிட்டு, விதிப்படி புறம்பே ஆகுதி முதலிய கிரியை செய்து மாணாக்கனது மலத்தைக் குன்றும்படி செய்யும் தீட்ஷையாம். மாந்திரி எனினும் கிரியாவதி எனினும் ஒக்கும்.

**சத்தி தீட்ஷை** : குண்டம், மண்டலம், அக்கினி, நெய், சுருக்கு, சுருவம் முதலியனவெல்லாம் மனத்தால் கற்பித்துக்கொண்டு, விதிப்படி அகத்தே ஆகுதி முதலிய கிரியை செய்து மாணாக்கனது பாசத்தைக் கெடுத்தலாம். சத்தி எனினும் ஞானவதி எனினும் ஒக்கும்.

**ஔத்திரி தீட்ஷை** : ஔத்திரியாவது ஓமத்தோடு கூடச்செய்வது. (ஹூதசஹிதம் ஹௌத்திரி; ஹூதம் - ஓமம்.) ஞானவதி கிரியாவதி என்னும் இரண்டும் ஔத்திரி தீட்ஷை எனப்படும். ஔத்திரி தீட்ஷை நிர்ப்பீச தீட்ஷை, சபீச தீட்ஷை என வெவ்வேறாய் இருவகைப்படும்.

**நிர்ப்பீச தீட்ஷை** : மலபரிபாகம் உடையராய வழியும், தீட்ஷைக்குப்பின் நிச்சயமாய்க் குற்றமின்றி அனுட்டிக்க வேண்டிய சமய ஆசாரங்களை அனுட்டிக்கும் ஆற்றலும், அறிவும் இல்லாதோருக்கு மற்றைக் கருமங்களோடு

சமய ஆசாரத்தையும் ஆகுதியால் சுத்தி செய்து ஒழித்து, நித்திய கரும மாத்திரையில் இயன்ற மட்டும் அதிகாரமுடையவராகச் செய்தலாம். ஆயினும் சமய ஆசாரங்களைச் சுத்தி செய்து ஒழித்தமையின் நைமித்திகத்திலும், காமியத்திலும் அதிகாரம் கொடாமையால் இது **நிர் அதிகாரதீட்ஷை** எனவும் பெயர்பெறும். இத்தீட்ஷை சமயமும், விசேடமும், நிர்வாணமும் என மூவகைப்படும்.

அவற்றுள் **சமய தீட்ஷையும், விசேட தீட்ஷையும்** ஒன்றேயாம்.

**நிருவாண தீட்ஷை** : **அசத்தியோ நிர்வாணம்** எனவும், **சத்தியோ நிர்வாணம்** எனவும் இருவகைப்படும்.

**அசத்தியோ நிர்வாணம்** : தீட்ஷை செய்யப்பட்டார்க்கு தேக முடிவில் முத்தியைப் பயப்பது.

**சத்தியோ நிர்வாணம்** : தீட்ஷை செய்த பொழுதே முத்தியைப் பயப்பது.

சமய ஆதார சுத்தியோடு செய்யப்படும் நிருவாணதீட்ஷையும் அதற்கு அங்கமாயும், சுதந்திரமாயும் செய்யப்படும் சமய விசேடங்களும் நிர்ப்பீச தீட்ஷை எனக் கொள்க.

**சபீச தீட்ஷை** : மலபரிபாகத்தோடு கற்றறிவும், ஆற்றலும் மிகுதியாய் உடையவர்களுக்குச் சமயாசாரக் கன்மம் மாத்திரம் நிறுத்தி மற்றைய கன்மம் எல்லாம் சுத்திசெய்து ஒழித்து, நித்தியகன்மம் முதலிய மூன்றிலும் பேர் அதிகாரம் உடையராகச் செய்வதாம். இதனால் இது சாதிகார தீட்ஷை எனவும் பெயர்பெறும். இத்தீட்சைப்பேறு உடையார் தீட்ஷை வேறுபாட்டால் சாதகரும், ஆசாரியரும் என இருவகைப்படுவர். இந்தச் சபீச தீட்ஷை லோகதருமிணி, சிவதருமிணி என்று இருவகைப்படும்.

**லோகதருமிணி** : போகத்தில் விருப்புடையாருக்கு, திரோதான சத்தி ரூபமாகிய சிகாச்சேதம் (மொட்டையடித்தல்) இன்றிச் செய்வது.

**சிவதருமிணி** : முத்தியில் விருப்புடையாருக்கு, திரோதான சத்திரூபமாகிய சிகாச் சேதத்தோடு (மொட்டையடித்து) செய்வது.

சமயாசார சுத்தியின்றிச் செய்யப்படும் நிருவாண தீட்ஷையும், அதற்கு அங்கமாய்ச் செய்யப்படும் சமய, விசேட தீட்ஷைகளும் சபீச தீட்ஷை எனக் கொள்க.

ஔத்திரி தீட்ஷைக்கு தகுதி அல்லாதவருக்கு அவரவர் பக்குவத்திற்கு ஏற்ப, நயன தீஷையினாலும், பரிசதீஷையினாலும், வாசிக தீஷையினாலும், மானச தீஷையினாலும், சாத்திர தீஷையினாலும், யோக தீஷையினாலும் பாசத்தை நீக்கலாம்.

**நயன தீட்ஷை** : கருடபாவனை கைவந்தவன் பாம்பினாலே கடிபட்டவனைப் பாம்பாகவும், தன்னைக் கருடனாகவும் பாவித்து, கண்களால் பார்த்து விஷத்தை நீக்குதல்போல, ஆசாரியர் சீடனைச் சிவபாவனையினாலே பார்த்துப் பாச விமோசனம் செய்தல். (நயனம் - கண்)

**பரிசதீட்ஷை** : தொட்டு விளக்குதலினால் தாமிரம் முதலிய உலோகங்களினது களிம்பு நீங்கி பிரகாசித்தல் போல, ஆசாரியர் தமது வலக்கரத்தில் சிவனை ஆசனமூர்த்தி மூலம், வித்தியாதேகம், பஞ்சப்பிரம சட் அங்க மூலமந்திரங்களினாலே புஷ்பம் கொண்டு பூஜித்த சிஷ்யனுடைய தலையிலே வைத்து அவனுடைய மும்மலங்களை நீக்கிச் சிவம் ஆகும்படி பண்ணுவது.

**வாசக தீட்ஷை** : வருணாச்சிரம நுட்பப்படி பஞ்சாட்சரத்தை உபதேசம் பண்ணுவதாம்.

**மானத தீட்ஷை** : ஆசாரியர் தம்முடைய ரேசக வாயுவினாலே புறப்பட்டு, சிஷ்யனுடைய பூரக வாயுவினாலே இருதயத்திலே பிரவேசித்து, சிஷ்ய சைதன்னியத்தை வாங்கித் துவாதச அந்தம் அளவும் கொண்டு போய்த் தம்முடைய இருதயத்திலே சிவ சைதன்னியத்துடனே கலந்து, உப்பும், நீரும் கலந்து ஒரே சுவையானது போல் பாவித்து சிஷ்ய சைதன்யத்தை சிஷ்ய தேகத்திலே பிரதிஷ்டை செய்தலாம்.

**சாத்திர தீட்ஷை** : சாஸ்திர அர்த்தங்களை எல்லாம் சங்கிரகித்து பதி, பாசத்தினுடைய இலட்சணங்களையும் சிவசீவர் களுடைய ஐக்கியத்தையும் சத் சம்பிரதாயமாகப் போதிப்பதாம்.

**யோக தீட்ஷை** : நிர் ஆதார (ஆதாரமற்ற) சிவலோகத்தை பயிற்சி பண்ணுவிப்பதாம்.

இந்த அறுவகைத் தீட்ஷைகளும் ஔத்திரி தீட்ஷைக்குத் தகுதி இல்லாதவர்களுக்குப் பண்ணப்படுவன எனவும் அறிக.

**சாம்பவி தீட்ஷை** : சாம்பவி தீட்ஷையாவது திருநோக்கு முதலியவற்றால் மாணாக்கனது பாசத்தை நீக்குதலாம். ("சாம்பவி

ஞானக்கண்ணினால் சுத்தி செயல் என்றே துணி'' என்று 'சைவசமயநெறி' கூறியபடி) சாம்பவி தீட்ஷை எனினும் விஞ்ஞான தீட்ஷை எனினும் ஒக்கும். ஞானதீட்ஷை சிற்சத்தி சகிதமான மனோ பாவனையினாலே பண்ணுவது. சாம்பவி தீட்ஷை கேவல சிற்சத்தி மாத்திரத்தினாலே பண்ணுவதாம்.

## 58. உற்சவத்தில் தீட்ஷை நிகழும் முறைமை

**க**ர்ஷண் முதல் பிரதிஷ்டை வரையிலான கிரியைகளை தாம் தேடிய பொருளினால் ஆவது, உடம்பின் முயற்சியால் ஆவது செய்வதனால் சமயதீட்ஷைப் பலன் உண்டாகும். நித்தியக் கிரியைகளையும், காமியக் கிரியைகளையும் செய்வதினால் விசேஷ தீட்ஷைப் பலன் உண்டாகும். உற்சவம் செய்வதனால் அத்துவசுத்தி உடனான நிர்வாண தீட்ஷைப் பலனும், தீர்த்த உற்சவம் செய்வதனால் ஆச்சார்ய அபிஷேக பலலும் உண்டாகும்.

உற்சவமானது சாம்பவிதீட்ஷை என்று சொல்லப்படும்.

சிவபெருமான் தீட்ஷையின் போது மண்டலம் (இயந்திரம்), கும்பம், அக்கினி, ஆசாரியர், சிஷ்யர் என்னும் ஐந்து இடங்களிலும் நின்று அருள் செய்வார்.

சாம்பவி தீட்ஷையாகிய உற்சவத்திலும் அங்ஙனமே ஐந்து இடங்களில் நின்று சிவபெருமான் அருள் செய்வார். அதன் விபரம் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| **மண்டலம்** | : | பலிநாயகர் |
| **கும்பம்** | : | அஸ்திர மூர்த்தி |
| **சிவ அக்கினி** | : | சோமாஸ்கந்த ஈஸ்வரர் |
| **குரு** | : | உற்சவ ஆச்சாரியர் |
| **சிஷ்யர்** | : | தீட்ஷை பெற்றவர்கள், தீட்ஷை பெறாதவர்கள், பக்தர்கள் சமயாசாரலோபம், உள்ளவர்களும், தூர்த்தர்களும் பிறரும் ஆகிய எல்லா ஆன்மாக்களும் சிஷ்யராவர். |

மேலும் உற்சவ காலங்களில் சிவபெருமான் யாககும்பம், தம்பம், விம்பம் என்னும் இடங்களிலும் நின்று அருள் செய்வார்.

சோமாஸ்கந்த மூர்த்தத்தில் வாகீசுவரர் சிவனும், வாகீசுவரி போகசத்தியும், சிவாக்கினி கந்தருமாம்.

மற்றைய மூர்த்தங்களில் சிவம் சத்தி இரண்டும் சிவாக்கினியாகப் பாவிக்கப்படுவதாம்.

சோமாஸ்கந்த மூர்த்தம் முக்கியம்; அம்மூர்த்தம் இல்லாத ஆலயங்களில் சந்திரசேகரர் முதலிய மூர்த்திகளைப் பாவிக்கலாம்.

இதனால் உற்சவமானது சமஸ்தருக்கும் (சாதாரணருக்கும்) தீட்ஷா காலம் என்பது நன்கு தெளியப்படும். இங்ஙனமாதலின், உற்சவத்தின் பெருமை அளவிடுதற்கரியது.

**பண்டாரசாத்திரம் - உற்சவத் தீட்ஷை விளக்கம்:**

"நாலுபாதங்களிலே சரியாதாற்குத் திருவடி பெறுவது காரியமாக, நாலுகாரியமும் பொருந்திய சாம்பவம் என்னும் தீக்கையே உற்சவமாயது. இது பத்து நாளாகக் கொண்டது. காரியம் பத்தையும் உடையதான படியினாலே, இதிலே நின்ற பதத்திற்கு உரியோர் அதற்கேற்ற முத்தியைப் பெறவும், அல்லாதார்க்குச் சத்திநிபாத உண்டாகவும் காரணமாம். இதற்கு உதாரணம் கூறுகின்றது."

**"உற்சவ விளக்கம் தன்னை உரைத்திடில் உயிர் அதற்கு**
**முற் செனனங்கள் விட்ட முகிழ்த்ததோர் கருணையாலே**
**தற்பரம் தருமமாய தனிக்கொடிக் கட்டி உண்மைச்**
**சிற்பரத்(து)உயிர்கண் முத்தி சேர்ந்திடச் செய்வார் மன்னோ".**

**"சாதி சண்டாளர் பொல்லாக் கன்ம சண்டாளர் என்னும்**
**போதம் இல் உயிர்கள் தம்மைக் கதியினில் போக்க வேண்டி**
**யோ தரும் கருணையாலே உமையவளோடும் கூடி**
**ஆதி பொய்ப் பாசம் நீக்க அவுத்திரி தொடங்கல் உற்றார்."**

## 59. ஐந்துவித உபசாரங்கள்

சிவபெருமானுக்குச் செய்யும் உபசாரங்கள் எல்லாம் ஐம்பெரும் பூதங்களின் சம்பந்தம் உள்ளவைகளாய் ஐந்து விதமாய் இருக்கும். அவை வருமாறு:-

**பிருதிவி (மண்) சம்பந்தமான உபசாரங்கள்:**
சந்தனம், புஷ்பம், கிழங்கு, வேர், பழம், அன்னம் முதலியவைகளாம்.

**அப்பு (நீர்) சம்பந்தமான உபசாரங்கள்:**
நீர், பால், தயிர், ஆடை முதலியவைகளாம்.

**அக்கினி (நெருப்பு) சம்பந்தமான உபசாரங்கள்:**
பொன், இரத்தினம், தீபம், கர்ப்பூரதீபம், ஆபரணம், முதலியவைகளாம்.

**வாயு (காற்று) சம்பந்தமான உபசாரங்கள்:**
தூபம், சாமரை, விசிறி முதலியவைகளாம்.

**ஆகாசம் (ஆகாயம்) சம்பந்தமான உபசாரங்கள்:**
மணி, வாத்தியம், தோத்திரம் முதலியவைகளாம்.

❁ ❁ ❁

# 60. அபிஷேக பலன்

சிவமூர்த்திகளுக்கு எண்ணெய், பால், தயிர், நெய், தேன், இளநீர், முதலியவைகளினால் விதிப்படி அபிஷேகம் பண்ணுதல் புண்ணியம் என்று சைவ ஆகமங்கள் கூறுகின்றன.

| | | |
|---|---|---|
| **சந்தனாதித் தைல அபிஷேகம்** | : | சுகத்தையும், |
| **மாக்காப்பு (அரிசிமா சாத்துதல்)** | : | மலநாசத்தையும், |
| **நெல்லிக்காப்பு** | : | ரோக நாசத்தையும் (நோய் நீக்கத்தையும்), |
| **மஞ்சள்காப்பு** | : | இராச வசியத்தையும், |
| **பஞ்சகவ்வியம்** | : | ஆன்ம சுத்தியையும், |
| **இரசபஞ்சாமிர்தம்** | : | வெற்றியையும், |
| **பலபஞ்சாமிர்தம்** | : | செல்வத்தையும், |
| **பஞ்ச பலோதகம் (ஐந்து பழவகைச்சாறு)** | : | மந்திரசித்தியையும், |
| **பால்** | : | ஆயுள் விருத்தியையும், |
| **தயிர்** | : | பிரஜா (மக்கள்) விருத்தியையும், |
| **நெய்** | : | மோட்ஷத்தையும், |
| **தேன்** | : | சங்கீத வன்மையையும், |
| **கருப்பஞ்சாறு** | : | நித்திய சுகத்தையும், |
| **சர்க்கரை** | : | சத்துரு (எதிரி) நாசத்தையும், |
| **வாழைப்பழம்** | : | பயிர் விருத்தியையும், |
| **பலாப்பழம்** | : | லோக (உலக) வசியத்தையும், |
| **மாம்பழம்** | : | சகல வெற்றிகளையும், |
| **தமரத்தம்பழம்** | : | பூமி லாபத்தையும், |
| **மாதுளம்பழம்** | : | பகை நீக்கத்தையும், |
| **நாரத்தம்பழம்** | : | சற்புத்தியையும் (நல்ல அறிவையும்), |
| **எலுமிச்சம்பழம்** | : | மிருத்து நிவாரணத்தையும் (மரண நீக்கத்தையும்), |
| **தேங்காய்த் துருவல்** | : | அரச உரிமையையும், |
| **இளநீர்** | : | சற்புத்திரப் பேற்றையும், |
| **கோரோசனை** | : | தீர்க்க ஆயுளையும் (நீண்ட ஆயுளையும்). |

| | | |
|---|---|---|
| **பச்சைக்கர்ப்பூரம்** | : | பய நாசத்தையும், |
| **கஸ்தூரி** | : | வெற்றியையும், |
| **பன்னீர்** | : | சாலோக முத்தியையும், |
| **சந்தனக்குழம்பு** | : | சாயுச்சிய முத்தியையும், |
| **சகஸ்ரதார அபிஷேகம்** | : | ஞானத்தையும், ஜன்மசாபல்யத்தையும், (பிறவிப்பயனையும்), சாரூப முத்தியையும் (சாதுரியத்தையும்) தரும். |
| **அன்ன அபிஷேகம்** | : | அபமிருத்துவை (துர்மரணத்தை) விலக்கும்; ஆயுள், ஆரோக்கியம், அரசு, தேசம் என்பவற்றின் விருத்தியைச் செய்யும்; சர்வ சாந்தியையும் (அமைதியையும்) தரும் என்று உண்மை நூல்கள் கூறுகின்றன. |

**அபிஷேகத்தின் குறிப்பு:**

ஆன்மாவின் மலத்தைச் சுத்தி செய்வதற்கு அறிகுறியாகவே அபிஷேகம் செய்யப்படுகிறது. அது,

> **"நிகழ் மல சுத்தி நிமித்தமாக**
> **மகிழ்வுடனே திருமஞ்சனம் பண்ணி"**

எனச் சதாசிவரூபத்தில் கூறப்பட்டுள்ளது.

> **தடம் கொண்ட(து) ஓர் தாமரைப் பொன்முடி தன்மேல்**
> **குடம் கொண்(டு) அடியார் குளிர்நீர் சுமந்(து) ஆட்டப்**
> **படம் கொண்டது) ஓர் பாம்(பு) அரை ஆர்த்த பரமன்**
> **இடம் கொண்டிருந்தான் தன்னிடை மரு(து) ஈதோ.**

> **ஆடினாய் நறு நெய்யோடு பால் தயிர் அந்தணர் பிரியாத சிற்றம்பலம்**
> **நாடினாய் இடமா நறுங்கொன்றை நயந்தவனே**
> **பாடினாய் மறையோடு பல்கீதமும் பல்சடைப் பனிகால் கதிர் வெண் திங்கள்**
> **சூடினாய் அருளாய் சுருங்க எம் தொல்வினையே.**
>
> — திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்.

> **பாவமும் பழிப் பற்(று)அற வேண்டுவீர்**
> **ஆவில் ஐஞ்(சு) உகந்தாடும் அவன் கழல்**
> **மேவராய் மிகவும் மகிழ்ந்(து)உள்குமின்**
> **காவலாளன் கலந்(து) அருள் செய்யுமே.**
>
> — அப்பர் சுவாமிகள்.

வான நாடனே வழித்துணை மருந்தே
மாசிலாமணியே மறைப் பொருளே
ஏன மா எயி(று) ஆமையும் என்பும்
ஈடு தாங்கிய மார்புடையானே
தேன் நெய் பால் தயிர் ஆட்(டு) உகந்தானே
தேவனே திருவாவடு துறையுள்
ஆனையே எனை அஞ்சலென்(று) அருளாய்
யார் எனக்(கு) உற(வு) அமரர்கள் ஏறே.

– சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

சிவபுண்ணியத் தெளிவு (விபூதி அபிஷேகபலன்)

வேத நீற்றை விமலனுக்(கு) ஆட்டினோர்
ஓதும் அச்சிவன் போன்(று)அங்(கு) ஒழி(வு) இன்றி
மேதெயிற் சிவலோக முதற் பதி
போதம் உற்றவர் போற்றப் பொலியரே.

❋ ❋ ❋

# 61. புஷ்ப விசேடம்

மலர்களும் அம் மலர்களுக்குரிய அதிதேவதைகளும் வருமாறு:

| | | |
|---|---|---|
| கோங்கம் பூ | : | சரசுவதி |
| அலரிப் பூ | : | பிரமா |
| வன்னிப் பூ | : | அக்கினி |
| நந்தியாவர்த்தம் பூ | : | நந்தி |
| புன்னைப் பூ | : | வாயு |
| எருக்கம் பூ | : | சூரியன் |
| சண்பகப் பூ | : | சுப்பிரமணியர் |
| வில்வம் பூ | : | இலக்குமி |
| கொக்கிறகம் பூ | : | விட்டுணு |
| மாவிலிங்கைப் பூ | : | வருணன் |
| மகிழம் பூ | : | சரசுவதி |
| வாகைப் பூ | : | நிருதி |
| சாதிப் பூ | : | ஈசானன் |
| செங்கழுநீர்ப் பூ | : | சூரியன் |
| குமுதம் பூ | : | சந்திரன் |
| மந்தாரைப் பூ | : | இந்திரன் |
| மதுமத்தம் பூ | : | குபேரன் |
| நாயுருவிப் பூ | : | இயமன் |
| தாமரைப் பூ | : | சிவன் |
| அறுகம்புல் | : | விநாயகர் |
| நீலோற்பலம் | : | உமாதேவியார் |

ஏனைய வாசனைப் புஷ்பங்களிலும் உமாதேவியாரே அதிதேவதையாய் இருப்பார்.

ஆகையால், இப்பத்திர புஷ்பங்களையும், ஏனையவற்றையும் விதிப்படி எடுத்துக் கொடுப்பவர்களும், அவற்றினால் பூசிப்பவர்களும், திரு மாலை கட்டிக்கொடுப்பவர்களும், திருநந்தனவனம் அமைப்பவர்களும், போக, மோட்ஷங்களை அடைவார்கள் என்று உண்மை நூல்கள் கூறுகின்றன.

**சாத்துவிக புஷ்பங்கள்:**
வெண்ணிறப் புஷ்பங்கள் சாத்துவிக குணமுடையன. அவை: வெள்ளெருக்கு, வெள்ளலரி, பிச்சி, கொக்கிறகு, மந்தாரை, புன்னை, நந்தியாவர்த்தம், மல்லிகை, முல்லை முதலியனவாகும். இப்புஷ்பங்களால் சாத்துவிக காலங்களாகிய உஷக்காலம் (அதிகாலை), சாயரட்டை (மாலை), அர்த்தயாமம் (நடுச்சாமம்) என்னும் காலங்களில் அர்ச்சிப்பவர்கள் மோட்ஷத்தை அடைவார்கள்.

**இராசத புஷ்பங்கள்:**
செந்நிறப் புஷ்பங்கள் இராசத குணமுடையன. அவை: பாதிரி, செந்தாமரை, செங்கழுநீர் செவ்வலரி, செங்கடம்பு முதலியனவாகும். இப்புஷ்பங்களால் இராசத காலமாகிய மத்தியானத்தில் அர்ச்சிப்பவர்கள் போகத்தை அடைவார்கள்.

**இராசதசாத்துவிக புஷ்பங்கள்:**
பொன்னிறமுள்ள புஷ்பங்கள் இராசதசாத்துவிகக் குணங்களை உடையன அவை: கொன்றை, சண்பகம், பொன்னூமத்தை செருந்தி, பொன்னொச்சி முதலியவைகளாகும்.

இப்புஷ்பங்களால் இராசதசாத்துவீக காலமாகிய காலையில் அர்ச்சிப்பவர்கள் போக, மோட்ஷங்களை அடைவார்கள்.

**இராசததாமத பத்திரங்கள்:**
கருமை நிறமுள்ள பத்திரங்கள் இராசததாமச குணங்களை உடையன அவை: வில்வம், துளசி, மருக்கொழுந்து, அறுகு, மாசிப்பச்சை, திருநீற்றுப்பச்சை முதலியவைகளாம்.

**வாச நலம் செய்(து) இமையோர் நாள்தோறும் மலர் தூவ**
**ஈசன் எம்பெருமானார் இனிதாக உறையுமிடம்**
**யோசனை போய்ப் பூக்கொணர்ந்(து) அங்(கு)ஒருநாளும் ஒழியாமே**
**பூசனை செய்(து) இனி(து)இருந்தான் புள்ளிருக்கு வேளூரே.**
**நொச்சியே வன்னி கொன்றை மதி கூவிளம்**
**உச்சியே புனைதல் வேடம் விடை ஊர்தியான்**
**கச்சி ஏகம்பம் மேய கறைக் கண்டனை**
**நச்சியே தொழுமினும் மேல் வினைநையுமே.**

– திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்.

விண்ட மாமலர் கொண்டு விரைந்து நீர்
அண்ட நாயகன் தன்னடி சூழ்மின்கள்
பண்டு நீர் செய்த பாவம் பறைந்திடும்
வண்டு சேர் பொழில் வான்மியூர் ஈசனே.

— திருநாவுக்கரசு சுவாமிகள்.

# 62. வாத்திய பேதங்களும் பலன்களும்

பேதங்கள்

| | | |
|---|---|---|
| பிருதுவி (மண்) வாத்தியம் | : | மரத்தினால் செய்யப்பட்டவை |
| அப்பு (நீர்) வாத்தியம் | : | சங்கு முதலியவை |
| ஆக்கினேய (அக்கினி) வாத்தியம் | : | உலோகங்களினால் செய்யப்பட்டவை |
| வாயவ்விய (காற்று) வாத்தியம் | : | துளையுள்ளவை |
| ஆகாச (ஆகாயம்) வாத்தியம் | : | இராக பேதங்கள் |

பலன்கள்

| | | |
|---|---|---|
| மத்தளத்தால் | : | சுகமும் |
| மேளத்தால் | : | ஆரோக்கிய விருத்தியும் |
| தாளத்தால் | : | பய நாசமும் |
| கரதாளத்தால் | : | அபயமும் |
| சல்லரியால் | : | விரும்பிய பயனும் |
| நரம்பு வாத்தியத்தால் | : | கோடியாக பலனும் |
| துளை வாத்தியத்தால் | : | சந்ததி விருத்தியும் |
| தோல் வாத்தியத்தால் | : | வெற்றியும் |
| சங்கு வாத்தியத்தால் | : | சத்துரு நாசமும் |
| நிருத்தத்தால் (நடனம்) | : | வியாதி நாசமும் நிகழும். |

இங்ஙனம் வாத்திய பேத பலன்கள் விரிவாகக் காமிக ஆகமத்தில் கூறப்பட்டுள்ளது.

சல்லரிய யாழ் முழ(வு) மொந்தை குழல் தாளம் இயம்பக்
கல்லரிய மாமலையர் பாவை ஒரு பாகநிலை செய்து
அல் எரி கையேந்தி நடமாடும் சடை அண்ணல் இடமென்பர்
சொல் அரிய தொண்டர் துதிசெய்ய வளர் தோணி புரமாமே.

— திருஞானசம்பந்த சுவாமிகள்.

# 63. தீப பேதங்களும் பலன்களும்

| | | |
|---|---|---|
| **ஐந்து அடுக்குத் தீபம்** | : | பஞ்ச கலைகளைக் குறிக்கின்றது. |
| **மூன்று அடுக்குத் தீபம்** | : | முத்தத்துவங்களைக் குறிக்கின்றது. இத்தீபத்தால் ஆராதிப்பின் ஆன்ம சுத்தியுண்டாம். |
| **நாகதீபம்** | : | புத்திர விருத்தியின் பொருட்டும், |
| **இடபதீபம்** | : | பசு விருத்தியின் பொருட்டும், |
| **புருஷதீபம்** | : | சகல சித்தியின் பொருட்டும், |
| **நட்ஷத்திர தீபம்** | : | ரோகசாந்தியின் பொருட்டும் வித்தையின் பொருட்டும், |
| **கும்பதீபம்** | : | மல நிவாரணத்தின் பொருட்டும், |
| **ஐந்து தட்டைகள்** | : | ஈசானம் முதலிய ஐந்து குணங்கள் பதிதல் பொருட்டும், |
| **தூபம்** | : | சாருப பதவியின் பொருட்டும், |
| **செம்பஞ்சும் வேப்பிலையும்** | : | கண் திருஷ்டி, தோஷ நீக்கத்தின் பொருட்டும், |
| **விபூதி** | : | மூவுலக காவலின் பொருட்டும் |

சிவசந்நிதியில் ஆராதிக்கப்படுகின்றன.

❋ ❋ ❋

# 64. தாசி நடனமும் வாண வேடிக்கையும்

**தி**ருக்கோயில்களில் தீய நடத்தையுள்ள தாசிகளை அழைத்து நடனம் செய்விப்பது குற்றமாகும்.

உபயகாரர்கள் அவர்களுக்குக் கொடுக்கும் அரிய பொருளை, அறிவும் நல்லொழுக்கமுடைய சமய போதகர்களையும், ஓதுவார்களையும் அழைத்துச் சற்பிரசங்கம் செய்வித்தும், வேதங்களையும், திருமுறைகளையும் ஓதுவித்தும், யாகத்துக்கு வேண்டிய நெய், சமித்து முதலிய உபகரணங்களைக் குறைவின்றிக் கொடுத்தும், தீபங்கள் இரவும், பகலும் அணையாதபடி பாதுகாத்தும் இவைபோன்ற பிறபுண்ணியங்களைச் செய்தும் சிவபக்தி வளரும் வழியில் செலவு செய்வது உத்தமத்தில் உத்தமமாகும்.

இன்னும் சிலர் வாணவேடிக்கைகள் செய்து, அரிதில் தேடிய பொருளை அற்ப நேரத்தில் கரித்தும், புகைத்தும், எரித்தும், உற்சவ தரிசனம் செய்ய வரும் அடியார்களை அச்சப்படுத்தி உயிர்வதையும் புரிகின்றனர்.

அன்றியும் அவர்கள் உடற்பற்றை நீக்கிச் சிவத்தியானம் செய்யும் காலமாகிய அரிய உற்சவகாலத்தில் உடற்பற்று முதலியவற்றை உண்டு பண்ணிப் பழிபாவங்களுக்கு ஆளாகின்றனர்.

அப்பழிபாவங்களுக்கு ஆளாகாது அப்பொருளை மகேசுவரபூசை, வறியவருக்கு அன்னமிடுதல், ஆலயத்திருப்பணி முதலிய சிவபுண்ணியங்களில் செலவு செய்வது உத்தமத்தில் உத்தமமாகும். அது பிறவுயிரும், தம் உயிரும் மோட்ஷம் அடையக்கூடிய நல்வழியாயிருக்கும்.

இது, அமர்நீதி நாயனார் மகோற்சவ தரிசனத்துக்கு வந்த அடியார்களைத் திருவமுது செய்வித்துச் சிவலோகமடைந்த சரித்திரத்தாலும், கோச்செங்கட் சோழநாயனார் திருக்கோயில் பலவற்றைக் கட்டுவித்துச் சபாநாயகரது திருவடி நீழலை அடைந்த சரித்திரத்தாலும் நன்கு உணரப்படும்.

**திருப்பதி வணங்க என்று சென்(று) உறும் சிவ நேசர்க்கும்**
**அருத்தியால் கங்கை ஆதி ஆடிட நாடினார்க்கும்**
**அருத்துக அன்னபானம் அவரவர்க்(கு) உபயோகங்கள்**
**பொருத்துக ஊனைப் போக்கிச் சிவபுரம் புகுவர் தாமே.**

– சிவதருமோத்தரம்.

**திருப்பணி செய்வார்க்குச் சிவனை உன்னிச் செம்பொன்**
**விருப்புடன் ஈவார் பெறுக வீடு.**

– சைவசமயநெறி.

❁ ❁ ❁

# 65. மூர்த்திகளை அலங்காரம் பண்ணல்

**ஆ**ன்மாக்களது கன்மத்திற்குத் தக்கவாறு ஐந்தொழிலைச் செய்து அருளும் இறைவன் பல மூர்த்தங்களாகத் தோன்றி ஆன்மாக்களுக்கு போக, மோட்ஷங்களைக் கொடுத்து அருளுகின்றான். அம்மூர்த்தங்களுள் சில சயனிப்பனவும் (படுத்திருப்பன), சில நடப்பனவும், சில நிற்பனவும், சில இருப்பனவுமாக உள்ளன. அன்பர்கள் பூசைபண்ணும்போது அம்மூர்த்திகள் சுகாசனமாக (ஆசன வகைகளில் ஒன்று) இருந்துகொண்டே அப்பூசையை ஏற்கும். அம்மூர்த்திகளை ஆலயங்களில் ஆகமமுறைப்படி பிரதிட்டை செய்து பூசித்து வருவது தொன்று தொட்டுள்ள வழக்கமும் விதியுமாம். அம்மூர்த்திகளை முறை தவறாது அலங்கரித்து வழிபடுவது மிக மேலாகிய புண்ணியமாகும்.

நிற்கும், இருக்கும், சயனிக்கும் நிலைகளில் உள்ள மூர்த்திகளை அந்த அந்த நிலைகளிலேயே வைத்து அலங்கரித்து வணங்குதல் வேண்டும். மாறிச் செய்யின் குற்றமாம்.

மூர்த்தியின் திருமேனியில் கட்டுதல், மரக்கட்டை, உலோகம் முதலியவற்றால் செய்யப்பட்ட கால், கைகள் வைத்துக் கபடமாக அலங்கரித்தல், லீலா பேதமான ஒரு விக்கிரகத்தைப் பிறிதொரு லீலாமூர்த்தியாக அலங்கரித்தல், சிவதேகத்தில் விஷ்ணுரூபத்தைக் கற்பித்தல், சந்திரசேகரத் திருமேனியில் நிருத்த ரூபத்தையும், கல்யாண சுந்தரரிடத்தில் நிருத்த ரூபத்தையும் அலங்கரித்தல், உக்கிர மூர்த்தியைச் சாந்த ரூபமாகவும், சாந்த மூர்த்தியை உக்கிர ரூபமாகவும் அலங்கரித்தல், திருவாசி இல்லாதபடி அலங்கரித்தல் முதலிய விபரீத அலங்காரங்கள் செய்யப்படின் விபரீத பலனுண்டாம்.

இதனால் ஆயுள் குன்றும்; பிரபுக்கள், அரசர் எஜமானர்கள், அங்கவீனர் ஆவார்கள். அத்தோஷம் நீங்கும் பொருட்டுப் பிராயச்சித்தம் செய்க. அந்த அந்தத் தேவர்களுக்கு உரிய வஸ்திரம், உயர்ந்ததும், வாசனை பொருந்தியதுமான புஷ்ப மாலை, உத்தமமான ஆபரணங்கள் ஆகிய இவைகளால் அலங்கரித்தல் தக்கது என்று காமிகம், வீரதந்திரம் முதலிய ஆகமங்கள் கூறுகின்றன.

ஆலய அதிகாரிகள் ஆகமசாஸ்திர ஆராய்ச்சியுள்ள சிவாசாரியர்களுடன் கலந்து அக்கிரமமான செயல்களை அகற்றிச் சற்கருமங்களைக் கைக்கொண்டு ஒழுகுவது உத்தமமாகும்.

❋ ❋ ❋

# 66. வீதி நிர்ணயம் முதலியவைகள்

**உ**ற்சவ ஆரம்பத்துக்கு முன் ஆபரணங்கள், குடை, கொடி, ஆலவட்டம், விசிறி, சாமரை, மகரதோரணம், தேர், மண்டபம் முதலியவைகளைப் பிரபை (அழகு) உண்டாகுமாறு புதுப்பித்தல் வேண்டும். வீதியிலுள்ள மண், கல் ஆகியவற்றை அகற்றிச் சுத்தமாக்கிச் நீரினால் புரோட்சித்தல் (தெளித்தல்) வேண்டும். கிரீடம், வாகு வலயம் (தோள் வலயம்), குண்டலம், முத்துமாலை, பதக்கம், தண்டை, சிலம்பு முதலிய திரு ஆபரணங்களை செய்வித்தல் வேண்டும். பல நிறங்களை உடைய வஸ்திரங்களையும், பீதாம்பரங்களையும் தருவித்தல் வேண்டும். அலங்காரம் பொருந்தும்படி பந்தல் இடுதல் வேண்டும். தேவாலயத்தை மிகவும் அழகுசெய்து மேற்கட்டி, (வெள்ளை கட்டி) மாவிலைத்தோரணம், புஷ்பமாலை, கரும்பு, கமுகு, இளநீர், சிவபக்தியை உண்டாக்கத்தக்க சித்திரப் பிரதிமை, கண்ணாடி

முதலியவைகளால் அலங்கரித்தல் வேண்டும். வீதிகளையும் அலங்கரித்துத் தீபங்களை ஏற்றிப் பூரண கும்பங்களை வைத்தல் வேண்டும்; கிராமத்தையும், வீடுகளையும் அலங்காரம் செய்து சித்திரங்கள் அமைத்தல் வேண்டும்.

உற்சவ ஆரம்பத்துக்கு முதற்தினத்திலே சண்டேசுரரையாவது சிவபக்தர்களையாவது (சம்பந்தர் முதலியோர்) அலங்கரித்துப் பக்த உற்சவம் செய்தல் வேண்டும்.

❁ ❁ ❁

## 67. பக்த உற்சவம்

**தி**ருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்திநாயனார், மாணிக்கவாசக சுவாமிகள் ஆகிய பக்த வடிவங்களுக்கு விசேஷ பூஜை, அலங்காரம் செய்து, சிவிகையிலாவது பீடத்திலாவது ஏற்றி, குடை, சாமரம், வாத்தியம் முதலிய அலங்காரங்களுடன் கிராமத்தையேனும், ஆலயத்தையேனும் வலம் வந்து, அவரவர்களுடைய இடங்களிலே தாபித்தல் வேண்டும். அக்காலங்களில் தேவாரம், திருவாசகம் முதலிய அருட்பாக்களை விசேஷமாக ஓதுதல் வேண்டும். உற்சவம் முடிந்த பின்பு பிராமணர்களை அர்சிக்க வேண்டும். சிவ கானங்களாகிய தேவாரம் முதலியவற்றில் வல்லவருக்கு உபசாரங்களைச் செய்க.

❁ ❁ ❁

## 68. விக்கினேசுவர அனுஜ்ஞை

**உ**ற்சவ ஆரம்பத்துக்கு முன் விநாயகர் ஆலயத்தை அடைந்து விநாயகருக்கு விசேஷ பூசை செய்து மோதகம் முதலியவைகளை நிவேதித்து, விக்கினங்களைப் போக்கி அருளும்படி பிரார்த்தித்து, விழாச்செய்து, அப்பெருமானிடத்தில் அநுக்கிரகம் பெறுமாறு ஆகமங்கள் கூறுகின்றன.

விநாயகருக்குரிய நிவேதனப் பொருள்கள் எல்லாவற்றிலும் தேங்காய் மிக விசேஷமுடையது. ஆசாரியர் தேங்காயை எடுத்துச் சோதித்தல் வேண்டும். இளம் தேங்காயையும், முற்றி உலர்ந்து விழுந்த தேங்காயையும் நீக்கி, நன்றாகத் தேறிய தேங்காயையே உடைத்தற்கு எடுத்துக்கொள்ளுதல் வேண்டும்.

துர்வாசனை உள்ளதும், வளைந்ததும், நீண்டதும், சேதங்கள் உற்றதுமாகிய தேங்காய் நீக்கப்படத்தக்கது. மேலும் கண்ணில்லாததும், பெரிய கண்ணுள்ளதும், சிறிய கண்ணுள்ளதும், குறைந்ததும், முடியில்லாததும், பழையதும், நீரில்லாததும் விலக்கத் தக்கது இப்படியே பரீட்சித்து, குற்றமற்ற தேங்காயைச் சந்நிதானத்தில் உள்ள கல்லில் அடித்தல் வேண்டும்.

**தேங்காய் உடையும் விதங்களும், பலன்களும்:**

ஒருமுறை அடித்தலினால் இரண்டு பாகமும் சமமாக உடைதல் வேண்டும். அதனால் சுபமுண்டாம்; தன, தான்ய விருத்தியுண்டாம்.

முகப்பாகம் மூன்று பங்கும் அடிப்பாகம் ஒரு பங்காகவும் விரல் நுனியளவு எப்பக்கத்திலாவது எடுபடுதல் என்னும் குற்றம் உண்டாகுமாறு உடைந்தால் பெண்களுக்கும், ஆண்களுக்கும் கலகம் உண்டாகும்.

சிதறுண்டு உடைந்தால் செயல் நாசம் உண்டாம்.

கண்பக்கமாக உடைந்தால் கர்த்தாவுக்குச் சுகம் உண்டாகாது.

பிரதான கண்ரேகை வழியாக உடைந்தால், குருவுக்குத் தீமை உண்டாம்.

வலப்பக்கக் கண்ரேகை வழியாக உடைந்தால் அந்தக் கிராமவாசிகளுக்குச் சுகம் உண்டாகாது.

இடக்கண்ரேகை வழியாக உடைந்தால் அரசனுக்கு நலம் உண்டாகாது.

முகப்பக்கமாக உடைந்தால் பெருந்துக்கம் உண்டாகும்.

நீளமாக உடைந்தால் பயம் உண்டாகும்.

சேதமாய் உடைந்ததில் ஒருபாகம் கையோடு இருக்குமாயின், கருவில் இருக்கும் பிராணிகளுக்கு அழிவு உண்டாகும்.

பலவாகச் சேதப்படின், கிராமவாசிகளுக்குப் பசி, பீடை உண்டாகும்.

இளநீர் இல்லாதிருந்தால் மழை பெய்யாது.

இளநீர் துர்நாற்றமாய் இருந்தால் இராச்சியலட்சுமி நீங்கும்; நோயுண்டாகும்.

மேற்சொன்ன தோஷங்கள் நீங்கும் பொருட்டு அகோர அஸ்திர மந்திரத்தை நூறு தடவைகள் செபிக்க வேண்டும். பின்பு தேறின தேங்காயை எடுத்து, பெரிய ரேகையில் அடித்து நிவேதிக்க வேண்டும்.

அடிப்பாகம் இரண்டு பங்கும், முகபாகம் ஒரு பங்கும்,

முகபாகம் மூன்று பங்கும், அடிப்பாகம் இரண்டு பங்கும்,

இரண்டு பாதியும் சமமாகவும் உடைந்தால்

சகல சித்திகளும், சுபமும் உண்டாகும்.

# 69. கிராம சாந்தி

**ம**கா பிரதிஷ்டா (கும்பாபிஷே) காலம், உற்சவ காலங்களில் கிராமசாந்தி செய்யாவிடின், இலக்குமி வாசம் உண்டாகாது என்று உத்தரகாரண ஆகமத்தில் கூறப்பட்டிருப்பதனால் கிராமசாந்தி செய்து உற்சவத்தை ஆரம்பிக்க வேண்டும்.

❁ ❁ ❁

# 70. வாஸ்து சாந்தி

**வாஸ்து பற்றிய வரலாறு 01:**

**அ**ந்தகாசுரன் உடனான யுத்தத்திலே சிவபெருமானின் கோபத்தினால் அவர் நெற்றியிலிருந்து வியர்வை பூமியில் விழுந்தது; அதிலிருந்து பூதம் ஒன்று தோன்றியது. அது சிவ ஆணையினால் பூமியில் விழுந்த அந்தகாசுரனுடைய இரத்தத்தைப் பருகித் திருப்தி அடைந்தது. பின் சிவபெருமானைக் குறித்துத் தவம் புரிந்தது. பூதத்தின் தவத்தினால் மகிழ்ந்த சிவபெருமான் பூதமாய் வந்த அந்த அசுரனுக்கு விரும்பிய வரங்களைக் கொடுத்தார். அவன் தனது வலிமையினாலே பூவுலகையும், சுவர்க்கத்தையும் அடக்கினான். தேவர்கள் பயந்து ஸ்ரீகண்டபரமேசுரனைச் சரணடைந்தார்கள். கருணாநிதியாகிய பரமசிவன் தேவர்களை இரட்சிக்கும் பொருட்டு அதிபலர் என்னும் உருத்திரரையும், மாயா பாசங்களையும் படைத்தார். அதிபல உருத்திரர் எட்டுப்பாசங்களினாலும் அவனைக் கட்டிப் பூமியில் தள்ளி, பிரமன் முதலிய தேவர்களை அவன் தேகத்தில் வசிக்கும்படி செய்தார். சிவ ஆணையினாலே தேவர்களால் அதிஷ்டிக்கப்பட்டவனே வாஸ்து புருஷன் ஆவான். அவன் பிரமதேவருடைய பகற்காலம் வரையில் சயனிக்கின்றான். ஈசானத்தில் (வடகிழக்கில்) சிரசும், நிருதியில் (தென்மேற்கு) பாதமும், மார்பில் அஞ்சலியும், அதோமுகமும் (கீழ்நோக்கிய முகமும்) கோப வடிவமுமாகத் திரவாஸ்து (திர - உறுதி) சயனிப்பான். புரட்டாதி, ஐப்பசி, கார்த்திகை ஆகிய மூன்று மாதங்களிலும் கிழக்கே தலை வைத்தும், மார்கழி, தை, மாசி ஆகிய மூன்று மாதங்களிலும் தெற்கே தலை வைத்தும், பங்குனி, சித்திரை, வைகாசி ஆகிய மூன்று மாதங்களிலும் மேற்கே தலை வைத்தும், ஆனி, ஆடி, ஆவணி ஆகிய மாதங்களிலும் வடக்கே தலை வைத்தும் சலவாஸ்து (சல - அசைதல்) சயனிப்பன். பூசைக் காலத்தில் ஊர்த்துவமுகமாகவும் (மேல்நோக்கிய முகமாகவும்), மற்றைய காலங்களில் அதோ முகமாகவும் சயனிப்பான். இதற்குப் பிரமாணம் சித்தாந்த சாராவளி வியாக்கியானத்தில் தரப்பட்டுள்ளது.

**வாஸ்து பற்றிய வரலாறு 02:**

முன்னொரு காலத்தில் அசுரகுருவாகிய சுக்கிராச்சாரியர் (வெள்ளி) தேவர்களை வெல்லுவதற்காக யாகம் செய்து அஜமுகாசுரனைச் படைத்தார். அதனால் துன்புற்ற தேவர்களுடைய வேண்டுகோளுக்கு இணங்கிய சிவபெருமானது நெற்றிக்கண்ணிலிருந்து தீப்பொறி தோன்றியது. சுக்கிராச்சாரியர் பயந்து சிவபெருமானைச் சரணமடைந்தார். சுக்கிராசாரியர் தம்மைச் சரணமடைந்ததை உணர்ந்த பரமேசுரர் சந்தோஷத்துடன் அவருடைய வேண்டுகோளுக்கு இரங்கி அஜமுகனைப் பார்த்து, "உனக்கு வாஸ்துபன் என்னும் பெயர் சித்திக்குக; உன்னுடைய தேகத்தில் பிரமன் முதலிய தேவர்கள் வசிக்குக; வீடுகள் கட்டும் போதும் தேவாலயம் நிர்மாணம் செய்யும்போதும் உன்னையும், உன் சரீரத்தில் வசிப்பவர்களையும் முதலில் பூசிப்பவர்களுக்கு எல்லா ஐசுவரியங்களும் சித்திக்குக. இவ்வாறு உன்னைப் பூஜியாது வீடு, ஆலயம் முதலியன அமைத்தால் அது அசுரப் பிரீதியாக இருக்குக" என்று திருவாய் மலர்ந்தருளினார்.

மேற்படிக் கதைகளால், வாஸ்து புருஷனுடைய தேகத்தில் வசிக்கும் தேவர்களைப் பூசிக்காவிடில், இவர்கள் சுபத்தைத் தரமாட்டார்கள் என்பது பெறப்படும்.

வாஸ்துவின் உற்பத்தி இங்கு கூறியபடி அன்றி வேறு விதமாகவும் ஆகமங்களில் கூறப்பட்டுள்ளது. இவற்றைக் கற்ப பேதமாகக் (வேறுபாடு) கொள்க.

**வாஸ்து சாந்தியும், பிரிவுகளும்:**

**ஆ**ரம்பிக்கும் கிரியையும், மந்திரமும், இடமும் சுத்தியாதல் பொருட்டு வாஸ்து சாந்தி செய்க. வாஸ்து பூசை செய்யாது விடின் ஆரம்பிக்கும் கிரியை பயன் தராது.

வாஸ்து பதமானது, **மண்டூக பதம், பரமசாயீ பதம்** என இரண்டு வகைப்படும். தேவ கருமங்களில் மண்டுக பதமும், தேவி கருமங்களில் பரமசாயீ பதமும் அமைத்துப் பூசிக்கத் தக்கன.

**மண்டூக பதம்:** அறுபத்து நான்கு பதமுள்ள வாஸ்து.

**பரமசாயீ பதம்:** எண்பத்தொரு பதமுள்ள வாஸ்து.

பதங்களில் வடகிழக்குத் திசை முதலாக ஈசானன் முதலிய தேவதைகளையும், மத்தியில் பிரமாவையும் பூசித்து அக்கினி காரியம்

செய்க. பலாசு, அத்தி, அரசு எனும் மரங்களின் சிறு கொப்பு, இலை, தருப்பை என்பவைகளால் புருஷ ஆகிருதியாகக் கட்டி, குண்ட அக்கினியில் சுவாலிக்கச் செய்து வீதி, யாகம் முதலிய இடங்களில் பர்யக்கினி கரணம் செய்து ஈசானதிக்கில் (வட கிழக்கில்) போடுக. வாஸ்துவுக்குப் பாபரூபம் என்றும் பரியாயநாமம் உண்டு.

சோமசம்பு பத்ததியில் வாஸ்து புருஷனுடைய தேகத்தில் வசிக்கும் தேவதைகள் பூசை செய்யப்பெற்று சுபத்தைத் தருபவர்களாக இருக்கின்றனர் என்று கூறப்பட்டு இருக்கிறது.

❋ ❋ ❋

# 71. மிருத் சங்கிரகணம்

**பு**ண்ணிய தீர்த்தங்களின் அருகிலும், நந்தனவனத்திலும், சமுத்திரக் கரையிலும், யாக விருட்சத்தின் அடி முதலிய இடங்களிலும் மிருத் சங்கிரகணம் செய்யலாம்.

நவகோட்டம் கற்பித்துப் பூசித்து, அதிற் பூமியை நிருதியில் சிரசும், ஈசானத்தில் பாதமும், அக்கினியில் வலக்கையும், வாயுவில் இடக்கையும் உடையதாகவும், கடி இருதயம் என்பவற்றோடு கூடினதாகவும் பாவித்து, அதன் வயிற்றினிடத்திருந்து மண்ணை எடுத்தல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| **நெற்றியில் எடுத்தால்** | : | கிராமத்திற்கும், |
| **முகத்தில் எடுத்தால்** | : | பிராமணருக்கும், |
| **கழுத்தில் எடுத்தால்** | : | ஆசாரியருக்கும், |
| **புயத்தில் எடுத்தால்** | : | ஷத்திரியருக்கும், |
| **ஸ்தனத்தில் எடுத்தால்** | : | பெண்களுக்கும், |
| **மார்பில் எடுத்தால்** | : | புத்திரருக்கும், |
| **தொடையில் எடுத்தால்** | : | வைசியருக்கும், |
| **பாதத்தில் எடுத்தால்** | : | சூத்திரருக்கும் |

அழிவு உண்டாம்.

**ஆலயத்தில் வாஸ்து சாந்தி செய்யும் திக்கும், பலனும்:**

| | | |
|---|---|---|
| **வடகிழக்கில்** | : | ஆயுள் விருத்தி |
| **தென்கிழக்குத் திசையில்** | : | புத்திர விருத்தி |
| **மேற்கில்** | : | மோட்ஷ சித்தி |
| **வடமேற்கில்** | : | சம்பத்து |
| **வடக்கில்** | : | செல்வம் |
| **தென்மேற்கிலும், கிழக்கிலும்** | : | கலகம் |
| **தெற்கில்** | : | அஞ்ஞானம் |

# 72. அங்குரார்ப்பணம்

**வி**தைகளுக்கு அதிபன் சந்திரன் ஆகையால் இரவில் அங்குரார்ப்பணம் செய்தல் வேண்டும். (அங்குரம் - முளை) பகல் காலத்தில் செய்தல் கூடாது. செய்தால் பயிர்கள் விருத்தியடையாது. மனிதர்களுடைய சௌளம் முதலிய கிரியைகளில் இரவை நீக்கிப் பகலில் செய்யின் சகல மங்களமும் உண்டாகும்; தேவர்களுக்குப் பகல் காலத்தை நீக்கி இரவில் செய்க. சத்தி அங்குரார்ப்பணம் செய்யின் இரவிலாவது பகலிலாவது செய்யலாம்.

**பார் அவன்காண் பார் அதனில் பயிர் ஆனான் காண்**
**பயிர் வளர்க்கும் துளி அவன்காண் துளியின் நின்ற**
**நீர் அவன்காண் நீர் சடைமேல் நிகழ்வித்தான் காண்**
**நில வேந்தர் பரிசாக நினைவுற்(று) ஓங்கும்**
**பேர் அவன்காண் பிறை எயிற்று வெள்ளைப் பன்றி**
**பிரியாது பல நாளும் வழிபட்(டு) ஏத்தும்**
**சீர் அவன்காண் சீருடைய தேவர்க்(கு) எல்லாம்**
**சிவனவன்காண் சிவபுரத்(து) எம் செல்வன் தானே.**

திருநாவுக்கரசு சுவாமிகள்.

❋ ❋ ❋

# 73. இரட்சா பந்தனம்

**இ**ரட்சா என்பது எல்லாப் பாவங்களையும் நீக்கிக் காப்பது எனப் பொருள்படும். ர - எல்லா; க்ஷ - பாபநாசம். பந்தனம் என்பது கட்டுதலாம்.

தொடங்கிய கிரியையும், கருமமும் சித்தியாதல் பொருட்டு ஆசாரியர் இரட்சாபந்தனம் செய்க. அன்னையானவள் மருந்தை உண்டு, தனது குழந்தைகளின் நோயை நீக்கிப் பாதுகாத்தல் போல புத்திரர்களாகிய ஆன்மாக்களின் மலநோயை நீக்கி இரட்சித்தல் காரணமாகச் சுவாமிக்கு இரஷாபந்தனம் செய்யப்படுகின்றது.

முடிவில் இரட்ஷையின் சூத்திரத்தை (முடிச்சினை) அவிழ்த்து, அதனைச் சுழு கோதகத்துடன் (வலது கை சுட்டுவிரலால் விடும் நீருடன்) சிவனாருடைய வரத கரத்தில் (வரம் தரும் கரம்) நிவேதிக்க.

மூர்த்தி கும்பம் தாபித்து, ஓம கருமம் செய்து சம்பாதா ஆகுதி பண்ணி, மூர்த்தி கும்பத்தை மூர்த்தியில் ஆவாகித்து, இரட்சாபந்தனம் செய்வது உத்தமம். ஓமம் இன்றிச் செய்வது மத்திமம். ஓமமும், கும்பமும் இன்றிச் செய்வது அதமம்.

# 74. பேரீதாடனம்

**பே**ரீ - தோல் வாத்தியங்கள், தாடனம் - தட்டுதல். முறைப்படி பேரீயில் (மேளத்தில்) உருத்திரன் முதலியோரைப் பூசித்து ஆசாரியர் மும்முறை தட்டுக. முதல் தட்டுதலினால் பூமி, அந்தரிஷம், சுவர்க்கம், பாதாளம், என்னும் இடங்களில் வசிப்பவர்களுக்கு இதமும், தேவ விரோதிகளாகிய அசுரர் முதலியோருக்கு அழிவும் உண்டாகும். இரண்டாவது தட்டுதலினால் பிரமா, விஷ்ணு, உருத்திரன், இந்திரன், முதலிய தேவர்களுக்கும், முனிவர்களுக்கும், மிருகங்களுக்கும், பட்சிகளுக்கும் இதம் உண்டாகும். மூன்றாவது தட்டுதலினால் எல்லா உலகங்களுக்கும், எல்லாப் பிராணிகளுக்கும் இதமும், சுகமும் உண்டாகும்.

❁ ❁ ❁

# 75. துவ ஜாரோகணம்

**து**வஜம் - தம்பம், ஆரோகணம் - ஏற்றுதல். துவஜாரோகணம் - கொடியேற்றம். மகோற்சவ ஆரம்பத்திலே கொடியேற்றல் ஆகம சம்மதமாம். மும்மலத்திலே மூழ்கிக் கிடக்கின்ற ஆன்மா ஆசாரியனுடைய அருளால், தீட்ஷை ஒழுங்கினாலே பாசபந்தம் அற்றுச் சிவஞானத்தைப் பொருந்திப் பதியின் திருவடியை அடையும் முறைமையைக் காட்டும் குறியீடே துவஜாரோகணம் ஆகும்.

அ∴து எவ்வாறெனில்; காரண ஆகமம் முதலிய சிவாகமங்களில் கூறியபடி கொடிமரம் பதியாகிய சிவபெருமானையும், கொடிக்கயிறு திரு அருட்சத்தியையும், கொடிச்சீலை பசுவையும், தருப்பைக்கயிறு பாசத்தையும் குறிக்கும். ஆன்மா பாசபந்தம் நீங்கி திருவருட்சத்தி மூலமாகவே சிவபெருமானை அடைதல் வேண்டும்: இவ்வாறே கொடியேற்றத்திலும் பசுவைக் குறிக்கும் கொடிச்சீலை, திருவருளைக் குறிக்கும் கயிற்றின் வழியாகச் சென்று, கொடித்தம்பத்தில் ஆறு ஆதாரங்களை ஆசனமாகக் கொண்டு, அதன்மீது இருக்கும் பரமசிவத்தை அடைகின்றது. கொடித் தம்பமும், கொடிச் சீலையும் பொருள் தன்மையால் இரண்டாக இருப்பினும், கொடித் தம்பத்தையே பொருளாகக் கொண்டு, கொடிச் சீலை அதிலேயே ஒடுங்கித் தங்கியிருக்கும் நிலை, அத்துவித நிலையைக் (இரண்டறக் கலந்த நிலை) குறிக்கும். ஆதலினாலே கொடியேற்றம் செய்தல் மும்மலங்களின் பீடிப்பினால் பிறந்து, இறந்து, சுழன்று, வருந்தும் ஆன்மாக்கள் தீட்ஷை முறைப்படி மல நீக்கம் பெற்று, சிவபெருமானை அடைதலை உணர்த்தும் நற்குறியீடாம் என்பது இனிது உணரப்படும்.

**ஒளிக்கும் இருளுக்கும் ஒன்றே இடம் ஒன்று மேலிடில் ஒன் (று)**
**ஒளிக்கும் எனினும் இருள் அடரா (து) உள் உயிர்க் (கு) உயிராய்த்**
**தெளிக்கும் அறிவு திகழ்ந் (து) உளதேனும் திரி மலத்தே**
**குளிக்கும் உயிர் அருள் கூடும்படிக் கொடி கட்டினனே.**

உமாபதி சிவாச்சாரியர் கொடிக்கவி.

துவசத் தம்பம் பதி (சிவம்) எழுத்தையும், கொடியேற்றும் கயிறு பரை (சக்தி) எழுத்தையும் கொடிச் சீலையில் வரையப்பட்ட இடபதேவர் உயிர் (ஆன்மா) எழுத்தையும், கொடிச்சீலை திரோத (மறைப்பு) எழுத்தையும், தருப்பைக் கயிறு மல எழுத்தையும் குறிக்கும்.

**அஞ் (சு) எழுத்தும் எட் (டு) எழுத்தும் ஆ (று) எழுத்தும் நா (லு) எழுத்தும்**
**பிஞ் (சு) எழுத்து மேலைப் பெரு எழுத்து - நெஞ் (சு) அழுத்திப்**
**பேசும் எழுத்துடனே பேசா எழுத்தினையும்**
**கூசாமல் காட்டக் கொடி.**

– கொடிக்கவி.

❋ ❋ ❋

# 76. திரு உலாக்கொண்டு அருளுதல்

**சு**வாமி திரு உலாக்கொண்டு அருளும்போது ஆசாரியர் சுவாமிக்கு வலப் பக்கத்திலும், கோயில் அதிகாரி இடப் பக்கத்திலும், பக்தர்கள் பின் பக்கமாகவும் நமஸ்கரித்துத் தோத்திர பாராயணம் செய்து கொண்டும், சிவப்பணி செய்பவர்கள் சுவாமிக்கு முன்பக்கமாக இரு பக்கங்களிலும் நின்று தத்தமக்குரிய தொண்டுகளைச் செய்து கொண்டும் செல்லுதல் வேண்டும்.

சுவாமி திரு உலாக் கொண்டருளும் போதும் பூசை நடைபெறும் போதும் எழுந்து நின்று நமஸ்கரியாது அக்கிரியைகள் நடைபெறும் இடங்களில் இருப்பவர்கள் யாவரே ஆயினும் தண்டிக்கப் பெறுவர்.

சதசிருங்கம் என்னும மலையின் ஒரு பாங்கராகச் சனற்குமார முனிவர் யோகம் செய்திருக்கும்போது, ஒரு நாள் பரமசிவன் உலகைக் காத்தருளும் பொருட்டு அருள் கொண்டு இடப வாகனத்தில் ஏறி கணங்கள் சூழ ஆகாயத்தில் உலாவி அருளினார். சனற்குமார முனிவர் யோகத்தில் வைத்த கருத்தினால் அதனை அறியாதவராய், இருக்கையில் இருந்து எழும்பாதவர் ஆயினார். கணநாதராகிய திருநந்திதேவர் முனிவரை நோக்கி, கோபித்து, "எம்பெருமானை இகழ்ந்தமை பற்றி ஒட்டகமாகக் கடவாய்" என்று சபித்து அருளினார். முனிவர் உடனே ஒட்டகம் ஆனார். சில காலம் கழிந்தபின்

திருவருளினால் காஞ்சிபுரத்தை அடைந்து சிவ அர்ச்சனை செய்து சாப நீக்கம் பெற்றார் என்று காஞ்சிப் புராணத்தில் கூறப்பட்டுள்ளது.

சிவபெருமான் வீதி வலம் செய்து அருளும் செயல் மூவுலகங்களையும் காத்து அருளும் குறிப்புடையது. இடபம் முதலிய வாகனங்களில் எழுந்தருளுதல், இயக்கர், இராக்கதர், அவுணர், பைசாசர் முதலிய துட்டர்களை (தீயோர்) நிக்கிரகித்தல் (அழித்து) பொருட்டும் தேவர், மனிதர் முதலிய சிட்டர்களை (நல்லோர்) அநுக்கிரகித்தல் பொருட்டும் ஆகும்.

**கல் வரைப் பிராட்டி செவ்வேள் ஐங்கரன் கணங்கள் சூழ**
**பல் வகை ஊர்தி உம்பர் படர் ஒளி அரச வீதி**
**எல்லை இல் உயிர்கட் (கு) எல்லாம் என் அரும் கருணை பூத்துப்**
**புல் (கு) ஒளித் திரு ஏகம்பன் திரு உலாப் போதச் செய்வோர்.**

**மேதகு தவம் தானங்கள் வேள்விகள் அனைத்தும் செய்தோர்க் (கு)**
**ஓதிய பயத்திற் கோடி உடையராய்க் கோடி கோடி**
**ஏதம் இல் குலத்தினோடு எம்பிரான் உலகில் வாழ்ந்து**
**சாதலும் பிறப்பும் இல்லாத் தத்துவம் தலைப்பட் (டு) உய்வார்.**

– காஞ்சிப்புராணம்.

❋ ❋ ❋

# 77. யாகம்

**மண்டப சொரூபம்:**

சிவ யாகமண்டபமானது ஆறு அத்துவாக்களின் (வழிகளின்) வடிவமாக உள்ளது. யாகசாலை எங்கும் சாந்தி அதீத கலா சொரூபமாம். கிழக்குத் துவாரம் முதலிய நான்கு துவாரங்களும் சாந்தி, வித்தை, பிரதிட்டை, நிவிர்த்தி, என்னும் கலா அத்துவா வடிவாய் உள்ளன. மண்டபத்தின் நடுப்பாகம் ஐம்பத்தொரு வர்ண (அட்சரம்) அத்துவா வடிவமாக உள்ளது. கும்பங்கள், பதினொரு மந்திர அத்துவா வடிவமாக உள்ளன. ஓமத் திரவியங்கள் முப்பத்தாறு தத்துவ அத்துவா வடிவமாக உள்ளன. மண்டபம் அமைக்கப்பட்ட இடம் இருநூற்று இருபத்து நான்கு புவன அத்துவா வடிவமாக உள்ளது என்று "சைவபூஷணத்தில்" கூறப்பட்டுள்ளது.

**கும்ப லட்ஷணம்:**

கும்பத்தில் ஆவாகிக்கப்படும் (எழுந்தருளச் செய்யப்படும்) சிவபெருமானுக்குக் குடம் மாமிசமாகவும், கும்பத்தில் நிறைந்த உதகம் (நீர்) இரத்தமாகவும், சுற்றப்பட்ட நூல் எழுபத்து இரண்டாயிரம் அசுத்தமாயா

நாடிகளாகவும், இரத்தினம் எலும்பாகவும், வஸ்திரம் தோலாகவும், கூர்ச்சம் (தர்ப்பை முடிச்சு) கேசமாகவும், மாவிலை சடையாகவும், மாதுளம்பழம் பற்களாகவும், தேங்காய் சிரசாகவும், செபிக்கும் மந்திரம் பிராணனாகவும் (உயிர் மூச்சாகவும்) அமைந்துள்ளன. இவ்வாறு யோகஜ ஆகமத்திலே கூறப்பட்டுள்ளது. இரத்தினம், சுவர்ண புஷ்பம் (பொன்மலர்) முதலியன சுக்கிலம் (விந்து) என்று ''சித்தாந்த சாராவளி'' கூறும்.

**ஆசனம்:**

பிருதுவி (மண்) தத்துவம் கூர்ம (ஆமை) ஆசனமும், உபவேதிகை (உப கும்பங்கள் வைக்கும் மேடை) அநந்த (பாம்பு) ஆசனமும், மகாவேதிகை சிம்ம (சிங்கம்) ஆசனமும், நெல் யோக ஆசனமும், அரிசி பதும (தாமரை) ஆசனமும், எள்ளு விமல (பொன்) ஆசனமும், நெல்மலர் (நெற்பொரி) சத்திய ஆசனமுமாகப் பிருதுவி முதல் குடிலை (நாதம்) வரையிலான முப்பத்தாறு தத்துவங்களும் பஞ்ச (ஐந்து) ஆசனமாக அமைந்துள்ளன. நெல்லு, தாமரை நாளத்தின் முட்களாகவும், அரிசி தாமரைப்பூ இதழ்களாகவும், பயறு தாமரைப் பொகுட்டாகவும் (மொட்டாகவும்) , உழுந்து தாமரைக் கொட்டையாகவும், எள்ளு கேசரங்களாகவும் (மகரந்தம்) பாவிக்கப்படுகின்றன.

**யாகதேவர்கள்:**

பிரமா, விட்டுணு, இந்திரன் முதலியோர் அசுத்த மாயா புவனங்களில் இருப்பவரும், சுத்தவித்தையில் இருப்பவரும் என இரு வகைப்படுவர். சுத்த வித்தியா தத்துவத்தில் சத்தகோடி (நூறுகோடி) மகா மந்திரங்களும், காமிகம் முதலிய இருபத்தெட்டு ஆகமங்களும், ஐம்பத்தொரு அட்ஷரங்களும், நந்தி, மாகாகாளர், பிருங்கி முனிவர், விநாயகர், இடபதேவர், கந்தர், தேவி, சண்டர் என்னும் கணநாதர் எண்மர்களும், இந்திரன் முதலிய உலக பாலகர்களும் இருக்கும். மகேசுர தத்துவத்தில் அநந்தர், சூக்குமர், சிவோத்தமர், ஏகநேந்தரர், ஏகருத்திரர், திரிமூர்த்தி, ஸ்ரீகண்டர், சிகண்டி என்னும் அட்ட வித்தியேசுரர்களும் இருப்பர். சத்தி தத்துவத்தில் நிவிர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி, சாந்தியதீதம் முதலிய கலைகள் இருக்கும்.

சுத்தவித்தை முதலிய தத்துவங்களில் இருப்பவர்களது சரீரம் வைந்தவம் (சுத்தமாயை) ஆகையாலும், மலபரிபாகம் உற்றுப் பரமசிவனின் அருளால் பதம் பெற்றவர் ஆகையாலும், பிறப்பு, இறப்புக்களை நீக்கி அவ்விடத்தில் நின்றபடியே சிவதரிசனத்தால் ஆனந்த விளக்கத்தை அடைவார் ஆகையாலும் இவர்களே யாகம் முதலிய கன்மங்களில் பூசிக்கப்படும் பெருமை பெற்றவர்கள் ஆவார்.

புவனங்களில் இருப்பவரது சரீரம் பிரகிருதி மாயா சம்பந்தம் ஆகலானும், முன்னர் பரமசிவனது அருள் இல்லாமையானும் அவர்களது தானம் பசுத்தானம் ஆகலானும் அசுத்த தத்துவம் முப்பத்தொன்றையும் மனதால் கடந்து, சுத்த வித்தியா மயமான யாகசாலையை அடைந்து பூசித்து வணங்குவதினாலும் அசுத்த புவன வாசிகள் சுத்த வித்தியா மயமான ஸ்தானத்தில் பூசிக்கப்படத் தக்கவர் அல்லர்.

**ஆகுதி:**

யாசாலையில் உள்ள சிவாக்கினியில் ஆகுதி செய்தல் ஆன்மாக்கள் செய்த கன்மங்களை அனுபவத்துக்கு வரவிடாது சுத்தமாக்கும் பாவனையாகும்.

**லாஜ புஷ்பம்:**

உமி முதலியவற்றிலிருந்து சுத்தமான நெல்மலரைச் சுவாமிக்கு ஆசாரியர் சமர்ப்பிப்பது மலம் நீங்கிய ஆன்மாக்களைச் சிவத்தோடு சேர்ப்பிக்கும் பாவனையாகும்.

❋ ❋ ❋

# 78. பத்து நாள் உற்சவப் பலன்கள்

| | | |
|---|---|---|
| **முதல்நாள் விழா** | : | தூல நீக்குதல் பொருட்டும்; |
| **இரண்டாம் நாள் விழா** | : | தூல, சூக்குமம் நீக்குதல் பொருட்டும், |
| **மூன்றாம் நாள் விழா** | : | மூவினையும்; முப்புத்தியும், முக்குணமும், மும்மணமும், முக்குற்றமும், முப்பிறப்பும், முப்பற்றும் நீக்குதல் பொருட்டும்; |
| **நான்காம் நாள் விழா** | : | நாற்கரணமும், நால்வகைத் தோற்றமும் நீக்குதல் பொருட்டும்; |
| **ஐந்தாம் நாள் விழா** | : | ஐம்பொறியும், ஐந்து அவத்தையும், ஐந்து மலமும் நீக்குதல் பொருட்டும்; |
| **ஆறாம் நாள் விழா** | : | காமம் முதலிய ஆறும், கலை முதலிய ஆறும், வினைக்குணம் ஆறும், பதமுத்தி ஆறும் நீக்குதல் பொருட்டும், |
| **ஏழாம் நாள் விழா** | : | எழுவகைப் பிறப்பும், கலை முதலிய ஏழும், மாயமல குணம் ஏழும் நீக்குதல் பொருட்டும்; |
| **எட்டாம் நாள் விழா** | : | எண்குணம் விளக்குதல் பொருட்டும், |
| **ஒன்பதாம் நாள் விழா** | : | மூன்று உருவும், முத்தொழிலும், மூன்று இடத்து உறைதலும் இல்லை எனல் பொருட்டும்; |
| **பத்தாம் நாள் விழா** | : | பரமானந்தக் கடலில் அழுத்துதல் பொருட்டும் |

செய்யப்படுகின்றன.

இவ்வாறு விம்பதந்திரத்தின் சிவோத்சவ விதிப்படலம் கூறுகின்றது. இவ்வாகமம் கூறும் மகோற்சவ உண்மையைச் "சைவசமயநெறி" என்னும் நூலில் பொதுவிலக்கணத்து 346 ஆம் திருக்குறளின் ஆறுமுகநாவலர் விசேட உரையில் காண்க.

உரையாசிரியர் ம.க. வேற்பிள்ளை இயற்றிய சந்திரமௌலீசர் சதகம் என்னும் ஈழமண்டல சதகம்:-

**விழா ஒன்று தூலம் விடுத்தல் பயத்தது**
**விழா இரண் (டு) உடல் இரண்டும்**
**விள்ளல் பயத்த முந்நாள் விழா வினை முதன்**
**மும்மையாம் எழுமை வீட்டல்**
**விழா நான்கு நாற்கரண நால்வகைத் தோற்றம்**
**விடுத்தல் ஐந்தாந்நாள் விழா**
**விரவும் ஐம்பொறி ஐந் (து) அவத்தை மலம் ஐந்தும்**
**விலக்கன் றுவிருநாள் திரு**
**விழா காமம் ஆதி கலை ஆதி பத முத்திகள்**
**வினைக் குணம் அவ் ஆறும் வீய்த்தல்**
**விழா ஏழு சனனம் கலாதி மாயா மல**
**விதங்கள் எவ் ஏழும் வேறல்.....**
**சந்த்ர புர தலவாசனே.**

**எண்ணாள் விழா எண் குணம் விளக்கல் பொருட் (டு)**
**என்ப ஒன்பான் நாள் விழா**
**எய்து மூன் (று) உரு முத்தொழின் மூன் (று) இடத்து உறைதல்**
**என்றும் ஒன்பதும் இலை எனல்**
**பண்ணு பத்தாநாள் விழாப் பரானந்த மாப்**
**பரவையில் படிதல் பயனாம்**
**பத்து நாளின் மேல் விழா இல்லை விம்ப தந்**
**திர மீது பகரும் அதனில்**
**கண்ணாரவே காணலாம் பத்துநாள் விழாக்**
**காட்டு காரிய விரிவினைக்**
**கழறிடும் மகோற்சவத் (து) ஒரு காலை பகல் உண்டு**
**காத்தல் விரதங்கள் தனதாம்.........**
**சந்த்ர புர தலவாசனே.**

❊ ❊ ❊

# 79. முதல் நாள் உற்சவம்

**மு**தல்நாள் உற்சவம் தூல தேகத்தை நீக்கிக்கொள்ளுதல் பொருட்டுச் செய்யப்படுவதாம்.

❋ ❋ ❋

# 80. இரண்டாம் நாள் உற்சவம்

**தூ**ல, சூக்கும தேகங்களின் வேறாகிய ஆன்மா, அத்தேகங்களைத் தன்னின் வேறாகக் கண்டு, பற்று நீக்குதல் வேண்டும் என்னும் பாவனையாகவே இரண்டாம் நாள் உற்சவம் நடத்தப்படுகின்றது.

❋ ❋ ❋

# 81. மூன்றாம் நாள் உற்சவம்

**மூ**ன்றாம் நாள் உற்சவம் மூவினை, முப்புத்தி, முக்குணம், மும்மனம், முக்குற்றம், முப்பிறப்பு, முப்பற்று என்னும் ஏழையும் ஒழித்தல் பொருட்டுச் செய்யப்படுகிறது.

❋ ❋ ❋

# 82. நான்காம் நாள் உற்சவம்

**நா**ன்காம் நாள் உற்சவம் மனம் முதலிய நாற்கரணமும், அண்டசம் முதலிய நால்வகைப் பிறவிப்பேதங்களும் நீக்குதல் பொருட்டுச் செய்யப்படுகிறது.

❋ ❋ ❋

# 83. ஐந்தாம் நாள் உற்சவம்

**ஐ**ந்தாம் நாள் உற்சவம் மெய் முதலிய ஐம்பொறிகளும், சாக்கிரம் முதலிய ஐந்து அவத்தைகளும், ஆணவம் முதலிய ஐந்து மலங்களும் என்னும் இவற்றின் நீக்கத்தின் பொருட்டுச் செய்யப்படுகின்றது.

❋ ❋ ❋

# 84. ஆறாம் நாள் உற்சவம்

ஆறாம் நாள் உற்சவம் காமம் முதலிய உட்பகை ஆறும், கலை முதலிய அத்துவா ஆறும், இருத்தல் முதலிய கன்ம மல குணம் ஆறும், பிரமசாலோகம் முதலிய பதமுத்தி ஆறும் நீக்குதல் காரணமாகச் செய்யப்படுகிறது.

❋ ❋ ❋

# 85. ஏழாம் நாள் உற்சவம்

ஏழாம் நாள் உற்சவம் ஏழ்வகைப் பிறப்பும், வித்தியாதத்துவம் ஏழும், மாயாமல குணம் ஏழும் நீங்கும்பொருட்டு நடத்தப்படுகிறது.

❋ ❋ ❋

# 86. எட்டாம் நாள் உற்சவம்

எட்டாம் நாள் உற்சவம் சர்வஞ்ஞத்துவம் (முற்றும் உணர்தல்) முதலிய எண்குணங்களும் விளங்குதல் பொருட்டு நடத்தப்படுகிறது.

❋ ❋ ❋

# 87 ஒன்பதாம் நாள் உற்சவம்

ஒன்பதாம் நாள் உற்சவம் மூன்று உருவங்களும், மூன்று தொழில்களும், மூன்று இடத்து உறைதலும் இல்லை என்பதைக் குறிப்பதாம்.

❋ ❋ ❋

# 88. பத்தாம் நாள் உற்சவம்

பத்தாம் நாள் உற்சவம் அந்தம் இல் இன்பத்து அழிவு இல் வீடாகிய பரமானந்த வெள்ளத்தில் அமிழ்ந்துதல் பொருட்டுச் செய்யப்படுவதாகும்.

[இந்த உற்சவங்களின் தத்துவ விளக்கங்களைப் பின்னே காண்க.]

❋ ❋ ❋

# 89. தைல அப்பியங்கம் (எண்ணெய் முழுக்கு)

உற்சவ காலம் முதலியவற்றில் அப்பியங்கத்துக்கு உரிய வாரங்களில் தைல அப்பியங்கம் செய்க. மிருத்திகை (மண்), தாரு (மரம்) இவைகளால் செய்யப்பட்ட பேரங்களுக்கு (வடிவங்களுக்கு) அப்பியங்கம் உத்தமம். சுவர்ணபேரம் (தங்கவடிவம்) சித்திரம், இரத்தினபேரம் (மணிகளால் செய்யப்பட்ட வடிவம்) உலோகபேரங்களுக்கு (உலோகங்களால் செய்யப்பட்ட வடிவம்) கண்ணாடி விம்பத்தில் தைல அப்பியங்கம் செய்க. மர வடிவங்களினது தலையில் தைலத்தைப் புரோட்சிக்க (தெளிக்க). தைலத்துக்கு மந்திரபூர்வமான சுத்தி செய்க.

சுவாமிக்குத் தந்தகாஷ்டம் (பற்குச்சி), கண்ணாடி, தாம்பூலம் (வெற்றிலை) சமர்ப்பித்து அப்பியங்கத்தைச் செய்க. பின்பு நெல்லிக் காப்பினாலும் மஞ்சள் காப்பினாலும் அபிஷேகிக்க. பக்தர்களுக்கும் பரிசாரகர்களுக்கும் (உதவி அர்ச்சகருக்கும்) தைலத்தைக் கொடுக்க. இதனால் சர்வரோகமும் (சகல நோய்களும்) விநாசமாகும் (நீங்கும்).

❁ ❁ ❁

# 90. வசந்த உற்சவம்

ரதி, மன்மத பூசையும், வழிபாடும். இவ் வழிபாட்டை ஆறாவது நாள் உற்சவத்தில் செய்க.

❁ ❁ ❁

# 91. மிருக யாத்திரை (வேட்டைத் திருவிழா)

இதனை வேட்டைத் திருவிழா எனவும், சங்கார யாத்திரை எனவும் கூறுவர். பன்றிபோன்ற ஆணவ மலமும், மான் போன்ற கன்மமலமும், பட்சி போன்ற மாயாமலமும் ஆகிய மும்மலங்களும் ஆன்மாவைச் சார்ந்து நின்று வருத்தும் துட்டர்களாம். அஞ்ஞானத்தை உண்டுபண்ணுகிற மும்மலங்களை அடக்கி, சிவபெருமான் சாயுச்சியம் கொடுக்கும் குறிப்பாகவே, இந்த உற்சவம் நடைபெறுகிறது. இதனை எட்டாம் தினத்தில் செய்க.

**மன்னிய கலாதி ஏழும் ஆணவ மலமும் ஆய,**
**தன்னியல் வேட்டை ஆடும் தன்மை உட்கொண்டு நாதன்**
**சின்மயக் குடிலை வில்லும் சிற்பரை அம்பும் சேர்த்(து) இப்**
**பன் நெடும் கருவி தோற்றப் பகை அற உலாவல் உற்றார்.**

— உற்சவ விளக்கம்.

## 92.கிருஷ்ணகந்தம்

திரிபுர சங்காரத்து உண்மையை உணர்த்தும் பொருட்டுக் கிருஷ்ணகந்தம் சாத்தப்படுவதாம். ஆன்மாக்களை இரட்சித்தல் காரணமாக இதனை ஒன்பதாம் தினத்தில் செய்க.

❁ ❁ ❁

## 93. இரதோற்சவம் (தேர்த் திருவிழா)

பசுபதி ஆகிய சிவபெருமான் சூரியசந்திரர்கள், சக்கரங்களாகவும் (சில்லு), மற்றைச் சரம் (அசைபவை), அசரம் (அசையாதவை), ஆகிய பொருள்கள் ஒவ்வொரு உறுப்புக்களாகவும், நான்கு வேதங்கள் குதிரைகளாகவும் அமைந்த தேரில் மேருவை வில்லாகவும், விட்டுணுவை அம்பாகவும். அக்கினியை அவ்வம்பின் கூர் வாயாகவும் கொண்டு எழுந்தருளிப் பிரமாவாகிய சாரதி, பிரணவமாகிய சவுக்குக் கொண்டு செலுத்தத் திரிபுரத்தது அசுரர்களைத் தமது திருப் புன்முறுவலால் எரித்து அருளினார்.

**விருது குன்றமாம் மேருவில் நாண் அரவா**
**அனல் எரி அம்பால்**
**பொருது மூ எயில் செற்றவன் பற்றி நின்(று)**
**உறைபதி எந்நாளும்**
**கருதுகின்ற ஊர் கனைகடல் கடிகமழ்**
**பொழில் அணி மாதோட்டம்**
**கருத நின்ற கேதீச்சரம் கைதொழக்**
**கடுவினை அடையாவே.**

-திருஞானசம்பந்தப் பிள்ளையார்.

திரிபுர சங்காரத்து உண்மைக் காட்சியை உணர்த்தி ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களையும் கெடுத்தற்காக இரதோற்சவம் நடத்தப்படுகின்றது.

**"புரம் அடு நாள் - சான்ற நிலத்தேர் பொரு மணித்தேர்**
**சங்கத் தலைவர் உருட்டினார்"**

திருவானைக்கா புராணம்.

❁ ❁ ❁

# 94. சூர்ணோற்சவம் (சுண்ணம் இடித்தல்)

**த**னு, கரண, புவன, போகங்கள் நான், எனது எனும் செருக்கை எழுப்புவன. அவைகளைச் சத்தியால் இடித்துச் சுத்த சுண்ணமாக்கி இறைவனிடத்தில் ஒப்பிக்க, அவர் திரோபவ கிருத்தியம் (மறைப்புத் தொழில்) செய்து அருளுவார். அப்பொழுது ஆன்மா இருவகைப் பற்றும் அற்றுத் தன் செயலற்றுச் சிவன் செயலாய் நிற்கும். நான், எனது எனும் செருக்கை சத்தியால் இடித்துப் பொடியாக்கும் செயலை பாவனையால் உணர்த்துவதே சூர்ணோற்சவம் ஆகும்.

**தனுவொடு கரண மாயா புவன போகம் தவிர்க்கும்**
**புனித நீறாய சுண்ணம் போதகற்(கு) அளித்திட்(டு) உண்மை**
**இனி(து) அமர் சிவம் அதாக்கி.**

– உற்சவ விளக்கம்.

**சக்திகளால் தனு கரண புவன போகங்கள் தனை**
**அத்தனுக்குச் சுண்ணம் அவையாய் இடிக்கக் கூவுதலே**
**ஒத்த திருச்சுண்ணம்.**

– திருப்பெருந்துறைப் புராணம்.

❋ ❋ ❋

# 95. தீர்த்தம்

**சௌ**ரவம், சாவனம், சாந்திரம், நட்சத்திரம் என்னும் நால்வகை மாத உற்சவத்தில் தீர்த்தோற்சவம் செய்யலாம்.

சௌரவ, சாவன மாதங்களைத் தீர்த்த முடிவாகக் கொள்பவர்கள் சாலோகம் முதலிய பதமுத்திகளை அடைவார்கள்.

சாந்திர, நட்ஷத்திர மாதங்களைத் தீர்த்த முடிவாகக் கொள்பவர்கள் சகல சம்பத்தையும், சுகத்தையும் அடைவார்கள்.

தீர்த்த தினத்தை நிச்சயித்துக்கொண்டு, கொடியேற்றம் செய்க.

சமுத்திர தீர்த்தம் திதியைப் பிரதானமாகக் கொண்டது.

நதி முதலியற்றில் கொடுக்கப்படும் தீர்த்தம் நட்ஷத்திரத்தைப் பிரதானமாகக் கொண்டது.

திதியும், நட்ஷத்திரமும் கூடிவருவது உத்தமம். அது கிடைத்தற்கு அரியது.

சௌர உற்சவத்துக்குச் சங்கிராந்தி பிரதானம்.

சாந்திர உற்சவத்துக்குத் திதி பிரதானம்.

நட்ஷத்திர மாத உற்சவத்துக்கு நட்ஷத்திரம் பிரதானம். திதி சேர்ந்திருந்தாலும், சேராதிருந்தாலும் நட்ஷத்திரத்திலே தீர்த்தோற்சவம் செய்க.

தீர்த்தோற்சவத்தைப் பூர்வான்னத்தில் கொள்வது உத்தமம்.

மத்தியானத்தில் கொள்வது மத்திமம்.

அதற்கு மேற்பட்ட காலங்களில் கொள்வது அதமம்.

பூர்வான்னத்தில் உதயாதி மூன்று நாழிகை உத்தமம்.

மூன்று நாழிகைக்கு மேல் ஏழு நாழிகை வரையும் கொள்வது மத்திமம்.

அதன் மேற் பத்துநாழிகை வரை கொள்வது அதமம்.

இவை முறையே இராசதகாலம், சாத்துவிககாலம், தாமதகாலம் எனப்படும்.

இராசதகாலம் சுப்பிரமணியருக்கும், சாத்துவிக காலம் சிவபெருமானுக்கும், தாமதகாலம் மற்றைய மூர்த்தங்களுக்கும் என்று விஜய ஆகமம் கூறும்.

ஆறு, குளம், சமுத்திரம் முதலிய இடங்களுக்குப் பரமசிவன் திரு உலாக்கொண்டு எழுந்தருளுவது அங்கேயுள்ள ஆன்மாக்களுக்கு அருள் செய்யும் குறிப்பாம்.

அஷ்ட மூர்த்திகளுள் பவன் என்னும் திருநாமத்தையுடைய சிவபெருமானது வல்லமையாகிய சியேட்டை நீர் வடிவாக அமைந்து தன்னை அடைந்து தரிசித்து, ஆசமித்து, ஸ்நானம் செய்யும் அடியார்களது பிறவியாகிய வெப்பத்தை நீக்கித் தன்னிடத்தில் அமிழ்ந்தச் செய்து, தத்துவ அதீதராய் விளங்கும் சிவத்துடன் கூட்டும்.

ஸ்நானம் செய்யும் அடியார்கள் ஆசாரியரால் சகல தீர்த்தங்களையும் சங்கிரகிக்கப் பட்டதாகிய திருவருள் என்னும் தீர்த்தத்தை அடைந்து, சரீரத்திலேயுள்ள அசுத்த வாயுவைக் கழித்து, புறத்தேயுள்ள சுத்தவாயுவைப் பூரித்து, பெருவிரல்களால் காதுகளையும், சுட்டுவிரல்களால் கண்களையும் நடுவிரல்களால் மூக்கையும், மற்றைய விரல்களால் வாயையும் மூடி, பிராணவாயுவைக் கும்பித்துப் பிரம தந்திரத்தில் இருக்கும் சந்திர மண்டலத்தை இளகச்செய்து, அதிலிருந்து பெருகும் அமிர்தத்தினாலும், தீர்த்தத்தினாலும் ஸ்நானம் செய்து, மெய்யன்போடு சிவத்தலங்களையும் வழிபடின், பிறவிக்கு வித்தாகிய மும்மலங்களும் நீங்கிச் சிவானந்த முத்தி அடைவார்கள்.

**"எல்லை ஒன்(று) இல்லா இன்ப - அனுபவ தீர்த்தம் ஆடிய மலமாய் நிலைமை செய்தார்."**

- உற்சவ விளக்கம்.

**இத்தகு கடவுட்சாறு நோக்கி அங்(கு) இறைஞ்சுவோரும்**
**அத்தகு விழவின் ஈற்றில் தீர்த்த நீராடுவோரும்**
**பைத்த பாம்(பு) அல்குல் செவ்வாய்ப் பனிமொழி ஒருபால் மேய**
**வித்தகன் கயிலை நண்ணி விறற் கணநாதர் ஆவார்.**

- காஞ்சிப்புராணம்.

❋ ❋ ❋

# 96. யாக கும்ப அபிஷேகம்

**சி**வ யாகத்தினுடைய நிறைவின் பொருட்டும், உலகங்களை இரட்சித்தல் பொருட்டும், யாக கும்ப அபிஷேகத்தை நன்றாகச் செய்க. பரிசாரகனை (உதவி அந்தணர்) வருவித்து, உட்டிணீஷம் (தலைப்பாகை) முதலிய சர்வ அலங்காரம் உடையவனாகச் செய்து, சிரசில் இடபதேவரைப் பூசிக்க. கும்பத்தை எடுத்து அவன் சிரசில் வைத்து வேத அத்தியயனமும் தமிழ் வேதபாராயணமும் செய்துகொண்டு பலவகை வாத்தியங்கள், குடை, கொடி, சாமரம், தீபம், தூபம் முதலியவைகளுடன் பக்த ஜனங்களுடனும் வீதிப் பிரதட்ஷிணம் செய்க. கர்ப்பக்கிரக மண்டபத்தில் பிரவேசித்து, சாதகன் பரிசாரகனில் இருந்து கும்பத்தை எடுத்து ஆசாரியரிடம் கொடுக்க. அவர் நிதானமாக வாங்கி விதிப்படி மூல லிங்கத்தில் அபிஷேகம் செய்க.

❋ ❋ ❋

# 97. மௌன உற்சவம்

**மௌ**னமாவது வாக்கு மோனம், கரண மோனம், காட்ட மோனம், சுழுத்தி மோனம் என நான்கு வகைப்படும்.

**வாக்கு மோனமாவது** : வாய் பேசாதிருத்தல்.

**கரணமோனமாவது** : காது முதலிய இந்திரியங்கள் ஒருவழிப்பட்டு அடங்கியிருத்தல்.

**காட்டமோனமாவது** : சரீரம் அசையாதிருத்தல்.

**சுழுத்தி மோனமானது** : உலகத்திலேயுள்ள எல்லாப் பொருள்களும் சிவப்பொருளின்றித்தனித்து நில்லா; ஆகையால் அந்தச்சிவம் மற்றெல்லாப் பொருள்களிலும் உள்ளும் புறம்பும் வியாபித்து நிற்பதை அறிந்து, எல்லாப் பொருள்களுஞ் சிவமெனக்கண்டு, கண்டோமென்னும் போதமும் நீங்கி நிற்கும் ஞான நிட்டையேயாம்.

முதல் மூன்று மோனங்களிலும் மனம் ஒன்றைப்பற்றி நிற்குமேயன்றிச் சும்மா இருக்கமாட்டாது. இங்கே கூறப்பட்ட மூன்று மோனங்கள் வரம்புக்கு உட்பட்டவைகள். அவைகளால் பசுஞானமும், பாசஞானமும் உண்டாம். மோனமென்பது சும்மா இருத்தல். அது சுழுத்தி மோனத்தால் சித்திக்கும். "**மோனமென்பது ஞானவரம்பு**" என ஔவைத் தாயாரும், "**ஆனந்தமான நின்னையன்றி யொன்றையுன்னாத - மோனந் தமியேற்கு முத்தி பராபரமே**" எனத் தாயுமான சுவாமிகளும் கூறி அருளுவதைக் காண்க.

இந்த ஞான நிட்டையை ஆன்மா அடைதல் வேண்டுமென்னும் குறிப்பாகவே மௌனோற்சவம் நடத்தப்படுகின்றது. உற்சவ விளக்கம் என்னும் நூலிலேயே "**விந்துரு இழந்த மோனத் திருவுலா வீதி வந்திட்டு**" என்று சொல்லப்பட்டிருக்கின்றது.

❀ ❀ ❀

# 98. சண்டேசுவர உற்சவம்

**ச**ண்டேசுரரை விதிப்படி வஸ்திரம், ஆபரணம், மாலை முதலிய சிவ நிர்மாலியங்களால் (சிவனுக்குப் பூஜிக்கப்பட்ட பொருள்கள்) அலங்கரித்துப் பூசித்து சிவிகையிலாவது, கேடகத்திலாவது ஏற்றி, குடை, சாமரை முதலிய அலங்காரங்களுடனும், கீதவாத்தியங்களுடனும் வீதிப் பிரதட்ஷிணமாக வந்து அவருடைய இடத்தில் தாபித்து சிவ உற்சவ பலனைத் தரும்படி பிரார்த்திக்க. இந்த உற்சவத்தை மன உறுதியுடன் செய்பவர்களே சிவ உற்சவ பலனை அடைவார்கள்.

❀ ❀ ❀

# 99. ஆசாரிய உற்சவம்

உற்சவ ஆசாரியருடைய முன்னிலையை அடைந்து இருகரங்களையும் கூப்பி, வணங்கிக் கொண்டு, அர்ச்சிப்பதற்கு அனுமதி பெற்று, ஆசனமிட்டு அதில் இருத்தி அவரை சதாசிவ மூர்த்தியாகப் பாவித்து, புஷ்பம், தூபம், தீபம் முதலியவற்றால் பூசித்து வணங்கித் துதிக்க. "உடல், பொருள், ஆவி மூன்றையும் கொண்டருளுக" என்று, இயன்ற தட்சணையையும் வஸ்திரம் முதலியவற்றையும் கொடுக்க. அத் தட்சணையை ஆசாரியர் செய்த கிரியைக்குக் கூலி என்று நினைத்தலாகாது. தட்சணை இல்லாத கருமம் பலன் அற்றதாகும். ஆசாரியருடைய மனது திருப்தியுறுதலினாலே பரமசிவன் திருப்தியுறுகின்றார். இருத்துவிக்குகள் (யாக புரோகிதர்கள்), சாதகர் (மந்திர உச்சாடனர்), போதகர் (போதிப்பவர்) முதலியோருக்கும்

தட்சணையையும், வஸ்திரம் முதலியவற்றையும் கொடுக்க. பின்பு ஆசாரியைக் குடை, கொடி, முதலிய மங்கலச் சிறப்புடன் நகரப் பிரதட்ஷிணம் செய்து, அவரது மாளிகையில் விட்டுத் திருவருளாகிய விபூதிப் பிரசாதம் பெற்று, தங்கள் தங்கள் இல்லங்களை அடைந்து குருபக்தி குன்றாதவர்களாய் இருக்கக் கடவர்.

சிவாகமத்தில் விதிக்கப்பட்ட சம்ஸ்கார தீட்ஷையினாலே வாகீசுவரர் வாகீசுவரிகளிடத்தில் இருந்து தோன்றியவர் ஆகையினால், ஆசாரியரை மனிதர் என்று கருதலாகாது. ஆசாரியரை மனம், வாக்கு, காயங்களினாலே சிரத்தையுடன் வழிபடுவோர் போக மோட்சங்களைப் பெறுவர்.

**தெளிவு குருவின் திருமேனி காண்டல்**
**தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்**
**தெளிவு குருவின் திருநாமம் செப்பல்**
**தெளிவு குரு ரூபம் சிந்தித்தல் தானே.**

– திருமந்திரம்.

**கொடிகொள் செல்வ விழாக்குண லையறாக்**
**கடிகொள் பூம்பொழிற் கச்சியே கம்பனார்**
**பொடிகள் பூசிய பூந்துருத்தி நகர்**
**அடிகள் சேவடிக் கீழ் நாம் இருப்பதே.**

– திருநாவுக்கரசுநாயனார்.

❋ ❋ ❋

# மகோற்சவங்களின் தத்துவ விளக்கம்

## 100. முதலாம் நாள் உற்சவம்

பரம வைத்தியராகிய சிவபெருமான் தூல, சூக்குமமாகிய இருவகைப் பிரபஞ்சங்களையும் மருந்தாக நமக்குத் தந்தது, மலமாகிய நோயை நீக்கி, அஞ்ஞானத்தைக் கெடுத்துச் சிவஞானத்தை விளக்கிச் சிவானந்தப் பெரும்பேறு தந்து அருளுதல் பொருட்டேயாம்.

மாயையானது சுத்தமாயை, அசுத்தமாயை, பிரகிருதி மாயை என மூன்று வகைப்படும். சுத்தமாயையில் சிவதத்துவம் ஐந்தும் தோன்றும். அசுத்தமாயையில் வித்தியாதத்துவம் ஏழும் தோன்றும். கலையில் பிரகிருதி தோன்றும். பிரகிருதியில் புத்தி தோன்றும். புத்தியில் அகங்காரம் தோன்றும். அகங்காரம் தைசதம், வைகாரியம், பூதாதி என முத்திறப்படும். தைசத அகங்காரத்தில் மனமும் ஞானேந்திரியம் ஐந்தும் தோன்றும். வைகாரிகா அகங்காரத்தில் கன்மேந்திரியம் ஐந்தும் தோன்றும். பூதாதி அகங்காரத்தில் தன் மாத்திரை ஐந்தும் தோன்றும். தன் மாத்திரையில் பூதங்கள் ஐந்தும் தோன்றும். இங்ஙனம் ஆன்ம தத்துவம் இருபத்து நான்கும் தோன்றும்.

### சிவதத்துவம் ஐந்து:

நாதம் (சிவம்), விந்து (சத்தி), சதாசிவம், ஈஸ்வரம், சுத்தவித்தை.

### வித்தியாதத்துவம் ஏழு:

மாயை (அசுத்தமாயை), காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன்.

### ஆன்ம தத்துவம் இருபத்துநான்கு:

| | | |
|---|---|---|
| **அந்தக்கரணம்** | : புத்தி, அகங்காரம், மனம், சித்தம் (மூலப்பிரகிருதி) | ...4 |
| **ஞானேந்திரியம்** | : செவி, மெய், கண், வாய், மூக்கு | ..5 |
| **கன்மேந்திரியம்** | : வாக்கு, பாதம், பாணி, பாயு, உபத்தம் | ..5 |
| **தன்மாத்திரை** | : ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம் | ..5 |
| **பூதம்** | : ஆகாயம், காற்று, தீ, நீர், நிலம் | ..5 |

ஆக, தத்துவங்கள் முப்பத்தாறு.

இவற்றுள் பஞ்சபூதங்களின் காரியமே புறக்கருவிகள்.

**பிருதுவியின் (மண்ணின்) காரியம் 5 :**
மயிர், தோல், எலும்பு, நரம்பு, தசை.

**பிருதுவியில் தோன்றும் நாடிகள் 10 :**
அத்தி, அலம்புடை, இடை, பிங்கலை, சுழுமுனை, காந்தாரி, குகு, சங்கினி, சிகுவை, புருடன்.

**அப்புவின் (நீரின்) காரியம் 5 :**
மூத்திரம், உதிரம், சிலேட்டுமம், வியர்வை, சுக்கிலம்.

**தேயுவின் (நெருப்பின்) காரியம் 5 :**
ஆகாரம், நித்திரை, பயம், மைதுனம், சோம்பல்.

**வாயுவில் தோன்றுவன 10 :**
(தசவாயுக்கள்) பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன், நாகன், கூர்மன், கிருகரன், தேவதத்தன், தனஞ்சயன்.

**வாயுவின் காரியம் 5 :**
கிடத்தல், ஓடல், இருத்தல், நடத்தல், நிறுத்தல்.

**ஆகாயத்தில் தோன்றுவன 3 :**
மனைவிமேல் விருப்பம், புதல்வர்மேல் விருப்பம், பொருள்மேல் விருப்பம்.

**ஆகாயத்தின் காரியம் 5 :**
காமம், குரோதம், மதம், லோபம், மோகம்.

**கன்மேந்திரியத்தின் தொழில் 5 :**
வசனம், கமனம், தானம், விசர்க்கம், ஆனந்தம்.

**மூலாதாரத்தில் பிறக்கும் வாக்குகள் 4:**
சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி.

**பிரகிருதியில் தோன்றும் குணங்கள் 3 :**
சாத்துவிகம், இராசதம், தாமதம்.

ஆக, அறுபது.

## தச நாடிகள்

நாடிகள் தோற்றுவதற்கு இடமாகிய கிழங்கு, நாபிக்குக் கீழிருக்கும். அதில் எழுபத்தீராயிரம் நாடிகள் தோன்றி மேலும், கீழுமாகச் சஞ்சரிக்கின்றன. அவற்றுள் தச நாடிகள் விசேடமுள்ளன.

| | | |
|---|---|---|
| **இடைநாடி** | : | கந்தத்தின் (மூக்கின்) இடப்புறத்திலிருந்து தோன்றிக் கத்தரிக்கோல் போல மாறி, பிராணவாயுவுடன் கலந்து, பிரமதந்திரம் வரையும் வியாபித்து, இட நாசியைப் பற்றி நிற்கும். |
| **பிங்கலை நாடி** | : | கந்தத்தின் (மூக்கின்) வலப்புறத்திலிருந்து தோன்றிக் கத்தரிக்கோல் போல மாறிப் பிராணவாயுவுடன் கலந்து பிரமதந்திரம் வரையும் வியாபித்து வல நாசியைப் பற்றி நிற்கும். |
| **சுழுமுனை நாடி** | : | இரண்டு கால் பெருவிரலில் இருந்து தோன்றி மூலாதாரம் வரை இரண்டு வடிவுடையதாகவும், அதன்மேல் ஒரு வடிவுடையதாகவும், சகல நாடிகளுக்கும் ஆதாரமாயும், நடு நாடியாயும் பிராணவாயுவைச் சேர்ந்து, பிரமதந்திரம் வரையும் சகள ரூபமாயும், அதற்குமேல் துவாதசாந்தம் வரையும் நிஷ்கள ரூபமாயும் வியாபித்து நிற்கும். |
| **காந்தாரி நாடி** | : | வலக்கண் அளவாய் நிற்கும். |
| **அத்தி நாடி** | : | இடக்கண்ணிலும், நாக்கிலும் நிற்கும். |
| **சிகுவை நாடி** | : | வலக்காது அளவாய் நிற்கும். |
| **புருட நாடி** | : | இடக்காது அளவாய் நிற்கும். |
| **அலம்புடை நாடி** | : | குறி அளவாய் நிற்கும். |
| **குகுதை நாடி** | : | குதத்தின் அள்வாய் நிற்கும். |
| **சங்கினி நாடி** | : | நாசி மத்தியில் நிற்கும். |

நாடிகள் எல்லாம் சக்கரம் போலச் சரீரத்தைச் சூழ்ந்திருக்கும்.

## தச வாயுக்கள்

நாடிகளின் மத்தியில் வாயுக்கள் சஞ்சரிக்கும்.

| | | |
|---|---|---|
| **பிராணன்** | : | நெற்றியில் தோன்றி, சித்திர நாடியில் விழுந்து, மூலாதாரத்தில் குதித்து, நாபித் தானத்தை முட்டி, இருதயத்திலிருந்து உட்சுவாசம், வெளிச் சுவாசங்களை உண்டாக்கி, இடை பிங்கலைகளில் ஓடிக் கபாலத்தைச் சுற்றி, நாசியில் பன்னிரண்டு அங்குலம் புறப்பட்டு, நான்கு அங்குலம் கழன்று, எட்டு அங்குலம் மீண்டு, தான் நின்ற இடத்தைத் தாக்கும். இங்ஙனம் ஒரு நாழிகையில் 360 சுவாசமாக |

60 நாழிகையில் 21600 சுவாசமாகும். இருபத்தோராயிரத்து அறுநூறு சுவாசம் இயங்கி, 7200 சுவாசம் வெளியே கழிய 14400 சுவாசம் உள்ளே போகும். இதன் நிறம் இந்திர நீல இரத்தினத்தை ஒத்தது.

**அபானன்** : குதத்தையும், குய்யத்தையும் (குறி) சுற்றி நின்று மல, சலங்களைக் கழிப்பிக்கும். இது இந்திர கோப நிறத்தை உடையது.

**வியானன்** : உடம்பிலுள்ள சந்திகளை அடைந்து, தோலில் நின்று பரிசத்தை அறிவிக்கும். இது வெண்மை நிறமுடையது.

**உதானன்** : பலமும், ரோகமும் உண்டாவதற்கு இருப்பிடமாய் உள்ளதாகிய விலாக்களையும், காதுகளையும், கண்களையும் மூக்கையும் இடமாகக் கொண்டு இருக்கும். இது மின்னலையும், அக்கினியையும் போன்றது.

**சமானன்** : கழுத்து, சிரசு, நாக்கு, கணைக்கால், பரடு என்னும் இடங்களிலிருந்து எல்லா வாயுக்களையும் கூடியும், குறைந்தும் இருக்க விடாது சமமாக்கிக்கொண்டு உண்ட அன்னபானம் முதலியவைகளை உதர அக்கினியினால் சீரணிக்கச் செய்து, பாதம் தொடங்கித் தலை வரையும் உள்ள எழுபத்தீராயிரம் நாடிகளிலும் கலப்பித்துச் சரீரத்தை வளர்க்கும். இது காயா மலரை ஒத்த நிறமுள்ளது.

**நாகன்** : நெற்றி, மூக்கு முதலியவற்றை இடமாகக் கொண்டு, மயிர்ச் சிலிர்ப்பு முதலியவற்றை உண்டுபண்ணும். இது பொன்னையும், இளஞ்சூரியனையும் ஒத்தது.

**கூர்மன்** : கண்ணிமையை அடைந்து விழிக்கவும், மூடவும் செய்வது. இது குருந்தமலர் போன்ற நிறமுடையது.

**கிருகரன்** : மூக்கு நுனியில் நின்று தும்மல், அழுகை, நீட்டல், முடக்கல், அசைவு முதலியவற்றையும் பசியையும் உண்டு பண்ணும் .இது கருநிறம் உடையது.

**தேவதத்தன்** : முகத்தையும், முதுகையும், காலையும், பிடரையும் இடமாகக் கொண்டு, நித்திரையில் இருந்து எழும்பச்செய்து, கொட்டாவியையும் ஓடல், உலாவல் முதலியவற்றையும் செய்விக்கும். இது பளிங்கு நிறமுடையது.

**தனஞ்சயன்** : இது நீலநிறம் உடையது. தேகத்தில் அமிர்தத்தைச் சொரியச் செய்யும். உயிர் உடம்பை விட்டு நீங்கிய பின்பும் தான் பிரியாது நின்று உடலை வீங்குவித்தல் முதலியவற்றைச் செய்து கபாலத்தைப் பிளந்து செல்லும்.

## நால்வகை வாக்கு

சுத்தமாயா காரியமான வாக்கானது சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி என நால்வகைப்படும்.

**சூக்குமை** : இந்த வாக்கானது சாந்தி அதீத கலையைச் சார்ந்து தோன்றிச் சிவதத்துவத்தில் நின்று தொழிற்பட்டுக் காரண சரீரத்தின் அகத்தே நாத வடிவாய் இயங்கிக்கொண்டு, ஞான மாத்திரைக்கு ஏதுவாய் இருக்கும்.

**பைசந்தி** : இந்த வாக்கானது சாந்தி கலையைச் சார்ந்து தோன்றி சத்தி தத்துவத்தில் நின்று தொழிற்பட்டு எழுத்துக்கள் வெவ்வேறாகப் பிரிந்து தோன்றும் முறையை அடக்கி, சூக்கும ரூபமாய்ச் சித்தத்தில் நிற்றலும், நிர்விகற்பம் ஆகத் தோன்றுதலுமாய் இருக்கும்.

**மத்திமை** : இந்த வாக்கானது வித்தியாகலையைச் சார்ந்து தோன்றி, சாதாக்கிய தத்துவத்தில் நின்று தொழிற்பட்டுத் தன்னுள்ளே உணரும் ஓசையாய், உதான வாயுவின் தொழிற்பாட்டினால் உள்ளே அக்கரங்களின் வடிவு பிரிந்து தோன்றுவதாய் இருக்கும்.

**வைகரி** : இந்த வாக்கானது சூக்கும வைகரி, தூலவைகரி என இரு வகைப்படும். சூக்குமவைகரி பிரதிட்டா கலையைச் சார்ந்து தன் செவிக்குக்

கேட்கப்படுவதாய் மகேசுவர தத்துவத்திலும், தூலவைகரி நிவிர்த்திகலையைச் சார்ந்து தன் செவிக்கும் பிறர்செவிக்கும் கேட்கப்படுவதாய்ச் சுத்தவித்தையிலும் நின்று தொழிற்படுவனவாம்.

இந்த வாக்குகள் பகுத்து உணர்வதாகிய சவிகற்ப ஞானத்துக்கு காரணம் ஆதலால், ஆன்மாக்களுக்கு இன்றியமையாது வேண்டப்படும். இவ்வாக்கு இல்லையாயின், விளங்கிய ஞானம் இல்லையாம். இதனால் உண்டாகும் ஞானம் உலகப் பொருளை அறியும் ஞானமாம். ஆதலின் சவிகற்ப உணர்விற்கு ஏதுவாகிய இவ்வாக்குகள் மேலான பந்தமாம். ஆதலின் இவ்வாக்குகளைத் தன்னின் வேறாகக் கண்டு, நீக்கி, அவற்றிற்கு மேலாகிய பேரறிவு ஒருவனுக்கு விளங்குமாயின் அப்பொழுதே சிவபெருமான் திருவடியாகிய பரமுத்தியை அவன் அடையத் தலைப்படுவன்.

சாதி, குலம், பிறப்பு முதலியவற்றால் அபிமானம் செய்தற்கு இடமாகிய இந்தத் தூலதேகத்தின் பற்றை நீக்கினால் அன்றிப் புத்தியின் குணமாகிய சுக, துக்க, மோகங்களைப் பிரிக்க முடியாது. ஆகையால் சரீரத்தை வெறுத்து அதனை ஏற்பதற்கு இளைத்து, அது நிலையற்றதெனத் தெளிந்து, தூலதேகத்திற்குக் காரணமாகிய பஞ்சபூதங்களும் அநித்தியம் என்பதை அறிந்து, நித்தியராகிய சிவபெருமானது திருவடிகளில் அன்பு வைத்து, இச்சரீரத்தை அச்சிவன் வசமாக ஒப்பித்து அவரையே பற்றி நிற்கவேண்டும்.

**முப்பது முப்பத்தாறு முப்பதும் இடு குரம்பை**
**அப்பர் போல் ஐவர் வந்து அதுதர இது வி(டு) என்று**
**ஒப்பவே நலியல் உற்றால் உய்யுமா(று) அறியமாட்டேன்**
**செப்பமே திகழும் மேனித் திருப்புகலூர னீரே.**

— திருநாவுக்கரசர்.

**தேனைக் காவல் கொண்டு விண்ட கொன்றைச் செழும் தாராய்**
**வானைக் காவல் கொண்டு நின்றார் அறியா நெறியானே**
**ஆனைக் காவில் அரனே பரனே அண்ணாமலையானே**
**ஊனைக் காவல் கைவிட்(டு) உன்னை உகப்பார் உணர்வாரே.**

— சுந்தரமூர்த்திசுவாமிகள்.

**நித்திரையில் செத்தபிண நேரும் உடற்(கு) இச்சை வையாச்**
**சுத்தர்களே நல்ல துறவோர் பராபரமே.**

— தாயுமானசுவாமிகள்.

# 101. இரண்டாம் நாள் உற்சவம்

**சூ**க்கும உடம்பு தூல உடம்பிற்குக் காரணம். சூக்கும உடம்பு சத்தம், பரிசம், ரூபம், இரசம், கந்தம் என்னும் தன் மாத்திரைகள் ஐந்தும், மனம், புத்தி, அகங்காரம் என்னும் மூன்றுமாகிய எட்டுத் தத்துவங்களால் உண்டானது. குருடனுக்குக் கோலை ஆதாரமாகக் கொடுப்பதுபோல, கேவலாவத்தையில் அறிவுத் தொழிற்பாடின்றிக் கிடந்த ஆன்மாவிற்குச் சிவபெருமான் சூக்கும தேகத்தைக் கருணையினால் கொடுத்தருளினர்.

❋ ❋ ❋

# 102. மூன்றாம் நாள் உற்சவம்

## மூவினை

வினைகள் ஆகாமியம், சஞ்சிதம், பிராரத்தம் என மூவகைப்படும்.

**ஆகாமியம் :** ஒவ்வோர் பிறவிகளிலும் மனம், வாக்கு, காயம் என்னும் மூன்றினாலும் செய்யப்படும் நல்வினை, தீவினைகளாம்.

மனத்தினால் உண்டாகும் நல்வினைகள் அருளுடைமை, பொறை, பிறர்பொருள் விரும்பாமை, செய்ந்நன்றி மறவாமை, அபிமானம் பேணல், அழுக்காறு இன்மை, அவா அறுத்தல், பிறர் துன்பம் கண்டு இரங்குதல், பிறர் கல்வி, செல்வம், அழகு ஆகியவற்றைக்கண்டு சந்தோஷித்தல் முதலியன. இவைகளுக்கு மாறுபட்டவைகள் தீவினைகளாம்.

வாக்கினால் உண்டாகும் நல்வினைகள் தர்மம், ஞானம் கூறல், புறங்கூறாமை, உண்மை பேசுதல், நூல் உரை கூறல், இனியவை கூறல், வேத ஆகமங்களை ஓதல் முதலியன. இவைகளுக்கு மாறுபட்டவை தீவினைகளாம்.

காயத்தினால் செய்யும் நல்வினைகள்: பிறர் மனை சேராமை, குளம், கூவல், தன்மசாலை, வித்தியாசாலை, நந்தனவனம், திருக்கோயில் முதலியவற்றை அமைத்தல். இவைகளுக்கு மாறுபட்டவை தீவினைகளாம்.

மேற்கூறிய நல்வினை தீவினைப்பயன்களை ஆன்மா திருஷ்டம், அதிருஷ்டம், திருஷ்டா திருஷ்டம் என மூவகையாக அனுபவிக்கும்.

| | | |
|---|---|---|
| **திருஷ்டம்** | : | நல்வினை, தீவினைகளுக்கு ஏற்ற பயன்களைச் எடுத்த அப்பிறவியில் அனுபவிப்பது. |
| **அதிருஷ்டம்** | : | எடுத்த பிறவியில் அப் பயன்களை அனுபவியாமை. |
| **திருஷ்டாதிருஷ்டம்** | : | எடுத்த பிறவியிலும், மறுபிறவியிலும் அப்பயன்களை அனுபவிப்பது. |
| **சஞ்சிதம்** | : | செய்யப்பட்ட வினைகள் பயனுக்கு வராமல் பக்குவமடையும் வரையும் புத்தி தத்துவம் பற்றுக்கோடாக மாயையில் புண்ணிய பாவமாய்க் கட்டுப்பட்டுக் கிடக்கும். அதுவே சஞ்சித வினையாம். அவ்வாறு இருக்கும்போது அது சூக்கும கன்மம் எனவும் பெயர் பெறும். |
| **பிராரத்தம்** | : | கட்டுப்பட்டிருந்த சஞ்சித கன்மத்தைப் பக்குவப்பட்ட வழி சிவபெருமான் நியதி செய்து தர ஆன்மா இன்ப, துன்பமாய் அதனை அனுபவிப்பதாம். அனுபவிக்கும் போது ஆதிதைவிகம், ஆத்தியான்மிகம் ஆதிபெளதிகம் என முத்திறப்படும். |
| **ஆதி தைவிகம்** | : | உயிர்கள் முன்னிலையின்றித் தெய்வ முன்னிலையாக மாதாவின் கருப்பம், சனனம், மரணம். நரை, திரை, வியாதி, நரகம் முதலியவற்றினாலே துக்கப்படுதல். |
| **ஆத்தியான்மிகம்** | : | மிருகம், பறவை, இராக்கதர், பிசாசு, கள்வர். மானுடர் முதலிய பிற உயிர்களாலும் பிறர் கல்வி செல்வம் ஆதியவற்றைக் கண்டு பொறாமைகொண்டு கோபியாய்த்திரிதல் முதலாகத் தன்னாலும் வருவது. |
| **ஆதி பெளதிகம்** | : | குளிர், தீ, பனி, மழை, காற்று, மின்னல், இடி, சுவர் வீழ்தல் முதலிய பூதமுன்னிலையாக வருவது. |

தினம் தோறும் செய்யும் சிவபுண்ணியங்களால் ஆகாமியம் கெடும்.

ஆசாரியர் தீட்ஷையில் செய்யும் அருட்பார்வையால் அக்கினியை அடைந்த வித்தைப்போலச் சஞ்சித கன்மம் பயனுக்கு வராமல் கெட்டு நீங்கும். பிராரத்தம் உடம்புடன் நீங்கும்.

திருநேரிசை

**விளைக்கின்ற வினையை நோக்கி**
**வெண்மயிர் விரவி மேலும்**
**முளைக்கின்ற வினையைப் போக**
**முயல்கிலேன் இயல வெள்ளம்**
**திளைக்கின்ற முடியினால் தன்**
**திருவடி பரவ மாட்டா(து)**
**இளைக்கின்றேன் இருமி ஊன்றி**
**என் செய்வான் தோன்றினேனே.**

– திருநாவுக்கரசுநாயனார்.

**நெறி செய்(து) அருளித் தன் சீரடியார் பொன் அடிக்கே**
**குறி செய்து கொண்(டு) என்னை ஆண்டபிரான் குணம் பரவி**
**முறி செய்து நம்மை முழு(து) உடற்றும் பழவினையைக்**
**கிறி செய்தவா பாடிப் பூவல்லி கொய்யாமோ.**

– திருவாசகம்.

## முப்புத்தி

முப்புத்திகள்; ஐயம், விபரீதம், மயக்கம் என்பன.

**ஐயம்** : மறுபிறப்பும், இருவினைப் பயன்களும், கடவுளும் உண்டோ இல்லையோ என்று ஒன்றிலே துணிவு பிறவாது நிற்றல்.

**விபரீதம்** : பொருள் அல்லாதவற்றைப் பொருளென்று உணர்தல். அஃ தாவது மறுபிறப்பும், இருவினைப் பயன்களும் இல்லை என்றும், இவற்றைக் கூறுகின்ற பசு சாஸ்திரத்தை மெய்ந்நூல் வழக்கம் என்றும் துணிதல். இதனால் நால்வகைத் தோற்றங்களிலும் சென்று துன்பத்தை அனுபவிப்பார்கள்.

**மயக்கம்** : மாயையின் காரியமாகிய அஞ்ஞானமாகும். அருள்வழி நிற்போருக்கு மயக்கம் வந்து தாக்காது.

**ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்**
**வானம் நணிய உடைத்து.**

**பொருள் அல்லவற்றைப் பொருள் என்(று) உணரும்**
**மருளானாம் மாணாப் பிறப்பு.**

– திருவள்ளுவர்.

## முக்குணம்

குணமானது மாயையாகிய சடத்தின் குணமும், ஞானமாகிய சித்தின் குணமும் என இருவகைப்படும். மாயையின் குணமானது சாத்துவிகம், இராசதம், தாமதம் என முத்திறப்படும். இக்குணங்கள் மாயாகாரியமாகிய தநு, கரண, புவன, போகங்களில் கட்டுப்பட்டிருக்கும் ஆன்மாக்களிடத்து நிகழ்வனவாம். ஞானகுணத்தின் வியாபார பேதமான எண்குணங்கள் இறைவனிடத்து நிகழ்வனவாம்.

ஆன்மாக்கள் ஒன்றோடொன்று மாறுபடுவனவும், பந்தத்திற்கு ஏதுவாய் உள்ளனவுமாகிய மாயாகுணங்களை நீக்கினாலேயன்றி, ஒன்றோடொன்று மாறுதலடையாத எண்குணப்பேற்றை அடையமாட்டா. எட்டாம்நாள் விழாவில் எண்குணம் விளங்கித்தோன்றும். ஈண்டு மாயாகுண நீக்கமுண்டாகும்.

**சாத்துவிகம்:** சாந்தத்தையும் இன்பத்தையும்தந்து நன்மை தீமைகளைப் பகுத்தறியச் செய்யும்.

**இராசதம்** : பிரவிருத்தியையும், துன்பத்தையும் தந்து அறிந்தவற்றில் முயற்சியை உண்டாக்கும்.

**தாமதம்** : மோகத்தையும், மூடத்தையும் தந்து சுகதுக்கங்களை வினைப்பயனென்று அறியவிடாது அவற்றில் கட்டுப்படுத்தி மயக்கத்தை உண்டாக்கும்.

பண்டாரசாத்திரத்தில் ''**மற்றை மூன்றாம் விழாவின் முக்குண மாழ்வதாகக் கற்றைவார் சடை எம் அண்ணல் கலந்து உலாச் செய்யலுற்றார்**'' எனவருவதும் காண்க.

## மும்மனம்

அவை சிந்தித்தல், நிச்சயித்தல், கொண்டு எழுப்பல் என்னும் இவற்றுக்கு ஏதுவாகிய **சித்தம், புத்தி, அகங்காரங்களாம்.**

**சித்தம்** : தைசத அகங்காரத்தினின்று மனம் தோன்றி எதிர்ப்பட்ட பொருளைச் சித்தரூபமாய் நின்று, அப்பொருளின் உண்மையை அறியாமல் பிண்டமாக அறிந்து சிந்திக்கும்.

**புத்தி** : ஆன்மாக்கள் செய்த புண்ணிய, பாவங்களைப் பொருந்தி அப்புண்ணிய, பாவத்திற்கு ஈடாக வந்த பொருளை நிச்சயிக்கும். நிச்சயிக்கும்போது சிலகாலத்துச் சரியாயும் சிலகாலத்துப் பிழையாயும் இருக்கும்.

**அகங்காரம்:** புத்தி தத்துவத்தில் அகங்கார தத்துவம் தோன்றி, இவ்விடத்து என்னோடு ஒப்பார் ஒருவரும் இல்லையென அகந்தைப்படுதற்குக் காரணமாய் உடலை யான் என்றும் மற்றைப் பொருள்களை எனது என்றும் புத்தியுடன் ஒன்றாய் எழுந்து உயிரோடு வேற்றுமையின்றி நிற்கும்.

## முக்குற்றம்

அவை காமம், வெகுளி, மயக்கம் என்பன. காமம் - அவா; வெகுளி - கோபம்; மயக்கம் - மனக்கலக்கம்.

அவாவாவது இவ்வுலகத்திலுள்ள சிற்றின்பப் பொருளை விரும்புதலாம். பிறப்பு, இறப்புக்களில் கட்டுப்படுத்துவதாகிய சிற்றின்பப் பொருளை அவாவிய அன்மாவிற்கு தான் விரும்பிய பொருள் கிடைக்காவிடினும், பிறரால் தடை முதலியன வந்து சம்பவிப்பினும் கோபம் தோன்றி அருளையும் அருளினாலுண்டாகும் முகமலர்ச்சியையும், அகமலர்ச்சியையும் கெடுக்கும் இது செய்யலாம், இது செய்யலாகாது என்று ஆராய்ந்து அறிகின்ற நல்லறிவும் நீங்கிவிடும் மனக் கலக்கத்தையும் இப்பிறப்பில் பழியையும், மறுமையில் நரகத்துன்பத்தையும் உண்டு பண்ணும். ஆகையால், இவ்வுலகத்து இன்பமும், சுவர்க்கம் முதலிய உலக இன்பமும் ஆராயுமிடத்துக் கீழ்ப்பட்டவைகள் எனக் கண்டு, அவாவை அறுத்து, கோபத்தை அடக்கிச் சிவபெருமானை அன்புடன் தியானிக்க மனக் கலக்கம் நீங்கும். நீங்கவே மோட்சத்தில் அவா உண்டாகும்.

**மருளவா மனத்தன் ஆகி மயங்கினேன் மதி இலாதேன்**
**இருளவா அறுக்கும் எந்தை இணையடி நீழல் என்னும்**
**அருளவாப் பெறுதல் இன்றி அஞ்சி நான் அலமந்தேற்குப்**
**பொருளவாத் தந்தவாறே போது போய்ப் புலர்ந்த(து) அன்றே.**

– திருநாவுக்கரசு நாயனார்.

**உரை மாண்ட உள்ளொளி உத்தமன் வந்(து) உளம் புகலும்**
**கரை மாண்ட காமப் பெருங்கடலைக் கடத்தலுமே**
**இரை மாண்ட இந்திரியப் பறவை இரிந்(து) ஓட,**
**துரை மாண்டவா பாடித் தோணோக்கம் ஆடாமோ.**

– திருவாசகம்.

**காமம் வெகுளி மயக்க இவை மூன்றின்**
**நாமம் கெடக் கெடும் நோய்.**

– திருக்குறள்.

## முப்பிறப்பு

முப்பிறப்பானவை கழிந்தபிறப்பு, இப்பிறப்பு, இருபிறப்பு என்பனவாகும். இவை முறையே உம்மை, இம்மை, அம்மை எனவும் கூறப்படும்.

பிறப்பு அநாதியாகலின், ஆன்மாக்களால் அளவின்றிச் சம்பாதிக்கப்பட்ட வினைப் பயன்களுள், கழிந்த பிறவிகளால் அனுபவித்தனவும், இப்பிறப்பில் உடம்புள்ளவரையும் அனுபவிப்பனவும், அனுபவித்து முடிய வருபிறப்பில் அனுபவிக்கும்படி இருக்கும் வினைகள் சிவபெருமானை உணர்ந்து அகப்பற்று, புறப்பற்றுக்களை நீக்கினவர்களுக்கு வந்து தாக்கமாட்டா.

**இம்மை அம்மை என இரண்டும் இவை**
**மெய்ம்மை தான் அறியாது விளம்புவர்**
**மெய்ம்மையான் நினைவார்கள் தம் வல்வினை**
**வம்மின் தீர்ப்பர் கண்டீர் வன்னி ஊரரே.**

— திருநாவுக்கரசு சுவாமிகள்.

## முப்பற்று

தநு, கரண, புவன, போகம் என்னும் நான்கும் மாயையில் உண்டானவை. அவற்றுள் தநு, கரணம் என்னும் இரண்டும் நான் என்னும் செருக்கினையும் புவன, போகம் இரண்டும் எனது என்னும் செருக்கினையும் உண்டாக்கும். தநு - தேகம்; கரணம் - அந்தக்கரண புறக்கரணங்கள்; புவனம் - பூமி முதலிய பிரபஞ்சம்; போகம் - அனுபவிக்கப்படும் பொருள்.

தேகத்தை நான் என்று சொல்லுகின்ற அகப்பற்றாகிய அகங்கார எண்ணத்தை நீக்குவதற்கு மண் முதலியவைகளை எனது என்று சொல்லுகின்ற புறப்பற்றை நீக்குதல் வேண்டும். புறப்பற்றானது விறகாகவும், அகப்பற்றானது அக்கினியாகவும் இருக்கும். விறகைப் பற்றிய அக்கினியானது மூண்டு, பற்றி முழங்கி எரியும். விறகு இல்லையாயின் அக்கினியும் இல்லையாம். ஆகையால் புறப்பற்று உள்ள அளவும் அகப்பற்று ஆன்மாவை விட்டு நீங்காது. இவைகளை நீக்கினவர்களே மெய்ஞ்ஞானத்தை அடைவார்கள்.

புறப்பற்றானது: உலக வேதனை, தன் வேதனை, தார வேதனை என மூன்றாம். உலக வேதனையானது அநித்தியமானதும் மூலப்பிரகிருதியின் காரியமானதுமாய் உள்ளது. தன் வேதனையானது பொய்யான இன்பத்துக்குக் காரணமானதும், தன்னைவிட்டு நீங்கும் காலத்துத் துன்பத்தை உண்டாக்குவதுமாய் உள்ளது. தார வேதனையாவது பெண்களிடத்தில் வைக்கும் ஆசை.

**கேடு மூடிக் கிடந்(து) உண்ணு நாடது**
**தேடி நீர் திரியாதே சிவகதி**
**கூடலாம் திருக் கோளிலி ஈசனைப்**
**பாடுமின் இரவோடு பகலுமே.**
**—திருநாவுக்கரசு சுவாமிகள்.**

**வைத்தநிதி பெண்டீர் மக்கள் குலம் கல்வி எனும்**
**பித்த உலகில் பிறப்போ(டு) இறப்(பு) என்னும்**
**சித்த விகாரக் கலக்கம் தெளிவித்த**
**வித்தகத் தேவர்க்கே சென்று ஊதாய் கோத்தும்பீ.**
—மாணிக்கவாசகசுவாமிகள்.

சிவசத்தி வடிவாகிய நிவிர்த்தி என்னும் பெயரை உடைய கிரியாசத்தியானது மண், பெண், பொன் முதலிய பிரபஞ்சப் பற்றுக்களில் நின்றும் ஆன்மாக்களை நிவர்த்தி செய்யும். பிரதிஷ்டை என்னும் பெயரையுடைய ஞானசத்தியானது நிவர்த்தி செய்யப்பட்ட ஆன்மாக்களை வாசனை பற்றி மீளப் பிரபஞ்சத்தல் அழுந்தா வண்ணம் நிலைபெறச் செய்யும். வித்தியாகலை என்னும் பெயரையுடைய இச்சா சத்தியானது நிலைபெறச் செய்யப்பெற்ற ஆன்மாக்களுக்கு அனுமான ஞானம் (கருதல்), ஆகமஞானம் (உயர்ந்தோர் வாக்கு) இன்றிச் சிவாநுபூதி ஞானத்தைப் பயப்பிக்கும்.

❋ ❋ ❋

# 103. நான்காம் நாள் உற்சவம்

## அந்தக்கரணம்

அந்தக்கரணமானது: உள்ளந்தக்கரணம், புற அந்தக்கரணம் என இருவகைப்படும். புற அந்தக்கரணமாவது: மனம், சித்தம், அகங்காரம், புத்தி என்பன. இவை இந்திரியங்களுக்கு உள்ளாக இருத்தலால் அந்தக்கரணம் எனவும் கலாதிகளுக்குப் புறத்தேயிருத்தலால், புற அந்தக்கரணம் எனவும் கூறப்படும்.

கலாதி தத்துவங்கள் மனம் முதலிய தத்துவங்களுக்கு உள்ளாக விருத்தலால், உள்ளந்தக்கரணம் எனப்படும். கலாதி தத்துவங்களாகிய உள்ளந்தக்கரண நீக்கம் ஏழாம்நாள் விழாவில் நிகழும். நான்காம்நாள் விழாவில் புற அந்தக் கரணநீக்கம் உண்டாகின்றது.

அரசன் அமைச்சரோடு கூடிநின்று அரசகாரியத்தை நடாத்துவதுபோல, யான் எனது என்னுஞ் செருக்குறுதற்கு ஏதுவாகிய ஆணவமலச்

சேர்க்கையாற் பகுத்தறிவின்றிக் கிடக்கும். ஆன்மா, மனம் முதலிய அமைச்சரோடு கூடிச், சாக்கிரம் முதலிய அவத்தைகளைப் பொருந்தி விடயங்களை அறியும்.

அந்தக்கரணங்கள் சடமாகையால் மகேசுவரன் விந்துவை அதிட்டிக்க, விந்து சித்தத்தை உடன் நின்று செலுத்தச், சித்தம் யாதோ ஒரு பொருள் பிண்டமாகத் தோன்றுகின்றது என்று சிந்தித்து அறியும்.

உருத்திரன் மகாரத்தை அதிட்டிக்க, மகாரம் மனத்தைச் செலுத்த, மனம் சித்ததத்தால் பிண்டமாக அறியபட்ட அப் பொருளை கட்டைதான் என்று சங்கற்பித்தும், கட்டையோ அன்றோ என ஐயுற்றும் அறியும்.

பிரமா அகாரத்தை அதிட்டிக்க, அகாரம் அகங்காரத்தைச் செலுத்த, அகங்காரம் மனதால் இன்னதென்று நிச்சயிக்கப்படாத அப்பொருளை இன்னதென்று நிச்சயிப்பேன் என எழுந்து, அகங்கரித்தறியும்.

விட்டுணு உகாரத்தை அதிட்டிக்க, உகாரம் புத்தியைச் செலுத்தப்புத்தி அப்பொருளை இன்னதுதான் என நிச்சயித்தறியும். இங்ஙனம் கடற்றிரைபோல் ஒன்றன்பின் ஒன்றாகத் தோன்றும். அந்தக்கரணங்களைக் கருவியாகக் கொண்டு ஆன்மா அறியும். இவ்வாறு அறியும் பசு ஞானம் வந்தபின்பு இவ்வறிவு முன்னில்லாமையால் நாமாக அறிந்தோம் என்னும் நினைவையும் விடுத்து, அறிவிக்கும் பொருள் யாது என ஆராயின் சிவஞானம் விளங்கித் தோன்றும். (இங்கே குறித்த பிரம, விட்டுணு, ருத்திரர்கள் சுத்தவித்தையில் இருப்பவர் என அறிக.)

**" - அலைக்கு**
**மந்தமனம் புத்தியுடன் ஆங்காரம் சிந்திவிழ - மோதி"**

–நெஞ்சுவிடுதூது

**பத்திப்பேர் வித்திட்டே பரந்த ஐம்புலன்கள் வாய்ப்**
**பாலே போகாமே காவாப் பகை அறும் வகை நினையா**
**முத்திக்கே விக்கத்தே முடிக்குக் குணங்கள் வாய்**
**மூடா ஊடா நாலு அந்தக் கரணமும் ஒரு நெறியாய்ச்**
**சித்திக்கே உய்த்திட்டுத் திகழ்ந்த மெய்ப் பரம்பொருள்**
**சேர்வார் தாமே தானாகச் செயும் அவன் உறையும் இடம்**
**கத்திட்டோர் சட்ட அங்கங்கள் கலந்து இலங்கு நற்பொருள்**
**காலே ஓவாதார் மேவும் கழுமல வளநகரே.**

–திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள்

## நால்வகைத் தோற்றம்

நால்வகைத் தோற்றங்களாவன: அண்டசம், சுவேதசம், உற்பிச்சம், சராயுசம் என்பன. அவை ஆன்மாக்கள் செய்து கொண்ட நல்வினை, தீவினை காரணமாக உண்டாகின்றன. அவற்றுள்

**அண்டசங்கள்** : முட்டையில் தோன்றுவன. அவை: அரவு, தவளை, முதலை, ஆமை, உடும்பு, மீன், ஓந்தி, பறவை, பல்லி, இப்பி முதலியனவாம். அண்டம் - முட்டை; ஜம் - பிறப்பது.

**சுவேதசங்கள்** : வேர்வையில் தோன்றுவன. அவை: கிருமி, கீடம், விட்டில், பேன் முதலியனவாம். சுவேதம் - வேர்வை.

**உற்பிச்சங்கள்** : வித்து, வேர் கிழங்கு முதலியவைகளை மேற்பிளந்து தோன்றுவன. அவை: மரம், பூண்டு, கொடி முதலியனவாம். உற்பித் - மேற்பிளத்தல் ஜம் - தோன்றியது.

**சராயுசம்** : கருப்பையிலே தோன்றுவன. அவை: மனிதர், நாற்கால் விலங்கு முதலியனவாம். சராயு - கருப்பாசயப் பை.

❁ ❁ ❁

# 104. ஐந்தாம் நாள் உற்சவம்

இந்திரியங்களால் ஆகிய அறிவு பொய் எனக் கண்டு அவைகளைத் தம்மின் வேறானதென விடுத்துக் கேவலாவத்தை, சகலாவத்தைகளைப் பொருந்தி, அவைகளும் அஞ்ஞானத்தை உண்டாக்குவதால் தம்மின் வேறானதெனக் கண்டு, சுத்தாவத்தையைப் பொருந்துதலினால் பிரபஞ்சப்பற்றுக் குறைந்து பஞ்சமலங்கள் காரியப்பட்டுப் பக்குவம் வருதற்கு வழியாகும். அம்மலங்கள் நீங்கினால் அன்றி அருளைப் பெற முடியாது.

## ஐம்பொறி

பளிங்கானது தன்னிடத்துக் காணப்பெறும் பலநிறங்களின் தன்மையை விளக்கி நிற்கும். அங்ஙனமாயினும் தோன்றிப் பொருட்கள் பளிங்கிற்கு வேறென்று அறியுமாறு போல, ஆன்மாவிடத்துப் பொருந்திய மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகளும் பசுகரணமாய் நின்று உலகப்பொருள்களை அறியும் அறிவை விளக்க ஆன்மா இந்திரியங்களின் தன்மையையே தன்னிடத்தில் விளங்க நிற்கும்.

இதனைச் சிந்தித்து வெவ்வேறு விடயங்களை உண்டு பண்ணுகின்ற இந்திரியங்களைத் தன்னின் வேறெனத் தெளிந்து, அவைகளாலாகிய அறிவு பொய்யென விடுத்தால் சிவஞானம் விளங்கும். அவ்வாறு விளங்கும் போது ஆன்மா சத்துக்கு அடிமையாகும்.

**மூக்கு வாய் செவி கண் உடல் ஆகி வந்து**
**தாக்கும் ஐவர் தமாப்பை அவிழ்த்தருள்**
**நோக்குவான் நமை நோய் வினை வாராமே**
**காக்கு நாயகன் கச்சியேகம்பனே.**

– திருநாவுக்கரசுசுவாமிகள்

**மாறி நின்று என்னை மயக்கிடும் வஞ்சப்**
**புலன் ஐந்தின் வழியடைத்து அமுதே**
**ஊறி நின்று என்னுளே எழு பரஞ்சோதி**
**உள்ளவா காண வந்து அருளாய்**
**தேறலின் தெளிவே சிவபெருமானே**
**திருப்பெருந்துறை உறை சிவனே**
**ஈறிலாப் பதங்கள் யாவையும் கடந்த**
**இன்பமே என்னுடை அன்பே.**

– திருவாசகம்

**உரன் என்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்**
**வரன் என்னும் வைப்பிற்கோர் வித்து.**

– உத்தரவேதம்

## அவத்தைகள்

அவத்தை என்பது ஆன்மா தங்குமிடம். அது கீழாலவத்தை, மத்தியாலவத்தை, மேலாலவத்தை என மூவகைப்பட்டுத் தனித்தனி சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என ஐந்தாக விரியும்.

கீழாலவத்தை கீழ்நோக்கிச் சென்றொடுங்குவதும் மேல்நோக்கித் தோன்றுவதுமென இருவகைப்படும். கீழ்நோக்கிச் செல்லும் முறையில் சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என ஐந்து அவத்தைகள் உண்டு. ஆன்மா உறக்கத்துக்குச் சென்று உறங்குமுன் புருவமத்தியில் சாக்கிராவத்தையைப் பொருந்தி, ஞானேந்திரியம் ஐந்து, கன்மேந்திரியம் ஐந்து, சத்தாதி ஐந்து, வசனாதி ஐந்து, பிராணன் முதலிய வாயுக்கள் பத்து, அந்தக்கரணம் நான்கு, புருடன் ஒன்று என்னும் முப்பத்தைந்து தத்துவங்களுடன் கூடிநிற்கும்.

இதனைவிட்டுக் கண்டத்தானத்தில் சொப்பனாவத்தையை அடையும்பொழுது வாயுப்பத்து, சத்தாதி ஐந்து, வசனாதி ஐந்து, அந்தக்கரணம் நான்கு, புருடன் ஒன்று என்னும் இருபத்தைந்து தத்துவங்களுடன் கூடிநிற்கும்.

இதனைவிட்டு இருதயத்தானத்தில் சுழுத்தியை அடையும்பொழுது பிராணன், சித்தம், புருடன் என்னும் மூன்று தத்துவங்களுடன் கூடிநிற்கும்.

இதனைவிட்டு நாபித்தானத்தில் துரியாவத்தையை அடையும் பொழுது, பிராணன், புருடன், என்னும் இரண்டுடன் கூடிநிற்கும்.

இதனைவிட்டு மூலாதாரத்தில் துரியாதீதத்தை அடையும்பொழுது, புருடதத்துவம் ஒன்றினைக் கூடிநிற்கும். இவ்விதம் ஒடுங்குவதினால் இளைப்பு நீங்கும்.

மேல் நோக்கித் தோன்றும் முறையானது துரியாதீதத்தை அடைந்த ஆன்மா முன்னொடுங்கியமுறையே ஒவ்வொரு தத்துவத்தையும் பொருந்தி புருவநடுவில் சாக்கிராவத்தையை அடையும். அடைதலினால் கன்மத்தின் பயனை அனுபவிக்கும். அனுபவிப்பதனால் பிறவி நீங்கும்.

மத்தியாவத்தையாவது சாக்கிராவத்தைக்கு இடமாகிய புருவநடுவில் விடயங்களை அனுபவித்தலில் இடைவிடாது நிகழ்வதாகிய சாக்கிரத்திற் சாக்கிரம் முதலிய ஐந்து அவத்தைகளைப் பொருந்துதல். விடயங்களை நேரே அனுபவித்தல் சாக்கிரத்தில் சாக்கிரமாம். சுகதுக்கங்கள் வந்தவரலாற்றை நாடி மனோவியாபாரம் செய்து நிற்றல் சாக்கிரத்தில் சொப்பனமாம். சுகதுக்கத்தில் மூழ்கி நிற்றல் சாக்கிரத்தில் சுழுத்தியாம். சுகமதுக்கம் தோன்றாது பெருமூச்செறிந்து நிற்றல் சாக்கிரத்தில் துரியமாம். சுகதுக்கங்களைக் கேட்டமாத்திரத்தில் திடுக்கிட்டுப் பிராணவாயுசீவியாமல் மூர்ச்சித்து மயங்கிநிற்றல் சாக்கிரத்தில் துரியாதீதமாம்.

இந்திரியங்கள் விடயங்களை அறியினும் தம்மையும் தம்மைச் செலுத்துகின்ற ஆன்மாவையும் அறியமாட்டாத தன்மைபோல ஆன்மாவும் தனக்குத் துணையான திரோதானசத்தியினால் கீழாலவத்தையிலும் மத்தியாவத்தையிலும் நின்று வினைப்பயன்களை அனுபவிப்பினும், அனுபவிக்கும் தன்னையும் தன்னைச்செலுத்துகின்ற திரோதானசத்தியையும் அறியமாட்டாது.

மேலாலவத்தையாவது கீழ்நோக்கித் தோன்றுவதும் மேற்சென்று ஒடுங்குவதுமென இருவகைப்படும். கீழ்நோக்கித் தோன்றுவது பிறவிக்குக் காரணமாகும். மேற்சென்று ஒடுங்கும் முறையாவது இருதயத்தில் சாக்கிராவத்தையையும், கண்டத் தானத்தில் சொப்பனாவத்தையையும், நாக்கின் அடியில் சுழுத்தியையும், புருவநடுவில் துரியத்தையும், பிரமதந்திரத்தில் துரியாதீதத்தையும் பொருந்துதல். இவை யோகப்பயிற்சி உடையார்க்குத் தோன்றும். இதனால் பிரபஞ்சப் பற்றுக்குறைந்து பிறவியறுதற்குக் காரணமாகும்.

## ஐந்துமலம்

ஐந்துமலங்கள் ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரோதாயி என்பனவாம்.

## ஆணவம்

ஆணவம் ஆவது அநாதியே உள்ளதாய், ஒன்றாய், அநேக சத்திகளையுடையதாய், ஆன்மாக்களோடு சேர்ந்து நிற்பதாய், தன்னுருவைப் பிறர் அறியாதபடி மறைத்திருப்பதாய், மோகம் முதலிய கெட்ட குணங்களை உண்டாக்குவதாய், கேவலத்தில் அறியாமையைச் செய்வதாய்ச், சகலத்தில் கருவிகளோடும் கூடியவிடத்து, விபரீத உணர்வை உண்டாக்குவதாய் அரிசியின் உற்பத்திக்குக் காரணமாகிய உமி போலச் சரீர உற்பத்திக்குக் காரணமாய், செம்பைப் பற்றிய களிம்பு போல்வதாய், பாகம் வந்தகாலத்துத் தீட்ஷையில் நீக்கப்படுவதாய் உள்ளது.

## கன்மம்

ஆகாமியம், சஞ்சிதம், பிராரத்தம் என்னும் மூவினைக்கும் முதற்காரணமாய், இடையறாது ஒழுகும் நீரோட்டத்தில் முன்வந்த நீர் இது, பின்வந்த நீர் இது எனப் பிரித்தறிய மாட்டாதவாறு போல, முன்செய்த கன்மம் இது, பின் செய்த கன்மம் இது எனப் பிரித்தறியப்படாததாய் நெல்லுக்கு முளைபோல்வதாய், முற்பிறப்பிலே செய்த வினைக்கேற்பச் சாதி, ஆயுள், வடிவம், போகங்களைக் கொடுப்பதாய், அனுபவித்துத் தொலையும் வரையும் நீங்காததாய், தூலசூக்கும தேகங்களின் வியாபகம் முடையதாய், மனத்தைவிட்டு நீங்காததாய், தூலசூக்கும தேகங்களின் வியாபக முடையதாய், மனத்தைவிட்டு நீங்காததாய், தன்செயலற்றுச் சிவன் செயலாயுள்ளவர்களைப் பந்தியாததாய் உள்ளது.

## மாயை

மாயையானது சுத்தமாயை, அசுத்தமாயை, பிரகிருதி மாயை என மூவகைப்படும். சுத்தமாயையாவது நித்தியமாய், வியாபகமாய், அருவாய், சடமாய், அறிவை உண்டாக்குவதாய் சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி என்னும் நான்கு வாக்குகளும், நிவிர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி, சாந்தியதீதை என்னும் பஞ்சகலைகளும், சுத்தவித்தை, ஈசுரம், சாதாக்கியம், சத்திசிவம் என்னும் சிவதத்துவம் ஐந்தும், சுத்தகாலம் முதல் சுத்தநிலம் இறுதியாகிய முப்பத்தொரு தத்துவங்களும் தோன்றுவதற்கு முதற்காரணமாய், வியாபகமாய் உள்ளது. அசுத்தமாயையானது அழியாததாய், வியாபகமாய், சடமாய், விபரீத உணர்வைக் கொடுப்பதாய், பிரளய காலத்திலே ஆன்மாக்கள் செய்த கன்மத்துக்கு உறைவிடமாய், சுத்தாசுத்தகாலம் முதல் அசுத்த நிலம் ஈறாக முப்பது தத்துவங்களும்

தோன்றுவதற்கு முதற்காரணமாயுள்ளது. பிரகிருதி மாயை அசுத்தமாயையில் இருந்தும் தோன்றியமையால் அநித்தம் எனப்படும்.

## மாயேயம்

மாயாகாரியங்கள் தனு, கரண, புவன போகங்களாம். தனு - தூல உடம்பு. கரணம் - இந்திரிய அந்தக்கரண முதலிய சூக்கும உடம்பு. புவனம் - உலகம். போகம் - உலகத்திலேயுள்ள அனுபவிக்கப்படும் பொருள். வஸ்திரத்தின் அழுக்கைச் சாணி, உவர்மண் முதலிய வேறு அழுக்கைக் கொண்டு, வண்ணான் முற்றாக நீக்கி வெண்மையாக்குவது போல, இறைவன் மாயாகாரியமாகிய தனு, கரண, புவன, போகங்களை ஆன்மாவில் கூட்டி, ஆணவ மலத்தையும், கன்ம மலத்தையும் நீக்கிச் சிவானந்தப் பெரும்பேறு கொடுப்பர்.

## திரோதாயி

ஆன்மாக்களுக்குப் பக்குவம் வருவித்தல் பொருட்டு வினைப்பயன்களை அனுபவிக்கச் செய்வதும், ஆணவத்தோடு நின்று அதைப் பக்குவப் படுத்துவதும் திரோதானசத்தியாகும். திரோதானம் - மறைத்தல். மலபரிபாகம் செய்வதற்காகவே சிவசத்தி திரோதாயி என்னும் பெயரைப் பொருந்தும். மலபரிபாகம் வந்தவிடத்து இச்சத்தி திருவருட்சத்தி ஆகும்.

**மூலநோய் தீர்க்கும் முதல்வன் கண்டாய்**
**முத்தமிழும் நான்மறையும் ஆனான் கண்டாய்**
**ஆவின் கீழ் நால்வர்க்கு அறத்தான் கண்டாய்**
**ஆதியும் அந்தமும் ஆனான் கண்டாய்**
**பால விருத்தனும் ஆனான் கண்டாய்**
**பவளத் தடவரையே போல்வான் கண்டாய்**
**மாலை சேர் கொன்றை மலிந்தான் கண்டாய்**
**மறைக்காட்டு உறையும் மணாளன் தானே.**
– திருநாவுக்கரசுசுவாமிகள்

**பாச சாலங்கள் எல்லாம் பற்றுவிட ஞானவைவாள்**
**வீசு நாள் எந்நாள் விளம்பாய் பராபரமே.**
– தாயுமானசுவாமிகள்

❊ ❊ ❊

# 105. ஆறாம் நாள் உற்சவம்

**உட்பகை ஆறு:**

**அ**வை காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம் என்பன.

**காமம்** : பொன், வீடு, பூமி முதலியவைகளை அதிகமாகச் சம்பாதித்தற்கு விருப்பம் வைத்தல்.

**குரோதம்** : தனக்குத் தீமை செய்தானுக்கு தானும் அதற்கு எதிராய்த் தீமை விளைத்தல்.

**உலோபம்** : தான் தேடியபொருளை அற்பமேனும் சிவபுண்ணியத்திற்கு ஈயாதிருத்தல்.

**மோகம்** : மாயா சம்பந்தமாகிய பொருள்களில் இடையறாது ஆசைவைத்து மயங்குதல்.

**மதம்** : திரவியம் முதலியவற்றால் செருக்குற்றுப் பிறரை மதியாமை.

**மாற்சரியம்** : பிறர் அநுபவிக்கும் சுகம் கண்டு சகிக்கமாட்டாது பொறாமை கொள்ளுதல்.

**அகன் அமர்ந்த அன்பினராய் அறுபகை செற்(று)**
**ஐம்புலனும் அடக்கி ஞானம்**
**புகலுடையோர் தம் உள்ளப் புண்டரிகத்(து)**
**உள்ளிருக்கும் புராணர் கோயில்**
**தகவுடை நீர் மணித்தலத்துச் சங்(கு) உளவர்க்(கு)**
**அந்து திகழச் சலசத் தீயுள்**
**மிகவுடைய புன்கு மலர்ப் பொரி அட்ட**
**மணம் செய்யும் மிழலை யாமே.**

—ஆளுடைய பிள்ளையார்.

## அத்துவாக்கள் ஆறு

அத்துவா என்பது வழி. அது புண்ணிய, பாவங்கள் வரும் வழியும், ஆன்மா சிவபெருமானை அடையும் வழியும் என இருவகைப்படும். மந்திரங்களை உச்சரிக்கும் பேதங்களை அறிந்து உச்சரிப்பதனாலும், உச்சரியாமையாலும் மந்திர அத்துவாவின் வழியாகப் புண்ணிய, பாவ கன்மம் வரும்.

பதங்களைப் பிரிக்கும் முறையை அறிந்து பிரிப்பதனாலும் மாறுபடப் பிரிப்பதனாலும் பத அத்துவாவின் வழியாகப் புண்ணிய, பாவ கன்மம் வரும்.

அக்கரங்களின் குறில், நெடில் அளபெடைகளை அறிந்து, உச்சரிப்பதனாலும், உச்சரியாமையாலும் வர்ண அத்துவாவின் வழியாகப் புண்ணிய, பாவ கன்மம் வரும்.

ஞானேந்திரியம், கன்மேந்திரியம், அந்தக்கரணங்களால் பிறர்க்கு இதம் (நன்மை), அகிதம் (தீமை) செய்வதனாலும் தரும வழியால் பொருளைத் தேடிப் போகமனுவிப்பதனாலும், பாவ வழியாக வந்த பொருளை அனுபவிப்பதனாலும் தத்துவ அத்துவாவின் வழியாகப் புண்ணிய, பாவம் வரும்.

புவன அதிபர்களைப் பூஜிப்பதனாலும், நிந்திப்பதனாலும் புவன அத்துவாவின் வழியாகப் புண்ணிய, பாவ கன்மம் வரும்.

கிரியாசத்தி, ஞானசத்தி, இச்சாசத்தி, ஆதிசத்தி, பராசத்தி என்னும் பஞ்ச சத்திகளைப் பூசித்து வழிபடுவதனாலும், நிந்திப்பதனாலும் கலா அத்துவாவின் வழியாகப் புண்ணிய, பாவ கன்மம் வரும்.

மந்திரம், பதம், வன்னம் என்னும் மூன்றும் சொற் பிரபஞ்சம் எனப்படும். புவனம், தத்துவம், கலை என்னும் மூன்றும் பொருட் பிரபஞ்சமெனப்படும். சொல்லாவது எழுத்தும், அவ்வெழுத்தாலாகிய பதமும், பதத்தாலாகிய மந்திரமும் என மூவகைப்படும்.

பொருளாவது உடலும், உலகமும், அவைகளை ஆக்கும் சத்தியும் என மூவகைப்படும். அவற்றுள், உடலாவது இந்திரியம், அந்தக்கரணம் முதலிய தத்துவ வடிவாயிருக்கும். புவனம் பஞ்சபூத வடிவாயிருக்கும். சத்தி கலைவடிவாயிருக்கும்.

இங்ஙனம் சொல்லும் பொருளுமாகிய ஆறு அத்துவாக்களும், ஆணவ கேவலத்தே கிடந்து அறிவு விளங்காத ஆன்மாக்களுக்கு, அறிவு விளங்குவதற்கு வழியாகத் தோற்றுவன. அவ்வறிவு விளக்கம் ஏகதேசம் என்பதை அறிந்தபின், இவ் அத்துவாக்கள் ஆறினையும் ஒன்றிலொன்று அடங்க ஒடுக்கும் முறையினால் சிவபெருமானை அடைதற்கு வழியாகும். மந்திரம் பதத்தில் ஒடுங்கும்; பதம் வன்னத்தில் ஒடுங்கும்; இம்மூன்றும் சொல் வடிவாதலால், சொல் பொருளைக் குறித்தன்றி நில்லாமையால், அச்சொல் வெளிப்படையாகக் காணப்படும் பொருளாகிய புவனத்தில் ஒடுங்கும்; புவனம் தத்துவத்தில் ஒடுங்கும்; தத்துவம் கலையில் ஒடுங்கும்; நிவிர்த்திகலை பிரதிஷ்டா கலையில் ஒடுங்கும்; பிரதிஷ்டாகலை வித்தியாகலையில் ஒடுங்கும். வித்தியாகலை சாந்திகலையில் ஒடுங்கும்; சாந்திகலை சாந்தி அதீத கலையில் ஒடுங்கும்; சாந்தி அதீதகலை பஞ்சகலைக்கும் ஆதாரமாயிருக்கும் சிவசத்தியில் ஒடுங்கும்; சிவசத்தி சிவத்தில் ஒடுங்கும். இங்ஙனம் ஒடுங்குவதனால், சிவபெருமான் பிறவிக்கு ஏதுவாகிய மலத்தை ஞானசத்தியால் கெடுத்துப் பிறவியை நீக்குவர்.

## கன்மமல குணம் ஆறு

(அவை இருத்தல், கிடத்தல், இருவினை இயற்றல், விடுத்தல், பரநிந்தை, மேவல் என்பன.)

அவை பூத உடம்பு, பூதசார உடம்பு, யாதனா உடம்பு என்னும் உடம்புகளை எடுத்து பூமி, சுவர்க்கம், நரகம் ஆகிய ஒவ்வோர் இடங்களைப் பற்றியிருத்தலும், நோயாய்க் கிடத்தலும், இருவினை இயற்றலும், சிவபூசை, ஓமம், தானம், ஆலயசேவை, சிவத்தியானம் முதலியவைகளை விடுத்தலும், சிவனடியார் முதலிய பெரியோர்களை நிந்தித்தலும், இகழ்ந்தாருடன் பொருந்துதலுமாம்.

**இருத்தலும் கிடத்தலும் இருவினை இயற்றலும்**
**விடுத்தலும் பர நிந்தை மேவல் என்று எடுத்த**
**அறுவகைக் குணனும் கருமத்து அருளினை**

– இருபா இருபஃது

## பதமுத்தி ஆறு

அவை பிரம சாலோகம், பிரம சாமீபம், பிரம சாரூபம், விஷ்ணு சாலோகம், விஷ்ணு சாமீபம், விஷ்ணு சாரூபம் என்பன. பிரம, விட்டுணுக் களுடைய உலகங்கள் அசுத்த மாயா தத்துவ புவனங்களாதலானும், மாயா காரியமாதலானும், காமிய கன்ம தவயோகிகள் எய்தும் பதமுத்திகளாதலானும் மெய்ஞ்ஞானிகள் எய்தும் பரமுத்தியா காமையினாலும், பிரம, விட்டுணுக்கள் மாயாகுண மூர்த்திகளாகையானும் அசுத்த மாயா தத்துவ புவனங்களைச் சிவ ஆணையால் படைத்துக் காப்பவராகையானும் இவர்கள் ஓர்வகைப் பரபோகத்தைக் கொடுக்கும் மூர்த்திகளேயன்றி மாயாகாரிய பஞ்சகோசமும் நீக்கிய வீடுபேறருளும் பதியாகார்கள்.

**நூறு கோடி பிரமர்க ணொந்தினார்**
**ஆறு கோடி நாராயணர் அங்ஙனே**
**ஏறு கங்கை மணல் எண்ணில் இந்திரர்**
**ஈறிலாதவன் ஈசன் ஒருவனே.**

– திருஞாவுக்கரசுநாயனார்.

**கொள்ளேன் புரந்தரன் மால் அயன் வாழ்வு குடி கெடினும்**
**நள்ளேன் நினது அடியாரோடு அல்லால் நரகம் புகினும்**
**எள்ளேன் திருவருளாலே இருக்கப் பெறின் இறைவா**
**உள்ளேன் பிறதெய்வம் உன்னை அல்லாது எங்கள் உத்தமனே.**

– மாணிக்கவாசகசுவாமிகள்

# 106. ஏழாம்நாள் உற்சவம்

## எழுவகைப் பிறப்பு

நால்வகைத் தோற்றத்தினால் உண்டாகும் பிறவிகள் எழுவகைப்படும். அவை தேவர், மனிதர், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்பன. எழுவகைப் பிறப்பில் எண்பத்து நான்கு லட்சம் யோனி பேதங்கள் தோற்றுவன. தேவர் பதினொருலட்சம் யோனிபேதம். மனிதர் ஒன்பது லட்சம் யோனிபேதம். விலங்கு பத்து லட்சம் யோனிபேதம். பறவை பத்து லட்சம் யோனிபேதம். ஊர்வன பதினைந்து லட்சம் யோனிபேதம். நீர்வாழ்வன பத்துலட்சம் யோனிபேதம். தாவரம் பத்தொன்பது லட்சம் யோனிபேதம்.

**உரைசேரும் எண்பத்து நான்கு நூ**
**றாயிரமாம் யோனி பேத**
**நிரைசேரப் படைத்தவற்றின் உயிர்குக் உயிராய்**
**அங்கங்கே நின்றான் கோயில்.**

— ஆளுடைய பிள்ளையார்.

## வித்தியா தத்துவம் ஏழு

அவை காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன், மாயை என்பன.

கிரியாசத்தி சத்தி தத்துவத்தைக்கொண்டு காலதத்துவத்தை எழுப்ப, காலம் முக்காலங்களிலும் உள்ள புசிப்பைக் கூட்டும். கிரியாசத்தி, சத்தி தத்துவத்தைக் கொண்டு நியதி தத்துவத்தை எழுப்ப நியதி அவரவர் செய்த கன்மத்தை அவரவர் அனுபவிக்குமாறு நியமிக்கும். கிரியா சத்தி, சத்தி தத்துவத்தைக்கொண்டு கலாதத்துவத்தை எழுப்ப, எங்கும் மூடிக்கொண்டிருக்கும் அந்தகாரத்தில் தீபமானது அந்த இருளை அடக்கி, விஷயத்தைக் காட்டுவது போல, ஆன்ம அறிவை மறைத்துக் கொண்டிருக்கும் கன்ம இருளை, கலை அடக்கி ஞானத்தைப் பிரகாசிப்பிக்கும். ஞான சத்தி சுத்தவித்தியா தத்துவத்தைக்கொண்டு, வித்தியா தத்துவத்தை எழுப்ப, வித்தை அறிவை உண்டாக்கும். இச்சாசக்தி ஈசுவரதத்துவத்தைக்கொண்டு அராகத்தை எழுப்ப, அராகம் பத்தர்களுக்கு ஆசையை உண்டுபண்ணும். கலாதி ஐந்து தத்துவங்களும் கூடிய சங்கத்தில் உண்டான புருட தத்துவத்தைச் சாதாக்கிய தத்துவம் காரியப்படுத்தப் புருடன் போகத்தில் ஆசையை உண்டுபண்ணும்.

## மாயாமலகுணம்

அவை, அஞ்ஞானம், பொய், அயர்வு, மோகம், பைசுந்நியம், மார்ச்சரியம், பயம் என்பன.

அஞ்ஞானமாவது பொய்யை மெய்யென்று கொள்ளுதல். பொய்யாவது தான் அறிந்ததொன்றைப் பிறர் அறிந்திலரென நினைந்து உள்ளதை மறைத்துப் பிறர்க்குத் தீமைபயக்கும் சொற்களைச் சொல்லுதல். அது காமத்தாலும், பொருளாசையாலும் வருவதும், இம்மை மறுமைப் பயன்களைக் கெடுப்பதுமாய் உள்ளது. அயர்வாவது கண்டதை மறந்து மயங்கி வருந்துதல். மோகமாவது குருவினாலும், நூலினாலும் தீயன என்றுஅறிந்தவற்றில் நீங்காமல் நிற்கும் மயக்கம். பைசுந்நியமாவது காணாத இடத்துப் பிறரை இகழ்ந்து தூற்றி, கண்ட இடத்து முகமலர்ச்சி காட்டிப் பொய்யன்பு செய்தல். மார்ச்சரியமாவது பிறர்கல்வி, செல்வம் முதலியவற்றைக் கண்டு சந்தோஷமடையாது அவர்களுக்குத் தீங்குநினைத்தலும், தீமை செய்தலும், தீமை சொல்லுதலுமாம். பயமாவது உயிர்க்கு இறுதி வருமென்று அச்சப்பட்டுத் திரிகையாம். மாயாமல குணங்களை நீக்கினவர் மனச் சுத்தியையும், ஞானத்தையும் அடைந்து பிறப்பினின்று நீங்குவர்.

❋ ❋ ❋

# 107. எட்டாம் நாள் உற்சவம்

அக்கினியானது இரும்பைத் தன் வண்ணமாக்குவது போல, பரமசிவன் ஸ்ரீ பஞ்சாட்சரத்தின் பொருளை அறிந்து விதிப்படி மெய்யன்போடு இருதயத்தில் தியானித்துவரின், வாசனா மலத்தையும் நீக்கித் தம் வண்ணமாக்கித் தமது ஞான குணத்தின் தொழில் பேதமாகிய எண்குணங்களும் அந்த ஆன்மாக்களுடையனவாகக் கொடுத்தருள "மேவு சிவ சுபாவம் அதே தனது சுபாவம் அதாய் - விளங்குவன்" எனச் சர்வ ஞானோத்தரம் கூறியவாறு எண்குணங்களும் தமது சுபாவம் ஆகப் பிரகாசிக்கப்பெறும். இதுவே சிவானந்த மேலிடுகை எனப்படும்.

அப்பர் சுவாமிகள் "**நாவார நம்பனையே பாடப்பெற்றோம்**" என்னும் திருத்தாண்டகத்தில் "**எண்குணத்துளோமே**" என்றருளிச் செய்தலும் காண்க.

எண்குணங்களாவன: சர்வஞ்ஞத்துவம், திருப்தி, அநாதிபோதம், சுதந்திரத்துவம், அலுப்தசத்தி, அநந்தசத்தி, நிராமயா ஆன்மா, விசுத்ததேகம் என்பன.

**சர்வஞ்ஞதா திருத்தி அனாதி போதம்**
**அறை சுதந்தரதா அலுத்த சத்தி**
**நிறை அனந்த சத்தி நிராமய ஆன்மா**
**செறி விசுத்த தேகம் இவை சிவத்துவமே.**

– சர்வஞ்ஞானோத்தரம்.

| | | |
|---|---|---|
| **சர்வஞ்ஞத்துவம்** | : | முற்றும் உணர்தல் |
| **திருப்தி** | : | வரம்பில் இன்பம் உடைமை |
| **அநாதிபோதம்** | : | இயல்பாகவே பாசங்களின் நீங்குதல் |
| **சுதந்திரத்துவம்** | : | தன்வயத்தனாதல் |
| **அலுத்தசத்தி** | : | பேரருள் உடைமை |
| **அநந்தசத்தி** | : | முடிவில் ஆற்றல் உடைமை |
| **நிராமய ஆன்மா** | : | இயற்கை உணர்வுடைமை |
| **விசுத்ததேகம்** | : | தூய உடம்புடையன் ஆதல் |

ஆன்மாக்களையும், அவ்வான்மாக்களுக்கு வேண்டுவனவற்றையும் அறிதலின் முற்று உணர்வுடைமையும், அவ்வாறு அறிதல் தாம் இன்புறுதல் பொருட்டன்றி, அந்த உயிர்களுக்கு இன்பம் செய்தல் பொருட்டாகலின் வரம்பில் இன்பம் உடைமையும், மலத்தினின்றும் நீங்கிய ஆன்மா சிவனைச் சார்ந்த இடத்து, சிவமாய் நின்று வரம்பில் இன்பம் உடையதாய் விளங்குமாறு போல் ஆகாது இயல்பாகவே வரம்பில் இன்பம் உடைமையின் இயல்பாகவே பாசங்களின் நீங்குதல் உடைமையும், இயல்பாகவே மலத்தின் வயப்படாமையின் தன்வயம் உடைமையும், வரம்பில்லாத ஆன்மாக்களுக்கு அளவற்ற இன்பம் தந்து அருளும் கிருபை உடைமையின், பேரருள் உடைமையும், அளவற்ற ஆன்மாக்களுக்கு வேண்டியவைகளை அறிந்து, அறிந்தவாறு செய்யும் வல்லமை உடைமையின் அளவில் ஆற்றலுடைமையும், இயல்பாகவே பாசங்களின் நீங்குதலின், இயற்கை உணர்வு உடைமையும், ஞானமே வடிவாதலின் தூய உடம்பு உடைமையும் சிவபெருமானுக்கு இயல்பாய் உள்ள எண் குணங்களாம்.

இவ்வெண்குணங்களையே திருவள்ளுவர் “**கோளில் பொறியிற் குணமிலவே எண்குணத்தான் - தாளை வணங்காத்தலை**” என்றருளிச் செய்தார்.

❋ ❋ ❋

# 108. ஒன்பதாம் நாள் உற்சவம்

மூன்றுருவம் ஆவது உருவம், அருவுருவம், அருவம் என்பன. அவற்றை ஆன்மா நீங்குதலாவது அதிகார சிவத்தை அடைந்து உடற்பற்றை விடுதலாகிய அதிகார முத்தியையும், போகசிவத்தை அடைந்து உலகப்பற்றை விடுதலாகிய போக முத்தியையும், இலய சிவத்தை அடைந்து மலமாயா

கன்மங்களை விடுதலாகிய இலய முத்தியையும் விடுதலாம். முத்தொழில் ஆவது சிருஷ்டி, திதி, சங்காரம் என்பன. அ∴தாவது தனு, கரண, புவன, போகங்களைப் பொருந்துதலும், அவற்றில் நிலைத்து நிற்றலும், அவற்றினின்று மாறுதல் அடைதலுமாம். மூன்று இடத்தில் உறைதல் ஆவது சாலோகம், சாமீபம், சாரூபம் என்னும் பதமுத்தி மூன்றுமாம்.

பதிஞான முதிர்ச்சியால் சுத்தவித்தை முதலிய தத்துவங்களை அடைந்த ஆன்மா பதி தரிசனத்தால் அருள் விளக்கத்தை அடைந்து, பிறப்பு, இறப்புக்களை நீக்கி, அவ்விடத்தில் நின்றவாறே சிவதரிசனத்தால் ஆனந்த விளக்கம் அடையும்.

❋ ❋ ❋

# 109. பத்தாம் நாள் உற்சவம்

வளர் பக்கச் சந்திரன் தனது ஒவ்வொரு கால்களால் ஒவ்வொரு நாளும் கண்ணில் கலந்துள்ள இருளைச் சிறிது சிறிதாக நீக்கி, பூரணையில் முற்றாக நீக்குவதுபோலச், சிவபெருமான் ஆன்மாக்களிடத்துள்ள மலசத்தியை, சரியையிற் சரியை முதல் பதினாறு வகைப்பட்ட சிவ புண்ணியங்களுக்கு ஏற்ப, அவ்வப் பருவம் தோறும் சிறிது சிறிதாக நீக்கி, நீங்குந்தோறும் நீக்குகின்ற திருவருட்சத்தியைச் சிறிது சிறிதாகப் பதியச்செய்து, முதிர்ந்த பருவத்தில் முற்றாக நீக்கி, சத்தியை முற்றாகப் பதியச்செய்து, தாம் பிரிவு இன்றி நிற்றலை அறிய விடாது செய்த அஞ்ஞானத்தை நீக்கி அறியச்செய்து, காந்தமானது இரும்பைத் தன் வசமாக்கி ஒருகாலும் விடாத தன்மைபோல, ஆன்மாவை விடாது தம்வசமாக்கி, உப்பானது நீரோடு கூடிய இடத்துத் தன்னிடத்துள்ள சுவை முழுதையும் அந்நீருக்காக்கி அதனோடு மறைந்து நிற்குமாறு போலத் தமது எண்குணங்களை ஆன்மாவிடத்து விளங்கச் செய்து கலந்து நிற்பர்.

அணையின் உள்ளாகக் கட்டுப்பட்டுத் தேங்கிநின்ற ஆற்றுநீர் அவ்வணையை உடைத்து ஒரு தடையுமின்றி, விரைந்து சென்று, கடல் நீருடன் கலந்து அடங்கி, மீண்டும் வராத தன்மைபோலப் பாச ஞானத்தில் அடங்கித் தடைப்பட்ட ஆன்மா அத்தடையினின்றும் நீங்கி, சிவபெருமானுடைய திருப்பாதங்களில் கலந்து, அருள் நிறைவாய் அடங்கி, பின்பு மீளுதலின்றிக் கருப்பஞ்சாறு, தேன், பால், கனி, அமுதம், கற்கண்டு, சர்க்கரை என்னும் சுவைப் பொருள்களை ஒன்றாகக் கலந்த இடத்து உண்டாகிய சுவை இத்தன்மைத்து எனப் பிரித்து அறிய முடியாதது போலப் பரமுத்தியில் இத்தன்மைத்து எனப் பிரித்து அறிய முடியாத ஆனந்த சொரூபமாய் நிற்கும்.

வாக்காலும் மிக்க மனத்தாலும் எக்காலும்
தாக்கா உணர்(வு) அரிய தன்மையனை - நோக்கிப்
பிரித்(து) அறிவு தம்மிற் பிரியாமை தானே
குறிக்கும் அருள் நல்கக் கொடி.

— கொடிக்கவி

தான் அந்தம் இல்லான் தனை அடைந்த நாயேனை
ஆனந்த வெள்ளத்(து) அழுத்துவித்தான் காணேடீ
ஆனந்த வெள்ளத்(து) அழுத்துவித்த திருவடிகள்
வானுந்து தேவர்கட்(கு) ஓர் வான் பொருள்காண் சாழலோ.

- திருவாசகம்.

❋ ❋ ❋



## அறங்காவலர்
## அமரர் பொன். பாலசுந்தரம்

28.10.1939ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் மாவிட்டபுரத்தில் பொன்னம்பலம் நாகம்மா தம்பதியரின் புதல்வராய்ப் பிறந்த இவர் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியில் கல்வி கற்று, கொழும்பு 'ஜஃவார்ஜி பிரதர்ஸ்' நிறுவனத்தில் தேயிலை ஏற்றுமதித் துறையில் பெரும்பணியாற்றியவர்.

சண்டிலிப்பாயைச் சார்ந்த பத்மாவதியைத் தன் வாழ்க்கைத் துணைவராய் ஏற்ற இவர், இல்லறத்தின் நன்கலமாய் முரளி, முகுந்தன், ரமணன், நகுலன், நங்கை ஆகியோரைப் புதல்வராய்க் கொண்டு பெருமையுற்றார்.

கொட்டாஞ்சேனை ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலய அறங்காவலராய் இருந்து பெரும் சமயப் பணியையும், கொழும்புக் கம்பன் கழகச் செயலாளராய் இருந்து தமிழ்ப்பணியையும் தம் உயிர்ப்பணிகளாய்க் கருதி ஆற்றியவர்.

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கை அம்மன் ஆலயம், ரம்பொடை ஸ்ரீ பக்த ஆஞ்சநேயர் ஆலயம், அகில இலங்கை இந்துமாமன்றம், யாழ். சிவபூமி அறக்கட்டளை, சின்மயா மிஷன், இராமகிருஷ்ண மிஷன் போன்ற பல நிறுவனங்களின் ஊடாகப் பெரும் கொடைப்பணி ஆற்றியவர்.

ஈழ மண்ணில் வறுமையுற்றவர் குரல் எங்கு கேட்பினும் அன்போடு அறக்கையை நீட்டியவர். தனி மனிதர்க்கும், சமூகத்திற்குமாய் இவர் செய்த தருமங்கள் அளவற்றன.

தம் தாய் மண்ணில் தன்னிகரில்லா அன்பு பூண்டிருந்த இவர், அம் மண்ணின் அறிவுச் சொத்துக்களைக் காக்கப் பெரிதும் விரும்பி முனைந்தவர். 08.09.2008 அன்று இறையடி சேர்ந்த அவரின் நினைவாக அவர் விருப்பம் நிறைவேற்றி இந்நூல் வெளிவருகிறது.



## அச்சுவேலி
## சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள்

அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள் அவர்கள் ஈழநாட்டுச் சிவாச்சாரியர்களுள் தலைசிறந்து விளங்கியவர். வடமொழியிலும், தமிழிலும் உள்ள இலக்கிய, இலக்கண நூல்களிலும் சமய சாஸ்திரங்களிலும் பெரும் புலமை கொண்டிருந்த இவருக்குக் கல்வி போதித்தவர்கள் நீர்வேலி சிவப்பிரகாசப் பண்டிதர் அவர்களும், நல்லூர் கைலாசபிள்ளை அவர்களும், சுன்னாகம் குமாரசாமிப்புலவர் அவர்களும் ஆவர்.

1918ஆம் ஆண்டில் அச்சுவேலியில் சரஸ்வதி வித்தியாலயம் என்னும் சைவப் பாடசாலையை நிறுவிய இவர், திருக்கேதீஸ்வரத்தில் நிறுவப்பட்ட சிவானந்த குருகுலத்தில் பிரதான குருவாக விளங்கினார்.

இவர், சிவலிங்கப் பிரதிஷ்டா விதி, த்ரிபதார்த்த விவேகம், பிராசாத சட்சுலோகி முதலிய வட நூல்களையும், சிவபூசை விளக்கம், விநாயக பரத்துவம், மகோற்சவ சந்திரிகை, சைவப்பிரகாசிகை, அக்கினி கார்ய விதி, முப்பொருள் விளக்கம், முத்ராலக்ஷணம், சிரார்த்த தீபிகை, மகோற்சவ விளக்கம், வேதாகம நிரூபணம், சைவ சமய சாஸ்திரப் பிரமாணம், கதிர்காம மான்மியம் போன்ற பல தமிழ் நூல்களையும் ஆக்கியவர்.

வேத ஆகம புராண இதிகாசங்களிலும், திருமுறைகளிலும், தத்துவ நூல்களிலும் நுண்மான் நுழைபுலம் பெற்றிருந்த இப்பெரும் புகழ் அந்தணர் நம் சைவத்தின் ஆழ்ந்த கருத்துக்களைத் தகுந்த மேற்கோள்களோடு நிறுவி, பல நூல்களை ஆக்கி இன்றைய சைவ உலகிற்கும் வழிகாட்டி நிற்பவர்.

இப் பேராசானின் 'விநாயக பரத்துவம்', 'மகோற்சவ விளக்கம்' எனும் இரு நூல்கள் 'சைவநெறி நிர்ணயம் - 1' என்ற இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன.

DESIGNED & PRINTED BY UNIE ARTS (PVT) LTD., COLOMBO 13. TEL: 2330195